| 1881 | B | 5 | பெப். 13 | மார். 2 | ஏப். 17 | — 26 | ஜூன். 5 | 23 | — 27 |
| 1882 | A | 4 | — 5 | பெப். 22 | — 9 | — 18 | மே. 28 | 25 | டிசெ. 3 |
| 1883 | G | 2 | ஜனு. 21 | — 7 | மார். 25 | — 3 | — 13 | 27 | — 2 |
| 1884 | FE | 4 | பெப். 10 | — 27 | ஏப். 13 | — 22 | ஜூன். 1 | 24 | நவெ. 30 |
| 1885 | D | 3 | — 1 | — 18 | — 5 | — 14 | மே. 24 | 25 | — 29 |
| 1886 | C | 6 | — 21 | மார். 10 | — 25 | ஜூன் 3 | ஜூன் 13 | 22 | — 28 |
| 1887 | B | 4 | — 6 | பெப். 23 | — 10 | மே. 19 | மே. 29 | 24 | — 27 |
| 1888 | AG | 3 | ஜனு. 29 | — 15 | — 1 | — 10 | — 20 | 26 | டிசெ. 2 |
| 1889 | F | 5 | பெப். 17 | மார். 6 | — 21 | — 30 | ஜூன். 9 | 23 | — 1 |
| 1890 | E | 3 | — 2 | பெப். 19 | — 6 | — 15 | மே. 25 | 25 | நவெ. 30 |
| 1891 | D | 2 | ஜனு. 25 | — 11 | மார். 29 | — 7 | — 17 | 26 | — 29 |
| 1892 | CB | 5 | பெப். 14 | மார். 2 | ஏப். 17 | — 26 | ஜூன். 5 | 23 | — 27 |
| 1893 | A | 3 | ஜனு. 29 | பெப். 15 | — 2 | — 11 | மே. 21 | 26 | டிசெ. 3 |
| 1894 | G | 2 | — 21 | — 7 | மார். 25 | — 3 | — 13 | 27 | — 2 |
| 1895 | F | 4 | பெப். 10 | — 27 | ஏப். 14 | — 23 | ஜூன். 2 | 24 | — 1 |
| 1896 | ED | 3 | — 2 | — 19 | — 5 | — 14 | மே. 24 | 25 | நவெ. 29 |



# TABLES AND RULES FOR THE MOVEABLE AND IMMOVEABLE FEASTS; TOGETHER WITH THE DAYS OF FASTING AND ABSTINENCE, THROUGH THE WHOLE YEAR.

## வருஷம் முழுவதும் தேதிமாறிவருகிற திருநாட்களையும், தேதிமாறுமல் வருகிற திருநாட்களையும், உபவாச நாட்களையும், விரதங்களையும் குறிக்கும் சட்டங்களும் அட்டவணைகளுமாவன:

### தேதிமாறிவருகிற பண்டிகைகளும் திருநாட்களும் உண்டாகும் காலங்களை அறிந்துகொள்ளும்படியான சட்டமாவது:

ஈஸ்தர் பண்டிகை என்னும் உயிர்த்தெழுந்த திருநாள் விசேஷித்த திருநாளானபடியினலும், தேதிமாறிவருகிற மற்றத் திருநாட்கள் எல்லாம் அந்தத் திருநாளைப்பற்றியே குறிக்கப்படுகிறபடியினலும், உயிர்த்தெழுந்த திருநாள் வரும் முறையைக் குறிக்கும்படி வழங்கிவருகிற சட்டம் என்னவென்றல்: மார்ச்சுமாசம் இருபத்தோராம் தேதியிலாவது, அதற்குப் பின்னுவது உண்டாகும் பௌர்ணிமியாகிய பூரணசந்திரனுக்குப் பின்வரும் முதலாம் ஞாயிற்றுக்கிழமையானது உயிர்த்தெழுந்த திருநாளாகும். பௌர்ணிமி ஞாயிற்றுக்கிழமையில் வருமாஞல் அதற்கு மறு ஞாயிறு உயிர்த்தெழுந்த திருநாளாகக் கொண்டாடப்படும்.

பரிசுத்த அந்திரேயாவின் திருநாளுக்குக் கிட்டி முந்தியாவது பிந்தியாவது வரும் ஞாயிறு அட்வெந்தென்னும் ஞாயிருகும்.

செப்துவசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஒன்பது வாரத்துக்கு முன்வரும்.
செக்சசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு எட்டு வாரத்துக்கு முன்வரும்.
கின்குவசெசிமா ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு எழு வாரத்துக்கு முன்வரும்.
வெந்தென்னும் நாட்களில் முதலாம் ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஆறுவாரத்துக்கு முன்வரும்.
விண்ணப்ப ஞாயிறு ஈஸ்தர் பண்டிகைக்கு ஐந்து வாரத்துக்குப் பின்வரும்.
பரத்துக்கேறின திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு நாற்பது நாளைக்குப் பின்வரும்.
பரிசுத்தஆவியின் திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு எழுவாரத்துக்குப் பின்வரும்.
திரித்துவத் திருநாள் ஈஸ்தர் பண்டிகைக்கு எட்டுவாரத்துக்குப் பின்வரும்.

## வருஷ முழுவதும் இங்கிலாந்து திருச்சபையில் ஆசரிக்கவேண்டிய பண்டிகைகளின் அட்டவணையாவது:

---

வருஷ முழுவதும் வருகிற ஞாயிற்றுக்கிழமைகள்.
நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் விருத்தசேதனத் திருநாள்.
பிரசன்னத் திருநாள்.
பரி. பவுல் குணப்பட்ட திருநாள்.
பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் சுத்திகரிப்புத் திருநாள்.
பரி. மத்தியா அப்போஸ்தலன் திருநாள்.
பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் மங்களவாக்குத் திருநாள்.
பரி. மாற்கு சுவிசேஷகன் திருநாள்.
பரி. பிலிப்பு, யாக்கோபு, அப்போஸ்தலரின் திருநாள்.
நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்து பரத்துக்கேறின திருநாள்.
பரி. பர்னபாவின் திருநாள்.
பரி. யோவான்ஸ்நானன் பிறந்த திருநாள்.
பரி. பேதுரு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. யாக்கோபு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. பர்த்தொலோமேயு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. மத்தேயு அப்போஸ்தலன் திருநாள்.
பரி. மிகாவேல் முதலான சகல தேவதூதர்களின் திருநாள்.
பரி. லூக்கா சுவிசேஷகன் திருநாள்.
பரி. சீமோன், யூதா, அப்போஸ்தலரின் திருநாள்.
சகல பரிசுத்தவான்களின் திருநாள்.
பரி. அந்திரேயா அப்போஸ்தலன் திருநாள்.
பரி. தோமா அப்போஸ்தலன் திருநாள்.
நமது கர்த்தருடைய ஜநநதிருநாள்.
பரி. ஸ்தேவான் இரத்தச்சாட்சியின் திருநாள்.
பரி. யோவான் சுவிசேஷகன் திருநாள்.
குற்றமில்லாத பாலகர் திருநாள்.
உயிர்த்தெழுந்த பண்டிகை வாரத்தில் வரும் திங்கள், செவ்வாய்.
பரிசுத்த ஆவியின் பண்டிகை வாரத்தில் வரும் திங்கள், செவ்வாய்.



## வருஷமுழுவதும் கைக்கொள்ளவேண்டிய விழிப்பு, உபவாசம், விரதம் முதலான திருநாட்களின் அட்டவணையாவது:

---

கர்த்தருடைய ஜநநதிருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் சுத்திகரிப்புத் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பாக்கியவதியாகிய கன்னிமரியாளின் மங்களவாக்குத் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

உயிர்த்தெழுந்த திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரத்துக்கேறின திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரிசுத்த ஆவியின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. மத்தியாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. யோவான்ஸ்நானனுடைய திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. பேதுருவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. யாக்கோபின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. பர்த்தொலோமேயுவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. மத்தேயுவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. சீமோன், யூதாவின் திருநாட்களுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. அந்திரேயாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

பரி. தோமாவின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

சகல பரிசுத்தவான்களின் திருநாளுக்கு முன்வரும் சாயங்காலம்.

கவனிப்பு: இந்த அட்டவணையில் அடங்கிய யாதொரு திருநாள் திங்கட்கிழமையில் வருமானால் விழிப்பு, உபவாசம், விரதம் முதலானது அதற்கு முந்தின ஞாயிற்றுக்கிழமை சாயங்காலத்தில் அல்ல, அதற்கு முந்தின சனிக்கிழமை சாயங்காலத்தில் கைக்கொள்ளப்படவேண்டும்.

## உபவாசம் அல்லது விரதங்காக்கும் நாட்களாவன:

I. லெந்தென்னும் நாற்பது நாளும்,

II. 1. லெந்தென்னும் முதலாம் ஞாயிறுக்குப் பின்னும்,
2. பரிசுத்த ஆவியின் பண்டிகைக்குப் பின்னும்,
3. செப்டெம்பர் மாசம் பதினான்காம் தேதிக்குப் பின்னும்,
4. டிசெம்பர் மாசம் பதின்மூன்றாம் தேதிக்குப் பின்னும் வரும் புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் வருஷத்தில் நான்கு முறை வழக்கமாய் குருப்பட்டம் கொடுக்கப்படும் எம்பர் என்னும் நாட்களும்,

III. திரு வியாழம் என்னப்படும் கர்த்தர் பரத்துக்கேறின திருநாளுக்கு முன்வரும் திங்கள், செவ்வாய், புதன் என்னும் விண்ணப்ப நாட்களும்,

IV. கிறிஸ்துவின் ஜநநதிருநாள் தவிர, வருஷமுழுவதும் வரும் வெள்ளிக்கிழமைகளும், உபவாசநாட்களாம்.



## THE ORDER FOR MORNING AND EVENING PRAYER DAILY TO BE SAID AND USED THROUGHOUT THE YEAR.

## வருஷ முழுவதும் சொல்லவும் வழங்கவும் வேண்டிய காலை மாலை ஜெப ஒழுங்கு.

காலை மாலை ஜெபம் ஆலயத்திலாவது கோவிலிலாவது நற்கருணை ஸ்தானத்திலாவது வழக்கமான இடத்திலே சொல்லப்படவேண்டும். அது வேறே இடத்தில் சொல்லப்படவேண்டுமென்று அத்தியட்சர் தீர்மானிப்பாரானால், அவர் கட்டளைப்படி செய்யவேண்டும். நற்கருணை ஸ்தானம் முன் இருந்தபடியே இருக்கவேண்டும்.

மேலும் கவனிக்கவேண்டியதென்னவென்றால், ஆறாம் எட்வார்ட் ராஜா அரசாண்ட இரண்டாம் வருஷத்தில் பார்லமெந்து சங்கத்தார் தீர்மானித்தபடியே தேவாலய அலங்கரிப்புக்கும் தேவ பணிவிடை செய்யும் குருமாருடைய அலங்கரிப்புக்கும் வேண்டியவைகள் எல்லாம் இங்கிலாந்து சபையில் நடந்துவந்த வழக்கத்தின்படியே இப்பொழுதும் நடந்துவரவேண்டும்.

THE ORDER FOR

# MORNING PRAYER,

DAILY THROUGHOUT THE YEAR.

---

வருஷமுழுவதும் நாள்தோறும்

செய்யவேண்டிய

# காலைஜெப ஒழுங்கு.

¶ காலைஜெபம் தொடங்கும்போது, குருவானவர் பின்வரும் வேதவாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்த சத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப்பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.

துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். எசேக். 18. 27.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங். 51. 3.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங். 51. 9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங். 51. 17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே. 2. 13.

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி. 9. 9, 10.

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். எரே. 10. 24. சங். 6. 1.

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி. மத். 3. 2.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூ. 15. 18, 19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங். 143. 2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பரி. 1 யோ. 1. 8, 9.

பிரியமான சகோதரரே, நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக்கொள்ளாமல், பணிவும் தாழ்மையும் துக்கமும் கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோடே அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடவேண்டுவதுமன்றி; அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக்கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ்செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம்பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடிவந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும் தாழ்ந்த சத்தத்தோடும் பரமகிருபாசனத்தண்டையில் என்னுடனேகூடச் சேர்ந்து, நான் சொல்லுகிறபிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.

¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சபையாரெல்லாரும் சொல்லவேண்டிய பொதுவான பாவஅறிக்கை.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்து



போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி, நாங்கள் இனி தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசுகிறிஸ்துவினிமித்தம், எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர்மாத்திரம் எழுந்துநின்று கூறவேண்டிய பாவவிமோசனம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவவிமோசனத்தையும் மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆநந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய பரிசுத்தஆவியையும் அருளிச்செய்யவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமென்.

¶ இவ்விடத்திலும் மற்றெல்லா ஜெபங்களின் முடிவிலும் ஜனங்கள் ஆமென் என்று சொல்லவேண்டும்.

¶ இப்பொழுது குருவானவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தை ஜனங்கள் கேட்கத்தக்கதாய்ச் சொல்லவேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் இப்பொழுதும் தேவாராதனையில் இச்செபம் வழங்குகிற எப்பொழுதும் அவரோடேகூட இதைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவ

தாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது.

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

**மறுமொழி**: அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

**குரு**: தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

**மறுமொழி**: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

¶ எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

**மறுமொழி**: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

**குரு**: கர்த்தரைத் துதியுங்கள்.

**மறுமொழி**: கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

¶ இப்பொழுது பின்வரும் சங்கீதத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும். ஆனாலும், ஈஸ்தர் என்னும் உயிர்த்தெழுந்த திருநாளுக்கு விசேஷித்த கீர்த்தனம் நியமிக்கப்பட்டிருக்கிறதினால், அந்நாளில் இதை வாசிக்கவேண்டியதில்லை. அன்றியும் மாதந்தோறும் (19) தேதியில் இந்தச் சங்கீதத்தை இங்கே வாசியாமல், சங்கீதங்களை வாசிக்கும் முறையிலே வாசிக்கவேண்டும்.

*Venite, exultemus Domino.*

95. சங்கீதம்.

கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி: நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.

துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து: சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

கர்த்தரே மகாதேவனும்: எல்லா தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.

பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது: பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்: வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.



நம்மை உண்டாக்கின கர்த்தருக்குமுன்பாக: நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடக்கடவோம் வாருங்கள்.

அவர் நம்முடைய தேவன்: நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்: வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனைநாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து, என்னைப் பரீட்சைபார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து: அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று: என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ பின்பு, குறிக்கப்பட்ட சங்கீதங்கள் முறையே வரும். அன்றியும் வருஷமுழுவதும் வாசிக்கப்படுகிற ஒவ்வொரு சங்கீதத்தின் முடிவிலும், மூன்று வாலிபர் கீதம், சகரியாவின் கீதம், கன்னிமரியாளின் கீதம், சிமியோனின் கீதம் (Benedicite, Benedictus, Magnificat, Nunc Dimittis.) என்னும் கீதங்களின் முடிவிலும் சொல்லவேண்டியதாவது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

**மறுமொழி**: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்பொழுது அந்த நாளுக்கென்று விசேஷித்த பாடங்கள் குறித்திராவிட்டால், நாள் அட்டவணைப்படி பழைய ஏற்பாட்டிலிருந்து முதலாம் பாடம் தீர்க்கமாய் உரத்த சத்தத்தோடே வாசிக்கப்படவேண்டும். கூடிவந்திருக்கிற யாவரும் நன்றாய்க் கேட்கத்தக்கதாக, வாசிக்கிறவர் ஜனங்களுக்கு நேராகத் திரும்பிநின்று வாசிக்கவேண்டும். அதற்குப்பின் "தேவனே உம்மைத் துதிக்கிறோம்" என்னும் கீர்த்தனத்தை (Te Deum Laudamus.) வருஷமுழுவதும் நாள்தோறும் வாசிக்க அல்லது பாடவேண்டும்.

¶ கவனிப்பு: ஒவ்வொரு பாடத்துக்குமுன்னும், குருவானவர் இன்ன ஆகமத்திலுள்ள இன்ன அதிகாரத்தை, அல்லது அந்த அதிகாரத்திலுள்ள இன்ன வாக்கியத்தை வாசிக்கிறேன் என்றும், ஒவ்வொரு பாடத்துக்குப்பின்னும் முதலாம் பாடம் அல்லது இரண்டாம் பாடம் முடிந்தது என்றும் சொல்லவேண்டும்.

## *Te Deum Laudamus.*

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மை: பூமண்டலமெல்லாம் வணங்கும்.

தேவதூதர் அனைவோரும்: பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்;

கேருபின்களும் சேராபின்களும்: தேவரீரை ஓயாமல் புகழ்ந்துபோற்றி,

சேனைகளின் தேவனாகிய கர்த்தரே: நீர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்;

வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால்: நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமைபொருந்திய கூட்டம்: உம்மைப் போற்றும்.

தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம்: உம்மைப் போற்றும்.

இரத்தச்சாட்சிகளாகிய தைரிய சேனை: உம்மைப் போற்றும்.

அளவில்லாத மகத்துவமுள்ள: பிதாவாகிய தேவரீரையும்,

வணங்கப்படத்தக்க மெய்யான: உம்முடைய ஒரே குமாரனையும்,

தேற்றரவாளனாகிய: பரிசுத்தஆவியையும்,

உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை: பிரஸ்தாபப்படுத்தும்.

கிறிஸ்துவே: தேவரீர் மகிமையின் ராஜா.

நீரே பிதாவினுடைய: நித்திய சுதன்.

நீர் மனிதனை இரட்சிக்க ஏற்பட்டபொழுது: கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

நீர் மரணத்தின் கொடுமையை வென்று: விசுவாசிகள் எல்லாருக்கும் மோட்ச ராஜ்யத்தைத் திறந்தீர்.

நீர் பிதாவின் மகிமையிலே: தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறீர்.

நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக: வருவீரென்று விசுவாசிக்கிறோம்.

உமது விலையுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட: உமது அடியாருக்குச் சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம்.

எங்களை நித்திய மகிமையிலே: உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து: உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

அவர்களை ஆண்டுகொண்டு: என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தினம்தினம்: உம்மை ஸ்தோத்திரிக்கிறோம்.

எப்பொழுதும் சதாகாலங்களிலும்: உமது நாமத்தை வணங்குகிறோம்.

ஆண்டவரே, இந்த நாளில் பாவஞ்செய்யாதப்படி: எங்களைக் காத்தருளும்.



கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்: எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால்: உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக.

கர்த்தாவே, உம்மையே நம்பியிருக்கிறேன்: நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

¶ அல்லது பின்வரும் கீதத்தைச் சொல்லவேண்டும்.

## *Benedicite, Omnia Opera.*

கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய தூதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஆகாயவிரிவின்மேலுள்ள ஜலங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய சகல வல்லமைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

சூரிய சந்திரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானத்தின் நட்சத்திரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மழையே, பனியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

தேவனுடைய காற்றுக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அக்கினியே, உஷ்ணமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மாரிகாலமே, கோடைகாலமே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மூடுபனியே, ஆலாங்கட்டியே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பனிக்கட்டியே, குளிரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

உறைந்த நீரே, உறைந்த மழையே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

இரவே, பகலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஒளியே, இருளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மின்னல்களே, மேகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியானது கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவது.

மலைகளே, குன்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

நீரூற்றுகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

சமுத்திரங்களே, நதிகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மகா மச்சங்களே, நீர்வாழும் சகல ஜெந்துக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

ஆகாயத்துச் சகல பறவைகளே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

காட்டுமிருகங்களே, நாட்டுமிருகங்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

மனுமக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

இஸ்ரவேலர் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவர்கள்.

கர்த்தருடைய ஆசாரியர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய ஊழியக்காரரே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடைய மனிதர்களே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

அனனியாவே, அசரியாவே, மிசாவேலே: கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.



¶ பின்பு முன் வாசித்தபடி புதிய ஏற்பாட்டிலிருந்து இரண்டாம் பாடத்தை வாசிக்கவேண்டும். அதற்குப்பின் அடியில் கண்டிருக்கிற கீர்த்தனம் வரும். ஆனாலும் இது சில தேதிகளுக்குரிய இரண்டாம் பாடத்திலும், பரிசுத்த யோவான்ஸ்நானனின் திருநாளுக்குரிய சுவிசேஷவாக்கியத்திலும் வாசிக்கப்படுகிறதினால் இங்கே வாசிக்கப்படவேண்டியதில்லை.

## *Benedictus*. பரி. லூ. 1. 68.

இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு: ஸ்தோத்திரமுண்டாவதாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு: வாக்குத்தத்தம்பண்ணின இரக்கத்தைச் செய்வதற்கும்;

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை: நினைத்தருளி,

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு: உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக்குமுன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழியஞ்செய்யக் கட்டளையிடுவேன் என்று,

அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு: இட்ட ஆணையை நிறைவேற்றுவதற்கும்;

ஆதிமுதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளின் வாக்கினால்: தாம் சொன்னபடியே,

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு: நம்முடைய சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளினின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே: நமக்கு இரட்சணிய கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்னப்படுவாய்: நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடைய ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத்தவும்: அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும்: உட்கார்ந்திருக்கிறவர்களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும்: அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம் நம்மைச் சந்தித்திருக்கிறது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது இந்தச் சங்கீதத்தைச சொல்லவேண்டும்.

*Jubilate Deo.* 100. சங்கீதம்.

பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்: மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனைசெய்து, ஆநந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்.

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்; நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்: நாம் அவருடைய ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாய் இருக்கிறோம்.

அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து: அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்: அவருடைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்பொழுது குருவானவரும் ஜனங்களும் இன்னும் நின்று அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தைப் பாட , அல்லது சொல்லவேண்டும். பரிசுத்த அதனாசியின் விசுவாசப்பிரமாணம் வாசிக்கும்படி குறிக்கப்பட்ட நாட்களில்மாத்திரம் இதைச் சொல்லவேண்டியதில்லை.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்தியஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.



¶ பின்பு எல்லாரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டிருக்க, அடியில் கண்டிருக்கிற ஜெபங்கள் முறையே வரும். அதற்குமுன் குருவானவர் உரத்தசத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.
மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.
குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் மற்ற தேவஊழியக்காரரும் ஜனங்களும் உரத்தசத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் எழுந்துநின்று சொல்லவேண்டியது.

கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ~~சக்கிரவர்த்தினியை~~ இரட்சியும்.

மறுமொழி: நாங்கள் உம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது இரக்கமாய்க் கேளும்.

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறுமொழி: தேவரீரேயல்லாமல், எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.

குரு: பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்.

மறுமொழி: உம்முடைய பரிசுத்தஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.

¶ இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்கஜெபம்; இது நற்கருணை முறையிலும் வாசிக்க நியமிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது, சமாதானத்துக்காகச் சொல்லுகிற ஜெபம். மூன்றாவது, சன்மார்க்கமாய் நடக்கிறதற்குவேண்டிய கிருபைக்காகச் சொல்லுகிற ஜெபம். எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, இரண்டாம் மூன்றாம் சுருக்கஜெபங்களை வருஷமுழுவதும் நாள்தோறும் தப்பாமல் காலைஜெபத்தில் பின்வருகிறபடி சொல்லவேண்டும்.

### இரண்டாம் சுருக்கஜெபம்.

### சமாதானத்துக்காகச் சொல்லியது.

சமாதானத்துக்குக் காரணரும் ஏகசிந்தையை விரும்புகிறவருமாகிய தேவனே, உம்மை அறிவதே நித்தியஜீவன், உம்மைச் சேவிப்பதே மெய்ச்சுயாதீனம். தேவரீரைத் தஞ்சமாகக் கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள் எந்த விரோதிகளுடைய வல்லமைக்கும் பயப்படாதிருக்கும்படியாக, எங்கள் சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களிலும் நின்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமேன்.

### மூன்றாம் சுருக்கஜெபம்.

### தேவகிருபைக்காகச் சொல்லியது.

சர்வவல்லமையுள்ள நித்தியதேவனே, இந்நாள்வரையும் எங்களைச் சுகமாய் நடத்திவந்த எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கு உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும் உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ கீதஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.

¶ இப்பொழுது பின்வரும் ஜெபங்கள் ஐந்தையும் வாசிக்கவேண்டும். லித்தானி ஜெபம் வாசிக்கப்படும்பொழுது, இவ்வைந்தில் கடைசி இரண்டு ஜெபங்களை மாத்திரம் லித்தானி முறையில் வருகிறபடி வாசிக்கவேண்டும்.



### மாட்சிமைபொருந்திய சக்கிரவர்த்தினி அவர்களுக்காகச் சொல்லிய ஜெபம்.

உன்னதமானவரும், வல்லமையுள்ளவரும், ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவும், பிரபுக்களுக்கு ஏகாதிபதியும், பரம சிங்காசனத்திலிருந்து பூமியிலுள்ள எல்லாக் குடிகளையும் கண்ணோக்கிப் பார்க்கிறவருமாயிருக்கிற எங்கள் பரமபிதாவாகிய கர்த்தாவே, மகா காருணிய சுயாதிபதியாகிய **விக்த்தோரியா** என்னும் எங்கள் சக்கிரவர்த்தினியின்மேல் தேவரீர் கிருபாகடாட்சம் வைத்து; அவர் எப்பொழுதும் உமது சித்தத்துக்கு இணங்கவும், உமது வழியில் நடக்கவும், உமது பரிசுத்தஆவியின் கிருபையால் அவரை நிரப்பி; பரமவரங்களை அவருக்குத் திரளாகத் தந்து; சுகத்தையும், ஐசுவரியத்தையும், தீர்க்காயுசையும், அருளிச்செய்து; தமது சத்துருக்கள் எல்லாரையும் வென்று கீழ்ப்படுத்த அவரைப் பலப்படுத்தி; கடைசியில் இச்சீவியத்துக்குப்பின்பு நித்திய சந்தோஷத்தையும் பேரின்பவாழ்வையும் அடைய அவருக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு முழுமனதோடே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

### ராஜகுடும்பத்திற்காகச் சொல்லிய ஜெபம்.

எல்லா நன்மைக்கும் ஊற்றாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்து; அவர்களுக்கு உம்முடைய பரிசுத்தஆவியை வரமாகத் தந்து, உமது பரமகிருபையைப் பரிபூரணமாய்க் கொடுத்து, எல்லாப் பாக்கியத்தையும் சுகவாழ்வையும் அருளிச்செய்து; கடைசியில் உமது நித்திய ராஜ்யத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, எங்சள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

### குருமாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்.

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் கண்காணிமார்கள்மேலும், குருமார்கள்மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள்மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு உத்தமபிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமல் பெய்யச்செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வவல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்தியஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமேன்.

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமேன்.

வருஷமுழுவதும் நாள்தோறும் செய்யவேண்டிய காலஜெப ஒழுங்கு
முற்றிற்று.

THE ORDER FOR

# EVENING PRAYER,

DAILY THROUGHOUT THE YEAR.

வருஷமுழுவதும் நாள்தோறும்

செய்யவேண்டிய

# மாலஜெப ஒழுங்கு.

¶ மாலஜெபம் தொடங்கும்போது, குருவானவர் பின்வரும் வேதவாக்கியங்களில் இரண்டொரு வாக்கியத்தை உரத்தசத்தமாய் வாசித்து, அவ்வாக்கியங்களுக்குப்பின் எழுதியிருக்கிறதைச் சொல்லக்கடவர்.

துன்மார்க்கன் தான் செய்த துன்மார்க்கத்தை விட்டு விலகி, நியாயத்தையும் நீதியையும் செய்வானேயாகில், அவன் தன் ஆத்துமாவைப் பிழைக்கப்பண்ணுவான். எசேக். 18. 27.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. சங். 51. 3.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து, என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும். சங். 51. 9.

தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். சங். 51. 17.

உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவே. 2. 13.

நம்முடைய தேவனாகிய ஆண்டவருக்கு விரோதமாக நாம் கலகம் பண்ணி, அவர் நமக்கு முன்பாக வைத்த நியாயப்பிரமாணங்களின்படி

நடக்கத்தக்கதாக நாம் அவருடைய சத்தத்துக்குச் செவிகொடாமற்போனோம்; ஆனாலும் நம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் இரக்கங்களும் மன்னிப்புகளும் உண்டு. தானி. 9. 9, 10.

கர்த்தாவே, என்னைத் தண்டியும்; ஆனாலும் நான் அவமாய்ப்போகாதபடிக்கு உம்முடைய கோபத்தினாலே அல்ல, மட்டாய்த் தண்டியும். எரே. 10. 24. சங். 6. 1.

மனந்திரும்புங்கள், பரலோகராஜ்யம் சமீபித்திருக்கிறது. பரி. மத். 3. 2.

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன்; இனிமேல் உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்ல என்பேன். பரி. லூ. 15. 18, 19.

கர்த்தாவே, ஜீவனுள்ள ஒருவனும் உமக்கு முன்பாக நீதிமான் அல்லாததினாலே, அடியேனை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். சங். 143. 2.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு கர்த்தர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். பரி. 1 யோ. 1. 8, 9.

பிரியமான சகோதரரே, நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய அளவில்லாத தயவினாலும் இரக்கத்தினாலும் பாவமன்னிப்பைப் பெறுவதற்காக; நாம் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அவர் சந்நிதியில் மாயமாய் மறைத்துக்கொள்ளாமல், பணிவும் தாழ்மையும் துக்கமும் கீழ்ப்படிதலுமுள்ள இருதயத்தோடே அறிக்கையிட, வேதவசனம் பற்பல வாக்கியங்களில் நம்மை ஏவுகிறது. நாம் எக்காலத்திலும் தேவனுக்கு முன்பாக நம்முடைய பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடவேண்டுவதுமன்றி; அவருடைய திருக்கரங்களினாலே நாம் பெற்றுக்கொண்ட மேன்மையான உபகாரங்களுக்காக ஸ்தோத்திரஞ்செலுத்தவும், மிகவும் சிறந்த அவருடைய புகழைப் பிரஸ்தாபம்பண்ணவும், அவருடைய மகா பரிசுத்த வசனத்தைக் கேட்கவும், நம்முடைய சரீரத்துக்கும் ஆத்துமாவுக்கும் தேவையானவைகளுக்காக வேண்டிக்கொள்ளவும், நாம் கூடிவந்திருக்கிற தருணத்தில் பாவங்களை அறிக்கையிடுவது நமது விசேஷித்த கடமையாயிருக்கிறது. ஆகையால் இங்கே இருக்கிற நீங்கள் யாவரும் சுத்த இருதயத்தோடும் தாழ்ந்த சத்தத்தோடும் பரம கிருபாசனத்தண்டையில் என்னுடனேகூடச் சேர்ந்து, நான் சொல்லுகிறபிரகாரம் சொல்ல உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்.



¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சபையாரெல்லாரும் சொல்லவேண்டிய பொதுவான பாவஅறிக்கை.

சர்வவல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளைவிட்டு வழுவி அலைந்துபோனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங்களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி, நாங்கள் இனித் தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசுகிறிஸ்துவினிமித்தம், எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ ஜனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர்மாத்திரம் எழுந்துநின்று கூறவேண்டிய பாவவிமோசனம்.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், பாவியின் மரணத்தை விரும்பாமல், அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பிப் பிழைப்பதையே விரும்பி, பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற தமது ஜனத்துக்குப் பாவவிமோசனத்தையும் மன்னிப்பையும் கூறி அறிவிக்க, தம்முடைய பணிவிடைக்காரருக்கு அதிகாரத்தையும் கட்டளையையும் அருளிச்செய்திருக்கிறார். மெய்யாய் மனந்திரும்பி, தமது பரிசுத்த சுவிசேஷத்தை உண்மையாய் விசுவாசிக்கிற யாவருக்கும் அவர் பாவங்களை மன்னித்து விமோசனஞ்செய்கிறார். ஆகையால் கடைசியிலே அவருடைய நித்திய ஆநந்தத்தில் சேரத்தக்கதாய், இத்தருணத்தில் நாம் செய்கிறது அவருக்குப் பிரியமாயிருக்கவும், இனி உயிரோடிருக்கும் நாளெல்லாம் மாசில்லாமல் பரிசுத்தமுள்ளவர்களாய் நடக்கவும், அவர் நமக்கு மெய்யான மனந்திரும்புதலையும், தம்முடைய பரிசுத்தஆவியையும் அருளிச்செய்யவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அவரை வேண்டிக்கொள்ளக்கடவோம். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் முழங்கால்படியிட்டுக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும். முழங்கால்படியிட்டிருக்கிற ஜனங்களும் அவரோடேகூட இதைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய

சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக் கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது.

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்.

மறுமொழி: அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

குரு: தேவனே, எங்களை இரட்சிக்க விரைவாய் வாரும்.

மறுமொழி: ஆண்டவரே, எங்களுக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

¶ எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

குரு: கர்த்தரைத் துதியுங்கள்.

மறுமொழி: கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக.

¶ பின்பு குறிக்கப்பட்ட சங்கீதங்களை ஒழுங்கின்படி சொல்ல அல்லது பாடவேண்டும். பின்பு நியமித்திருக்கிறபடி பழைய ஏற்பாட்டிலுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (Magnificat) பாக்கியவதியான கன்னிமரியாளுடைய கீதம் வரும்.

### *Magnificat.* பரி. லூ. 1.

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது: என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை: நோக்கிப்பார்த்தார்.

இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும்: என்னைப் பாக்கியவதி என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார்: அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு: தலைமுறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ்செய்தார்: இருதயசிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.



பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி: தாழ்மையானவர்களை உயர்த்தினார்.

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி: ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகாமுக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கம்செய்ய நினைத்து: தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது பின்வரும் சங்கீதம் வரும். ஆனாலும் மாதத்தின் (19) தேதியில் இதை இங்கே வாசியாமல் சங்கீதமுறையிலே வாசிக்கவேண்டும்.

### *Cantate Domino.* 98. சங்கீதம்.

கர்த்தருக்குப் புதுப்பாட்டைப் பாடுங்கள்: அவர் அதிசயங்களைச் செய்திருக்கிறார்.

அவருடைய வலதுகரமும், அவருடைய பரிசுத்த புயமும்: இரட்சிப்பை உண்டாக்கினது.

கர்த்தர் தமது இரட்சிப்பைப் பிரஸ்தாபமாக்கி: தமது நீதியை ஜாதிகளுடைய கண்களுக்கு முன்பாக விளங்கப்பண்ணினார்.

அவர் இஸ்ரவேல் குடும்பத்துக்காகத் தமது கிருபையையும் உண்மையையும் நினைவுகூர்ந்தார்: பூமியின் எல்லைகளெல்லாம் நமது தேவனுடைய இரட்சிப்பைக் கண்டது.

பூமியின் குடிகளே, நீங்களெல்லாரும் கர்த்தரைநோக்கி ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்: முழக்கமிட்டுக் கெம்பீரமாய்ப் பாடுங்கள்.

சுரமண்டலத்தால் கர்த்தரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்: சுரமண்டலத்தாலும் கீதசத்தத்தாலும் அவரைக் கீர்த்தனம்பண்ணுங்கள்.

கர்த்தராகிய ராஜாவின் சமுகத்தில்: பூரிகைகளாலும் எக்காள சத்தத்தாலும் ஆனந்தமாய் ஆர்ப்பரியுங்கள்.

சமுத்திரமும் அதின் நிறைவும்: பூச்சக்கரமும் அதின் குடிகளும் முழங்குவதாக.

கர்த்தருக்குமுன்பாக ஆறுகள் கைகொட்டி: பர்வதங்கள் ஏகமாய்க் கெம்பீரித்துப் பாடக்கடவது.

அவர் பூமியை நியாயந்தீர்க்க வருகிறார்: பூலோகத்தை நீதியோடும் ஜனங்களை நிதானத்தோடும் நியாயந்தீர்ப்பார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ பின்பு, நியமித்திருக்கிறபடி புதிய ஏற்பாட்டினுள்ள பாடம் வரும். அதற்குப்பின் (Nunc Dimittis) சிமியோனுடைய கீதம் வரும்.

*Nunc Dimittis.* பரி. லூ. 2. 29.

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி: உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

புறஜாதிகளுக்கு: பிரகாசிக்கிற ஒளியாகவும்,

உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு: மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கு முன்பாக: ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சணியத்தை என் கண்கள் கண்டது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ அல்லது மாதத்தின் (12) தேதியாயிராவிட்டால் பின்வரும் சங்கீதம் வரும்.

*Deus Misereatur.* 67. சங்கீதம்.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும்: எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்;

தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து: உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்: ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

பூமி தன் பலனைத் தரும்: தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்: பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.



¶ இப்பொழுது குருவானவரும் ஜனங்களும் நின்று அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்தைச் சொல்ல அல்லது பாடவேண்டும்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியுபிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்தஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் வணக்கமாய் முழங்கால்படியிட்டிருக்க, அடியில் கண்டிருக்கிற ஜெபங்கள் முறையே வரும். அதற்குமுன் குருவானவர் உரத்த சத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது.

கர்த்தர் உங்களோடிருப்பாராக.

மறுமொழி: அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் மற்றத் தேவ ஊழியக்காரரும் ஜனங்களும் உரத்த சத்தமாய்க் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் எழுந்துநின்று சொல்லவேண்டியது.

கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

குரு: கர்த்தாவே, எங்கள் சக்கிரவர்த்தினியை இரட்சியும்.

மறுமொழி: நாங்கள் உம்மை வேண்டிக்கொள்ளும்பொழுது இரக்கமாய்க் கேளும்.

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறுமொழி: தேவரீரேயல்லாமல், எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.

குரு: பராபரனே, எங்கள் இருதயத்தைச் சுத்திகரியும்.

மறுமொழி: உம்முடைய பரிசுத்தஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.

¶ இப்பொழுது மூன்று சுருக்கஜெபங்கள் வரும். அவைகளில் முதலாவது, அந்தந்த நாளுக்குரிய சுருக்கஜெபம். இரண்டாவது, சமாதானத்திற்காகச் சொல்லிய சுருக்கஜெபம். மூன்றாவது, சகல மோசங்களுக்கும் விலக்கிக் காக்கவேண்டுமென்பதற்காகச் சொல்லிய சுருக்கஜெபம். இவைகளில் கடைசி இரண்டு சுருக்கஜெபங்களை நாள்தோறும் மாலைஜெபத்தில் தப்பாமல் சொல்லவேண்டும்.

## மாலைஜெபத்தில் சொல்லிய இரண்டாம் சுருக்கஜெபம்.

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும், சகல நல்லாலோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரணராகிய கடவுளே, உலகம் தரக்கூடாத சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க, மன உற்சாகமுள்ளவர்களாயிருந்து; சத்துரு பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவகாலத்தைப் போக்குவதற்கு, எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபைசெய்தருளும். ஆமேன்.

மூன்றாம் சுருக்கஜெபம்.

## சகல மோசங்களுக்கும் நம்மை விலக்கிக் காப்பதற்காகச் சொல்லியது.

கர்த்தாவே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து; இந்த இராத்திரியில் நேரிடும் சகல மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும், உமது



மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்கவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ தேஸ்தானங்களிலும், பாடும் மற்ற இடங்களிலும், ஒரு கீர்த்தனம் இங்கே வரும்.

## மாட்சிமைபொருந்திய சக்கிரவர்த்தினி அவர்களுக்காகச் சொல்லிய ஜெபம்.

உன்னதமானவரும், வல்லமையுள்ளவரும், ராஜாதிராஜாவும், கர்த்தாதிகர்த்தாவும், பிரபுக்களுக்கு ஏகாதிபதியும், பரம சிங்காசனத்திலிருந்து பூமியிலுள்ள எல்லாக் குடிகளையும் கண்ணோக்கிப் பார்க்கிறவருமாயிருக்கிற எங்கள் பரம பிதாவாகிய கர்த்தாவே, மகா காருணிய சுயாதிபதியாகிய **விக்தோரியா** என்னும் எங்கள் சக்கிரவர்த்தினிமேல் தேவரீர் கிருபாகடாட்சம்வைத்து; அவர் எப்பொழுதும் உமது சித்தத்துக்கு இணங்கவும், உமது வழியில் நடக்கவும், உமது பரிசுத்தஆவியின் கிருபையால் அவரை நிரப்பி; பரம வரங்களை அவருக்குத் திரளாகத் தந்து; சுகத்தையும், ஐசுவரியத்தையும், தீர்க்காயுசையும், அருளிச்செய்து; தமது சத்துருக்கள் எல்லாரையும் வென்று கீழ்ப்படுத்த அவரைப் பலப்படுத்தி; கடைசியில் இச்சீவியத்துக்குப்பின்பு நித்திய சந்தோஷத்தையும் பேரின்ப வாழ்வையும் அடைய அவருக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு முழு மனதோடே உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## ராஜகுடும்பத்திற்காகச் சொல்லிய ஜெபம்.

எல்லா நன்மைக்கும் ஊற்றாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்து; அவர்களுக்கு உம்முடைய பரிசுத்தஆவியை வரமாகத் தந்து, உமது பரம கிருபையைப் பரிபூரணமாய்க் கொடுத்து, எல்லாப் பாக்கியத்தையும் சுகவாழ்வையும் அருளிச்செய்து; கடைசியில் உமது நித்திய ராஜ்யத்தில் அவர்களைச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு உம்மைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

குருமாருக்காகவும் சபையாருக்காகவும் சொல்லிய ஜெபம்.

மகா அதிசயங்களைச் செய்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, எங்கள் கண்காணிமார்கள்மேலும், குருமார்கள்மேலும், அவர்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்பட்ட எல்லாச் சபைகள்மேலும் ஆரோக்கியம் தருகிற உம்முடைய கிருபையுள்ள ஆவியை அனுப்பி; அவர்கள் உமக்கு உத்தம பிரியமானவர்களாய் நடக்கும்படி, உமது ஆசீர்வாதமாகிய பனி அவர்கள்மேல் ஓயாமல் பெய்யச்செய்தருளும். கர்த்தாவே, எங்கள் காரியகர்த்தரும் மத்தியஸ்தருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமையுண்டாக இதைக் கட்டளையிட்டருளும். ஆமென்.

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்தியஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடும் கூட எப்போதைக்கும் இருப்பதாக. ஆமென்.

வருஷமுழுவதும் நாள்தோறும் செய்யவேண்டிய மாலைஜெப ஒழுங்கு முற்றிற்று.

# THE ATHANASIAN CREED.

அதநாசி என்பவரின்

# விசுவாசப்பிரமாணம்.

## காலைஜெபத்தில் சொல்லவேண்டியது.

¶ கிறிஸ்துவின் ஜநநாள் - பிரசன்னத் திருநாள் - பரி. மத்தியாவின் திருநாள் - உயிர்த்தெழுந்த திருநாள் - பரத்துக்கேறின திருநாள் - பரிசுத்த ஆவியின் திருநாள் - பரி. யோவான்ஸ்நானன் - பரி. யாக்கோபு - பரி. பர்த்தொலொமேயு - பரி. மத்தேயு - பரி. சீமோன், யூதா - பரி. அந்திரேயா - இவர்கள் திருநாட்கள் - திரித்துவ ஞாயிறு ஆகிய இந்த நாட்களில் காலைஜெபம் செய்யும்போது, அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்துக்குப் பதிலாக பரி. அதநாசி விசுவாசப்பிரமாணமென்று பேர்வழங்குகிற கிறிஸ்துமார்க்க விசுவாச அறிக்கையைக் குருவானவரும், ஜனங்களும், நின்று பாட அல்லது சொல்ல வேண்டும்.

*Quicunque vult.*

இரட்சிப்படைய விரும்புகிறவன் எவனோ: அவன் திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசத்தை எல்லாவற்றிலும் முதன்மையாய்ப் பற்றிக்கொள்ளவேண்டும்.

அந்த விசுவாசத்தைப் பழுதின்றி முழுமையும் அநுசரியாதவன்: என்றைக்கும் கெட்டுப்போவான் என்பதற்குச் சந்தேகமில்லை.

திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசமாவது: தேவத்துவமுள்ளவர்களைக் கலவாமலும், தேவத்துவத்தைப் பிரியாமலும்,

ஏகதேவனைத் திரித்துவமாகவும்: திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டுமென்பதே.

பிதாவானவர் ஒருவர், குமாரனவர் ஒருவர்: பரிசுத்த ஆவியானவர் ஒருவர்.

ஆனாலும் பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: ஒரே தேவத்தன்மையும் சமமகிமையும் சமநித்தியமகத்துவமும் உண்டு.

பிதா எப்படிப்பட்டவரோ, குமாரனும் அப்படிப்பட்டவர்: பரிசுத்த ஆவியும் அப்படிப்பட்டவர்.

பிதா சிருஷ்டிக்கப்படாதவர், குமாரனும் சிருஷ்டிக்கப்படாதவர்: பரிசுத்தஆவியும் சிருஷ்டிக்கப்படாதவர்.

பிதா அளவிடப்படாதவர், குமாரனும் அளவிடப்படாதவர்: பரிசுத்த ஆவியும் அளவிடப்படாதவர்.

பிதா நித்தியர், குமாரனும் நித்தியர்: பரிசுத்தஆவியும் நித்தியர்.

ஆகிலும் மூன்று நித்திய வஸ்துக்களில்லை: நித்திய வஸ்து ஒன்றே.

அப்படியே மூன்று அளவிடப்படாத வஸ்துக்களில்லை, மூன்று சிருஷ்டிக்கப்படாத வஸ்துக்களில்லை: சிருஷ்டிக்கப்படாத வஸ்து ஒன்றே, அளவிடப்படாத வஸ்து ஒன்றே.

அப்படியே பிதா சர்வவல்லவர், குமாரனும் சர்வவல்லவர்: பரிசுத்த ஆவியும் சர்வவல்லவர்.

ஆகிலும் மூன்று சர்வவல்ல வஸ்துக்களில்லை: சர்வவல்ல வஸ்து ஒன்றே.

அப்படியே பிதா தேவன், குமாரனும் தேவன்: பரிசுத்தஆவியும் தேவன்.

ஆகிலும் மூன்று தேவர்களில்லை: தேவன் ஒருவரே.

அப்படியே பிதா கர்த்தர், குமாரனும் கர்த்தர்: பரிசுத்தஆவியும் கர்த்தர்.

ஆகிலும் மூன்று கர்த்தர்களில்லை: கர்த்தர் ஒருவரே.

அம்மூவரில் ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தேவனென்றும் கர்த்தரென்றும் அறிக்கையிடவேண்டுமென்று: கிறிஸ்துமார்க்க சத்தியத்தினாலே கட்டளையிட்டிருக்கிறதுபோல;

மூன்று தேவர்கள் உண்டென்றும், மூன்று கர்த்தர்கள் உண்டென்றும் சொல்லக்கூடாதென்று: திருச்சபைக்குரிய பொதுவான சித்தாந்தத்தினாலே கட்டளையிட்டிருக்கிறது.

பிதா ஒருவராலும் உண்டாக்கப்பட்டவருமல்ல: சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல.

குமாரன் பிதாவினாலேயே இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவரே.

பரிசுத்தஆவி பிதாவினாலும் குமாரனாலும் இருக்கிறவர்: உண்டாக்கப்பட்டவருமல்ல, சிருஷ்டிக்கப்பட்டவருமல்ல, ஜெனிப்பிக்கப்பட்டவருமல்ல, புறப்படுகிறவரே.

ஆகையால் மூன்று பிதாக்களில்லை, ஒரே பிதாவும்: மூன்று குமாரரில்லை, ஒரே குமாரனும்: மூன்று பரிசுத்தஆவிகளில்லை, ஒரே பரிசுத்தஆவியும் உண்டு.

அன்றியும் இந்தத் திரித்துவத்தில் ஒருவரும் முந்தினவருமல்ல, பிந்தினவருமல்ல: ஒருவரில் ஒருவர் பெரியவருமல்ல, சிறியவருமல்ல.

மூவரும் சமநித்தியரும்: சரிசமானருமாம்.

ஆதலால் மேற்சொல்லியபடி, எல்லாவற்றிலும்: ஏகத்துவத்தைத் திரித்துவமாகவும், திரித்துவத்தை ஏகத்துவமாகவும் வணங்கவேண்டும்.



ஆனபடியால், இரட்சிப்படைய விரும்புகிறவன்: திரித்துவத்தைக் குறித்து இப்படியே நினைக்கவேண்டும்.

மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மனுஷாவதாரத்தைக்குறித்துச் சரியானபடி விசுவாசிப்பதும்: நித்திய இரட்சிப்படைவதற்கு அவசியமாயிருக்கிறது.

நாம் விசுவாசித்து அறிக்கையிடுகிற சரியான விசுவாசமாவது: தேவகுமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்து தேவனும் மனுஷனுமாய் இருக்கிறார்.

உலகங்கள் உண்டாவதற்கு முன்னே அவர் ஜெனிப்பிக்கப்பட்டு, பிதாவின் தன்மையையுடைய தேவனாகவும்: உலகத்தில் பிறந்து தம்முடைய தாயின் தன்மையையுடைய மனுஷனாகவும் இருக்கிறார்.

குறைவற்ற தேவனாயும்: பகுத்தறிவுடைய ஆத்துமாவும் நரதேகமும் பொருந்திய குறைவற்ற மனுஷனாயும் இருக்கிறார்.

தேவத்தன்மையின்படி பிதாவுக்குச் சரியானவர்: மனுஷத்தன்மையின்படி பிதாவுக்குத் தாழ்ந்தவர்.

அவர் தேவனும் மனுஷனுமாயிருந்தும்: இருவராயிராமல், கிறிஸ்து என்னும் ஒருவராகவே இருக்கிறார்.

தேவத்தன்மை மனுஷத்தன்மையாய் மாறினதினாலேயல்ல: தெய்வத்தில் மனுஷத்தன்மையைச் சேர்த்துக்கொண்டதினாலேயே, ஒருவராயிருக்கிறார்.

இரண்டு தன்மையும் கலந்ததினாலேயல்ல: ஒருவராகப் பொருந்தினதினாலே, முற்றும் ஒருவராயிருக்கிறார்.

பகுத்தறிவுடைய ஆத்துமாவும் சரீரமும் பொருந்தி, ஒரேமனுஷனாயிருப்பதுபோல: தேவனும் மனுஷனும் பொருந்தி, ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார்.

அவர் நமக்கு இரட்சிப்புண்டாகப் பாடுபட்டு: பாதாளத்தில் இறங்கி, மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்.

அவர் பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்: அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

அவர் வரும்பொழுது, சகல மனுஷரும் தங்கள் சரீரங்களோடு எழுந்து: தங்கள் கிரியைகளைக்குறித்துக் கணக்கு ஒப்புவிப்பார்கள்.

நன்மைசெய்தவர்கள் நித்திய சீவனையும்: தீமைசெய்தவர்கள் நித்திய அக்கினியையும் அடைவார்கள்.

திருச்சபைக்குரிய பொதுவான விசுவாசம் இதுவே: இதை ஒருவன் உண்மையாய் விசுவாசியாவிட்டால் இரட்சிப்படையான்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

# THE LITANY.

# லித்தானியா

என்னும்

## சாதாரணப் பிரார்த்தனை.

¶ இது ஞாயிறு - புதன் - வெள்ளிக்கிழமைகளிலும், அத்தியட்சர் கட்டளையிடும் மற்ற நாட்களிலும், காலைஜெபமானபின்பு பாட அல்லது சொல்ல வேண்டும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும்நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும்நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏகதேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும்; எங்கள் பாவங்களுக்குத்தக்க தண்டனை செய்யாதேயும்: தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும், பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும், உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.



இருதயக் குருட்டாட்டத்தில் நின்றும், அகந்தையிலும் வீண்பெருமையிலும் மாயத்திலும் நின்றும், பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும், சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

விபசாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும், உலகத்தினாலும் மாமிசத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும், பெருவாரி விஷவியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும், யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில் வரும் மரணத்திலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகலவித கலகத்திலும், அதிகாரிகளுக்கு விரோதமான கட்டுப்பாட்டிலும், ராஜதுரோகத்திலும் நின்றும்; சகலவித பொய்ப்போதகத்திலும் வேதப்புரட்டிலும், சபைப்பிரிவினையிலும் நின்றும்; இருதய கடினத்திலும், உமது வசனத்தையும் கற்பனையையும் அசட்டைபண்ணும் துணிவிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும், உமது பரிசுத்தப் பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும், உமது ஞானஸ்நானம் உபவாசம் சோதனையினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும், உமது சிலுவை பாடுகளினிமித்தமும், உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும், மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினதினிமித்தமும், பரிசுத்தஆவி வந்ததினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

துக்கப்படுங்காலத்திலும், சுகப்படுங்காலத்திலும், மரணவேளையிலும், நியாயத்தீர்ப்புநாளிலும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

கர்த்தராகிய தேவனே, பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்; எங்குமுள்ள உமது பரிசுத்த சபையைச் சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பணிவிடைக்காரியாகிய விக்தோரியா என்னும் எங்கள் காருணிய சக்கிரவர்த்தினி உம்மைச் செம்மையாய் ஆராதிக்கவும், நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும், அவரைக் காத்து ஸ்திரப்படுத்தவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருடைய இருதயத்தை உம்மைப் பற்றும் விசுவாசத்திலும் பயத்திலும் அன்பிலும் ஆண்டு நடத்தி; அவர் எப்பொழுதும் உம்மிடத்தில் நம்பிக்கையாயிருக்கவும், உம்முடைய கனத்தையும் மகிமையையும் எப்பொழுதும் நாடவும் கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருக்குச் சகாயரும் இரட்சகருமாயிருந்து, சத்துருக்கள் எல்லாரையும் ஜெயங்கொள்ள அவருக்குத் தயைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

கண்காணிமார், குருமார், உதவிக்குருமார் யாவருக்கும், உமது வசனத்தைப்பற்றிய மெய்யறிவாகிய பிரகாசத்தை அளித்து; அவர்கள் பிரசங்கத்தினாலும் நடக்கையினாலும் அவ்வசனத்தைத் தகுதியாய்ப் பிரசித்தஞ்செய்து காண்பிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ராஜ்ய பரிபாலன ஆலோசனைக் கர்த்தாக்களுக்கும், பிரபுக்கள் அனைவருக்கும், கிருபையையும் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி; அவர்கள் நியாயத்தை நடப்பிக்கவும், சத்தியத்தைப் பரிபாலனம்பண்ணவும், கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;



நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தேசங்களுக்கும் ஒருமையையும், சமாதானத்தையும், ஏக சிந்தையையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் உம்மில் அன்புகூர்ந்து, உமக்குப் பயந்து, உமது கற்பனைகளின்படி ஜாக்கிரதையாய் நடக்க எங்களுக்கு நல்மனதைக் கொடுக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தைச் சாந்தமாய்க் கேட்டு, அன்புடனே உட்கொண்டு, ஆவியின் கனிகளைக் கொடுக்கும்படி, கிருபையை அதிகமதிகமாய்த் தந்தருளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வழிதப்பி மோசம்போன யாவரையும் சத்திய வழியில் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிற்கிறவர்களைப் பலப்படுத்தி, மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து, விழுந்தவர்களைக் கைதூக்கி, கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின்கீழ் நசுக்கிப்போடவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் ஆதரவையும் சகாயத்தையும் ஆறுதலையும் செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிலத்திலும் நீரிலும் யாத்திரைபண்ணுகிற யாவரையும், பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீகளெல்லாரையும், சகல வியாதிக்காரரையும் குழந்தைகளையும் காப்பாற்றி; காவலில் அடைபட்டவர்கள் சிறைப்பட்டவர்கள் யாவருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே,

தாய்தகப்பனில்லாப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும், திக்கற்றவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும், காத்துப் பராமரிக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எல்லா மனுஷருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களைப் பகைக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் அவதூறுபண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நாங்கள் அநுபவிக்கும்படி, அவைகளை எங்கள் உபயோகத்துக்காகத் தந்து காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து, எல்லாப் பாவங்களையும் அஜாக்கிரதையையும் அறியாமையையும் மன்னித்து; உமது பரிசுத்த வசனத்தின்படி எங்கள் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதற்கு உமது பரிசுத்தஆவியின் கிருபையை அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச்செய்யும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, கேட்டருளும்.
கிறிஸ்துவே, கேட்டருளும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.



¶ இப்பொழுது குருவானவரும் அவரோடேகூட ஜனங்களும்
கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, எங்கள் பாவங்களுக்குத்தக்கதாக எங்களைத் தண்டியாதேயும்.

மறுமொழி: எங்கள் அக்கிரமங்களுக்குத்தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாதேயும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே, துன்பங்களும் இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும்; உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாயதந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும்.

கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து எங்களை இரட்சியும்.

பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும், அவர்களுக்கு முந்தின பூர்வகாலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க, எங்கள் காதுகளால் கேட்டோம்.

கர்த்தாவே, உமது மகிமைப் பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து, எங்களை இரட்சியும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கிறிஸ்துவே, எங்கள் சத்துருக்களை விலக்கி எங்களை இரட்சியும்.

கிருபையாய் எங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கும்.

உருக்கமாய் எங்கள் மனவிசாரங்களைப் பாரும்.
இரக்கமாய் உமது ஜனத்தின் பாவங்களை மன்னியும்.
தயவாய், இரக்கத்துடனே எங்கள் ஜெபங்களைக் கேளும்.
தாவீதின் மைந்தனே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, இப்பொழுதும் எப்பொழுதும் செவிகொடுத்தருளும்.
கிறிஸ்துவே, கிருபையாய்க் கேளும்; கிறிஸ்துநாதரே, கிருபையாய்க் கேளும்.

**குரு:** கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.
**மறுமொழி:** நாங்கள் உம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப்பார்த்து, நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகளெல்லாவற்றையும் உமது நாமத்துக்கு மகிமையுண்டாக விலக்கி, எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும்; உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக எப்பொழுதும் மாசில்லாத பரிசுத்த நடக்கையுள்ளவர்களாய் உம்மைச் சேவிக்கவும், கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துநாதர் மூலமாய் மனத்தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

பரிசுத்த கிறிசொஸ்தம் என்பவருடைய ஜெபம்.

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொதுவான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வவல்லமையுள்ள தேவனே, இரண்டுபேராவது மூன்றுபேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப்பொழுது நிறைவேற்றி; இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். **ஆமேன்.**

2 கொ. 13.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. **ஆமேன்.**

*லித்தானியா முற்றிற்று.*

# PRAYERS AND THANKSGIVINGS.

விசேஷித்த காலங்களில்

செய்யவேண்டிய

# ஜெபங்களும் ஸ்தோத்திரங்களும்.

¶ இவைகளில் தேவையானதை லித்தானியாவிலும் காலைமாலை ஜெப ஒழுங்கிலும் கடைசியாக வரும் இரண்டு ஜெபங்களுக்குமுன் வழங்கவேண்டும்.

## PRAYERS.

## ஜெபங்கள்.

### மழைக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

பரம பிதாவாகிய தேவனே, உம்முடைய ராஜ்யத்தையும் அதன் நீதியையும் தேடுகிற யாவருக்கும் சரீர சம்ரட்சணைக்கு வேண்டியவைகள் எல்லாவற்றையும் கொடுப்பேன் என்று உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு வாக்குத்தத்தஞ்செய்தீரே; எங்களுக்கு ஆறுதலும் தேவரீருக்கு மகிமையும் உண்டாக, பூமியின் பலன்கள் எங்களுக்குக் கிடைக்கும்படி, இப்பொழுது எங்கள் அவசரத்துக்குத் தேவையான மழையை வருஷிக்கச் செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

### கெடுதிமழை நீங்கும்படி செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள ஆண்டவராகிய தேவனே, பூர்வீகத்திலே மனுஷருடைய பாவத்தினிமித்தம் எட்டுப்பேரைத்தவிர உலக முழுவதையும் ஜலப்பிரளயத்தினால் அழித்தபின், இனி ஒருக்காலும் அதை அப்படி அழிப்பதில்லையென்று மகா இரக்கமாய் வாக்குத்தத்தஞ்செய்தீரே; எங்கள்

அக்கிரமங்களினிமித்தம் கெடுதிமழையினாலும் பெருவெள்ளத்தினாலும் நாங்கள் வருத்தப்படுகிறது நியாயமாயிருந்தும், உண்மையாய் மனஸ்தாபப்படுகிற எங்களுக்குப் பூமியின் பலன்கள் தகுதியான காலத்தில் கிடைக்கத்தக்கதாக, வானம் வெளிவாங்கும்படி செய்யவேண்டுமென்றும்; உம்முடைய தண்டனையை உணர்ந்து எங்கள் நடக்கையைச் சீர்திருத்தவும், உம்முடைய இரக்கத்தை உணர்ந்து உம்மைத் துதித்து மகிமைப்படுத்தவும், கிருபை புரியவேண்டுமென்றும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## பஞ்சகாலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

பரம பிதாவாகிய தேவனே, மழைபெய்வதும், பூமி தன் பலனைத் தருவதும், மிருகங்கள் மச்சங்கள் பலுகிப் பெருகுவதும் உம்முடைய செயலாயிருக்கிறது. உமது ஜனத்தின் உபத்திரவங்களை நோக்கிப்பார்த்து, எங்கள் அக்கிரமத்தினிமித்தம் நியாயமாய் வந்திருக்கிற பஞ்சத்தை உமது தயவினால் அகற்றி, தானியம் நன்றாய் விளையவும், அகவிலை மலியவும் செய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் அன்பை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்தஆவிக்கும் சகல கனமும் மகிமையும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமேன்.

அல்லது இது.

நரஜீவதயாபரராகிய பிதாவே, எலிசா தீர்க்கதரிசியின் காலத்தில் சமாரியா பட்டணத்திலே உண்டான கடும்பஞ்சத்தைச் சடிதியில் அகற்றி, மலிவுண்டாகச் செய்தருளினீரே; எங்கள் பாவங்களினிமித்தம் அப்படிப்பட்ட தண்டனையடைந்து வருத்தப்படுகிற எங்களுக்கும் காலத்துக்கு ஏற்ற சகாயம் கிடைக்கத்தக்கதாய், உமது பரம ஆசீர்வாதத்தினால் பூமியின் பலன்கள் விருத்தியாகும்படி செய்தருளும். தேவரீர் பூரணமாய்க் கொடுக்கும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுகிற நாங்கள், உமக்கு மகிமையாகவும், ஏழைகளுக்கு உதவியாகவும், எங்களுக்கு ஆறுதலாகவும், அவைகளை அனுபவிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் அநுக்கிரகஞ்செய்தருளும். ஆமேன்.

## யுத்தங்களும், கலகங்களும், நடக்குங்காலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

சகல ராஜாக்களுக்கும் ராஜாவே, சர்வத்துக்கும் ஆண்டவரே, யாதொரு சிருஷ்டியும் எதிர்க்கக்கூடாத சர்வசக்தியுடைய தேவனே, பாவிகளை நியாயமாய்த் தண்டித்து, உண்மையாய் மனஸ்தாபப்படுகிறவர்களுக்கு



மன்னிப்பு அளிக்கிறவரே, பலத்த அரணாயிருக்கிற உம்மாலே நாங்கள் காக்கப்பட்டு, சகல மோசங்களுக்கும் விலகி, ஜெயத்துக்குக் காரணராகிய உம்மை மகிமைப்படுத்தும்படியாக; சத்துருக்கள் கையில் அகப்படாதபடி, எங்களை இரட்சித்து, அவர்கள் இறுமாப்பை அடக்கி, அவர்கள் குரோதத்தைத் தணித்து, அவர்கள் உபாயங்களை வியர்த்தமாக்கிப்போடவேண்டுமென்று, உமது ஒரே குமாரனும் எங்கள் புண்ணியநாதருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## பெருவாரி விஷவியாதிகள் நடமாடுங்காலத்தில் செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உம்முடைய ஜனங்கள் வனாந்தரத்திலே மோசேயையும் ஆரோனையும் எதிர்த்து, அவர்களுக்கு விரோதமாய் அடஞ்சாதித்துக் கலகஞ்செய்ததினிமித்தம், அவர்கள்மேல் கோபங்கொண்டு வாதையை வரவிட்டு, தாவீதுராஜாவின் காலத்திலும் கொள்ளைநோயினாலே எழுபதினாயிரம்பேரைச் சங்காரஞ்செய்து, பின்பு உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து மற்றவர்களை இரட்சித்தீரே. இக்காலத்தில் கொடிய விஷவியாதியினாலே வாரிக்கொள்ளப்படுகிற ஏழைப் பாவிகளாகிய எங்கள்மேல் மனதுருகி, அப்பொழுது தேவரீர் இரக்கமாய்ப் பாவபரிகாரத்தை ஏற்றுக்கொண்டு, வாதையை நிறுத்தும்படி சங்காரதூதனுக்குக் கட்டளையிட்டதுபோல, இப்பொழுது எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் திருமுகத்தைப்பார்த்து, இந்தக் கொடிய விஷவியாதியை எங்களை விட்டு நீக்கியருளும். ஆமேன்.

### ¶ குருப்பட்டம் பெறுகிறவர்களுக்காக எம்பர் வாரங்களில் நாள்தோறும் செய்யவேண்டிய ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது நேசகுமாரனுடைய அருமையான இரத்தத்தினாலே எங்குமுள்ள பொதுவான திருச்சபையைச் சம்பாதித்துக்கொண்ட எங்கள் பரம பிதாவே, அந்தச் சபையை உமது அருட்கண்ணால் பார்த்து, உமது மந்தையின் மேய்ப்பர்களும் கண்காணிகளுமாயிருக்கிற உமது பணிவிடைக்காரர், ஒருவருடைய சிரசின்மேலும் சீக்கிரமாய் கைகளை வைக்காமல், உம்முடைய சபைக்குரிய திவ்விய ஊழியத்தைச் செய்ய, தகுதியானவர்களை உண்மையாயும் நிதானமாயும் தெரிந்துகொள்ளும்படி, இக்காலத்திலே அவர்கள் மனதை நடத்தி ஆண்டருளும். அன்றியும், எவ்வகையான திருப்பணிவிடையுஞ்செய்ய பட்டம்பெறுகிற யாவரும் தங்கள் நடக்கையினாலும் உபதேசத்தினாலும் உமது மகிமையைப் பிரஸ்தாபப்படுத்தவும், சகல மனுஷருடைய இரட்சிப்புக்காக

முயற்சிசெய்யவும், உமது குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்முடைய கிருபாகடாட்சத்தையும் பரம ஆசீர்வாதத்தையும் அவர்களுக்கு அநுக்கிரகித்தருளும். ஆமென்.

*அல்லது இது.*

*சர்வவல்லமையுள்ள தேவனே, சகல வரப்பிரசாதங்களையும் அருளுகிறவரே; திருச்சபையில் வெவ்வேறான குருப்பட்டங்களை நியமிக்கத் திருவுளங்கொண்டவரே; திருச்சபையில் எவ்வகையான உத்தியோகத்துக்கும் ஊழியத்துக்கும் அழைக்கப்படுகிற யாவருக்கும் உமது கிருபையைத் தந்தருளும். அவர்கள் உமது திருநாமத்துக்கு மகிமையும், உமது திருச்சபைக்கு நன்மையும் உண்டாக, உமது சந்நிதானத்தில் உண்மையாய்ப் பணிவிடைசெய்யும்படிக்கு அவர்கள் உமது சத்திய உபதேசத்தினால் நிறையப்படவும், மாசில்லா நடக்கையினால் அலங்கரிக்கப்படவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

*¶ முந்தின எந்த ஜெபத்துக்குப்பின்பாகிலும் செய்யத்தக்க ஜெபம்.*

தேவனே, எப்பொழுதும் இரக்கஞ்செய்கிறதும் மன்னிக்கிறதும் உமக்குச் சுபாவமும் இலட்சணமுமாயிருக்கிறதினால், எங்கள் தாழ்மையான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, எங்கள் பாவங்களாகிய சங்கிலியினாலே நாங்கள் கட்டுண்டவர்களாயினும், உருக்கமான உமது மிகுந்த இரக்கத்தினாலே எங்களைக் கட்டவிழ்த்து விடுதலையாக்கவேண்டுமென்று, எங்கள் மத்தியஸ்தரும் எங்களுக்காகப் பரிந்துபேசுகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை உண்டாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*¶ பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்காகவும், இந்திய துரைத்தனத்தாருக்காகவும், செய்யவேண்டிய ஜெபம்.*

மகா காருணிய கடவுளே, அங்கிலேய அரசாட்சிக்குட்பட்ட ராஜ்யம் அனைத்திற்காகவும், நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதுமன்றி, விசேஷமாய்ப் பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்காகவும், எங்கள் சக்கிரவர்த்தினி அவர்களால் நியமிக்கப்பட்ட துரைத்தனத்தாருக்காகவும் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இந்தியாவிலே கவர்னர் ஜனரலாகிய ராஜபிரதிநிதிக்காகவும், கவர்னர்களுக்காகவும், மந்திராலோசனைச் சபைகளுக்காகவும், ஹைகோர்ட்டு நியாயாதிபதிகளுக்காகவும், இத்தேசத்தில் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாருக்காகவும் வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீருடைய மகிமைப்பிரதாபம் விளங்கவும், உமது திருச்சபை நன்மையில் ஓங்கி வளரவும், எங்கள் சக்கிரவர்த்தினியும் அவர் ஆளுகைக்குட்பட்ட தேசங்களும் க்ஷேமமடைந்து புகழ்பெற்று வாழவும், அவர்களு



## மிசியோன்களின்மேல் தேவ ஆசீர்வாதம் உண்டாகும்படி செய்யவேண்டிய ஜெபங்கள்.

*¶ இவைகளும் துரைத்தனத்தாருக்காகச் சொல்லிய ஜெபமும் "எல்லா மனிதரையும் சிருஷ்டித்தவரும்" என்று தொடங்கும் பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காக வழங்கவேண்டிய ஜெபத்துக்குப் பின்னும், "சர்வ வல்லமையுள்ள தேவனே" என்று தொடங்கும் பொதுவான ஸ்தோத்திரத்துக்கு முன்னும் வாசிக்கப்படவேண்டும்.*

இரக்கமுள்ள தேவனே, நீர் எல்லா மனிதரையும் உண்டாக்கினவரும், உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாதவரும், பாவியின் மரணத்தை விரும்பாமல் அவன் மனந்திரும்பிப் பிழைப்பதையே விரும்புகிறவருமாயிருக்கிறீர். உம்முடைய சத்தியத்தை அறியாத எல்லார்மேலும் இரங்கி, சகலவித அறியாமையையும், இருதய கடினத்தையும், உமது வசனத்தை அசட்டைபண்ணும் துணிவையும் அவர்களை விட்டு நீக்கி, மீதியாயிருக்கிற மெய் இஸ்ரவேலரோடேகூட அவர்கள் இரட்சிக்கப்படவும், இயேசுகிறிஸ்துவாகிய ஒரே மேய்ப்பரிடத்தில் ஒரே மந்தையாகவும், அவர்களையும் தேவரீருடைய சபையாகிய மந்தையில் திரும்பிச் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று, ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*அல்லது இது.*

*சர்வ ஜீவ தயாபர பிதாவாகிய தேவனே, மனுஷஜாதியான சகல ஜனங்களையும் ஒரே இரத்தத்தினாலே உண்டாக்கி, பூமியின்மேல் குடியிருக்கச் செய்து, தூரமாயிருந்தவர்களுக்கும் சமீபமாயிருந்தவர்களுக்கும் சமாதானத்தை சுவிசேஷமாக அறிவிக்கும்படி ஸ்தோத்திரிக்கப்பட்ட உம்முடைய ஏக சுதனை அனுப்பினீரே: இத்தேசத்திலுள்ள ஜனங்கள் உம்மை நாடித் தேடிக் கண்டுபிடிக்கும்படி கிருபைகூர்ந்து, மாம்சமான சகல மனுஷர்மேலும் உம்முடைய ஆவியின் அநுக்கிரகத்தை மழைபோல ஊற்றியருளுவோம் என்று நீர் செய்த வாக்குத்தத்தத்தை சீக்கிரத்தில் நிறைவேற்றும்படி எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.*

## துரைத்தனத்தாருக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

*இராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தாவுமாகிய எங்கள் பரமபிதாவே, மகா காருண்ய சுயாதிபதியாகிய விக்தோரியா என்னும் எங்கள் சக்கிரவர்த்தினியையும், வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்ட் எட்வார்ட் என்னும் இளவரசரையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும்,*

ராஜகுடும்பமனைத்தையும் உமது அருட்கண்ணால் நோக்கிப்பாரும். பார்லமெந்தென்னும் மகா சங்கத்தாருக்கு தேவரீர் துணைநின்று அவர்கள் ஆலோசனைகளெல்லாவற்றையும் நடத்தியருளும். இந்தியாவிலே துரைத்தனம் பண்ணுகிற ராஜபிரதிநிதிக்காகவும், கவர்னர்களுக்காகவும், நியாயாதிபதிகளுக்காகவும், சக்கிரவர்த்தினியவர்களால் அதிகாரம் பெற்றிருக்கிற மற்றெல்லாருக்காகவும் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். தேவரீருடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையும், திருச்சபைக்கு நன்மையும், பிரஜைகளுக்கு க்ஷேமமும் உண்டாகும்படி, அவர்கள் சகலத்தையும் ஞானமும், நீதியும், இரக்கமுமாய் நடத்திவர கிருபைசெய்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.



டைய ஆலோசனைகள் செய்கைகள் எல்லாவற்றையும் நடத்தி பயன்படச் செய்தருளும். சமாதானமும் செல்வமும், சத்தியமும் நீதியும், சன்மார்க்கமும் தேவபக்தியும், எங்களுக்குள்ளே தலைமுறை தலைமுறையாக நிலைத்திருக்கும்படி, அவர்கள் எல்லாக் காரியங்களையும் உறுதியான உத்தம அஸ்திபாரங்களின்மேல் ஸ்தாபிக்கும்படி அநுக்கிரகஞ்செய்தருளும். அவர்களுக்கும் எங்களுக்கும் உமது திருச்சபை அனைத்துக்கும் அவசியம் வேண்டிய இவைமுதலான எல்லா நன்மைகளையும் தரும்படி, எங்கள் அருமையான கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தையும் மத்தியஸ்தத்தையும் முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

*¶ லித்தானியா ஜெபத்தைச்செய்ய நியமித்திராதபோதெல்லாம், பற்பல நிலைமையுள்ள மனுஷருக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.*

எல்லா மனுஷரையும் சிருஷ்டித்தவரும், காப்பாற்றுகிறவருமாயிருக்கிற பராபரனே, எவ்வகையும் எந்த நிலைமையுமுள்ள மனுஷர்களுக்காகவும் நாங்கள் தாழ்மையாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். சகல தேசத்தாருக்கும் உமது இரட்சணியத்தையும் சகல ஜாதியாருக்கும் உமது வழிகளையும் தெரியப்படுத்தியருளும். விசேஷமாக, தேவரீர் பொதுவாயிருக்கிற திருச்சபைக்கு நற்சீரைத்தந்து, தங்களைக் கிறிஸ்தவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற யாவரும் சத்தியமார்க்கத்திலே நடக்கவும், ஆவியின் ஒருமையிலும் சமாதானக் கட்டிலும் நீதியுள்ள நடக்கையிலும் நிலைத்து விசுவாசத்தைப் பற்றிக்கொண்டேயிருக்கவும், அந்தச் சபையை உம்முடைய நல்லாவியினாலே நடத்தியருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். கடைசியாக மனதையும் சரீரத்தையும் ஆஸ்தியையும்பற்றிய எவ்விதமான துன்பங்களும் அடைந்து வருத்தப்படுகிற யாவரையும்,

[* விசேஷமாய்த் தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி எங்களைக் கேட்டுக்கொண்டவர்களையும்,]

* தங்களுக்காக ஜெபம்பண்ணும்படி சபையார் யாராகிலும் கேட்டுக்கொள்ளும்போது இதைச் சொல்லவேண்டும்.

பிதாவே, உமது தயவுக்கு ஒப்புக்கொடுக்கிறோம். அவரவர்களுடைய அவசரங்களுக்குத் தக்கதாக தேவரீர் ஆறுதலையும் சகாயத்தையும் அருளிச்செய்து; உபத்திரவப்படுகையில் அவர்கள் பொறுமையாயிருக்கவும், அவர்கள் துன்பங்களெல்லாம் இன்பமாய் முடியவும் கட்டளையிட்டருளவேண்டுமென்று, இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

# THANKSGIVINGS.

## ஸ்தோத்திரங்கள்.

¶ பொதுவான ஸ்தோத்திரம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சர்வஜீவதயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும்,

[* விசேஷமாய் இப்பொழுது உம்மிடத்தில் பெற்றுக்கொண்ட இரக்கங்களுக்காக நன்றியறிதலான ஸ்தோத்திரங்களைச் செலுத்தவேண்டுமென்று விரும்புகிறவர்களுக்கும்,]

தேவரீர் அருளிச்செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசீர்வாதங்களுக்காகவும், உம்மைத் துதிக்கிறோம். விசேஷமாய் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலைமதியாத உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமையடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும், உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதயமுள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக்கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்தவும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்துகொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச்செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்தஆவிக்கும், எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமேன்.

* முன்பு தங்களுக்காக ஜெபம் பண்ணும்படி கேட்டுக்கொண்டவர்கள் ஸ்தோத்திரம்செலுத்த வரும்பொழுது இதைச் சொல்லவேண்டும்.



### மழை பெய்ததற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

எங்கள் பரமபிதாவாகிய தேவனே, மனிதர்களுக்கு உபயோகமாக பூமி தன் பலனைத் தரும்படி உம்முடைய தயவுள்ள திருச்செயலால் காலமழையும் கோடைமழையும் வருஷிக்கச் செய்கிறீர். அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கு மிகுந்த ஆறுதலும் உமது பரிசுத்த நாமத்துக்கு மகிமையும் உண்டாகும்படி, எங்களுக்கு உண்டாயிருந்த அவசரத்தில் வறண்டுபோன உமது சுதந்தரத்தின்மேல் அநுகூலமான மழையைப் பொழிந்து, அதைக் குளிரப்பண்ணின இரக்கத்தினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, உமக்குத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். ஆமேன்.

### கெடுதிமழை நீங்கினதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

ஆண்டவராகிய தேவனே, கெடுதிமழையினாலும் பெருவெள்ளத்தினாலும் நியாயமானபடி எங்களை வாதித்துச் சிறுமைப்படுத்தி, இப்பொழுது அந்த உபத்திரவத்தை இரக்கமாய் அகற்றி, வானம் வெளிவாங்கச்செய்து, சந்தோஷமான சுபகாலத்தை அருளி, எங்களை ஆற்றித்தேற்றினதினாலே, தேவரீர் செய்த இந்த இரக்கத்துக்காக உமது பரிசுத்த நாமத்தைத் துதித்து மகிமைப்படுத்தி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறையாகத் தேவரீருடைய அன்புள்ள தயவைக் கொண்டாடுகிறோம், சுவாமி. ஆமேன்.

### பஞ்சம் நீங்கி மலிவுண்டாகும்போது செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உமது கிருபாகடாட்சத்தினால் திருச்சபையாருடைய வணக்கமான விண்ணப்பங்களைக் கேட்டு, எங்களுக்கு உண்டாயிருந்த பஞ்சத்தையும் குறைவையும் நீக்கி, மலிவையும் செழிப்பையும் அருளிச்செய்திருக்கிறீர்; விசேஷித்த இந்த உபகாரத்தினிமித்தம் நாங்கள் தாழ்மையாய் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறதுமன்றி, உமக்கு மகிமையாகவும் எங்களுக்கு ஆறுதலாகவும் பூமி தன் பலனை நிறைவாய்த் தரும்படி உமது அன்புள்ள தயவை இன்னமும் எங்கள்மேல் பாராட்டிக்கொண்டே வரவேண்டுமென்றும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## சத்துருக்களை விலக்கிச் சமாதானத்தைத் தந்ததற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

சத்துருக்களுடைய முகத்துக்கு எதிரே உமது அடியாருக்குப் பலத்த அரணாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களைச் சூழ்ந்திருந்த பெரிய மோசங்களுக்கு எங்களைத் தப்புவித்ததற்காக உமக்குத் துதிதோத்திரங்களைச் செலுத்துகிறோம். நாங்கள் அவர்களுக்கு இரையாகாமற்போனது உம்முடைய தயவாகவே இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளுகிறதுமல்லாமல், தேவரீர் எங்களுக்குப் பலத்த இரட்சகரென்று உலகமெல்லாம் அறியும்படிக்கு, இன்னமும் அப்படிப்பட்ட இரக்கங்களை அருளிச்செய்து வரவேண்டுமென்றும், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## கலகம் நீங்கிச் சமாதானம் உண்டானதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

எங்கள் பரமபிதாவாகிய நித்திய தேவனே, அடங்காத முரட்டுச் சனங்களுடைய மூர்க்கத்தை அடக்கி, மனிதர் ஒற்றுமையாய் வாழும்படி செய்துவருகிறீரே; இராசாங்கத்துக்கு விரோதமாய் எங்களுக்குள்ளே எழும்பின கலகங்களைத் தேவரீர் அமையப்பண்ணினதினிமித்தம் உமது பரிசுத்த நாமத்தைத் துதிக்கிறோம். நாங்கள் இனி உமது பரிசுத்த கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும், தேவபக்தியும் உண்மையும் உள்ளவர்களாய் அமைதலோடும் சமாதானத்தோடும் காலங்கழிக்கவும், தேவரீர் அருளின இந்த இரக்கங்களுக்காகத் துதிதோத்திரபலியை இடைவிடாமல் செலுத்தவும், எங்களெல்லாருக்கும் கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, அத்தியந்த பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

## பெருவாரி விஷவியாதி நீங்கினதற்காகச் செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

கர்த்தாவாகிய தேவனே, கடினமும் பயங்கரமுமான தண்டனையினாலே எங்கள் பாவங்களுக்காக எங்களைச் சிட்சித்து, எங்கள் அக்கிரமங்களுக்காக எங்களைத் தண்டித்து, நீதிசெலுத்தும்போதே உமது இரக்கத்தை நினைவுகூர்ந்து, மரணத்தின் வாயிலிருந்து எங்கள் ஆத்துமாக்களை மீட்டு இரட்சித்தீரே; தேவரீரால் இரட்சிக்கப்பட்டிருக்கிற நாங்கள் அன்புள்ள பிதாவாகிய உமக்கு எங்கள் ஆத்துமாக்களையும் சரீரங்களையும்



சீவபலியாக ஒப்புக்கொடுத்து, தேவரீருடைய இரக்கங்களை உமது சபை நடுவே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு, எப்பொழுதும் புகழ்ந்து போற்றுகிறோம், சுவாமி. ஆமேன்.

அல்லது இது.

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, நியாயப்பிரமாணத்திலே கூறியிருக்கிற தண்டனைகளெல்லாம், நாங்கள் செய்த பலவித பாவங்களுக்காகவும் எங்கள் இருதய கடினத்திற்காகவும், எங்கள்மேல் வருவது நியாயமென்று ஒப்புக்கொள்ளுகிறோம். ஆகிலும் நாங்கள் எங்களைத் தாழ்த்திக்கொண்டது குறைவாயும் அபாத்திரமாயும் இருந்தபோதிலும், தேவரீர் உருக்கமாய் இரங்கி அதை ஏற்றுக்கொண்டு, இதுவரைக்கும் எங்களை மிகவும் துன்பப்படுத்தின பெருவாரி விஷவியாதியைத் தணியச்செய்து, சவுக்கியத்தினால் உண்டாகும் கெம்பீரசத்தம் எங்கள் வீடுகளில் திரும்பவும் தொனிக்கச்செய்தீரே; தேவரீர் இவ்விதமாய் எங்களைக் காப்பாற்றி பராமரித்துவருகிறதினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் நாங்கள் உம்முடைய தேவ மகத்துவத்துக்குத் துதிதோத்திர பலிசெலுத்தி, மேன்மைபொருந்திய உமது திருநாமத்தைப் புகழ்ந்தேற்றி மகிமைப்படுத்துகிறோம், சுவாமி. ஆமேன்.

## THE ORDER OF THE ADMINISTRATION OF THE LORD'S SUPPER,

OR

# HOLY COMMUNION.

---

கர்த்தருடைய இராப்போசனமாகிய

# பரிசுத்த நற்கருணையைக்

கொடுக்கும் முறைமை.

¶ பரிசுத்த நற்கருணை பெறவேண்டுமென்று இருக்கிறவர்கள் அதைப் பரிமாறுகிற நாளுக்கு முந்தினநாளுக்குள்ளாகத் தங்கள் பேர்களைக் குருவானவருக்கு அறிவிக்கவேண்டும்.

¶ அவர்களில் சபையாருக்கு மனஸ்தாபம் உண்டாகும்படி வெளியரங்கமாய்ப் பாவஞ்செய்து, துன்மார்க்கனென்று பேர்போனவனாவது, வார்த்தையினாலாவது செய்கையினாலாவது பிறருக்கு அநியாயம் செய்தவனாவது உண்டென்று குருவானவர் அறிந்தால்; அவர் அவனை அழைப்பித்து, அவனைப் பார்த்து; உன்னால் மனஸ்தாபம் அடைந்த சபையாருக்கு மனத்திருப்தி உண்டாக வெளியரங்கமாய் வந்து: நான் மெய்யாய் மனந்திரும்பி அந்தத் துன்மார்க்கத்தை விட்டுச் சேர்பட்டேன் என்றும், நான் அநியாயஞ்செய்த பிறருக்கு நியாயஞ்செய்து தீர்த்தேன், அல்லது என்னால் கூடினமட்டும் சீக்கிரமாய் அவர்களுக்கு நியாயஞ்செய்து தீர்ப்பேன் என்றும், நீ அறிக்கையிடுமளவும் கர்த்தருடைய பந்தியில் சேரவே கூடாதென்று அவனுக்குத் தெரியப்படுத்தவேண்டும்.

¶ அன்றியும் ஒருவர்மேல் ஒருவர் பகையும் வர்மமும் வைத்திருக்கிறவர்கள் உண்டென்று குருவானவர் அறிந்தால்; அவர்களையும் மேல்சொல்லியபடியே எச்சரித்து, அவர்கள் ஒப்புரவானார்களென்று அறியுமளவும், அவர்கள் கர்த்தருடைய பந்தியில் சேராதபடி விலக்கவேண்டும். இப்படி விரோதப்பட்டவர்களில் ஒருவன் மற்றவன் தனக்குச் செய்த குற்

றங்களையெல்லாம் முழு மனதோடே மன்னித்து, தான் செய்த குற்றத்துக்குப் பரிகாரஞ்செய்ய மனதாயிருக்க, மற்றவன் ஒப்புரவாகச் சம்மதியாமல் முருட்டாட்டங்கொண்டு வர்மத்தை வைத்துக்கொண்டிருந்தால்; குருவானவர் முருட்டாட்டக்காரனை விலக்கி, தன் குற்றத்துக்காக மனஸ்தாபப்பட்டவனைப் பரிசுத்த நற்கருணையில் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆனாலும், இந்த ரூபிரிக் சட்டத்தில் இந்தப் பிரிவில் கண்டிருக்கிறபடியாவது முந்தின பிரிவில் கண்டிருக்கிறபடியாவது குருவானவர் ஒருவனை விலக்கியிருப்பாரானால் அதைப் பதினாலுநாளுக்குள்ளே அத்தியட்சருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அப்படிக் குற்றஞ்செய்தவனைக் கனோன் சட்டப்படி அத்தியட்சர் விசாரணையில் வைக்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறும் தருணத்தில் மேசையின்மேல் மெல்லிய வெள்ளைத் துப்பட்டியை விரித்து, நியமப்படி காலைமாலைச்செபம் சொல்லப்படுகிற கோவில் நடுவேயாவது, நற்கருணை அறையிலாவது அதை வைக்கவேண்டும். சனங்கள் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மேசைக்கு வட பக்கத்தில் நின்று, கர்த்தருடைய செபத்தையும் அதற்குப் பின்வருகிற சுருக்கச் செபத்தையும் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராச்சியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

சுருக்கச்செபம்.

எல்லா இருதயங்களையும், எல்லா விருப்பங்களையும், எல்லா இரகசியங்களையும் அறிந்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, நாங்கள் தேவரீரிடத்தில் பரிபூரணமாய் அன்புகூரவும், உமது பரிசுத்த நாமத்தை உத்தமமாய் மகிமைப்படுத்தவும், எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவினிமித்தம் உமது பரிசுத்தஆவியின் ஏவுதலால் எங்கள் இருதயத்தின் சிந்தனைகளைச் சுத்தம்பண்ணியருளும். ஆமென்.

¶ இப்பொழுது குருவானவர் சனங்களுக்கு நேரே திரும்பி, பத்துக்கற்பனைகளைத் தெளிவாய் வாசிக்கவேண்டும். சனங்கள் இன்னும் முழங்கால்படியிட்டிருக்க, ஒவ்வொரு கற்பனையை வாசித்தபின்பு, தேவனை நோக்கிச் சென்றகாலத்தில் அந்தந்தக் கற்பனையை மீறினதற்காக இரக்கத்தையும், இனிவருங்காலத்தில் அதைக் கைக்கொள்வதற்காகக் கிருபையையும், பின்வருகிறபடி மன்றாடவேண்டும்.



குரு: தேவன் திருவுளம்பற்றிச் சொல்லிய வார்த்தைகளாவன: உன் தேவனாகிய கர்த்தர் நானே; என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்து பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்றும் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஏழாம் நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

குரு: உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

ஜனம்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

**குரு:** கொலை செய்யாதிருப்பாயாக.

**ஜனம்:** கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

**குரு:** விபசாரம் செய்யாதிருப்பாயாக.

**ஜனம்:** கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

**குரு:** களவு செய்யாதிருப்பாயாக.

**ஜனம்:** கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

**குரு:** பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

**ஜனம்:** கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணத்தைக் கைக்கொள்ள எங்கள் இருதயத்தை ஏவியருளும்.

**குரு:** பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும், இச்சியாதிருப்பாயாக.

**ஜனம்:** கர்த்தாவே, எங்களுக்கு இரங்கி, இந்தப் பிரமாணங்கள் எல்லாவற்றையும் எங்கள் இருதயத்தில் பதித்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.

*¶ பின்பு, குருவானவர் முன்போல நின்று சக்கிரவர்த்தினியவர்களுக்காக, பின்வரும் இரண்டு ஜெபங்களில் ஒன்றைச் சொல்லவேண்டும்.*

ஜெபம்பண்ணக்கடவோம்.

*நி*த்திய ராஜ்யத்தையும் அளவற்ற அதிகாரத்தையுமுடைய சர்வவல்லமையுள்ள தேவனே, திருச்சபையனைத்துக்கும் இரக்கமாயிரும்; தேவரீர் தெரிந்துகொண்ட ஊழியக்காரியும், எங்கள் ஆண்டவருமாயிருக்கிற **விக்த்தோரியா சக்கிரவர்த்தினி** தம்மை உம்முடைய பணிவிடைக்காரியென்று உணர்ந்து, உமக்கே கனமும் மகிமையும் உண்டாக எல்லாவற்றிலும் முக்கியமாய் விரும்பும்படி, அவருடைய இருதயத்தை ஆண்டு நடத்தியருளும். நாங்களும் அவருடைய மற்றப் பிரஜைகள் எல்லாரும் அவருக்கு இருக்கிற அதிகாரம் உம்மால் உண்டானதென்று உணர்ந்து, உம்முடைய திருவசனத்திற்கும் நியமத்திற்கும் ஏற்றவிதமாய் உமக்குள்ளும் உமக்காகவும் அவருக்குத் தாழ்மையாய்க் கீழ்ப்படிந்து அவரை உண்மையாய்ச் சேவித்துக் கனம்பண்ண எங்களுக்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று, உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**



*அல்லது இதைச் சொல்லவேண்டும்.*

**ச**ர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, ராஜாக்களுடைய இருதயங்கள் உம்முடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கிறதென்றும், தேவரீர் உமது திவ்விய ஞானத்தின்படி அவைகளைத் திருப்பி நடத்துகிறீரென்றும், உமது பரிசுத்த வசனத்தினால் அறிந்திருக்கிறோம். உம்முடைய ஊழியக்காரியும் எங்கள் ஆண்டவருமாயிருக்கிற **விக்த்தோரியா சக்கிரவர்த்தினி** தம்முடைய யோசனைகள் வார்த்தைகள் கிரியைகள் எல்லாவற்றிலும் உமக்குக் கனமும் மகிமையுமுண்டாக எப்பொழுதும் விரும்பவும்; அவர் விசாரணைக்கு உட்பட்ட உம்முடைய ஜனத்தை சுகவாழ்விலும் சமாதானத்திலும் தேவபக்தியிலும் காக்கக் கருதவும், அவருடைய இருதயத்தை நடத்தி ஆளவேண்டுமென்று, தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பிரிய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் இதைக் கட்டளையிட்டருளும். **ஆமென்.**

*¶ பின்பு அந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தைச் சொல்லவேண்டும். அது முடிந்தவுடனே, குருவானவர், வாசிக்கவேண்டிய நிருபவாக்கியம் [அல்லது நிருபவாக்கியத்துக்குப் பதிலாக நியமித்திருக்கிற வேதவாக்கியம்] இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியம்முதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி, நிருபவாக்கியத்தை வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு, நிருபவாக்கியம் வாசித்து முடிந்ததென்று சொல்லவேண்டும். அப்பொழுது ஜனங்களெல்லாரும் எழுந்துநிற்க—அவர் பரிசுத்த சுவிசேஷவாக்கியம் இன்ன ஆகமம், இன்ன அதிகாரம், இன்ன வாக்கியம்முதல் அடங்கியிருக்கிறதென்று சொல்லி, சுவிசேஷவாக்கியத்தையும் வாசிக்கவேண்டும். வாசித்தபின்பு, ஜனங்கள் இன்னும் நின்றுகொண்டிருக்க, பின்வருகிற விசுவாசப்பிரமாணத்தைப் பாட அல்லது சொல்லவேண்டும்.*

**வா**னத்தையும் பூமியையும், காணப்படுகிறதும் காணப்படாததுமான எல்லாவற்றையும், படைத்தவராயிருக்கிற சர்வவல்லமையுள்ள பிதாவாகிய ஒரே தேவனை விசுவாசிக்கிறேன்.

ஒரே கர்த்தருமாய், தேவனுடைய ஒரே பேறான குமாரனுமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன்; அவர் சகல உலகங்களும் உண்டாவதற்குமுன்னே தமது பிதாவினாலே ஜெனிப்பிக்கப்பட்டவர்; தெய்வத்தில் தெய்வமானவர், சோதியில் சோதியானவர், மெய்த்தேவனில் மெய்த்தேவனானவர், உண்டாக்கப்படாமல், ஜெனிப்பிக்கப்பட்டவர்; பிதாவோடே ஒரே தன்மையுடையவர், சகலத்தையும் உண்டாக்கினவர்; மனிதராகிய நமக்காகவும் நமக்கு ரட்சிப்பு உண்டாகவும் பரமண்டலத்திலிருந்து இறங்கி, பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் அவதரித்து, மனுஷனானார்; நமக்காகப் பொந்தியு பிலாத்துவின் காலத்தில் சிலுவையில்

அறையுண்டு, பாடுபட்டு, அடக்கம்பண்ணப்பட்டார்; வேதவாக்கியங்களின்படி மூன்றாம்நாள் உயிர்த்தெழுந்தார்; பரமண்டலத்துக்கேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்; உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க மகிமையோடே திரும்ப வருவார்; அவருடைய ராஜ்யத்துக்கு முடிவில்லை.

கர்த்தருமாய், ஜீவனைக் கொடுக்கிறவருமாய், பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிறவருமாய், பிதாவோடும் குமாரனோடும் கூடத் தொழுது தோத்திரிக்கப்படுகிறவருமாய் தீர்க்கதரிசிகள் மூலமாக உரைத்தவருமாயிருக்கிற பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். ஒரே பொதுவான அப்போஸ்தலத் திருச்சபை உண்டென்று விசுவாசிக்கிறேன். பாவமன்னிப்புக்கென்று நியமிக்கப்பட்ட ஒரே ஞானஸ்நானத்தை அறிக்கையிடுகிறேன். மரித்தோர் உயிர்த்தெழுதலும், மறுமைக்குரிய ஜீவனும் உண்டாகும் என்று காத்திருக்கிறேன். ஆமென்.

¶ பின்பு, குருவானவர் அந்த வாரத்தில் ஆசரிக்கவேண்டிய திருநாட்களும் உபவாசநாட்களும் இன்னின்னவென்று அறிவிக்கவேண்டும். பரிசுத்த நற்கருணையைப் பரிமாறுங்காலத்தை அறிவிக்கவும், அறிக்கைப் பத்திரிகைகளையாவது திருச்சபைக்குப் புறம்பாக்கும் தீர்ப்புகளையாவது வாசிக்கவும் வேண்டுமாகில், இப்பொழுது வாசிக்கலாம். மேலும், தேவாராதனை செய்யும் தருணத்தில் குருவானவரேதவிர, மற்றொருவரும் யாதொன்றையும் தேவாலயத்தில் விளம்பரம்பண்ணவும் பிரசித்தஞ்செய்யவும் கூடாது. பிரசித்தஞ்செய்யவேண்டுமென்று இந்தப் புஸ்தகத்தின் பிரமாணங்களினாலும் ராஜகட்டளையினாலும் அத்தியட்சரின் கட்டளையினாலும் பிரசித்தஞ்செய்யக் கட்டளையிடப்பட்டவைகளையல்லாமல், மற்றொன்றையும் குருவானவரும் பிரசித்தஞ்செய்யக்கூடாது.

¶ பின்பு, பிரசங்கம் செய்யவேண்டும்; அல்லது திருச்சபையின் அதிகாரத்தினால் நியமிக்கப்பட்டதும் இனி நியமிக்கப்படுவதுமான ஓமிலி என்னும் பிரசங்கங்களில் ஒன்றை வாசிக்கவேண்டும்.

¶ பின்பு, குருவானவர் கர்த்தருடைய மேஜையினிடத்திற்குப் போய், காணிக்கைவாசகம் என்னும் பின்வருகிற வாக்கியங்களில் தமக்குத் தகுதியென்று தோன்றுகிற ஒன்றையாவது சிலவற்றையாவது வாசிக்கவேண்டும்.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. பரி. மத். 5.

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள்: பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. பரி. மத். 6.



மனுஷர் உங்களுக்கு எவைகளைச் செய்ய விரும்புகிறீர்களோ, அவைகளை நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்; இதுவே நியாயப்பிரமாணமும் தீர்க்கதரிசனங்களுமாம். பரி. மத். 7.

பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்றுமாத்திரம் சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. பரி. மத். 7.

சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாய்த் திரும்பச் செலுத்துகிறேன் என்றான். பரி. லூ. 19.

எவன் தன் சொந்தப்பணம் செலவழித்து, தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டம் உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? 1 கொ. 9.

நாங்கள் உங்களுக்கு ஞானநன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீரநன்மைகளை அறுத்தால் அது பெரிய காரியமா? 1 கொ. 9.

ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடைசெய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். 1 கொ. 9.

சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயும் அல்ல, கட்டாயமாயும் அல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். 2 கொ. 9.

திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன். மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். கலா. 6.

நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தார்களுக்கும், நன்மைசெய்யக்கடவோம். கலா. 6.

போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததுமில்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம். 1 தீமோ. 6.

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் தாராளமாய்க் கொடுக்கிறவர்களும் உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு. 1 தீமோ. 6.

உங்கள் கிரியையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்துவருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவர் அல்லவே. எபி. 6.

நன்மைசெய்யவும், தானதர்மம்பண்ணவும் மறவாதிருங்கள்; இப்படிப்பட்ட பலிகளின்மேல் தேவன் பிரியமாயிருக்கிறார். எபி. 13.

ஒருவன் இவ்வுலக ஆஸ்தி உடையவனாயிருந்து, தன் சகோதரனுக்குக் குறைச்சல் உண்டென்று கண்டு, தன் இருதயத்தை அவனுக்கு அடைத்துக்கொண்டால், அவனுக்குள் தேவ அன்பு நிலைகொள்ளுகிறதெப்படி? 1 யோ. 3.

உன் ஆஸ்திகளில் தர்மஞ்செய்; எந்த ஏழைக்கும் உன் முகத்தை மறையாதே; அப்பொழுது கர்த்தர் உனக்குத் தமது முகத்தை மறைக்கமாட்டார். தோபித்து, 4.

உன் திராணிக்குத் தக்கதாய் தர்மசிந்தையுள்ளவனாயிரு; உனக்கு மிகுதியிருந்தால் மிகுதியாய்க் கொடு, உனக்குக் கொஞ்சமிருந்தால் அந்தக் கொஞ்சத்தில் சந்தோஷமாய்க் கொடுக்கச் சாக்கிரதையாயிரு. இப்படிச் செய்வதினாலே அவசரம் வருங்காலத்துக்கு நற்பலனைக் கூட்டிச் சேர்க்கிறாய். தோபித்து, 4.

ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன்கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார். நீதி. 19.

சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். சங். 41.

¶ மேல் எழுதிய வாக்கியங்களை வாசிக்கையில், உதவிக் குருக்களாவது கோவில் காரியக்காரராவது, இந்தக் காரியத்துக்கென்று நியமிக்கப்பட்ட மற்றவர்களாவது அந்தச் சேகரச் சபையாரால் சவதரித்த யோக்கியமான பாத்திரத்திலே, ஏழைகளுக்காகத் தர்மங்களையும் மற்றக் காணிக்கைகளையும் ஜனங்களிடத்தில் வாங்கி, குருவானவரிடத்தில் வணக்கமாய்க் கொண்டுபோக, குருவானவர் அதை ஏற்றுக்கொண்டு தாழ்மையாய்ப் படைத்துத் திருமேஜையின்மேல் வைக்கவேண்டும்.



¶ நற்கருணை பரிமாறுகிறதாயிருந்தால், போதுமான அப்பத்தையும் திராட்சரசத்தையும் இப்பொழுது குருவானவர் மேஜையின்மேல் வைக்கவேண்டும். அப்படிச் செய்தபின்பு, குருவானவர் சொல்லவேண்டியதாவது:

## இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்துசபையனைத்துக்கும் சீருண்டாக ஜெபம்பண்ணக்கடவோம்.

எல்லா மனிதருக்காகவும் ஜெபங்களையும் விண்ணப்பங்களையும் செய்து ஸ்தோத்திரங்களைச் செலுத்தவேண்டுமென்று, உமது பரிசுத்த அப்போஸ்தலனைக்கொண்டு கற்பித்தருளின சர்வவல்லமையும் நித்திய ஜீவனுமுள்ள தேவனே, மகத்துவம் பொருந்திய தேவரீருடைய சந்நிதியில் [*நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு,] நாங்கள் செய்கிற ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளவேண்டுமென்று மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். எங்குமுள்ள திருச்சபைக்குத் தேவரீர் உண்மையும் ஐக்கியமும் ஏகசிந்தையுமுள்ள மனதை இடைவிடாமல் அருளிச்செய்து; உம்முடைய திருநாமத்தை அறிக்கையிடுகிற யாவரும் உமது பரிசுத்த வசனத்தின் சத்தியத்தைக்குறித்து இசைந்த மனதுள்ளவர்களாயிருந்து, ஐக்கியத்திலும் தேவபக்தியுள்ள அன்பிலும் நிலைத்து வாழ்ந்திருக்கும்படி அநுக்கிரகஞ்செய்யும். கிறிஸ்தவர்களான ராஜாக்கள் பிரபுக்கள் அதிகாரிகள் எல்லாரையும் ரட்சித்துக் காப்பாற்றவேண்டுமென்றும்; விசேஷமாய் எங்களைத் தேவபக்தியோடும் சமாதானத்தோடும் ஆளுகிறதற்கு உம்முடைய பணிவிடைக்காரியாகிய விக்தோரியா சக்கிரவர்த்தினியை ரட்சித்துக் காப்பாற்றவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறோம். அவருடைய ஆலோசனைக் கர்த்தாக்கள் அனைவரும், அவரால் அதிகாரம்பெற்றிருக்கிற மற்றெல்லாரும், பட்சபாதம் இல்லாமல் உண்மையாய் நீதியைச் செலுத்தி, துன்மார்க்கத்தைத் தண்டனையினாலே அடக்கி, உமது சத்திய வேதத்தையும் சன்மார்க்கத்தையும் நிலைப்படுத்தி வரும்படி அவர்களுக்குக் கிருபைசெய்தருளும். பரமபிதாவே, அத்தியட்சர் குருமார் எல்லாரும் தங்கள் நடக்கையினாலும் போதகத்தினாலும் சத்தியமும் ஜீவனுமுள்ள உமது வசனத்தைப் பிரசித்தப்படுத்தி, உமது பரிசுத்த சாக்கிரமெந்துக்களை ஒழுங்காயும் செம்மையாயும் கொடுக்க அவர்களுக்குக் கிருபை அளியும்: உம்முடைய ஜனங்கள் எல்லாரும், விசேஷமாய் இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற இந்தச் சபையாரும், சாந்த இருதயத்தோடும் தகுந்த வணக்கத்தோடும், உமது பரிசுத்த வசனத்தைக் கேட்டு உட்கொண்டு, தங்கள் வாழ்நாளெல்லாம் பரிசுத்தமும் நீதியும் உள்ள

* தர்மங்களும் காணிக்கைகளும் இராவிட்டால், "நாங்கள் செலுத்துகிற தர்மங்களையும் காணிக்கைகளையும் இரக்கமாய் ஏற்றுக்கொண்டு" என்கிற வார்த்தைகளை வாசியாமல் விடவேண்டும்.

வர்களாய் உமக்கு ஊழியஞ்செய்ய, அவர்களுக்கு உமது பரம கிருபையைக் கொடுத்தருளும். நிலையில்லாத இந்த ஜீவகாலத்தில் துன்பம், துக்கம், வறுமை, வியாதி முதலான உபத்திரவங்களால் வருத்தப்படுகிற யாவரையும் உமது தயவினாலே தேற்றி ஆதரிக்கவேண்டுமென்று பணிவாய் கேட்டுக்கொள்ளுகிறோம். உம்மிடத்தில் விசுவாசமும் பயபக்தியும் உள்ளவர்களாய் ஜீவித்துப்போன உமது அடியார் எல்லாருக்காகவும் நாங்கள் உம்முடைய பரிசுத்த நாமத்தைத் துதிக்கிறோம்; அவர்களோடுகூட நாங்களும் உமது பரம ராஜ்யத்தில் பங்கு பெறும்படி, அவர்கள் காட்டிய நல்மாதிரியைப் பின்பற்ற, எங்களுக்குக் கிருபைசெய்தருளும். பிதாவே, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் இந்த நன்மைகளுக்காக உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ *பரிசுத்த நற்கருணையைப் பரிமாறப்போகிற நாளுக்கு முன்வரும் ஞாயிற்றுக் கிழமையிலாவது, பண்டிகைநாளிலாவது பிரசங்கம் முடிந்தபின்பு குருவானவர் இன்னநாளில் நற்கருணை ஆசரிக்கப்படுமென்று அறிவிக்க வேண்டும். அறிவிக்கும்போது அவர் பின்வரும் பிரசங்கத்தையும் வாசிக்க வேண்டும்.*

பிரியமானவர்களே, வருகிற —————— கிழமையில், தேவ உதவியை முன்னிட்டு பணிவும் தேவபக்தியுமுள்ள சிந்தையாயிருக்கிற யாவருக்கும் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய ஆறுதல் செய்யும் சாக்கிரமெந்தைப் பரிமாறத் தீர்மானித்திருக்கிறேன். நாம் பாவமன்னிப்பைப் பெறுவதற்கும், பரம ராஜ்யத்துக்குச் சுதந்தரவாளிகளாவதற்கும், ஒரேகாரணமாகிய அவருடைய புண்ணியமுள்ள சிலுவைப்பாடுகளை நினைவுகூர்ந்து, நற்கருணையைப் பெறவேண்டியதாயிருப்பதினால்; நம்முடைய ரட்சகராகிய இயேசுகிறிஸ்து நமக்காக மரணமடைவதற்கும், அந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தின் மூலமாய் நமக்கு ஞானபோஜனமாயும் ஆதரவாயும் இருப்பதற்கும், நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய குமாரனாகிய அவரைத் தந்தருளினதற்காக, நாம் தாழ்மையாய் முழு இருதயத்தோடே அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். பாத்திரராய் நற்கருணையைப் பெறுகிறவர்களுக்கு அது ஆறுதல் செய்யும் திவ்விய நன்மையுள்ளதாயும், அபாத்திரராய்த் துணிந்து பெறுகிறவர்களுக்கு மோசமுள்ளதாயும் இருக்கிறதினாலே; முன்னமே நீங்கள் அந்தப் பரிசுத்த இரகசியத்தின் மேன்மையையும், அபாத்திரமாய் அதைப் பெறுவதினால் வரும் மோசத்தையும் சிந்திக்கவேண்டியதுமல்லாமல், தேவன் வேதவாக்கியத்திலே கற்பித்திருக்கிற கலியாண வஸ்திரத்தை நீங்கள் தரித்துக்கொண்டு, மாசற்ற பரிசுத்தராய் அந்தப் பரம விருந்தில்



சேர்ந்து, அந்தப் பரிசுத்த பந்திக்குப் பாத்திரராய் அங்கிகரிக்கப்பட, நீங்கள் தேவனை வஞ்சிக்கப்பார்க்கும் மாயக்காரர்போல உங்களை இலேசாய்ச் சோதியாமல், உண்மையாய் உங்கள் மனச்சாட்சியைப் பரிசோதித்து அறியவேண்டுமென்று, என் கடமையின்படி உங்களுக்கு எச்சரித்துப் புத்திசொல்லுகிறேன்.

இதற்கு வழிவகை என்னவெனில், நீங்கள் முதலாவது தேவனுடைய கற்பனைகளைப் பிரமாணமாக வைத்துக்கொண்டு, உங்கள் நடக்கையைப் பரிசோதித்து, எந்த விஷயத்திலே மனோவாக்குக்காயங்களினால் குற்றம் செய்தோம் என்று நீங்கள் கண்டறிகிறீர்களோ, அந்தந்தக் குற்றத்தைக் குறித்துத் துக்கப்பட்டு, சர்வவல்லமையுள்ள தேவனுக்கு அதை அறிக்கையிட்டு, இனிச் சீராய் நடப்போம் என்று உறுதியாய்த் தீர்மானம் செய்யவேண்டும். நீங்கள் தேவனுக்கு விரோதமாகமாத்திரம் அல்ல, மனுஷருக்கு விரோதமாகவும் குற்றஞ்செய்தவர்களென்று கண்டால், அவர்களோடே ஒப்புரவாகவேண்டுவதுமன்றி; நீங்கள் மற்றவர்களுக்குச் செய்த நஷ்டங்களுக்கும் அநியாயங்களுக்கும் உங்களாலே இயன்றமட்டும் பரிகாரம்செய்வதற்கும், தேவன் உங்களுக்கு மன்னிக்கவேண்டுமென்று விரும்புகிறதுபோல, நீங்களும் உங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தவர்களுக்கு மன்னிப்பதற்கும் மனதுள்ளவர்களாயிருக்கவும் வேண்டும். இப்படிச் செய்யாவிட்டால், நீங்கள் பரிசுத்த நற்கருணையைப் பெறுவது உங்கள் ஆக்கினை அதிகரிப்பதற்கு ஏதுவாயிருக்கும். ஆகையால், உங்களில் தேவனைத் தூஷிக்கிறவனாவது, அவருடைய வசனத்துக்குத் தடைசெய்கிறவனாவது, அதை நிந்திக்கிறவனாவது, விபசாரம், வர்மம், பொறாமை முதலான எந்தக் கொடிய பாவத்தைச் செய்கிறவனாவது இருந்தால், அவன் தன் பாவங்களினிமித்தம் துக்கப்பட்டு மனந்திரும்பக்கடவன். இல்லாவிட்டால், அவன் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெற்றுக்கொண்டபின்பு, சாத்தான் யூதாசுக்குள் புகுந்ததுபோல, அவனுக்குள்ளும் புகுந்து பலவிதமான அக்கிரமங்களினால் அவனை நிரப்பி சரீரத்தையும் ஆத்துமாவையும் கெடுத்துப்போடாதபடிக்கு, பரிசுத்த பந்தியில் சேராதிருக்கக்கடவன்.

அன்றியும், தேவனுடைய இரக்கத்தை உறுதியாய் நம்பி, சமாதானம் அடைந்த மனச்சாட்சியையுடையவர்கள் பரிசுத்த நற்கருணையில் சேரலாமேயன்றி, மற்றவர்கள் சேரக்கூடாதபடியினால்; உங்களில் எவனாகிலும் மேற்சொல்லிய வழிவகையினால் தன் மனச்சாட்சியைச் சமாதானப்படுத்தக்கூடாமல், இன்னும் ஆலோசனையும் ஆறுதலும் வேண்டியவனாயிருந்தால், அவன் தேவனுடைய பரிசுத்த வசனத்திற்கேற்ற ஊழியத்தின் மூலமாய்ப் பாவவிமோசனமாகிய நன்மையையும் ஆத்துமாவுக்குரிய நல்லாலோசனையையும் அடைந்து, எவ்விதமான ஐயமும் சந்தேகமும்

நீங்க, தன் மனச்சாட்சியில் சமாதானம் பெறத்தக்கதாக, என்னிடத்திலாவது தேவ வசனத்தைப் போதிக்கிற விவேகமும் கல்வித்திறமையுமுள்ள வேறொரு குருவானவரிடத்திலாவது வந்து தன் மனவிசாரத்தைத் தெரியப்படுத்தக்கடவன்.

¶ ஜனங்கள் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறதில் அசட்டையாயிருக்கிறதாகக் குருவானவர் கண்டால், மேற்சொல்லிய பிரசங்கத்தை வாசியாமல் பின்வருவதை வாசிக்கக்கடவர்.

பிரியமான சகோதரரே, ________ நாளில் தேவ கிருபையினாலே கர்த்தருடைய இராப்போசனத்தைப் பரிமாற எத்தனமாயிருக்கிறேன். இங்கே கூடிவந்திருக்கிற நீங்களெல்லாரும் அதில் சேரவேண்டுமென்று நான் தேவனுடைய நாமத்தினால் உங்களை அழைக்கிறேன்; தேவன் தாமே உங்களை இவ்வளவு அன்பாய் அழைக்கும்போது, நீங்கள் வரமாட்டோம் என்று சொல்லாதபடி, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஒரு மனிதன் பலவகையான பதார்த்தங்களைச் சம்பாதித்து, சம்பிரமமான விருந்து செய்து, விருந்தினர் வந்து உட்காரும்படி எல்லாவற்றையும் ஆயத்தம்பண்ணியிருக்கும்போது, அழைக்கப்பட்டவர்கள் நன்றிகெட்டவர்களாய் வரமாட்டோம் என்று முகாந்தரமில்லாமல் சொன்னால், மிகவும் அபசாரமாயும் விசனமான காரியமாயும் இருக்குமென்று அறிவீர்களே. உங்களில் எவனாகிலும் விருந்து செய்யும்போது, அப்படிச் சம்பவித்தால் அவனுக்கு மனநோவாயிராதா? தனக்கு மிகுந்த நஷ்டமும் அநியாயமும் செய்தார்கள் என்று எண்ணுவான் அல்லவா? ஆகையால் கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, நீங்கள் இந்தப் பரிசுத்த இராப்போசன பந்தியில் சேராமல் போவதினால் தேவ கோபாக்கினையை உங்கள்பேரில் மூட்டிக்கொள்ளாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.

லௌகிக அலுவல் எனக்குத் தடையாயிருக்கிறதினால் நான் நற்கருணைப் பந்தியில் சேரவில்லை என்று ஒருவன் சொல்லுவது எளிது. அப்படிப்பட்ட போக்கைத் தேவன் ஒப்புக்கொள்வது அரிது. நாங்கள் கொடிய பாவிகளாயிருக்கிறதினால் வரப் பயப்படுகிறோம் என்று சொல்வீர்களாகில், நீங்கள் மனந்திரும்பிச் சீரடையாமலிருக்கிறதென்ன? தேவன் உங்களை அழைக்கும்போது, வரமாட்டோம் என்று சொல்ல உங்களுக்குப் பயம் இல்லையா? தேவனிடத்தில் நீங்கள் திரும்பவேண்டியதாயிருக்க, ஆயத்தமில்லையென்று போக்குச் சொல்லலாமா? இப்படிப்பட்ட வீண்போக்கு தேவனுக்கு முன்பாகச் செல்லாது என்று நன்றாய்ச் சிந்தித்துக்கொள்ளுங்கள். சுவிசேஷத்தில் சொல்லியிருக்கிற விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் வயல் நிலத்தைக் கொண்டோம் என்றும், வாங்கின



ஏர்மாட்டைச் சோதிக்கவேண்டும் என்றும், கலியாணம் செய்துகொண்டோம் என்றும் போக்குச் சொன்னபோது, மன்னிப்படையாமல் பரம விருந்துக்கு அபாத்திரராய் போனார்களே. நானோ நற்கருணையைப் பரிமாற ஆயத்தமாயிருக்கிறேன். என் உத்தியோகத்தின்படி தேவனுடைய நாமத்தினால் நான் உங்களை அழைக்கிறேன், கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன், ஆத்தும ரட்சிப்படையும்படி எவ்வளவேனும் உங்களுக்கு விருப்பம் இருக்குமாகில், பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேரவேண்டுமென்று உங்களை எச்சரிக்கிறேன். உங்களுக்கு ரட்சிப்பு உண்டாகத் தேவனுடைய குமாரன் சிலுவையில் அடைந்த மரணத்தினால் தமது ஆத்துமாவை ஒப்புக்கொடுத்தபடியால், நீங்கள் அவர் இட்ட கட்டளையின்படி அவருடைய மரணபலியை நினைவுகூர்ந்து நற்கருணையைப் பெறக் கடமைப்பட்டிருக்கிறீர்கள். அப்படியிருக்க, நீங்கள் அதை அசட்டைபண்ணி மனதாரக் கர்த்தருடைய பந்தியில் சேராமல், பரம ஆகாரத்தை உட்கொள்ளும்படி இவ்விருந்துக்கு வருகிற உங்கள் சகோதரரை விட்டுப் பிரிந்துபோனால், தேவ துரோகமாயும் கொடிய தண்டனைக்கு ஏதுவாயும் இருக்குமென்று நினைத்துக்கொள்ளுங்கள். இவைகளை நீங்கள் கருத்தாய்ச் சிந்தித்துக்கொண்டால், தேவ கிருபையினால் நல்லெண்ணங்கொள்வீர்கள். அதற்காக நாம் நம்முடைய பரம பிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி மனத்தாழ்மையாய் இடைவிடாமல் ஜெபம்பண்ணுவோம்.

¶ நற்கருணையை ஆசரிக்கும் நேரத்தில் அதில் சேருகிறவர்கள் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெற்றுக்கொள்ளும்படி ஒழுங்காயிருக்க, குருவானவர் வாசிக்கவேண்டிய பிரசங்கமாவது.

கர்த்தருக்குள் பிரியமானவர்களே, நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேர மனதாயிருக்கிற நீங்கள் இந்த அப்பத்தைப் புசிக்கவும் இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணவும் துணிந்து சேராமல், யாவரும் தங்களை நன்றாய்ச் சோதித்து அறிந்து சேரவேண்டும் என்று பரிசுத்த பவுல் புத்திசொல்லியிருக்கிறதை நினைத்துக்கொள்ளவேண்டும். பாவத்தினிமித்தம் மெய்யாய்த் துக்கப்படுகிற இருதயத்தோடும், உயிருள்ள விசுவாசத்தோடும் நாம் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கினால், பிரயோஜனம் பெரிதாயிருக்கும். நாம் அப்பொழுது ஞானப்பிரகாரமாய்க் கிறிஸ்துவின் மாம்சத்தைப் புசித்து, அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணுவோம்; கிறிஸ்து நமக்குள் வாசமாயிருக்க நாம் அவருக்குள் வாசமாயிருப்போம், கிறிஸ்து நம்மோடு ஒன்றாயிருக்க நாம் அவரோடு ஒன்றாயிருப்போம். அப்படியே, இந்தச் சாக்கிரமெந்தை நாம் அபாத்திரராய் வாங்கினால் மோசமும்

பெரிதாயிருக்கும். அப்பொழுது நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவர்களாகி, கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால் நமக்கு ஆக்கினைத் தீர்ப்பு உண்டாகப் புசித்துப் பானம்பண்ணி, நமக்கு விரோதமாகத் தேவ கோபத்தை மூட்டி, பற்பலவியாதியினாலும் அநேகவித மரணத்தினாலும் நம்மைத் தண்டிக்கும்படி அவரை ஏவுகிறவர்களாயிருப்போம். ஆகையால் சகோதரரே, கர்த்தராலே ஆக்கினைத் தீர்ப்படையாதபடிக்கு நீங்களே உங்களைப் பரிசோதித்து, நீங்கள் செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவை உயிரும் உறுதியுமுள்ள விசுவாசத்தினாலே பற்றிக்கொண்டு, உங்கள் நடக்கையைச் சீர்திருத்தி, எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருங்கள். இப்படிச் செய்தால், இந்தப் பரிசுத்த இரகசியங்களைப் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருப்பீர்கள். எல்லாவற்றிலும் முக்கியமாக, தேவனும் மனுஷனுமாயிருக்கிற நம்முடைய ரட்சகராகிய கிறிஸ்துவானவர், அந்தகாரத்திலும் மரண இருளிலும் கிடந்த நிர்ப்பாக்கியமுள்ள பாவிகளாகிய நம்மைத் தேவ புத்திரராக்கி நித்திய ஜீவ மகிமைக்கு உயர்த்தும்படியாக, சிலுவையிலே மரணபரியந்தம் தம்மைத் தாழ்த்தி, பாடுபட்டு, பிராணத்தியாகஞ்செய்து, உலகத்தை மீட்டுக்கொண்டதினிமித்தம், பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய தேவனுக்கு நீங்கள் முழு இருதயத்தோடே தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்தவேண்டும். நம்முடைய சற்குருவும் ஏக ரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து நமக்காக மரணமடைந்ததினால் வெளிப்படுத்திய ஒப்பில்லாத அன்பையும் தமது அருமையான இரத்தத்தினால் நமக்காகச் சம்பாதித்த எண்ணிமுடியாத உபகாரங்களையும் நாம் எப்பொழுதும் நினைக்கும்படி; நமக்கு என்றைக்கும் மிகுந்த ஆறுதல் உண்டாக அவர் இந்தப் பரிசுத்த இரகசியங்களைத் தமது அன்புக்கு அத்தாட்சியாகவும், தமது மரணத்தைப்பற்றிய என்றுமுள்ள நினைவுகூருதலாகவும் நியமித்திருக்கிறார். ஆகையால், அவருக்கும் பிதாவுக்கும் பரிசுத்த ஆவிக்கும் நமது கடமையின்படியே இடைவிடாமல் ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய பரிசுத்த சித்தத்திற்கு முற்றும் கீழ்ப்படிந்து, நமது வாழ்நாளெல்லாம் மெய்யான பரிசுத்தத்தோடும் நீதியோடும் அவருக்கு ஊழியஞ்செய்யக் கருத்துள்ளவர்களாய் இருக்கக்கடவோம். ஆமென்.

¶ பின்னும் குருவானவர் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறவர்களுக்குச் சொல்லவேண்டியதாவது.

உங்கள் பாவங்களினிமித்தம் முழு இருதயத்தோடே உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, பிறரிடத்தில் அன்பும் சிநேகமுமாயிருந்து, இனி தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டு புதிதாக்கப்பட்டவர்களாய்



அவருடைய பரிசுத்த மார்க்கத்தில் நடப்போம் என்று தீர்மானித்திருக்கிற நீங்கள், விசுவாசத்தோடு சேர்ந்து, உங்களுக்கு ஆறுதல் உண்டாக இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தை வாங்கிக்கொள்ளுங்கள். அதற்காகப் பணிவாய் முழங்கால்படியிட்டுச் சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி உங்கள் பாவங்களை மனத்தாழ்மையாய் அறிக்கையிடுங்கள்.

¶ அப்பொழுது பரிசுத்த நற்கருணையைப் பெறவேண்டுமென்றிருக்கிற அனைவருடைய நாமத்தினாலும், குருமாரில் ஒருவர் பின்வருகிற பொதுவான பாவ அறிக்கையைச் சொல்லவேண்டும். அவரும் ஜனங்களெல்லாரும் தாழ்மையாய் முழங்கால்படியிட்டுச் சொல்லவேண்டியதாவது.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, சகலத்தையும் சிருஷ்டித்தவரே, சகல மனிதருக்கும் நியாயாதிபதியே, தேவரீருடைய நீதியுள்ள உக்கிர கோபாக்கினை எங்கள்மேல் வரத்தக்கதாக, நாங்கள் அடிக்கடி நினைவினாலும், வார்த்தையினாலும், கிரியையினாலும், உம்முடைய திவ்விய மகத்துவத்துக்கு விரோதமாய் அகங்கரித்துச் செய்த பலவிதமான பாவங்களையும் அக்கிரமங்களையும் அறிக்கையிட்டுப் புலம்புகிறோம்; இந்தக் குற்றங்களைக்குறித்து நாங்கள் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு முழுமனதோடே துக்கப்படுகிறோம்; அவைகளை நினைத்து வேதனைப்படுகிறோம்; அவைகள் எங்களாலே சுமக்கப்படாத பாரம். எங்களுக்கு இரங்கும், மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, எங்களுக்கு இரங்கும். நாங்கள் செய்த யாவையும் உமது குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்களுக்கு மன்னியும்; உமது நாமத்துக்குக் கனமும் மகிமையும் உண்டாக, நாங்கள் புதிதாக்கப்பட்டவர்களாய் இனி எப்பொழுதும் உமக்கு ஊழியஞ்செய்து, உமக்குப் பிரியமாய் நடந்துவரும்படி எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கட்டளையிட்டருளும். ஆமென்.

¶ அப்பொழுது அத்தியட்சராவது, அவர் இராவிட்டால் குருவானவராவது எழுந்து நின்று, ஜனங்கள் முகமாய்த் திரும்பி, பின்வரும் பாவ விமோசனத்தைக் கூறவேண்டும்.

உத்தம மனஸ்தாபத்தோடும் உண்மையான விசுவாசத்தோடும் தம்மிடத்திற்கு மனந்திரும்புகிற யாவருக்கும் பாவ மன்னிப்பை அருளிச்செய்வோம் என்று, மிகுந்த இரக்கமாய் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நம்முடைய பரமபிதாவாகிய சர்வவல்லமையுள்ள தேவன், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் உங்களுக்கு இரங்கி, உங்கள் பாவங்கள் எல்லாவற்றையும் மன்னித்து, அவைகளினின்று உங்களை ரட்சித்து, சகல நன்மையிலும் உங்களை உறுதிப்படுத்தி நிலைநிறுத்தி, உங்களை நித்திய ஜீவகரையில் சேர்ப்பாராக. ஆமென்.

¶ பின்பு குருவானவர் சொல்வது.

தம்மிடத்தில் உண்மையாய் மனந்திரும்புகிற யாவருக்கும் நமது ரட்சகராகிய கிறிஸ்து திருவுளம்பற்றுகிற ஆறுதலான வார்த்தைகளைக் கேளுங்கள்.

வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். பரி. மத். 11. 28.

தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். பரி. யோ. 3. 16.

பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்.

பாவிகளை ரட்சிக்கக் கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்குப் பாத்திரமுமானது. 1 தீமோ. 1. 15.

பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறதையும் கேளுங்கள்.

ஒருவன் பாவஞ்செய்வானானால் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. பரி. 1 யோ. 2. 1.

¶ பின்னும் குருவானவர் சொல்வதாவது.

உங்கள் இருதயத்தை உயர்த்துங்கள்.

மறுமொழி: எங்கள் இருதயத்தைக் கர்த்தரிடத்தில் உயர்த்துகிறோம்.

குரு: நம்முடைய கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

மறுமொழி: அப்படிச் செய்வது தகுதியும் நீதியுமாயிருக்கிறது.

¶ அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய மேஜையிடமாய்த் திரும்பிச் சொல்வது.

கர்த்தாவே, *பரிசுத்த பிதாவே, சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நாங்கள் எக்காலத்திலும் எவ்விடத்திலும் தேவரீருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்துகிறது மிகவும் தகுதியும் நீதியும் எங்களுக்கு விசேஷித்த கடமையுமாயிருக்கிறது.

* [பரிசுத்த பிதாவே,] என்கிற வார்த்தைகளைத் திரித்துவ ஞாயிற்றுக்கிழமையில் வாசிக்கப்படாது.



¶ அந்த நாளுக்கு விசேஷித்த முகவுரை இருக்குமாகில், அதை வாசிக்கவேண்டும். இல்லாவிட்டால், பின்வருவதை இவ்விடத்திலே சொல்லவேண்டும்.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமேன்.

## விசேஷித்த முகவுரைகள்.

### கிறிஸ்து பிறந்த பண்டிகைக்கும், பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை.

சகல பாவமும் அற எங்களைச் சுத்திகரிப்பதற்கு, பரிசுத்த ஆவியின் செயலினாலே பாவக்கறையில்லாமல் தம்முடைய தாயாராகிய கன்னி மரியாளுடைய தன்மையில் மெய்மனுஷனாகப் பிறக்கும்படி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்துவைத் தந்தருளினதற்காக விசேஷமாய் ஸ்தோத்திரஞ்செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

### கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழு நாட்களுக்கும் உரிய முகவுரை.

விசேஷமாக, உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசு கிறிஸ்து மகிமையோடே உயிர்த்தெழுந்ததினிமித்தம் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். எங்களுக்காகப் பலியிடப்பட்டு உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்த்த மெய்யான பஸ்கா ஆட்டுக்குட்டி அவரே. தம்முடைய மரணத்தினாலே மரணத்தை அழித்து, தம்முடைய உயிர்த்தெழுதலினாலே நித்திய ஜீவனைத் திரும்பவும் தந்தருளினார். ஆதலால் தூதரோடும், ௸.

### கிறிஸ்து பரமண்டலத்துக்கேறின திருநாளுக்கும், அதன் பின்வரும் ஏழுநாட்களுக்கும் உரிய முகவுரை.

சிறந்த மகிமையோடே உயிர்த்தெழுந்து தமது அப்போஸ்தலர் எல்லாருக்கும் பிரத்தியட்சமாகத் தரிசனையாகி, அவர்கள் கண்களுக்கு முன்பாகப் பரமண்டலத்துக்கேறி, தாம் இருக்கிற இடத்திலே நாங்களும்

ஏறிப்போய்ச் சேரவும் தம்மோடேகூட மகிமையிலே ஆளுகைசெய்யவும் எங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணப் போயிருக்கிற உம்முடைய மிகவும் பிரியமான குமாரனாகிய எங்கள் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் நிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

## பரிசுத்த ஆவியின் திருநாளுக்கும், அதன் பின்வரும் ஆறு நாட்களுக்கும் உரிய முகவுரை.

எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து திருவாய் மலர்ந்தருளிய வாக்குத்தத்தத்தின்படியே, பரிசுத்த ஆவியானவர் பலத்த காற்றைப்போல வானத்திலிருந்து சடிதியாய் வரும் பெரிய சத்தத்தோடு அக்கினிமயமான நாவுகள் போன்ற ரூபமாய் இறங்கி அப்போஸ்தலர்மேல் தங்கி, அவர்களுக்குப் போதித்து, அவர்களைச் சகல சத்தியத்திலும் நடத்தி, அவர்கள் எல்லாத் தேசத்தாருக்கும் சுவிசேஷத்தை விடாமுயற்சியாய்ப் பிரசங்கிக்கத்தக்கதாக பற்பல பாஷைகளைப் பேசும் வரத்தையும், தைரியத்தையும் பக்திவைராக்கியத்தையும் அநுக்கிரகித்ததும் அல்லாமல்; அதினாலே நாங்கள் இருளுக்கும் மருளுக்கும் விலகி, உம்மையும் உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவையும் அறிகிற மெய்ஞ்ஞான வெளிச்சத்தில் சேரும்படி கிருபைசெய்ததினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மைத் துதிக்கக் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸.

## திரித்துவத் திருநாளுக்குமாத்திரம் உரிய முகவுரை.

தேவரீர் ஒரே தேவனும் ஒரே கர்த்தருமாயிருக்கிறீர்; ஒருவராய்மாத்திரம் இராமல் ஒரே தத்துவமுடைய மூவருமாயிருக்கிறீர். பிதாவினுடைய மகிமை எத்தன்மையதென்று நாங்கள் விசுவாசிக்கிறோமோ, குமாரனுடைய மகிமையும் பரிசுத்த ஆவியினுடைய மகிமையும் யாதொரு வித்தியாசமும் குறைவுமின்றி அத்தன்மையதென்றே விசுவாசிக்கிறோம். ஆதலால் தூதரோடும், ௸

¶ மேற்சொல்லிய முகவுரைகளில் ஒன்றை வாசித்தவுடனே பாட அல்லது சொல்லவேண்டியதாவது.

ஆதலால் தூதரோடும் பிரதான தூதரோடும் பரம சபை அனைத்தோடும் நாங்களும் உமது மகிமையுள்ள நாமத்தைப் புகழ்ந்து, மேன்மைப்படுத்தி, சேனைகளின் கர்த்தராகிய தேவனே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்தன; உன்னதமானவராகிய தேவரீருக்கே மகிமை உண்டாவதாக என்று, இடைவிடாமல் உம்மை ஸ்தோத்திரிக்கிறோம். ஆமென்.



¶ அப்பொழுது குருவானவர் கர்த்தருடைய ராப்போஜன மேஜையருகே முழங்கால்படியிட்டு நற்கருணை வாங்கப்போகிற எல்லாருடைய நாமத்தினாலும் சொல்லவேண்டிய ஜெபமாவது.

இரக்கமுள்ள கர்த்தாவே, எங்கள் சுயநீதியை நம்பி நாங்கள் உம்முடைய பந்தியில் சேரத் துணியாமல், தேவரீருடைய அளவற்ற இரக்கத்தையே நம்பிச் சேருகிறோம். உம்முடைய மேஜையின் கீழ் விழும் துணிக்கைகளையும் பொறுக்கிக்கொள்ள நாங்கள் பாத்திரர் அல்ல; ஆனாலும் தேவரீர் எப்பொழுதும் இரக்கஞ்செய்கிற லட்சணமுடைய மாறாத ஆண்டவராயிருக்கிறீர். ஆகையால் கிருபையுள்ள கர்த்தாவே, உமது அருமையான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் சரீரத்தால் எங்கள் பாவமுள்ள சரீரம் சுத்தமாகி, அவருடைய விலையுயர்ந்த இரத்தத்தால் எங்கள் ஆத்துமா கழுவப்படுவதற்கும், எப்பொழுதும் நாங்கள் அவருக்குள்ளும் அவர் எங்களுக்குள்ளும் வாசமாயிருப்பதற்கும், ஏற்றவிதமாய் அவருடைய சரீரத்தைப் புசித்து அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ண எங்களுக்குக் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ குருவானவர் மேஜைக்கு முன்பாக நின்று தடையில்லாமல் விநயமாய் ஜனங்களுக்கு முன்பாக அப்பத்தைப் பிட்கவும் கையிலே பாத்திரத்தை எடுத்துக்கொள்ளவும் தக்கதாக; அப்பத்தையும் திராட்சரசத்தையும் ஒழுங்காய் வைத்து, பின்வரும் பிரதிஷ்டை ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் பரம பிதாவே, தேவரீர் எங்களுக்கு உருக்கமாய் இரங்கி, உம்முடைய ஒரே குமாரனாகிய இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து எங்களை மீட்டுக்கொள்ளும்படி, அவரைத் தந்தருளினீரே; அவர் சிலுவையிலே ஒரேதரம் தம்மைத் தாமே ஏகபலியாக ஒப்புக்கொடுத்து, சர்வலோகத்தின் பாவங்களையும் நிவிர்த்திசெய்வதற்கு நிறைவும் பூரணமும் போந்ததுமான பலியையும் காணிக்கையையும் பரிகாரத்தையும் செலுத்தினதுமல்லாமல்; தமது அருமையான மரணத்தை என்றைக்கும் நினைப்பூட்டும் ஞாபகத்தை நியமித்து, தாம் திரும்ப வருமளவும் நாங்கள் அதை அநுசரித்துவரும்படி தமது சுவிசேஷத்தில் கட்டளையிட்டிருக்கிறாரே. இரக்கமுள்ள பிதாவே, எங்கள் ஜெபத்தைக் கேட்டருளி, உமது குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்து கட்டளையிட்ட பரிசுத்த நியமத்தின்படி, நாங்கள் அவருடைய பாடுகளையும் மரணத்தையும் நினைவுகூர்ந்து, உமது சிருஷ்டிபதார்த்தங்களாகிய இந்த அப்பத்தையும் திராட்சரசத்தையும் பெற்றுக்கொள்ளும்போது, அவருடைய பரிசுத்தமுள்ள சரீரத்திற்கும் இரத்தத்திற்கும் பங்குள்ளவர்களாகும்படி, கிருபைசெய்தருளவேண்டுமென்று மிகவும் தாழ்

மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவர் தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே(*) அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, (†) அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், (‡) இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். அப்படியே ராப்போஜனம் பண்ணினபின்பு, (§) அவர் பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்; (‖) இது பாவமன்னிப்புண்டாகும்படி, உங்களுக்காகவும் அநேகருக்காகவும் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது; இதைப் பானம்பண்ணும்பொழுதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்று திருவுளம்பற்றினார். ஆமென்.

(*) இதைச் சொல்லுகையில், குருவானவர் அப்பம் வைத்திருக்கிற தட்டைக் கையில் எடுக்கவும்,

(†) இப்பொழுது அப்பத்தைப் பிட்கவும்,

(‡) இப்பொழுது அப்பம் எல்லாவற்றின்மேலும் கையை வைக்கவும்,

(§) இப்பொழுது பாத்திரத்தைக் கையில் எடுக்கவும்,

(‖) இப்பொழுது பிரதிஷ்டை செய்யப்படும் திராட்சரசம் இருக்கும் ஒவ்வொரு பாத்திரத்தின்மேலும் கையை வைக்கவும் வேண்டும்.

¶ அப்பொழுது குருவானவர் நற்கருணை அப்பமும் திராட்சரசமும் ஆகிய இரண்டையும் தாம் முந்தி உட்கொண்டு, பின்பு அங்கிருக்கும் கண்காணிமார் குருமார் உதவிக்குருமாருக்குப் பரிமாறவேண்டும். அப்புறம் ஜனங்களெல்லாரும் பணிவாய் முழங்கால்படியிட்டிருக்க, அவரவர் கையில் கொடுக்கவேண்டும். ஒருவனுக்கு அப்பத்தைக் கொடுக்கும்போது அவர் சொல்லவேண்டியதாவது:

உனக்காகக் கொடுக்கப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சரீரம் உன் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்தியஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்து உனக்காக மரணமடைந்தார் என்று நினைவுகூரும்படி, நீ இதை வாங்கிப் புசித்து, விசுவாசத்தினால் உன் இருதயத்தில் நன்றியறிதலோடே அவரை உனக்கு ஆகாரமாய் உட்கொள்வாயாக.

¶ பாத்திரத்தைக் கொடுக்கும் குருவானவர், அதை ஒவ்வொருவருக்கும் கொடுக்கும்போது சொல்லவேண்டியதாவது:

உனக்காகச் சிந்தப்பட்ட நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் உன் சரீரத்தையும் ஆத்துமாவையும் நித்திய ஜீவனுக்கென்று காக்கக்கடவது. கிறிஸ்துவின் இரத்தம் உனக்காகச் சிந்தப்பட்டதென்று நினைவுகூரும்படி, இதைப் பானம்பண்ணி நன்றியறிந்தவனாய் (ளாய்) இருப்பாயாக.



¶ இன்னும் சிலர் நற்கருணை வாங்காமல் இருக்கும்போது, பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்பமாவது திராட்சரசமாவது செலவாய்ப் போனால், குருவானவர் முன் சொல்லிய ஒழுங்கின்படி வேண்டிய அளவு பிரதிஷ்டை செய்யவேண்டும். அதில் 'நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து தாம் காட்டிக்கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே' என்கிற வார்த்தை முதற்கொண்டு வாசித்து அப்பத்தை ஆசீர்வதிக்கவேண்டும்; அந்தப் பிரகாரமாய் 'ராப்போஜனம் பண்ணினபின்பு' என்கிற வார்த்தை முதற்கொண்டு வாசித்துப் பாத்திரத்தையும் ஆசீர்வதிக்கவேண்டும்.

¶ எல்லாரும் வாங்கினபின்பு, குருவானவர் கர்த்தருடைய மேஜைக்குத் திரும்பிவந்து, பிரதிஷ்டை செய்யப்பட்ட அப்பத்திலும் திராட்சரசத்திலும் மீதியானதை அதின்மேல் வணக்கமாய் வைத்து, சுத்த வெண் வஸ்திரத்தினாலே மூடவேண்டும்.

¶ பின்பு குருவானவர் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்ல, ஜனங்களும் அதில் ஒவ்வொரு விண்ணப்பத்தையும் தொடர்ந்து சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும்: ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

¶ பின்பு சொல்லவேண்டுவதாவது:

பரம பிதாவாகிய கர்த்தாவே, உமது அடியாராகிய நாங்கள் இப்பொழுது செலுத்தியிருக்கிற துதி தோத்திர பலியை இரக்கமாய் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று, தயவுள்ள பிதாவாகிய உம்மை முழு மனதோடே வேண்டிக்கொள்ளுகிறோம். உம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினாலும் மரணத்தினாலும், அவர் திரு இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தின் மூலமாய், நாங்களும் மற்றுமுள்ள உம்முடைய சபை அனைத்தும் பாவமன்னிப்பையும், அவர் பாடுகளினால் உண்டான மற்றெல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளும்படி, தேவரீர் கிருபைசெய்யவேண்டுமென்று தாழ்மையாய்ப் பிரார்த்திக்கிறோம். கர்த்தாவே, சரீரமும் ஆத்துமாவுமாகிய எங்களை முழுவதும் தேவரீருக்குப் புத்தியும் பரிசுத்தமும் ஜீவனுமுள்ள பலியாக ஒப்புக்கொடுக்கிறோம். இப்பொழுது பரிசுத்த நற்கருணையில் பங்குபெற்றிருக்கிற எங்கள் எல்லாரையும் தேவரீர் உமது

கிருபையினாலும் பரம ஆசீர்வாதத்தினாலும் நிரப்பியருளவேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அநேகவிதமாய் இருக்கிற எங்கள் பாவங்களினாலே தேவரீருக்கு எந்தப் பலியும் செலுத்துவதற்கு நாங்கள் அபாத்திரராயிருந்தும், எங்கள் பாத்திராபாத்திரத்தைத் தேவரீர் கவனியாமல், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் எங்கள் குற்றங்களை மன்னித்து, எங்கள் கடமையின்படி நாங்கள் செலுத்தியிருக்கிற பணிவிடையை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரார்த்திக்கிறோம். அவரோடும் பரிசுத்த ஆவியோடும் ஐக்கியமாயிருக்கிற தேவரீருக்கு, அவர் மூலமாய் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமேன்.

¶ *அல்லது இது.*

நித்திய ஜீவியாயிருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, இந்தப் பரிசுத்த இரகசியங்களை ஏற்றவிதமாய் வாங்கியிருக்கிற எங்களை, தேவரீர் உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் விலைமதியாத திருச்சரீரமும் இரத்தமுமாகிய ஞான ஆகாரத்தினால் போஷித்ததற்காக உம்மைத் துதிக்கிறோம். தேவரீர் எங்கள்மேல் தயைகூர்ந்து கிருபாகடாட்சம் வைத்திருக்கிறதையும், உத்தம விசுவாசிகளின் கூட்டமும் உமது நேச குமாரனுடைய ஞான சரீரமுமாகிய சபையில் நாங்கள் அவயவங்களாய் இணைக்கப்பட்டிருக்கிறதையும், அவருடைய அருமையான பாடுகளினாலும் மரணத்தினாலும் உண்டான புண்ணியத்தினாலே, உமது நித்திய ராஜ்யத்துக்கு நாங்கள் சுதந்தரராயிருக்கிறதையும், இந்த நற்கருணையினாலே எங்களுக்கு நிச்சயப்படுத்தினதற்காக முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பரம பிதாவே, நாங்கள் இந்தப் பரிசுத்த ஐக்கியத்தில் நிலைத்திருந்து, நாங்கள் செய்யும்படி தேவரீர் நியமித்திருக்கிற நற்கிரியைகள் எல்லாவற்றையும் நிறைவேற்ற, உமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு மனத்தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் சகல கனமும் மகிமையும் என்றென்றைக்கும் உண்டாவதாக. ஆமேன்.

¶ *பின்பு சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:*

உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக. கர்த்தராகிய பராபரனே, பரம ராஜாவே, சர்வத்துக்கும் வல்ல பிதாவாகிய தேவனே, உம்மைத் துதிக்கிறோம், உம்மைப் புகழுகிறோம், உம்மை வணங்குகிறோம், உம்மை மகிமைப்படுத்துகிறோம், உமது சிறந்த மகிமையினிமித்தம் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம்.



கர்த்தராயிருக்கிற ஒரே பேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவே, கர்த்தராகிய பராபரனே, பிதாவின் சுதனே, உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்களுக்கு இரங்கும். உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிறவரே, எங்கள் ஜெபத்தை ஏற்றுக்கொள்ளும். தேவனாகிய பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறவரே, எங்களுக்கு இரங்கும்.

நீரே பரிசுத்தர், நீரே கர்த்தர். கிறிஸ்துவே, தேவரீர் ஒருவரே பரிசுத்த ஆவியோடே தேவனாகிய பிதாவின் மகிமையிலே உன்னதமானவராயிருக்கிறீர். ஆமேன்.

¶ *அப்பொழுது குருவானவர், அத்தியட்சர் இருந்தால் அவரானவர், பின் வருகிற ஆசீர்வாதத்தைச் சொல்லி, ஜனங்களை அனுப்புவிக்கவேண்டும்.*

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருப்பதாக, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயங்களையும் சிந்தைகளையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமேன்.

¶ *நற்கருணை பரிமாறுமலிருக்கும் நாட்களில், "காணிக்கைவாசகம்" என்னும் வாக்கியங்களுக்குப் பின்பு வாசிக்கவேண்டிய சுருக்கஜெபங்களாவன, அந்நாட்களில் இரண்டொரு ஜெபங்களை வாசிக்கவேண்டும். அல்லாமலும், இவைகள் காலை மாலைஜெப ஒழுங்கில் வருகிற சுருக்கஜெபங்களுக்குப் பின்பும், நற்கருணை ஒழுங்குக்கும் லித்தானியாவுக்கும் பின்பும் குருவானவருக்கு இஷ்டமான வேளையிலும் வாசிக்கவேண்டும்.*

கர்த்தாவே, சாவுக்கினமான இந்த ஜீவகாலத்தில் மாறிமாறிவருகிற சுகதுக்கங்களிலெல்லாம் உமது அடியாராகிய நாங்கள் உமது சம்பூரண கிருபையினாலும் சகாயத்தினாலும் எப்பொழுதும் காக்கப்படும்படி; இப்பொழுது நாங்கள் செய்கிற விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் இரக்கமாய்க் கேட்டு, நாங்கள் நித்திய ரட்சிப்பைப் பெறத்தக்கதாக, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் எங்களை வழி நடத்தியருளும். ஆமேன்.

சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரத்தின்படியும் ஆத்துமத்தின்படியும் உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி; உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்ற கிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி, ஆண்டு நடத்தவேண்டுமென்று எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய நாமத்துக்குக் கனமும் புகழும் உண்டாவதற்கு ஏதுவாக நன்னடக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்திலே பதித்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

ஆண்டவரே, நாங்கள் எந்த கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபா கடாட்சத்தோடே எங்களுக்கு துணைநின்று இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமேன்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்குமுன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப் பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

உம்முடைய குமாரனின் நாமத்தினாலே வேண்டிக்கொள்ளுகிறவர்களுடைய விண்ணப்பங்களைக் கேட்போம் என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவனே, இப்பொழுது உம்மை நோக்கி ஜெபங்களையும் வேண்டுதல்களையும் செய்திருக்கிற எங்களுக்கு இரக்கமாய்ச் செவிகொடுத்து, நாங்கள் உமது சித்தத்துக்கு ஏற்றபடி விசுவாசமாய்க் கேட்கிறவைகள் சம்பூரணமாய்க் கிடைப்பதினால், எங்கள் அவசரம் தீரவும், உம்முடைய மகிமை விளங்கவும், அவைகளைத் தந்தருள வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ நற்கருணை பரிமாறுமலிருக்கும் ஞாயிறுகளிலும், மற்றத் திருநாட்களிலும் நற்கருணை ஒழுங்கில் [இவ்வுலகத்தில் போராடுகிற கிறிஸ்து சபை அனைத்துக்காகவும்] சொல்லிய பொதுவான ஜெபம் வரைக்கும் அடங்கியிருக்கிற யாவற்றையும், இந்த ஒழுங்கின் கடைசியில் அடங்கியிருக்கிற சுருக்க ஜெபங்களில் இரண்டொரு ஜெபத்தையும், ஆசீர்வாதத்தையும் வாசித்து முடிக்கவேண்டும்.



¶ தம்மோடே கூடக் கர்த்தருடைய ராப்போஜனத்தை வாங்கும்படி, போதுமான ஜனங்கள் இல்லையென்று குருவானவர் கண்டால், அதைப் பரிமாறக்கூடாது.

¶ ஒரு சேகரத்தில் நற்கருணையை வாங்கத்தக்கவர்கள் இருபதுபேருக்கு அதிகமாயிராவிட்டாலும், அவர்களில் நான்குபேராவது, குறைந்தது மூன்று பேராவது இராவிட்டால் அதைப் பரிமாறக்கூடாது.

¶ அநேக குருமார் உதவிக்குருமார் இருக்கும் கதீட்ரல் கோவில்களிலும், குரு சமூகக் கோவில்களிலும், வித்தியாசாலைக் கோவில்களிலும் தகுதியான முகாந்தரம் இல்லாவிட்டால், அவர்களெல்லாரும் குருவானவரோடே கூடத் தவறாமல் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது நற்கருணையை வாங்கவேண்டும்.

¶ நற்கருணை அப்பத்தையும் திராட்சரசத்தையும் குறித்துத் தர்க்கத்துக்கும் வீண்பக்திக்கும் இடமில்லாதபடிக்குக் கட்டளையிடுகிறது என்னவெனில், அந்த அப்பம் வழக்கமாய்ச் சாப்பிடுகிற அப்பமாயிருந்தால் போதும்; ஆனால் அது நல்ல கோதுமை அப்பமாயிருக்கவேண்டும்.

¶ பிரதிஷ்டையாக்காத அப்பமாவது திராட்சரசமாவது இருந்தால், குருவானவர் தனக்குச் சொந்தமாக வைத்துக்கொள்ளலாம். பிரதிஷ்டையாக்கினதில் மீதியிருந்தால், கோவிலை விட்டுக் கொண்டுபோகாமல் ஆசீர்வாதம் சொல்லியவுடனே குருவானவரும், பந்தியிலிருந்தவர்களில் அவர் அழைக்கும்பேர்களும் அதை வணக்கமாய்ப் புசித்துப் பானம்பண்ணவேண்டும்.

¶ நற்கருணைக்குத் தேவையான அப்பத்தையும் திராட்சரசத்தையும் குருவானவரும் கோவில் காரியகாரரும் அந்தச் சேகரத்தாருடைய செலவினாலே வாங்கவேண்டும்.

¶ அந்தந்தச் சேகரத்தாரில் ஒவ்வொருவனும் வருஷாவருஷம் கிறிஸ்து உயிர்த்தெழுந்த திருநாள் முதலான மூன்று திருநாட்களிலாவது நற்கருணையில் சேரவேண்டும். மேலும் வருஷந்தோறும் உயிர்த்தெழுந்த திருநாள் வாரத்தில் கணக்குப்பார்த்துத் தன் தன் குருவுக்காவது, அவருடைய பிரதி காரியஸ்தருக்காவது சபைக்குரிய வரிப்பணத்தை வழக்கப்படி அவர்களுக்குச் செலுத்தவேண்டும்.

¶ தேவாராதனை முடிந்தபின்பு, காணிக்கை வாசகம் வாசிக்கையில் விழுந்த பணத்தை குருவானவரும் கோவில் காரியகாரரும் செய்யும் ஆலோசனையின்படி, பக்தியும் தர்மமுமான விஷயங்களில் செலவுசெய்யவேண்டும். அதைக்குறித்து அவர்கள் விகற்பப்பட்டால் அத்தியட்சர் கட்டளைப்படி செலவு செய்யவேண்டும்.

“ கர்த்தருடைய ராப்போஜனம் ஆசரிக்கப்படும் ஒழுங்கில், நற்கருணையில்
“ சேருகிறவர்கள் முழங்காற்படியிட்டு அதை வாங்கவேண்டுமென்று நியமித்
“ திருக்கிறதே, இது நல்ல ஒழுங்குதான். பாத்திரமான வகையாய் அதை
“ வாங்குகிறவர்கள், அதன் மூலமாய்க் கிறிஸ்துநாதரிடத்தில் பெற்றுக்கொள்ளு
“ கிற நன்மைகளை மகா முக்கியமென்று தாழ்மையோடும் நன்றியறிதலோடும்
“ அறிக்கையிடும்படிக்கும், மற்றப்படிப் பரிசுத்த நற்கருணையில் நேரிடும்
“ பரிசுத்த குலைச்சலுக்கும் குழப்பத்துக்கும் இடமிராதபடிக்கும் இப்படிச்
“ செய்ய நியமித்திருக்கிறது. ஆனாலும், சிலர் அறியாமையினாலும், வேறு சிலர்
“ விரோதத்தினாலும் முழங்காற்படியிடுகிற விஷயத்தைக் குறித்துத் தப்பாய்
“ எண்ணாமலும் அதைப் புரட்டாமலும் இருக்கும்படி இதனாலே தெரிவிக்கிறது
“ என்னவென்றால், இப்படி முழங்காற்படியிடுவதினாலே நற்கருணையில் சரீரப்
“ பிரகாரமாய் வாங்கப்படுகிற நற்கருணை அப்பம் திராட்சரசம் என்பவைகளுக்
“ காவது, கிறிஸ்துநாதருடைய இயற்கையான மாம்சமும் இரத்தமும் சரீரப்
“ பிரகாரமாய் எழுந்தருளினாற்போல அவைகளுக்காவது, யாதொரு ஆராதனை
“ செய்யவேண்டுமென்கிற நோக்கம் இல்லை; அப்படிச் செய்கிறதற்கு நியாய
“ மும் இல்லை. ஏனென்றால், நற்கருணை அப்பமும் ரசமுமாகிய பதார்த்தங்
“ கள் முன்போல அதனதன் சொந்த இயற்கையின்படி மாறாமலிருக்கிறது.
“ ஆதலால், அவைகளை ஆராதிக்கலாகாது. அப்படிச் செய்வது சகல உத்தம
“ கிறிஸ்தவர்களாலும் வெறுக்கவேண்டிய விக்கிரகாராதனையாமே. மேலும் நம்மு
“ டைய இரட்சகராகிய கிறிஸ்துநாதருடைய இயற்கையான சரீரமும் இரத்த
“ மும் இவ்விடத்தில் இல்லாமல் பரலோகத்திலிருக்கிறது. கிறிஸ்துநாதருடைய
“ இயற்கையான சரீரம் ஒரே காலத்தில் பல இடங்களிலும் இருக்கும் என்று
“ சொன்னால், அவருக்கு இயற்கையான சரீரம் உண்டென்கிற சத்தியத்துக்கு
“ விரோதமாயிருக்கும்.”

# THE MINISTRATION OF PUBLICK BAPTISM OF INFANTS, TO BE USED IN THE CHURCH.

## தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமை.

¶ ஞாயிற்றுக்கிழமைகளிலும், மற்றத் திருநாட்களிலும் அநேக ஜனங்கள் கூடிவரும்போது, அந்தச் சமயங்களிலேயல்லாமல், மற்ற நாட்களில் ஞானஸ்நானம் கொடுக்கிறது தகுதியல்லவென்று ஜனங்களுக்கு எச்சரிக்க வேண்டும். என்னத்தினாலெனில், ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் கிறிஸ்துவின் சபையில் சேர்க்கப்படுவதற்கு, கூடிவந்திருக்கும் சபையார் சாட்சிகளாயிருக்கும்படியாகவும், குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறதைப் பார்க்கிற ஒவ்வொருவனும் தானும் ஞானஸ்நானத்தில் தேவனுக்கு முன்பாகச் செய்த அறிக்கையை நினைவுகூரும்படியாகவும், அந்த நாட்களில் ஞானஸ்நானம் கொடுக்கவேண்டும். அதினிமித்தம் ஞானஸ்நானம் நாட்டோடிப் பாஷையில் கொடுக்கிறது நல்லது; ஆனாலும் அவசரம் இருந்தால், மற்ற நாட்களிலும் குழந்தைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கலாம்.

¶ மேலும், ஞானஸ்நானம் பெறுகிற ஒவ்வொரு ஆண் குழந்தைக்கும் இரண்டு ஞானத்தகப்பன்மாரும் ஒரு ஞானத்தாயும், ஒவ்வொரு பெண் குழந்தைக்கும் ஒரு ஞானத்தகப்பனும் இரண்டு ஞானத்தாய்மாரும் இருக்க வேண்டும்.

¶ பிள்ளைகள் ஞானஸ்நானம் பெறவேண்டியிருக்கும்போது, முந்தின சாயங்காலத்திலாவது, அந்த நாளில் காலைஜெபம் தொடங்குமுன்பாவது, பெற்றோர் குருவானவருக்கு அறிவிக்கவேண்டும். பின்பு, குருவானவர் நியமிக்கிறபடி, காலைஜெபத்தின் இரண்டாம் பாடத்தை வாசித்தவுடனேயாவது, மாலைஜெபத்தின் இரண்டாம் பாடத்தை வாசித்தவுடனேயாவது, ஞானத்தாய்தகப்பன்மாரும் பிள்ளைகளோடே வருகிற ஜனங்களும் ஞானஸ்நானத் தொட்டியண்டையில் ஆயத்தமாய் வந்திருக்கவேண்டும். அப்பொழுது சுத்த ஜலத்தை வார்த்து நிரப்பியிருக்கிற ஞானஸ்நானத் தொட்டியருகே குருவானவர் வந்துநின்று சொல்லவேண்டியதாவது:

இந்தப் பிள்ளை இதற்குமுன்னே ஞானஸ்நானம் பெற்றதா, இல்லையா?

¶ அவர்கள் இல்லை என்றால், குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, எல்லா மனிதரும் பாவத்தில் உற்பவித்துப் பிறந்திருக்கிறதினாலும்; ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சொல்லியிருக்கிறதினாலும்; சுபாவமாய் இந்தப் பிள்ளையினிடத்தில் இராத நன்மை இதற்குக் கிடைக்கும்படி, நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவனாகிய பிதாவை நோக்கி, இந்தப் பிள்ளை ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பரிசுத்த சபையில் சேர்ந்து, அதில் ஜீவனுள்ள அவயவமாகும்படி, அவர் தமது மிகுந்த காருணியத்தினால் செய்தருளவேண்டுமென்று விண்ணப்பம்பண்ண உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

¶ பின்பு குருவானவர் சொல்லவேண்டியது:

ஜெபம் பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நோவாவும் அவனுடைய குடும்பமும் ஜலத்தினால் அழியாதபடிக்குத் தேவரீர் மிகுந்த இரக்கமாய் அவர்களைப் பேழையில் தற்காத்து ரட்சித்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரைச் சிவந்த சமுத்திரத்தின் நடுவாகச் சேதமின்றி நடத்தி, அதினால் உமது பரிசுத்த ஞானஸ்நானத்தை அடையாளமாகக் காட்டி; உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து யோர்தான் நதியிலே பெற்ற ஞானஸ்நானத்தினால் ஞானப்பிரகாரமாய்ப் பாவத்தைப் போக்கும் ஸ்நானமாக ஜலத்தைப் பிரதிஷ்டைசெய்தீரே. தேவரீர் இந்தப் பிள்ளையை இரக்கமாய்க் கண்ணோக்கி; இவன் (ள்) உமது கோபத்துக்கு நீங்கி, கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் சேர்க்கப்படவும்; விசுவாசத்தில் உறுதியாகி, நன்னம்பிக்கையில் மகிழ்ந்து, அன்பில் வேரூன்றி, இவ்வுலகமாகிய துக்கசாகரத்தின் அலைகளைக் கடந்து, நித்திய ஜீவ கரையைச் சேர்ந்து, சதாகாலமும் உம்மோடே அரசாளவும்; பரிசுத்த ஆவியினாலே இவனை (ளை) க் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று, உமது அளவில்லாத இரக்கங்களினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.



தாழ்ச்சியுள்ள அனைவருக்கும் அநுகூலமாயும், அடைக்கலம்பெற உம்மிடத்தில் வருகிறவர்களுக்குச் சகாயமாயும், விசுவாசிகளுக்கு ஜீவனாயும், மரித்தோருக்கு உயிர்த்தெழுதலாயும் இருக்கிற அழிவில்லாத சர்வவல்லமையுள்ள தேவனே, நீர் கட்டளையிட்ட பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெற வந்திருக்கிற இந்தக் குழந்தை ஆவிக்குரிய மறுஜன்மத்தால் பாவமன்னிப்படையும்படி இவனு (ளு) க்காக உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் என்று தேவரீர் உம்முடைய பிரியமான குமாரனைக்கொண்டு அருளின திருவாக்கின்படியே இந்தக் குழந்தையை ஏற்றுக்கொண்டு; நீர் அருளிச்செய்த பரம ஸ்நானமாகிய நித்திய ஆசீர்வாதத்தை இவன் (ள்) பெற்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவரீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நித்திய ராஜ்யத்தில் சேரும்படி; கேட்கிற எங்களுக்குக் கொடுத்து, தேடுகிற நாங்கள் கண்டடையச்செய்து, தட்டுகிற எங்களுக்கு வாசலைத் திறந்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது ஜனங்கள் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பரிசுத்த மாற்கு பத்தாம் அதிகாரம் பதின்மூன்றாம் வசனமுதல் எழுதிய சுவிசேஷவாக்கியத்தைக் கேளுங்கள்:

சிறு பிள்ளைகளைக் கிறிஸ்துவானர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறுபிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.

¶ சுவிசேஷவாக்கியத்தை வாசித்தபின்பு, குருவான்வர் அதைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக் கேட்ட இந்தச் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சிறுபிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார், அவர்களைத் தம்மிடத்தில் வரவிடாதவர்களைக் கடிந்துகொண்டார்; எல்லா மனிதரும் அவர்களைப்போலக் குற்றமில்லாதவர்களாய் இருக்கவேண்டும் என்று

போதித்தார். அவர் அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்த வெளியரங்கமான செய்கையினாலே, தாம் அவர்களுக்குத் தயவுள்ளவரென்றும் காண்பித்தார். அப்படியே அவர் இந்தக் குழந்தையையும் தயவாய் ஏற்றுக்கொண்டு, தமது கிருபையாகிய கரத்தினால் இவனை (ளை) அணைத்து, நித்தியஜீவனாகிய ஆசீர்வாதத்தை இவனு (ளு) க்குத்தந்தருளி, என்றுமுள்ள தமது ராஜ்யத்தில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்வாரென்று, சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசியுங்கள். தேவகுமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்தபடி, நம்முடைய பரமபிதா இந்தக் குழந்தையின்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம் நிச்சயங்கொண்டிருக்கிறோம். பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெறும்படி நாம் இந்தக் குழந்தையைக் கொண்டுவந்த அன்பான செய்கையை அவர் தயவாய் ஒப்புக்கொள்ளுகிறாரென்றும் நம்பியுமிருக்கிறோம். ஆகையால் நாம் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரம பிதாவே, உமது கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தருளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். இந்தக் குழந்தை மறுபடியும் பிறந்து, நித்திய ரட்சிப்புக்குச் சுதந்தரவாளியாகும்படி, இவனு (ளு) க்கு உமது பரிசுத்த ஆவியைக் கொடுத்தருளவேண்டுமென்று, இப்பொழுதும் எப்பொழுதும் உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

¶ அப்பொழுது குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை
நோக்கிச் சொல்லவேண்டியதாவது:

**பி**ரியமானவர்களே, ஞானஸ்நானம் பெறுவதற்கு இந்தப் பிள்ளையைக் கொண்டுவந்தீர்களே; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து இவனை (ளை) ஏற்றுக்கொண்டு, இவனை (ளை) ப் பாவங்களிலிருந்து விடுதலையாக்கி, பரிசுத்த ஆவியினாலே சுத்திகரித்து, இவனு (ளு) க்குப் பரலோக ராஜ்யத்தையும் நித்திய ஜீவனையும் கொடுத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொண்டீர்கள். நீங்கள் வேண்டிக்கொண்ட இவைகள் எல்லாவற்றையும் அருளிச்செய்வோம் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது சுவிசேஷத்தில் வாக்குத்தத்தஞ்செய்திருக்கிறதையும் கேட்டிருக்கிறீர்கள். அவர், தாம் ஒப்புக்கொண்டபடி, அந்த வாக்குத்தத்தத்தை நிச்சயமாகவே நிறைவேற்றுவார். ஆகையால் கிறிஸ்து இந்த வாக்குத்தத்தம் செய்ததின்பேரில், இந்தக் குழந்தையும்: தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன் என்றும், தேவனுடைய பரிசுத்த வசனத்தை உறுதியாய் விசுவாசிப்பேன் என்றும், அவர் கற்பனைகளைப் பணிவாய்க் கைக்கொள்வேன் என்றும், இந்த உடன்படிக்கையைத் தானே ஒப்புக்கொள்ளத் தக்க வயதாகுமட்டும் தன் பிணையாளிகளாயிருக்கிற உங்களைக்கொண்டு உண்மையாய் வாக்குத்தத்தஞ்செய்யவேண்டும்.



ஆகையால் நான் கேட்கிறதாவது:

**நீ** இந்தப் பிள்ளையின் பேராலே பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாதபடிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும் அவைகளை வெறுத்துவிடுகிறாயா?

**மறுமொழி:** அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

**வா**னத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

**மறுமொழி:** இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

**இ**ந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம் பெற விரும்புகிறாயா?

**மறுமொழி:** அதையே விரும்புகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: அப்படியே நடந்துகொள்வேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இரக்கமுள்ள தேவனே, இந்தப் பிள்ளையிலுள்ள பழைய ஆதாம் அடக்கம்பண்ணப்படவும், புதிய மனுஷன் இவனி (ளி) ல் உயிர்த்தெழும்பவும் கிருபைசெய்தருளும். **ஆமென்.**

இவனி (ளி) லுள்ள மாம்ச இச்சைகளெல்லாம் அழியவும், ஆவிக்குரியவைகளெல்லாம் பிழைத்து வளர்ந்தேறவும் கிருபைசெய்தருளும். **ஆமென்.**

பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் ஜெயித்து வெற்றி சிறக்கும்படி, இவனு (ளு) க்கு வல்லமையையும் பெலனையும் அநுக்கிரகித்தருளும். **ஆமென்.**

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய ஜீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவனே, எங்கள் உத்தியோகத்தினாலும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிற யாவரும் பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு, நித்திய பலனை அடையும்படி, உமது இரக்கத்தினாலே கிருபைசெய்தருளும். **ஆமென்.**

நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது அருமையான விலாவிலிருந்து ஜலத்தையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டருளினாரே. தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி, ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த ஜலத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இந்தப் பிள்ளை உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று, தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவனா (ளா) ய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அநுக்கிரகித்தருளும். **ஆமென்.**



¶ அப்பொழுது குருவானவர் பிள்ளையைத் தமது கைகளில் ஏந்திக்கொண்டு, ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளைக்குப் பேரிடுங்கள்.

¶ அப்பொழுது அவர்கள் இடுகிற பேரை அவர் சொல்லி, பிள்ளை ஜலத்தில் முழுக்காட்டத் தாங்குமென்று அவர்கள் சொன்னால், பத்திரமாய் முழுக்காட்டிச் சொல்லவேண்டியது:

__________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

¶ பிள்ளை பலவீனமாயிருக்கிறதென்று அவர்கள் சொன்னால், அதின்மேல் ஜலத்தை வார்க்கிறதே போதும். அப்பொழுது மேற்சொல்லிய வார்த்தைகளைச் சொல்லக்கடவர். அதாவது:

__________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளையைக் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

* இப்பொழுது பிள்ளையின் நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

¶ அப்பொழுது குருவானர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இந்தப் பிள்ளை மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இந்தப் பிள்ளை தன் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

¶ அப்பொழுது எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, சொல்லவேண்டியதாவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம்

பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை ரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

¶ *அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:*

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து, கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற இவன் (ள்) தன்னிலுள்ள பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்து, பாவசரீரத்தை முற்றிலும் அழிக்கவும், இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ *பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:*

இந்தப் பிள்ளை தன் பிணையாளிகளாகிய உங்கள் மூலமாய், தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து அவருக்கு ஊழியஞ்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால்; இவன் (ள்) உங்களைக்கொண்டு இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று அறிந்துகொள்ளத்தக்க திராணியுண்டானவுடனே, இவனு (ளு)க்கு அதைப் போதித்துவருகிறார்களா என்று பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. இவைகளை இவன் (ள்) நன்றாய் அறிந்துகொள்ளும்படி, பிரசங்கங்களைக் கேட்கவும், விசேஷமாய் சுயபாஷையில் விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும், தங்களுக்கு ஆத்தும ரட்சிப்பு உண்டாகக் கிறிஸ்தவர்கள் அறிந்து விசுவாசிக்கவேண்டிய மற்றெல்லாவற்றையும் படிக்கவும், கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற தேவபக்தியும் சன்மார்க்கமுமுள்ளவனா (ளா) ய் நடக்கத்தக்க



தாக வளர்க்கப்படவும், நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாமும் பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகள் எல்லாவற்றையும் அழித்து, சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளுங்கள்.

¶ *பின்னும் சொல்லவேண்டியது:*

இந்தப் பிள்ளை விசுவாசப்பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும் சுயபாஷையில் சொல்லுகிறதுமல்லாமல், திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் படிக்கவேண்டிய திருச்சபை ஞானோபதேச வினாவிடையையும் கற்று அறிந்தவுடனே, திடப்படுத்தலைப் பெறும்படிக்கு அத்தியட்சரிடத்தில் கொண்டுவரப்படும்படி, நீங்கள் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும்.

¶ *ஞானஸ்நானம் பெற்ற பிள்ளைகள் கர்மபாவம் இல்லாதவர்களாய் இறந்தால், இரட்சிக்கப்படுவார்களென்பது வேதவசனத்தால் நிச்சயமாய் இருக்கிறது.*

¶ *ஞானஸ்நான முறைமையில் சிலுவையின் அடையாளத்தை வரைகிறதைக் குறித்துச் சமுசயம் முற்றும் நீங்கும்படி, அதின் அர்த்தமும், அதைக் கைக்கொள்ளுகிற முகாந்தரங்களும் இன்னவைகளென்று, முதலாவது 1604-ம் வருஷத்தில் பிரசித்தம் செய்யப்பட்ட கனோன் சட்டங்களிலே 30-ம் சட்டத்தில் காண்க.*

## THE MINISTRATION

OF

# PRIVATE BAPTISM OF CHILDREN

IN HOUSES.

---

## வீடுகளில்

பிள்ளைகளுக்குத் தனிமையாகக் கொடுக்கும்

# ஞானஸ்நான முறைமை.

¶ பிள்ளைகள் பிறந்து முதலாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, இரண்டாம் ஞாயிற்றுக்கிழமையிலாவது, அதற்கு இடையில் வரும் திருநாளிலாவது ஞானஸ்நானம் பெறவேண்டுமென்றும், குருவானவர் ஒப்புக்கொள்ளத்தக்க முகாந்தரம் இல்லாவிட்டால், ஞானஸ்நானத்தைத் தாமதம்பண்ணக் கூடாதென்றும், அந்தந்தச் சேகரத்திலுள்ள குருமார் அடிக்கடி ஜனங்களுக்கு எச்சரிக்கவேண்டும்.

¶ மேலும், தகுதியான முகாந்தரம் இல்லாவிட்டால், வீடுகளில் தங்கள் பிள்ளைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி கேட்கக் கூடாதென்று, குருமார் அவர்களுக்கு எச்சரிக்கவேண்டும். முகாந்தரம் உண்டானால், பின்வரும் முறைமையின்படி ஞானஸ்நானம் கொடுக்கப்படவேண்டும்.

¶ முதலாவது, அந்தச் சபைக்குக் குருவானவராகிலும், அவர் இல்லாத காலத்தில் கிரமமாய் குருப்பட்டம் பெற்ற வேறொரு குருவானவர் சமீபமாயிருந்தால் அவராகிலும், கூடிவந்திருக்கிறவர்களோடே தேவனை நோக்கிக் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லுகிறதுமல்லாமல், தேவாலயத்தில் வெளியரங்கமாய்க் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையில் முன் கண்டிருக்கிறபடி வாசிக்கக் குறித்திருக்கிற சுருக்கஜெபங்களில் சில சுருக்கஜெபங்களை அவசரங்கண்டு சமயத்துக்குத்தக்கதாய்ச் சொல்லக்கடவர். அப்பொழுது அங்கே இருக்கிறவர்களில் ஒருவர் பிள்ளைக்குப் பெயரிட, குருவானவர் பிள்ளையின்மேல் ஜலத்தை வார்த்துச் சொல்லவேண்டிய வார்த்தைகளாவன:

________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.



¶ பின்பு எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்திச் சொல்லவேண்டியதாவது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்தவான்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபைசெய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ இவ்விதமாய்ப் பிள்ளைக்குக் கொடுத்திருக்கிற ஞானஸ்நானம் ஒழுங்காயும் தகுதியாயும் இருக்கிறதென்றும், அது திரும்ப ஞானஸ்நானம் பெறவேண்டியதில்லையென்றும், யாவரும் நிச்சயமாய் அறிந்துகொள்வார்களாக. ஆனாலும் இவ்விதமாக ஞானஸ்நானம் பெற்ற பிள்ளை பிழைத்தால், அதைத் தேவாலயத்தில் கொண்டுவரவேண்டும். ஏனெனில், அந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தவர் அந்தச்சேகரத்துக் குருவாயிருந்தால், தாம் சரியான ஒழுங்கின்படி தனிமையாய் ஞானஸ்நானம் கொடுத்தது சபையாருக்குத் தெரியவரும்படி இப்படிச் செய்யவேண்டும்: அப்பொழுது அவர் சொல்லவேண்டியதாவது:

________ காலத்தில் ________ இடத்தில் சில சாட்சிகளுக்கு முன்பாக, திருச்சபை நியமித்திருக்கிற முறைமையின்படி, நான் இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன்.

¶ கிரமமாய்க் குருப்பட்டம் பெற்ற வேறு குருவானவராலே அந்தப் பிள்ளை ஞானஸ்நானம் பெற்றிருக்குமாகில், பிள்ளை பிறந்த சேகரத்திலாவது, ஞானஸ்நானம் பெற்ற சேகரத்திலாவது குருவாயிருக்கிறவர், அந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் ஒழுங்காய்க் கொடுக்கப்பட்டதுண்டோ இல்லையோ என்று விசாரித்து அறியவேண்டும். அப்படியே, பிள்ளையைத் தேவாலயத்துக்குக் கொண்டுவந்திருக்கிறவர்கள், இந்தப் பிள்ளை ஞானஸ்நானம் பெற்றிருக்கிறதென்று சொன்னால், குருவானவர் பின்னும் அவர்களிடத்தில் விசாரித்துக் கேட்கவேண்டியதாவது:

யாராலே இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்தபோது, கூட இருந்தவர்கள் யார்?

அவசரமான காலங்களில் பதற்றத்தினாலாவது ஆத்திரத்தினாலாவது இந்தச் சாக்கிரமெந்துக்கு அவசியம் வேண்டிய சில காரியங்களை ஒருவேளை செய்யாமல் விட்டிருக்கும்; ஆகையால் நான் உங்களிடத்தில் பின்னும் கேட்கிறதாவது:

என்னத்தைக்கொண்டு இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

என்ன வார்த்தைகளைச் சொல்லி இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டது?

¶ பிள்ளையைக் கொண்டுவந்தவர்கள் சொல்லும் மாறுத்தரவினாலே அந்தப் பிள்ளைக்குச் செய்யவேண்டியவைகள் எல்லாம் ஒழுங்கின்படி செய்யப்பட்டதென்று குருவானவருக்குத் தெரியவந்தால், அவர் அந்தப் பிள்ளைக்கு மறுபடியும் ஞானஸ்நானம் கொடாமல், பின்வரும் வார்த்தைகளைச் சொல்லி, மெய்க்கிறிஸ்தவர்களாகிய மந்தையில் ஒருவனாய் (ஒருத்தியாய்) ச் சேர்த்துக்கொண்டு சொல்லவேண்டியதாவது:

இந்தப் பிள்ளைக்கு ஞானஸ்நானம் கொடுத்ததில், நியமித்திருக்கிற ஒழுங்கின்படி செய்யவேண்டியவைகள் எல்லாம் சரியாய்ச் செய்தாயிற்று என்று உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன். ஜன்மபாவமுள்ளவனா (ளா) யும் தேவகோபாக்கினைக்கு உட்பட்டவனா (ளா) யும் பிறந்த இந்தப் பிள்ளை ஞானஸ்நானத்திலுள்ள மறுஜன்ம முழுக்கினாலே இப்பொழுது தேவனுடைய பிள்ளைகளும் நித்திய ஜீவனுக்குச் சுதந்தரருமாகிய கூட்டத்தில் சேர்க்கப்பட்டவனா (ளா) ய் இருக்கிறான் (ள்). நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது கிருபைக்கும் இரக்கத்துக்கும் இப்படிப்பட்ட குழந்தைகளை விலக்காமல், மிகுந்த அன்போடே தம்மிடத்தில் வரவழைத்திருக்கிறாரென்று, நமக்கு ஆறுதலாக இப்பொழுது வாசிக்கப்போகிற சுவிசேஷ வாக்கியத்தினால் உங்களுக்குத் தெரியவரும்.

**அந்தச் சுவிசேஷவாக்கியமாவது:** பரி. மா. 10. 13.

சிறு பிள்ளைகளைக் கிறிஸ்துவானவர் தொடும்படிக்கு அவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்; கொண்டுவந்தவர்களைச் சீஷர்கள் அதட்டினார்கள். இயேசு அதைக் கண்டு, விசனமடைந்து: சிறு பிள்ளைகள் என்னிடத்தில் வருகிறதற்கு இடங்கொடுங்கள்; அவர்களைத் தடைபண்ணாதிருங்கள்; தேவனுடைய ராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது. எவனாகிலும் சிறு பிள்ளையைப்போல் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவன் அதில் பிரவேசிப்பதில்லையென்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்று சொல்லி, அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை ஆசீர்வதித்தார்.



¶ சுவிசேஷவாக்கியத்தை வாசித்தபின்பு, குருவானவர் அதைக்குறித்துச் சுருக்கமாய்ச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக்கேட்ட இந்தச் சுவிசேஷ வாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சிறு பிள்ளைகளைத் தம்மிடத்தில் கொண்டுவரும்படி கட்டளையிட்டார், அவர்களைத் தம்மிடத்தில் வரவிடாதவர்களைக் கடிந்துகொண்டார்; எல்லா மனிதரும் அவர்களைப்போலக் குற்றமில்லாதவர்களாய் இருக்கவேண்டும் என்று போதித்தார். அவர் அவர்களை அணைத்துக்கொண்டு, அவர்கள்மேல் கைகளை வைத்து ஆசீர்வதித்த வெளியரங்கமான செய்கையினாலே, தாம் அவர்களுக்குத் தயவுள்ளவரென்று காண்பித்தார். அப்படியே அவர் இந்தக் குழந்தையையும் தயவாய் ஏற்றுக்கொண்டு, தமது கிருபையாகிய கரத்தினால் இவனை (ளை) அணைத்துக்கொண்டிருக்கிறாரென்றும், தமது பரிசுத்த வசனத்தினாலே வாக்குத்தத்தம் செய்திருக்கிறபடி நித்திய ஜீவனாகிய ஆசீர்வாதத்தை இவனு (ளு) க்குத் தந்தருளி, என்றுமுள்ள தமது ராஜ்யத்தில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்வாரென்றும், சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசியுங்கள். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்தபடி, நம்முடைய பரம பிதா இந்தக் குழந்தையின்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம் நிச்சயங்கொண்டிருக்கிறதினாலே, நாம் விசுவாசத்தோடும் வணக்கத்தோடும் அவருக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி, கர்த்தர்தாமே நமக்குக் கற்பித்த ஜெபத்தைச் சொல்லக்கடவோம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரம பிதாவே, உமது கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தருளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். மறுபடியும் பிறந்து எங்கள் கர்த்தராயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் மூலமாய் நித்திய ரட்சிப்புக்குச் சுதந்தரவாளியான இந்தக் குழந்தை உம்முடைய ஊழியக்காரனா (ரியா) ய் நிலைத்திருந்து, தேவரீர் செய்த வாக்குத்தத்தத்தை அடையும்படி, உம்மோடும் பரிசுத்தஆவியோடும், இப்பொழு

தும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவினித்தம் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் பிள்ளையின் பேர் என்னவென்று கேட்க,
ஞானத்தாய் தகப்பன்மார் அதைச் சொல்லியபின்பு
குருவானவர் சொல்லவேண்டியது:

நீ இந்தப் பிள்ளையின் பேராலே பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாதபடிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும் அவைகளை வெறுத்துவிடுகிறாயா?

மறுமொழி: அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னி மரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம்நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

மறுமொழி: இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ குருவானவர் சொல்வது.

நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: அப்படியே நடந்துகொள்வேன்.



¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இந்தப் பிள்ளையைக் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரண பரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக, இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

* இப்பொழுது பிள்ளையின் நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இந்தப் பிள்ளை ஞானஸ்நானத்தினால் மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்திரம் செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இந்தப் பிள்ளை தன் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த ஆவியினாலே இந்தக் குழந்தையை மறுபடியும் ஜனிப்பித்து, புத்திர சுவிகாரத்தினாலே உம்முடைய சொந்தப் பிள்ளையாக ஏற்றுக்கொண்டு, உம்முடைய பரிசுத்த சபையின் அவயவமாகச் சேர்த்தருளினதற்காக, முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். பாவத்துக்கு மரித்து நீதிக்குப் பிழைத்து, கிறிஸ்துவின் மரணத்துக்குள் அவருடனேகூட அடக்கம்பண்ணப்பட்டிருக்கிற இவன் (ள்) தன்னிலுள்ள பழைய மனுஷனைச் சிலுவையில் அறைந்து, பாவ சரீரத்தை முற்றிலும் அழிக்கவும், இவன் (ள்) உம்முடைய குமாரனின் மரணத்திற்குப் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கிறதுபோல, அவர் உயிர்த்தெழுதலுக்கும் பங்குள்ளவனா (ளா) ய் இருக்கவும், கடைசியிலே மற்றுமுள்ள உம்முடைய பரிசுத்த சபையார்களோடுகூட உமது நித்திய ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியாகவும் கிருபை செய்யவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை முன்னிட்டுத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

இந்தப் பிள்ளை தன் பிணையாளிகளாகிய உங்கள் மூலமாய், தான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து அவருக்கு ஊழியஞ்செய்வேன் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால்; இவன் (ள்) உங்களைக்கொண்டு இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று அறிந்துகொள்ளத்தக்க திராணியுண்டானவுடனே, இவனு (ளு) க்கு அதைப் போதித்துவருகிறார்களா என்று பார்த்துக்கொள்வது உங்கள் கடமை. இவைகளை இவன் (ள்) நன்றாய் அறிந்துகொள்ளும்படி, பிரசங்கங்களைக் கேட்கவும், விசேஷமாய் சுயபாஷையில் விசுவாசப் பிரமாணத்தையும், கர்த்தருடைய ஜெபத்தையும், பத்துக் கற்பனைகளையும், ஆத்தும இரட்சிப்பு உண்டாகக் கிறிஸ்தவர்கள் அறிந்து விசுவாசிக்கவேண்டிய மற்றெல்லாவற்றையும் படிக்கவும், கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற தேவபக்தியும் சன்மார்க்கமுமுள்ளவனா (ளா) ய் நடக்கத்தக்கதாக வளர்க்கப்படவும், நீங்கள் பார்த்துக்கொள்ளவேண்டும். நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாமும் பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகளெல்லாவற்றையும் அழித்து, சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை நீங்கள் எப்பொழுதும் நினைத்துக்கொள்ளுங்கள்.

¶ ஜலத்தினால் ஞானஸ்நானம் செய்கிறதும், "பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே" என்கிற வார்த்தைகளைச் சொல்லுகிறதும் ஞானஸ்நானத்துக்கு அவசியம் வேண்டிய காரியங்களாயிருக்கிறதினாலே, கோவிலுக்குக் கொண்டு வரப்பட்ட பிள்ளை அந்த ஒழுங்கின்படி ஞானஸ்நானம் பெற்றதென்று நிச்சயிக்கக்கூடாதபடி, அதைக் கொண்டுவந்தவர்கள் குருவானவருடைய கேள்விகளுக்குச் சந்தேகமான மாறுத்தரவு சொன்னால், குழந்தைகளுக்கு வெளியரங்கமாக ஞானஸ்நானம் கொடுக்க நியமித்திருக்கிற முறைமையின்படி அவர் ஞானஸ்நானம் கொடுக்கக்கடவர். ஆனாலும் அவர் பிள்ளையை ஞானஸ்நானத்தொட்டியில் முழுக்காட்டும்போது, அவர் பின்வரும் முறைமையின்படி சொல்லவேண்டிய வார்த்தைகளாவன:

நீ இதற்குமுன் ஞானஸ்நானம் பெற்றிராவிட்டால், __________ உனக்கு, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமென்.

# THE MINISTRATION
OF
# BAPTISM TO SUCH AS ARE OF RIPER YEARS,
AND ABLE TO ANSWER FOR THEMSELVES.

---

## சிறுபிராயம் கடந்து
தங்களுக்காக உத்தரவு சொல்லத்தக்கவர்களுக்குக்
கொடுக்கும்
# ஞானஸ்நான முறைமை.

¶ ஞானஸ்நானம் பெறப்போகிற சிறுபிராயம் கடந்தவர்கள் கிறிஸ்துமார்க்கத்தின் பிரதான உபதேசங்களை நன்றாய்க் கற்று அறிந்திருக்கிறார்களா என்று சோதித்தறியும்படிக்கும், அவர்கள் இந்தப் பரிசுத்த சாக்கிரமெந்தைப் பெறுவதற்குத் தங்களை ஜெபத்தினாலும் உபவாசத்தினாலும் ஆயத்தப்படுத்திக்கொள்ள ஏவப்படும்படிக்கும், அவர்கள் ஞானஸ்நானம் பெற விரும்புகிறார்களென்று தாய்தகப்பன்மாராவது, விவேகமுள்ள மற்றவர்களாவது ஒரு வாரத்துக்கு முன்னே அத்தியட்சருக்கு அல்லது அவராலே நியமிக்கப்பட்டவருக்கு அறிவிக்கவேண்டும்.

¶ அவர்கள் ஞானஸ்நானம் பெறத்தக்கவர்களென்று காணப்பட்டால், குறிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமையிலாவது, திருநாளிலாவது, ஜனங்கள் கூடிவந்திருக்க, குருவானவர் நியமிக்கிறபடி காலைஜெபத்திலாவது மாலைஜெபத்திலாவது, இரண்டாம் பாடம் வாசித்தபின்பு, ஞானத்தாய் தகப்பன்மார் அவர்களை ஞானஸ்நானத் தொட்டியண்டையில் அழைத்துக் கொண்டுவந்து ஆயத்தமாய் நிற்கவேண்டும்.

¶ குருவானவர் அவ்விடத்தில் நின்று, இங்கே அழைத்துக்கொண்டுவரப்பட்டவர்களில் எவராகிலும் ஞானஸ்நானம் பெற்றதுண்டா இல்லையா என்று கேட்கவேண்டும்; பெறவில்லை என்றால், குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, எல்லா மனிதரும் பாவத்தில் உற்பவித்துப் பிறந்திருக்கிறதினாலும், மாம்சத்தினால் பிறந்தது மாம்சமாயிருக்கிறதினாலும், மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டாமல் பாவத்தில் நடந்து அநேகம் அக்கிரமங்களைச் செய்துவருகிறதினாலும்; ஒருவன் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் மறுபடியும் பிறவாவிட்டால்

தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கக்கூடாது என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து சொல்லியிருக்கிறதினாலும்; சுபாவமாய் இவர்களிடத்தில் இராத நன்மை இவர்களுக்குக் கிடைக்கும்படி, நீங்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவனாகிய பிதாவை நோக்கி, இவர்கள் ஜலத்தினாலும் பரிசுத்தஆவியினாலும் ஞானஸ்நானம் பெற்று, கிறிஸ்துவின் பரிசுத்த சபையில் சேர்ந்து, அதில் ஜீவனுள்ள அவயவங்களாகும்படி, அவர் தமது மிகுந்த காருணியத்தினால் செய்தருளவேண்டுமென்று விண்ணப்பம்பண்ண உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

¶ பின்பு குருவானவர் சொல்லவேண்டியது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

*( ¶ அப்பொழுது சபையாரெல்லாரும் முழங்கால்படியிட்டிருக்கவேண்டும். )*

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, நோவாவும் அவனுடைய குடும்பமும் ஜலத்தினால் அழியாதபடிக்குத் தேவரீர் மிகுந்த இரக்கமாய் அவர்களைப் பேழையில் தற்காத்து இரட்சித்து, உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேல் புத்திரரைச் சிவந்த சமுத்திரத்தின் நடுவாகச் சேதமின்றி நடத்தி, அதினால் உமது பரிசுத்த ஞானஸ்நானத்தை அடையாளமாகக் காட்டி; உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து யோர்தான் நதியிலே பெற்ற ஞானஸ்நானத்தினால் ஞானப்பிரகாரமாய்ப் பாவத்தைப் போக்கும் ஸ்நானமாக ஜலத்தைப் பிரதிஷ்டை செய்தீரே. தேவரீர் உமது அடியாராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி; இவர்கள் உமது கோபத்துக்கு நீங்கி, கிறிஸ்துவின் சபையாகிய பேழையில் சேர்க்கப்படவும்; விசுவாசத்தில் உறுதியாகி, நல்நம்பிக்கையில் மகிழ்ந்து, அன்பில் வேரூன்றி, இவ்வுலகமாகிய துக்கசாகரத்தின் அலைகளைக் கடந்து, நித்திய ஜீவகரையைச் சேர்ந்து, சதாகாலமும் உம்மோடே அரசாளவும்; பரிசுத்த ஆவியினாலே இவர்களைக் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று, உமது அளவில்லாத இரக்கங்களினிமித்தம், எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

தாழ்ச்சியுள்ள அனைவருக்கும் அநுகூலமாயும், அடைக்கலம் பெற உம்மிடத்தில் வருகிறவர்களுக்குச் சகாயமாயும், விசுவாசிகளுக்கு ஜீவனாயும், மரித்தோருக்கு உயிர்த்தெழுதலாயும் இருக்கிற அழிவில்லாத சர்வவல்லமையுள்ள தேவனே, நீர் கட்டளையிட்ட பரிசுத்த ஞானஸ்நானத்தைப் பெற வந்திருக்கிற இவர்கள் ஆவிக்குரிய மறுஜன்மத்தால் பாவமன்னிப்படையும்படி இவர்களுக்காக உம்மை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறோம். கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் என்று தேவரீர் உம்முடைய பிரியமான குமாரனைக் கொண்டு அருளின திருவாக்கின்படியே இவர்களை ஏற்றுக்கொண்டு; நீர் அருளிச்செய்த பரம ஸ்நானமாகிய நித்திய ஆசீர்வாதத்தை இவர்கள் பெற்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்த் தேவரீர் வாக்குத்தத்தம் செய்திருக்கிற நித்திய ராஜ்யத்தில் சேரும்படி; கேட்கிற எங்களுக்குக் கொடுத்து, தேடுகிற நாங்கள் கண்டடையச்செய்து, தட்டுகிற எங்களுக்கு வாசலைத் திறந்தருளும். **ஆமென்.**



¶ அப்பொழுது ஜனங்கள் எழுந்துநிற்க, குருவானவர் சொல்லவேண்டியது.

பரிசுத்த யோவான் மூன்றாம் அதிகாரம் முதல்வசனமுதல் எழுதிய சுவிசேஷவாக்கியத்தைக் கேளுங்கள்:

யூதருக்குள்ளே அதிகாரியான நிக்கொதேமு என்னப்பட்ட பரிசேயன் ஒருவன் இருந்தான். அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக்கூடுமோ என்றான். இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன். மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும். நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக்குறித்து அதிசயப்படவேண்டாம். காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது; ஆவியினால் பிறந்தவன் எவனோ, அவனும் அப்படியே இருக்கிறான் என்றார்.

¶ பின்பு அவர் சொல்லவேண்டிய புத்திமதியாவது:

பிரியமானவர்களே, இப்பொழுது வாசிக்கக்கேட்ட இந்தச் சுவிசேஷவாக்கியத்தில் சொல்லியிருக்கிறபடி, ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து தெளிவாய்ச் சொல்லி

யிருக்கிறார். இந்தச் சாக்கிரமெந்தைப் பெறக்கூடியபோது அதைப்
பெற்றுக்கொள்வது மிகவும் அவசியமென்று இந்த வசனத்தினாலே அறிந்து
கொள்ளலாம். மேலும் பரிசுத்த மாற்கு எழுதின சுவிசேஷம் கடைசி
அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, நம்முடைய இரட்சகர் பரமண்ட
லத்திற்கு எழுந்தருளினதற்குமுன் தம்முடைய சீஷர்களைப்பார்த்து: நீங்கள்
உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்
கள்; விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படு
வான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்று
கட்டளையிட்டதினாலே, இந்தச் சாக்கிரமெந்தின் மூலமாய் நமக்குப் பலிக்
கும் நன்மை பெரிதென்று விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பரிசுத்த
பேதுருவும் சுவிசேஷத்தை முதல்முதல் பிரசங்கித்தபோது, அநேகர் தங்கள்
இருதயத்தில் குத்தப்பட்டவர்களாகி, அவரையும் மற்ற அப்போஸ்தலரையும்
பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்று கேட்க,—
அவர் மாறுத்தரமாக: நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்
புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த
ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும்
உங்கள் பிள்ளைகளுக்கும், நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும்
தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறதென்று சொன்னதுமல்லாமல்;
இன்னும் அநேக வார்த்தைகளையும் சொல்லி: மாறுபாடுள்ள இந்தச் சந்த
தியை விட்டு விலகி, உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள் என்று புத்தி
சொன்னார். இன்னொரு வாக்கியத்திலும் இந்த அப்போஸ்தலன் சொல்லி
யிருக்கிறபடி, ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல்,
தேவனைப்பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருந்து, இப்
பொழுது நம்மை இயேசுகிறிஸ்துவினுடைய உயிர்த்தெழுதலினாலே இரட்
சிக்கிறது. இப்படியிருக்க, மெய்யாக மனந்திரும்பி விசுவாசத்தினால்
தம்மிடத்திற்கு வருகிற இந்த ஜனங்களை அவர் தயவாய் ஏற்றுக்கொள்
வாரென்றும், இவர்களுக்குப் பாவமன்னிப்பைக் கொடுத்துப் பரிசுத்த
ஆவியை அருளிச்செய்வாரென்றும், இவர்களுக்கு நித்திய ஜீவனாகிய
ஆசிர்வாதத்தைத் தந்து, தம்முடைய நித்திய ராஜ்யத்துக்கு இவர்களைச்
சுதந்தரவாளிகள் ஆக்குவாரென்றும் சந்தேகமின்றி உறுதியாய் விசுவாசி
யுங்கள். தேவ குமாரனாகிய இயேசுகிறிஸ்து அறிவித்திருக்கிறபடி, நம்மு
டைய பரம பிதாவானவர் இவர்கள்மேல் தயவாயிருக்கிறாரென்று நாம்
நிச்சயங்கொண்டிருக்கிறோம்; ஆகையால் விசுவாசத்தோடும் வணக்கத்தோ
டும் அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, பரமபிதாவே, உமது
கிருபையை அறியவும், உம்மை விசுவாசிக்கவும், எங்களை அழைத்தரு
ளினதற்காக உம்மைத் தாழ்மையாய் ஸ்தோத்திரிக்கிறோம். என்றைக்



கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப்
பலப்படுத்தியருளும். இவர்கள் மறுபடியும் பிறந்து, நித்திய இரட்சிப்
புக்குச் சுதந்தரவாளிகளாகும்படி, இவர்களுக்கு உமது பரிசுத்தஆவியைக்
கொடுத்தருளவேண்டுமென்று, இப்பொழுதும் எப்பொழுதும் உம்மோடும்
பரிசுத்த ஆவியோடும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ அப்பொழுது குருவானவர் ஞானஸ்நானம் பெற வந்திருக்கிறவர்களுக்குச்
சொல்லவேண்டியதாவது:

பிரியமானவர்களே, ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று இங்கே வந்
திருக்கிறீர்களே; நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உங்களை ஏற்
றுக்கொண்டு, ஆசீர்வதித்து, பாவங்களிலிருந்து உங்களை விடுதலையாக்கி,
பரலோக ராஜ்யத்தையும் நித்திய ஜீவனையும் உங்களுக்குத் தந்தருள
வேண்டுமென்று சபையார் ஜெபம்பண்ணினதைக் கேட்டிருக்கிறீர்கள்.
நாங்கள் வேண்டிக்கொண்டவைகள் எல்லாவற்றையும் அருளிச்செய்
வோம் என்று நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது திருவச
னத்தில் வாக்குத்தத்தம் செய்திருக்கிறதையும் கேட்டிருக்கிறீர்கள். அவர்,
தாம் ஒப்புக்கொண்டபடி, அந்த வாக்குத்தத்தத்தை நிச்சயமாகவே நிறை
வேற்றுவார். ஆகையால் கிறிஸ்து இந்த வாக்குத்தத்தம் செய்ததின்பேரில்,
நீங்களும் உங்கள் சாட்சிகளாகிய இவர்கள் முன்பாகவும் இந்தச் சபையார்
எல்லாருக்கு முன்பாகவும்: நாங்கள் பிசாசையும் அதின் கிரியைகள்
எல்லாவற்றையும் வெறுத்துவிடுவோம் என்றும், தேவனுடைய பரிசுத்த
வசனத்தை உறுதியாய் விசுவாசிப்போம் என்றும், அவர் கற்பனைகளைப்
பணிவாய்க் கைக்கொள்வோம் என்றும் உண்மையாய் வாக்குத்தத்தம்
செய்யவேண்டும்.

¶ அப்பொழுது ஞானஸ்நானம் பெற வந்திருக்கிற ஒவ்வொருவரிடத்திலும்
குருவானவர் கேட்கவேண்டிய கேள்விகளாவன:

**கேள்வி:** நீ பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும்,
இவ்வுலகத்தின் வீண் ஆடம்பரங்களையும் மகிமையையும், அதைப்பற்றிய
பொருளாசைகள் எல்லாவற்றையும், மாம்ச இச்சைகளையும் பின்பற்றாத
படிக்கும், அவைகளால் நடத்தப்படாதபடிக்கும், அவைகளை வெறுத்து
விடுகிறாயா?

**மறுமொழி:** அவைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுகிறேன்.

**கேள்வி:** வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள
பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்
துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியா

ளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

மறுமொழி: இவைகள் எல்லாவற்றையும் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

கேள்வி: இந்த விசுவாசத்தில் நீ ஞானஸ்நானம் பெற விரும்புகிறாயா?

மறுமொழி: அதையே விரும்புகிறேன்.

கேள்வி: நீ தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் பணிவாய்க் கைக்கொண்டு, உன் வாழ்நாளெல்லாம் அவைகளின்படியே நடந்துகொள்வாயா?

மறுமொழி: தேவ ஒத்தாசையினால் அப்படியே நடந்துகொள்வேன்.

¶ பின்பு குருவானவர் சொல்வது.

இரக்கமுள்ள தேவனே, இவர்களிலுள்ள பழைய ஆதாம் அடக்கம் பண்ணப்படவும், புதிய மனுஷன் இவர்களுக்குள் உயிர்த்தெழும்பவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

இவர்களிலுள்ள மாம்ச இச்சைகளெல்லாம் அழியவும், ஆவிக்குரியவைகளெல்லாம் பிழைத்து வளர்ந்தேறவும் கிருபைசெய்தருளும். ஆமேன்.

பிசாசையும், உலகத்தையும், மாம்சத்தையும் ஜெயித்து வெற்றி சிறக்கும்படி, இவர்களுக்கு வல்லமையையும் பெலனையும் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

துதிக்கப்படத்தக்க ஆண்டவரே, நித்திய ஜீவியாயிருந்து எல்லாவற்றையும் ஆண்டு நடத்துகிற தேவனே, எங்கள் உத்தியோகத்தினாலும் ஊழியத்தினாலும் இவ்விடத்தில் உமக்கு ஒப்புக்கொடுக்கப்படுகிற இவர்கள் பரம குணங்களினால் அலங்கரிக்கப்பட்டு, நித்திய பலனை அடையும்படி, உமது இரக்கத்தினாலே கிருபைசெய்தருளும். ஆமேன்.



நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, எங்களுக்குப் பாவமன்னிப்புண்டாகும்படி, உம்முடைய பிரிய குமாரனாகிய இயேசுகிறிஸ்து தமது அருமையான விலாவிலிருந்து ஜலத்தையும் இரத்தத்தையும் சிந்தி, தம்முடைய சீஷர்களைப் பார்த்து: நீங்கள் புறப்பட்டுப்போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள் என்று கட்டளையிட்டருளினாரே. தேவரீர் உமது சபையின் விண்ணப்பங்களைத் திருவுளத்தில் கொண்டருளி, ஞானப்பிரகாரமாய்ப் பாவம் போக்கும் ஸ்நானமாக இந்த ஜலத்தைப் பிரதிஷ்டைபண்ணி, இதிலே இப்பொழுது ஞானஸ்நானம் பெறுகிற இவர்கள் உம்முடைய கிருபையை நிறைவாய்ப் பெற்று, தெரிந்துகொள்ளப்பட்ட உம்முடைய விசுவாசமுள்ள பிள்ளைகளாகிய சபையில் சேர்ந்தவர்களாய் என்றைக்கும் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் அநுக்கிரகித்தருளும். ஆமேன்.

¶ அப்பொழுது ஞானஸ்நானம் பெறப்போகிற ஒவ்வொருவருடைய வலது கையையும் குருவானவர் பிடித்து, ஞானஸ்நானத் தொட்டியருகே நிற்கச்செய்து, ஞானத்தாய் தகப்பன்மாரிடத்தில் பேரைக் கேட்டு, அவர்களை ஜலத்தில் முழுக்காட்டி அல்லது அவர்கள்மேல் ஜலத்தை வார்த்து, சொல்லவேண்டியதாவது:

__________ பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே உனக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

இவனை (ளை)க் கிறிஸ்துவின் மந்தையாகிய திருச்சபையில் சேர்த்துக்கொண்டு, இவன் (ள்) மேல் *சிலுவை அடையாளத்தை வரைகிறோம். சிலுவையில் அறையுண்ட கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தை இவன் (ள்) இதுமுதல் அறிக்கையிடுவதற்கு வெட்கப்படாமல், அவர் கொடியின்கீழ் பாவத்துக்கும் உலகத்துக்கும் பிசாசுக்கும் விரோதமாக தைரியமாய்ப் போர்செய்து, மரணபரியந்தம் கிறிஸ்துவின் உண்மையுள்ள சேவகனும் (த்தியும்) ஊழியக்காரனு (ரியு) மாய் நிலைத்திருக்கவேண்டுமென்பதற்குக் குறிப்பாக, இப்படிச் சிலுவை அடையாளத்தை வரைந்தோம். ஆமென்.

* இப்பொழுது நெற்றியிலே குருவானவர் சிலுவையின் அடையாளத்தை வரையக்கடவர்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியதாவது:

பிரியமான சகோதரரே, இவர்கள் மறுஜன்மம் அடைந்து, கிறிஸ்துவின் சரீரமாகிய திருச்சபையில் சேர்க்கப்பட்டிருக்கிறபடியினால், இந்த நன்மைகளுக்காகச் சர்வவல்லமையுள்ள தேவனுக்கு நாம் ஸ்தோத்

திரஞ்செலுத்தி, இப்பொழுது உண்டான ஆரம்பத்தின்படி இவர்கள் மீதியாயிருக்கும் வாழ்நாளெல்லாம் நடந்துவர, நாம் ஒருமனப்பட்டு அவரை நோக்கி ஜெபம்பண்ணக்கடவோம்.

*¶ அப்பொழுது எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, சொல்லவேண்டியதாவது:*

**ப**ரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். **ஆமென்.**

**ப**ரமபிதாவே, உமது கிருபையை அறிந்துகொள்ளவும், உம்மை விசுவாசிக்கவும் எங்களை அழைத்தருளினதற்காக, உமக்குத் தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். என்றைக்கும் எங்களில் இந்த அறிவைப் பெருகச்செய்து, இந்த விசுவாசத்தைப் பலப்படுத்தியருளும். இப்பொழுது மறுபடியும் பிறந்து எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு நித்திய இரட்சிப்புக்குச் சுதந்தரவாளிகளான இவர்கள், உமது ஊழியக்காரராய் நிலைத்திருந்து, தேவரீர் வாக்குத்தத்தம் செய்ததை அடையும்படி, உமது பரிசுத்த ஆவியை அருளிச்செய்யவேண்டுமென்று, என்றைக்கும் பரிசுத்த ஆவியோடே ஐக்கியப்பட்டவராய்த் தேவரீருடன் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

*¶ பின்பு எல்லாரும் எழுந்துநிற்க, குருவானவர் முதலாவது ஞானத்தாய் தகப்பன்மாரை நோக்கிச் சொல்லவேண்டிய புத்திமதியாவது:*

**இ**வர்கள் இந்தச் சபைக்கு முன்பாகவும், விசேஷமாய் இவர்களால் தெரிந்துகொள்ளப்பட்ட சாட்சிகளாகிய உங்களுக்கு முன்பாகவும் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிட்டு, தேவனை விசுவாசித்து, அவருக்கு ஊழியஞ்செய்வோம் என்று வாக்குத்தத்தம் பண்ணினபடியினால், இவர்கள் இப்பொழுது செய்திருக்கிற பக்தியுள்ள பிரதிக்கினையும், வாக்குத்தத்தமும், அறிக்கையும், இன்னதென்று இவர்களுக்கு நினைப்பூட்டுகிறது உங்கள் கடமையென்று நினைத்துக்கொள்ளவேண்டும். மேலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும், அவரை அறிகிற அறிவிலும் இவர்கள் வளர்ந்து, இவ்வுல



கத்தில் தேவபக்தியும் நீதியும் தெளிந்தபுத்தியும் உள்ளவர்களாய் நடந்துவரும்படி; தேவனுடைய பரிசுத்த வசனத்தை நன்றாய்க் கற்றறிந்துகொள்வதில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டுமென்று புத்திசொல்லுங்கள்.

*¶ பின்பு ஞானஸ்நானம் பெற்றவர்களை நோக்கி அவர் சொல்லவேண்டியதாவது:*

**இ**ப்பொழுது ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டவர்களே, நீங்கள் இயேசுகிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுக்குப் புத்திரரும் வெளிச்சத்தின் பிள்ளைகளுமானதால், கிறிஸ்துமார்க்க அழைப்புக்குப் பாத்திரராயும், வெளிச்சத்தின் பிள்ளைகளுக்கு ஏற்றவிதமாயும் நடந்துகொள்ளுகிறது உங்கள் கடமையாயிருக்கிறது. நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்து காண்பித்த நல்மாதிரியைப் பின்பற்றி அவருக்கு ஒப்பானவர்களாகிறதும், அவர் நமக்காக மரித்து உயிர்த்தெழுந்ததுபோல, ஞானஸ்நானம் பெற்றிருக்கிற நாம், பாவத்துக்கு மரித்து நீதிக்கு உயிர்த்தெழுந்திருக்கிறதும், நம்முடைய பொல்லாத இச்சைகள் எல்லாவற்றையும் அழித்துச் சன்மார்க்கத்திலும் தேவபக்தியுள்ள நடக்கையிலும் நாளுக்குநாள் தேறுகிறதும், நாம் ஒப்புக்கொண்ட கடமையென்று ஞானஸ்நானம் நமக்குக் காட்டுகிறது. இதை எப்பொழுதும் நினைத்துக்கொண்டு, அப்படியே நடக்கவேண்டும்.

*¶ இப்படி ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரும் பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேரத்தக்கதாக சமயம் வாய்த்தவுடனே, அத்தியட்சரால் திடப்படுத்தலைப் பெறவேண்டும்.*

*¶ குழந்தைப்பருவத்தில் ஞானஸ்நானம் பெறாதவர்கள் தங்களுக்காக உத்தரவு சொல்லத்தக்க வயதாகிறதற்குமுன்பு, ஞானஸ்நானம் பெறக் கொண்டுவரப்பட்டால், தேவாலயத்தில் குழந்தைகளுக்கு வெளியரங்கமாகக் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையையாவது, மரணவஸ்தை உண்டாயிருந்தால் வீட்டிலே பிள்ளைகளுக்குத் தனிமையாய்க் கொடுக்கும் ஞானஸ்நான முறைமையையாவது வாசிக்கலாம். இவ்விரண்டு முறைமைகளில் எதையாவது வாசிக்கும்போது, "இந்தக் குழந்தை" என்கிறதற்குப் பதிலாக இந்தப் பிள்ளை என்றாவது, இவன் இவள் என்றாவது சொல்லவேண்டும்.*

# A CATECHISM.

அத்தியட்சராலே திடப்படுத்தலைப் பெறும்படி வருமுன்

ஒவ்வொருவரும் படிக்கவேண்டிய

## ஞானோபதேச வினாவிடை.

வினா: உன் பேர் என்ன?

விடை: ________

வினா: இந்தப் பேர் உனக்கு இட்டவர் யார்?

விடை: நான் ஞானஸ்நானத்தில் கிறிஸ்துவின் அவயவமும், தேவனுடைய பிள்ளையும், பரலோக ராஜ்யத்திற்குச் சுதந்தரவாளியுமானபொழுது, என் ஞானத்தாய் தகப்பன்மார் இந்தப் பேர் எனக்கு இட்டார்கள்.

வினா: உன் ஞானத்தாய் தகப்பன்மார் அப்பொழுது உனக்காகச் செய்தது என்ன?

விடை: அவர்கள் என் பேராலே மூன்று காரியங்களை வாக்குத்தத்தம் செய்து பிரதிக்கினை பண்ணினார்கள். முதலாவது—நான் பிசாசையும் அதின் கிரியைகள் எல்லாவற்றையும், இந்தப் பொல்லாத லோகத்தின் ஆடம்பரத்தையும் வீண் பெருமையையும், பாவமான மாம்ச இச்சைகள் எல்லாவற்றையும் வெறுத்துவிடுவேன் என்றும். இரண்டாவது—நான் கிறிஸ்துமார்க்கச் சத்தியங்கள் எல்லாவற்றையும் விசுவாசிப்பேன் என்றும். மூன்றாவது—நான் தேவனுடைய பரிசுத்த சித்தத்தையும் கற்பனைகளையும் கைக்கொண்டு, என் வாழ்நாளெல்லாம் அவைகளின்படி நடப்பேன் என்றும் பிரதிக்கினை செய்தார்கள்.

வினா: அவர்கள் உனக்காகச் செய்த வாக்குத்தத்தத்தின்படி நீ விசுவாசிப்பதும் நடப்பதும் உன் கடமையென்று நினைக்கிறதில்லையா?

விடை: அப்படியே நினைக்கிறேன்; தேவனுடைய ஒத்தாசையினால் அப்படியே செய்வேன். நம்முடைய பரமபிதா நம்முடைய இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவைக்கொண்டு இந்த இரட்சணிய நிலைமைக்கு என்னை வரவழைத்ததற்காக அவருக்கு நான் முழு இருதயத்தோடே ஸ்தோத்திரஞ்செலுத்தி, என் ஜீவகாலமெல்லாம் அதிலே நிலைகொண்டிருக்கும்படி தம்முடைய கிருபையை எனக்குத் தந்தருளவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுகிறேன்.



உபதேசிக்கிறவர்:

நீ விசுவாசிக்கிற சத்தியங்களைச் சொல்லு.

மறுமொழி:

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார்; மூன்றாம்நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும்; பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும்; பாவமன்னிப்பும்; சரீரம் உயிர்த்தெழுதலும்; நித்திய ஜீவனும் உண்டென்று, விசுவாசிக்கிறேன். ஆமென்.

வினா: நீ விசுவாசிக்கிற இந்தச் சத்தியங்களினால் பிரதானமாய் அறிந்துகொள்ளுகிறது என்ன?

விடை: முதலாவது—என்னையும் உலகம் அனைத்தையும் படைத்த தேவனாகிய பிதாவை விசுவாசிக்கவேண்டும் என்றும்.

இரண்டாவது—என்னையும் மற்றெல்லா மனிதரையும் மீட்டுக்கொண்ட தேவனாகிய குமாரனை விசுவாசிக்கவேண்டும் என்றும்.

மூன்றாவது—என்னையும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் எல்லாரையும் பரிசுத்தம் செய்கிற தேவனாகிய பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கவேண்டும் என்றும் அறிந்துகொள்ளுகிறேன்.

வினா: தேவனுடைய கற்பனைகளை நீ கைக்கொள்வாய் என்று உன் ஞானத்தாய் தகப்பன்மார் உனக்காக வாக்குத்தத்தம் செய்ததாகச் சொன்னாயே; அந்தக் கற்பனைகள் எத்தனை?

விடை: பத்து.

வினா: அவைகள் எவை?

மறுமொழி:

மோசேயின் இரண்டாம் ஆகமம், இருபதாம் அதிகாரத்தில் தேவன் திருவுளம்பற்றின கற்பனைகளே. அவையாவன: உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.

1. என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம்.

2. மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின்கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்; உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக்குறித்து பிதாக்களுடைய பாவங்களைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். என்னிடத்தில் அன்புகூர்ந்து, என் கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களுக்கோ ஆயிரம் தலைமுறைமட்டும் இரக்கஞ்செய்கிறவராயிருக்கிறேன்.

3. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனைத் தண்டியாமல் விடார்.

4. ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக; ஆறுநாளும் நீ வேலைசெய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக; ஏழாம்நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள்; அதிலே நீயானாலும், உன் குமாரனானாலும், உன் குமாரத்தியானாலும், உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும், உன் மிருகஜீவனானாலும், உன் வாசல்களில் இருக்கிற அந்நியனானாலும், யாதொரு வேலையும் செய்யவேண்டாம். கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி, ஏழாம்நாளிலே ஓய்ந்திருந்தார்; ஆகையால், கர்த்தர் ஏழாம்நாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார்.

5. உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

6. கொலை செய்யாதிருப்பாயாக.

7. விபசாரம் செய்யாதிருப்பாயாக.

8. களவு செய்யாதிருப்பாயாக.

9. பிறனுக்கு விரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக.

10. பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக.

வினா: இந்தக் கற்பனைகளினாலே நீ பிரதானமாய் அறிந்துகொள்ளுகிறது என்ன?

விடை: தேவனுக்கு நான் செய்யவேண்டிய கடமையும், பிறனுக்கு நான் செய்யவேண்டிய கடமையும் ஆகிய இவ்விரண்டையும் அறிந்துகொள்ளுகிறேன்.



வினா: தேவனுக்கு நீ செய்யவேண்டிய கடமை என்ன?

விடை: அவரை விசுவாசித்து, அவருக்குப் பயந்து, என் முழு இருதயத்தோடும், என் முழு மனதோடும், என் முழு ஆத்துமாவோடும், என் முழு பலத்தோடும், அவரிடத்தில் அன்புகூருகிறதும்; அவரை வணங்கி, அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, என் முழு நம்பிக்கையையும் அவரிடத்தில் வைத்து, அவரை நோக்கி வேண்டிக்கொண்டு, அவருடைய பரிசுத்த நாமத்தையும் அவருடைய வசனத்தையும் கனப்படுத்தி, என் ஜீவகாலமெல்லாம் அவருக்கு உண்மையாய் ஊழியஞ்செய்கிறதுமே, நான் தேவனுக்குச் செய்யவேண்டிய கடமை.

வினா: பிறனுக்கு நீ செய்யவேண்டிய கடமை என்ன?

விடை: நான் என்னிடத்தில் அன்புகூருகிறதுபோல் பிறனிடத்தில் அன்புகூர்ந்து, மற்றவர்கள் எனக்கு எவைகளைச் செய்யவேண்டுமென்று இருக்கிறேனோ அவைகளை நான் மற்றவர்களுக்குச் செய்கிறதும்; என் தாய் தந்தையரை நேசித்துக் கனப்படுத்தி ஆதரிக்கிறதும்; சக்கிரவர்த்தினியையும் அவரால் அதிகாரம் பெற்றிருக்கிற யாவரையும் பெருமைப்படுத்தி, அவர்களுக்குக் கீழ்ப்படிகிறதும்; எனக்கு மேற்பட்ட அதிகாரிகளுக்கும், உபாத்திமார்களுக்கும், ஆத்தும மேய்ப்பர்களுக்கும், எஜமான்களுக்கும் அடங்கியிருக்கிறதும்; பெரியோர் எல்லாரும் தாழ்மையும் மரியாதையுமாய் நடக்கிறதும்; வார்த்தையினாலாவது செய்கையினாலாவது, ஒருவனையும் நஷ்டப்படுத்தாதிருக்கிறதும்; நான் நடப்பிக்கிற எல்லாக் காரியங்களிலும் உண்மையும் நீதியுமாயிருக்கிறதும்; வர்மத்தையும் பகையையும் என் மனதில் பேணிவையாதிருக்கிறதும்; என் கைகளைத் திருட்டுக்கும் அற்பக் களவுக்கும், என் நாவைத் தூஷணத்துக்கும் பொய்க்கும் அவதூறுக்கும் விலக்குகிறதும்; என் தேகத்தை மிதத்தோடும் அடக்கத்தோடும் கற்போடும் காக்கிறதும்; பிறர்பொருளை இச்சியாமல், பிழைப்புக்காக வேலை கற்றுக்கொண்டு உண்மையாய் உழைக்கிறதும்; தேவன் என்னை வைக்கச் சித்தமாயிருக்கும் நிலைமையிலே நான் செய்யவேண்டியவைகளைச் செய்கிறதுமே, நான் பிறனுக்குச் செய்யவேண்டிய கடமை.

## உபதேசிக்கிறவர்:

நல்ல பிள்ளையே, தேவனுடைய விசேஷித்த கிருபை இல்லாமல் இவைகளை நிறைவேற்றவும், அவருடைய கற்பனைகளின்படி நடந்து அவருக்கு ஊழியஞ்செய்யவும் உன்னால் கூடாதே; அந்தக் கிருபையைப் பெறும்படி எக்காலத்திலும் கருத்தாய் ஜெபம்பண்ண நீ கற்றுக்கொள்ளவேண்டுவது அவசியம். ஆகையால், கர்த்தருடைய ஜெபம் உனக்குத் தெரியுமா? அதைச் சொல்லு.

## மறுமொழி:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம்

பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

வினா: இந்த ஜெபத்தினாலே நீ தேவனிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறது என்ன?

விடை: எல்லா நன்மைகளையும் கொடுக்கிற நம்முடைய பரம பிதாவும் ஆண்டவருமாகிய தேவனை நாம் தகுந்தபடி வணங்கி, அவருக்குக் கீழ்ப்படிந்து ஊழியஞ்செய்கிறதற்கு, அவர் எனக்கும் மற்ற யாவருக்கும் தமது கிருபையைத் தந்தருளவேண்டுமென்று அவரை வேண்டிக்கொள்ளுகிறேன். அல்லாமலும் நம்முடைய ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் வேண்டிய எல்லாவற்றையும் கொடுக்கவும், நமக்கு இரங்கி நமது பாவங்களை மன்னிக்கவும், ஆத்துமாவுக்கும் சரீரத்துக்கும் நேரிடும் எல்லா மோசங்களினின்றும் தயவாய் நம்மை இரட்சிக்கவும், எல்லாப் பாவத்துக்கும் துன்மார்க்கத்துக்கும் நமது ஆத்தும சத்துருவுக்கும் நித்திய மரணத்துக்கும் நம்மை விலக்கிக்காக்கவும்வேண்டுமென்று தேவனை வேண்டிக்கொள்ளுகிறேன். அவர் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், தமது இரக்கத்தினாலும் தயவினாலும் இப்படிச் செய்வார் என்று நான் நம்பி, அப்படியே ஆகக்கடவது என்று அர்த்தங்கொள்ளுகிற ஆமென் என்றும் சொல்லுகிறேன்.

வினா: கிறிஸ்துவானவர் தமது சபையில் ஏற்படுத்தின சாக்கிரமெந்துக்கள் எத்தனை?

விடை: ஞானஸ்நானமும், கர்த்தருடைய இராப்போசனமும் ஆகிய இவ்விரண்டையுமாத்திரம் ரட்சிப்புக்குப் பொதுப்பட அவசியம் என்று ஏற்படுத்தினார்.

வினா: சாக்கிரமெந்து என்கிற வார்த்தைக்கு அர்த்தம் என்ன?

விடை: நமக்கு அருளிச்செய்யப்படுகிற ஆவிக்குரிய உள்ளான கிருபைக்குக் காணப்படுகிற புறம்பான அடையாளமாகவும், அந்தக் கிருபையைப் பெறுவதற்கு யத்தனமாகவும், அதைப் பெற்றுக்கொள்ளுகிறோம் என்று நமக்கு நிச்சயப்படுத்துகிற அத்தாட்சியாகவும் கிறிஸ்துவானவரே ஏற்படுத்திய நியமம் என்று அர்த்தமாம்.

வினா: சாக்கிரமெந்து எத்தனை பங்குள்ளது?

விடை: காணப்படுகிற புறம்பான அடையாளமும், ஆவிக்குரிய உள்ளான கிருபையும் ஆகிய இரண்டு பங்குள்ளது.



வினா: ஞானஸ்நானத்திலே காணப்படுகிற புறம்பான அடையாளம், அல்லது முறை என்ன?

விடை: பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்திலே ஞானஸ்நானம் பெறுகிற தண்ணீரே.

வினா: ஞானஸ்நானத்திலே ஆவிக்குரிய உள்ளான கிருபை என்ன?

விடை: பாவத்துக்கு இறப்பும், நீதிக்குப் புதுப்பிறப்புமே: எப்படியெனில், சுபாவப்படி பாவத்திலே பிறந்து, கோபாக்கினையின் பிள்ளைகளான நாம் அதினாலே கிருபையின் பிள்ளைகளாகிறோம்.

வினா: ஞானஸ்நானம் பெறவருகிறவர்களிடத்தில் இருக்கவேண்டுவது என்ன?

விடை: அவர்கள் பாவத்தை விட்டு விலகுகிற மனந்திரும்புதலும், இந்தச் சாக்கிரமெந்தில் தேவன் தங்களுக்கு அருளின வாக்குத்தத்தங்களை உறுதியாய் நம்புகிற விசுவாசமுமே.

வினா: குழந்தைகள் சிறு பிராயத்திலே இவைகளை நிறைவேற்றக்கூடாதிருக்க, அவைகளுக்கு ஞானஸ்நானம் கொடுக்கத்தகுமா?

விடை: அவ்விரண்டையும் செய்வோம் என்று குழந்தைகள் தங்கள் பிணையாளிகள் மூலமாய் வாக்குத்தத்தம் செய்கிறதினாலும், தகுந்த வயது அடையும்போது அவைகளை நிறைவேற்றக் கடமையுள்ளவர்களாயிருக்கிறதினாலும், ஞானஸ்நானம் கொடுக்கத்தகும்.

வினா: கர்த்தருடைய இராப்போசனம் என்னும் சாக்கிரமெந்து என்னத்திற்காக ஏற்படுத்தப்பட்டது?

விடை: கிறிஸ்து பலியாக அடைந்த மரணத்தையும், அதினாலே நாம் பெற்றுக்கொள்ளுகிற நன்மைகளையும், நாம் இடைவிடாமல் நினைவுகூருகிறதற்காக ஏற்படுத்தப்பட்டது.

வினா: கர்த்தருடைய இராப்போசனத்திலே புறம்பான பங்கு அல்லது அடையாளம் என்ன?

விடை: நாம் வாங்கிக்கொள்ளும்படி கர்த்தர் கட்டளையிட்ட அப்பமும் திராட்சரசமுமே.

வினா: அதிலே குறிக்கப்படுகிற காரியமாகிய உள்ளான பங்கு என்ன?

விடை: கர்த்தருடைய இராப்போசனத்திலே மெய்யாகவும் நிச்சயமாகவும் விசுவாசிகள் வாங்கி உட்கொள்ளுகிற கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமே.

வினா: இவைகளாலே நாம் பெற்றுக்கொள்ளும் நன்மைகள் என்ன?

விடை: அப்பத்தினாலும் திராட்சரசத்தினாலும் நம்முடைய சரீரம் பெலனடைந்து தேற்றப்படுகிறதுபோல, கிறிஸ்துவின் சரீரத்தினாலும் இரத்தத்தினாலும் நம்முடைய ஆத்துமா பெலனடைந்து தேற்றப்படுகிறதே.

வினா: கர்த்தருடைய இராப்போசனத்துக்குச் சேருகிறவர்கள் என்ன செய்யவேண்டும்?

விடை: அவர்கள் முன்செய்த பாவங்களுக்காக உண்மையாய் மனஸ்தாபப்பட்டு, புது ஜீவனுள்ளவர்களாய் நடக்க உறுதியாய்த் தீர்மானம் பண்ணுகிறோமா என்றும்; தேவன் கிறிஸ்துவின் மூலமாய் அருளிய இரக்கத்தில் உயிருள்ள விசுவாசம் வைத்து, அவருடைய மரணத்தை நன்றியறிதலோடே நினைவுகூருகிறோமா என்றும்; எல்லா மனிதரிடத்திலும் அன்பாயிருக்கிறோமா என்றும், தங்களைச் சோதித்து அறியவேண்டும்.

¶ ஞாயிற்றுக்கிழமைகளிலும் திருநாட்களிலும் மாலைஜெப ஒழுங்கில் இரண்டாம் பாடம் வாசித்தபின்பு, அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் அனுப்பப்படும் பிள்ளைகளில், தாம் எத்தனைபேரைத் தெரிந்துகொள்ளுகிறாரோ அத்தனைபேருக்கும் இந்த ஞானோபதேச வினாவிடையில் ஒரு பங்கைப் போதித்து அதிலே அவர்களைச் சோதிக்கவேண்டும்.

¶ தாய்தகப்பன்மாரும், எஜமான் எஜமாட்டிகளும் தங்கள் பிள்ளைகள் வேலைக்காரர் முதலானவர்களில் எவர்கள் ஞானோபதேச வினாவிடையைப் படிக்கவில்லையோ, அவர்கள் குறித்த வேளையில் தேவாலயத்துக்கு வரும்படிக்கும், ஞானோபதேசத்தில் அடங்கியிருக்கிற யாவையும் அவர்கள் கற்றறியுமட்டும் குருவானவர் சொன்னபடி பணிவாய்க் கேட்டு நடக்கவும் செய்யவேண்டும்.

¶ பிள்ளைகள் தகுந்த வயதடைந்து சுயபாஷையில் விசுவாசப்பிரமாணம், கர்த்தருடைய ஜெபம், பத்துக்கற்பனை இவைகளைப் படித்து, இந்த ஞானோபதேச வினாவிடையிலுள்ள கேள்விகளுக்கு உத்தரவு சொல்லத் தெரிந்தவுடனே, அவர்களை அத்தியட்சரிடத்தில் அழைத்துவரவேண்டும். அவர்கள் திடப்படுத்தலைப் பெறும்பொழுது ஒவ்வொருவருக்கும் ஞானத்தகப்பனாவது, ஞானத்தாயாவது அதற்குச் சாட்சியாயிருக்கவேண்டும்.

¶ திடப்படுத்தலைப் பெறும்படிக்குப் பிள்ளைகளைத் தம்மிடத்தில் அழைத்துவரவேண்டுமென்று அத்தியட்சர் பிரசித்தஞ்செய்யும்போது, அந்தந்தச் சேகரத்துக் குருவானவர் தமது சேகரத்தில் திடப்படுத்தப்பட எவர்களைத் தகுதியானவர்களென்று நிதானிக்கிறாரோ அவர்களுடைய பெயரைக் காகிதத்தில் எழுதிக் கொண்டுவரவேண்டும், அல்லது அதில் கையொப்பம் வைத்து அனுப்பவேண்டும். அத்தியட்சர் அவர்களை ஒப்புக்கொண்டால் பின்வரும் முறைமையின்படி அவர்களைத் திடப்படுத்தவேண்டும்.

THE ORDER OF

# CONFIRMATION.

ஞானஸ்நானம் பெற்றுப் பகுத்தறியும்

வயதுள்ளவர்களுடைய

## சிரசின்மேல் கைகளை வைத்து

# திடப்படுத்தல் செய்யும் முறைமை.

¶ திடப்படுத்தலைப் பெறுகிற யாவரும் குறிக்கப்பட்டநாளில் அத்தியட்சருக்கு முன்பாக ஒழுங்காய் வந்துநிற்க, அவராவது, அவரால் நியமிக்கப்பட்ட மற்றொரு குருவாவது பின்வருகிற முகவுரையை வாசிக்கவேண்டும்.

திடப்படுத்தலைப் பெறுகிறவர்கள் அதினாலே பக்திவிருத்தி அடையும்படி, விசுவாசப்பிரமாணத்தையும் கர்த்தருடைய ஜெபத்தையும் பத்துக்கற்பனைகளையும் பாடமாக்கி, ஞானோபதேச வினாவிடையில் அடங்கியிருக்கிற கேள்விகளுக்கு உத்தரவுசொல்லுகிறவர்களே அல்லாமல், மற்றவர்கள் திடப்படுத்தலைப் பெறக்கூடாதென்று திருச்சபை கட்டளையிட்டிருக்கிறது. இந்தக் கட்டளையை அநுசரிக்கிறது மிகவும் நல்லது. பிள்ளைகள் பகுத்தறியும் வயதுள்ளவர்களாகும்போது, தாங்கள் ஞானஸ்நானம் பெற்ற காலத்தில் தங்களுக்காக ஞானத்தாய் தகப்பன்மார் செய்த வாக்குத்தத்தங்கள் இவைகளென்று அறிந்து, அவைகளைத் தாங்களே திருச்சபைக்கு முன்பாக வெளியரங்கமாய்ச் சொந்த வாக்கினாலும் சம்மதியினாலும் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகிறதுமன்றி; ஒப்புக்கொண்டோம் என்று தாங்கள் அறிக்கையிடுகிற கடமைகளை எப்பொழுதும் தேவகிருபையினால் உண்மையாய்க் கைக்கொள்ளப் பிரயாசப்படுவோம் என்றும், வாக்குக்கொடுக்கிறார்கள். இதனாலே இந்த முறைமையின் பிரயோஜனத்தை அறியலாம்.

¶ அப்பொழுது அத்தியட்சர் சொல்வதாவது:

நீங்கள் ஞானஸ்நானம் பெற்றகாலத்தில், உங்கள் ஞானத்தாய் தகப்பன்மார் உங்கள் பேராலே செய்த பக்தியுள்ள வாக்குத்தத்தத்தையும் பிரதிக்கினையையும் இப்பொழுது தேவனுக்கு முன்பாகவும் இந்தச் சபைக்கு

முன்பாகவும் புதுப்பித்து, அவர்கள் உங்களுக்காக ஏற்பட்டு செய்த வாக்குத்தத்தங்கள் எல்லாவற்றையும் அங்கிகரித்து, அவைகளை நாங்கள் விசுவாசிக்கவும் நிறைவேற்றவும் கடமையுள்ளவர்களாயிருக்கிறோம் என்று நீங்களே சுதாவாய் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்தச் சம்மதிக்கிறீர்களா?

*¶ ஒவ்வொருவரும் சத்தமாய்ச் சொல்லவேண்டியதாவது:*

*சம்மதிக்கிறேன்.*

### அத்தியட்சர் சொல்வது.

*நமக்குச் சகாயம் கர்த்தருடைய நாமத்திலுள்ளது;*
**மறுமொழி:** *வானத்தையும் பூமியையும் உண்டாக்கினவர் அவரே.*
**அத்தியட்சர்:** *கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம்;*
**மறுமொழி:** *சதாகாலங்களிலும் ஸ்தோத்திரம் உண்டாவதாக.*
**அத்தியட்சர்:** கர்த்தாவே, எங்கள் ஜெபங்களைக் கேட்டருளும்;
**மறுமொழி:** எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

### அத்தியட்சர் சொல்வது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

*நித்திய ஜீவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனே, ஜலத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் உமது அடியாராகிய இவர்களை மறுபடியும் ஜெனிப்பித்து, இவர்களுக்கு எல்லாப் பாவங்களையும் மன்னிக்கக் கிருபைகூர்ந்த கர்த்தாவே, தேற்றரவாளனாகிய பரிசுத்த ஆவியினால் இவர்களைப் பலப்படுத்தி, உமது கிருபையின் பற்பல வரப்பிரசாதங்களை இவர்களுக்குள்ளே தினந்தோறும் பெருகச்செய்யும். ஞானத்தையும் விவேகத்தையும் அருளும் ஆவியையும், ஆலோசனையையும் ஆத்தும பெலனையும் அருளும் ஆவியையும், அறிவையும் மெய்த்தேவபக்தியையும் அருளும் ஆவியையும், தேவரீருக்குப் பயப்படுகிற பரிசுத்த பயத்தை அருளும் ஆவியையும், இப்பொழுதும் எப்பொழுதும் இவர்களுக்கு நிறைவாய்க் கொடுத்தருளவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம்.* **ஆமென்.**

*¶ அப்பொழுது அவர்கள் எல்லாரும் அத்தியட்சருக்கு முன்பாக ஒழுங்காய் முழங்கால்படியிட்டிருக்க, அவர் ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் தமது கைகளை வைத்துச் சொல்லவேண்டியதாவது:*



*கர்த்தாவே, உம்முடைய பிள்ளை [அல்லது உம்முடைய அடியான் (ள்)] ஆகிய இவன் (ள்) என்றைக்கும் உம்முடையவனா (ளா) யிருக்கவும், உமது நித்திய ராஜ்யத்தில் சேருமளவும் நாள்தோறும் மேன்மேலும் உம்முடைய பரிசுத்த ஆவியை அடைந்து தேறவும், உமது பரமகிருபையால் இவனை (ளை) க் காத்தருளும். ஆமென்.*

*¶ பின்பு, அத்தியட்சர் சொல்வதாவது:*

*கர்த்தர் உங்களோடிருப்பாராக.*

**மறுமொழி:** *அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.*

*¶ எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சர் பின்னும் சொல்வதாவது:*

ஜெபம்பண்ணக்கடவோம்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

இந்தச் சுருக்க ஜெபத்தையும் சொல்லவேண்டும்.

*உமது திவ்விய மகத்துவத்துக்கு ஏற்றிருக்கிற நற்காரியங்களை விரும்பவும் செய்யவும் எங்களுக்குக் கிருபை அளிக்கிற சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, உமது அடியாராகிய இவர்கள்மேல் தேவரீர் கிருபையும் பூரண அன்பும் வைத்திருக்கிறதை இவர்களுக்கு நிச்சயப்படுத்தும் அடையாளமாக, உம்முடைய பரிசுத்த அப்போஸ்தலர் செய்துவந்தபடி, நாங்கள் இப்பொழுது கைகளை வைத்துத் திடப்படுத்தின இவர்களுக்காக உம்மை நோக்கித் தாழ்மையாய் விண்ணப்பம் செய்கிறோம். பிதாவே, அன்பான உமது திருக்கரம் இவர்கள்மேல் எப்பொழுதும் அமர்ந்திருப்பதாக. உமது பரிசுத்தஆவி எப்பொழுதும் இவர்களோடே இருப்பாராக. இவர்கள் கடைசியில் நித்திய ஜீவனை அடையத்தக்கதாக உமது திருவசனத்தை அறிந்து கைக்கொள்ளும்படி இவர்களை நடத்துவீராக; உம்மோடும் பரிசுத்தஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.* **ஆமென்.**

சர்வவல்லமையுள்ள ஆண்டவரே, நித்திய தேவனே, நாங்கள் சரீரத்தின்படியும் ஆத்துமத்தின்படியும் உமது மிகுந்த வல்லமையினால் இப்பொழுதும் எப்பொழுதும் காக்கப்படும்படி, உமது நியாயப்பிரமாணங்களின் வழியிலே நடந்து, உமது கற்பனைகளுக்கேற்ற கிரியைகளைச் செய்துவர, எங்கள் இருதயத்தையும் சரீரத்தையும் பரிசுத்தப்படுத்தி ஆண்டு நடத்த வேண்டுமென்று, எங்கள் கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ *பின்பு அத்தியட்சர் அவர்களுக்கு ஆசீர்வாதமாகச் சொல்வதாவது:*

பிதா குமாரன் பரிசுத்த ஆவியாகிய சர்வவல்லமையுள்ள தேவனுடைய ஆசீர்வாதம் உங்கள்மேல் தங்கி, என்றென்றைக்கும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. **ஆமேன்.**

¶ *திடப்படுத்தலைப் பெற்றிருக்கிறவர்களையும், அதைப் பெறுவதற்கு ஆசையாயும் ஆயத்தமாயும் இருக்கிறவர்களையும் அல்லாமல், மற்றவர்களைப் பரிசுத்த நற்கருணைப்பந்தியில் சேர்க்கக்கூடாது.*

THE FORM OF

# SOLEMNIZATION OF MATRIMONY.

# விவாகம் நடத்தும் முறைமை.

¶ *யாராவது விவாகம் செய்யப்போகிறபோது, தேவாலயத்திலே காலை ஜெபம் நடக்கும்போதாவது, (காலை ஜெபம் இராவிட்டால்) மாலை ஜெபம் நடக்கும்போதாவது, இரண்டாம் பாடம் வாசித்தவுடனே, குருவானவர் வழக்கத்தின்படி மூன்று ஞாயிற்றுக்கிழமைகளில் கூறி அறிவிக்கவேண்டியதாவது:*

________ இன்ன ஊரிலிருக்கும் ________ இன்னானும் ________ இன்ன ஊரிலிருக்கும் ________ இன்னாளும் விவாகம் செய்துகொள்ளப்போகிறார்கள் என்று அறிவிக்கிறேன். இவ்விருவரையும் பரிசுத்த விவாகத்தில் சேர்க்கக்கூடாத காரணமாவது நியாயமான தடையாவது உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், அதைத் தெரியப்படுத்தவேண்டும்; இது முதலாம் (இரண்டாம், மூன்றாம்) அறிக்கை.

¶ *விவாகம் செய்துகொள்ளப்போகிறவர்கள் வெவ்வேறு சேகரத்தில் வாசம் பண்ணுகிறவர்களாயிருந்தால், இரண்டு சேகரங்களிலும் அதை அறிவிக்க வேண்டும். மூன்றுதரம் அறிக்கையாயிற்று என்று ஒரு சேகரத்துக் குருவானவர் அத்தாட்சி எழுதிக்கொடாவிட்டால், மற்றச் சேகரத்துக் குருவானவர் விவாகத்தை நடத்தக்கூடாது.*

¶ *விவாகத்தை நடத்த நியமித்த நாளிலும் நேரத்திலும் விவாகம் செய்துகொள்ளப்போகிறவர்கள் இனத்தாரோடும் சிநேகிதரோடுங்கூடத் தேவாலயத்தின் நடுவில் வந்து, வலதுபக்கத்தில் புருஷனும் இடதுபக்கத்தில் ஸ்திரீயும் கூடிநிற்க, குருவானவர் சொல்லவேண்டியதாவது:*

பிரியமானவர்களே, இந்தப் புருஷனையும் இந்த ஸ்திரீயையும் தேவசமுகத்திலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் பரிசுத்த விவாக நிலைமையில் சேர்க்கும்படி, இவ்விடத்தில் கூடிவந்திருக்கிறோம். விவாகமானது மேன்மையுள்ள நிலைமையாயிருக்கிறது. அது மனுஷன் பாவம்செய்யாதிருந்தகாலத்தில் தேவனால் நியமிக்கப்பட்டதாயும், கிறிஸ்துவுக்கும் அவர்

திருச்சபைக்குமுள்ள ஞான ஐக்கியத்தைக் காட்டுகிறதாயும் இருக்கிறது; கிறிஸ்துநாதர் கலிலேயா நாட்டிலுள்ள கானா ஊரில் நடந்த கலியாணத்துக்குப் போயிருந்து, முதலாம் அற்புதத்தைச் செய்து, இந்தப் பரிசுத்த நிலைமையை மேன்மைப்படுத்திச் சிறப்பித்தார். அப்போஸ்தலனாகிய பவுலும், இது எல்லாராலும் கனமாக எண்ணப்படத்தக்கதென்று புகழ்ந்திருக்கிறார். ஆகையால் இதை அற்பமாய் எண்ணி, யோசனையில்லாமல், புத்தியில்லாத மிருகங்களைப்போல, தேக இச்சைகளை நிறைவேற்றவேண்டுமென்று விவாகம்செய்யாமல்; விவாகம் நியமிக்கப்பட்ட முகாந்தரங்களை எண்ணி, பயபக்தியோடும் விவேகத்தோடும் தகுந்த யோசனையோடும் தெளிந்த புத்தியோடும் தேவனுக்கு அஞ்சி விவாகம் செய்யவேண்டும். அந்த முகாந்தரங்களாவன:

முதலாவது, கர்த்தருடைய பரிசுத்த நாமத்துக்கு ஸ்தோத்திரமுண்டாக பிள்ளைகளைப் பெற்று, அவருக்கேற்ற பயபக்தியில் வளர்க்க, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இரண்டாவது, விரக்தராயிருக்க வரம் பெறாதவர்கள் வேசித்தனத்துக்கு விலகி, பாவத்துக்குத் தப்பிக்கொள்ளும்படி கலியாணஞ்செய்து, கிறிஸ்துவின் சரீரத்தில் அசுசிப்படாத அவயவங்களாய்த் தங்களைக் காத்துக்கொள்ள, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

மூன்றாவது, சுகத்திலும் துக்கத்திலும் ஸ்திரீ புருஷர் ஒருவரால் ஒருவர் பெறவேண்டிய சிநேகத்தையும் சகாயத்தையும் ஆறுதலையும் அடைய, விவாகம் ஏற்படுத்தப்பட்டது.

இந்தப் பரிசுத்த நிலைமையிலே சேர்க்கப்படும்படி, இவ்விரண்டுபேரும் இப்பொழுது வந்திருக்கிறார்கள்; ஆகையால் இவர்களை ஒருவரோடொருவர் ஒழுங்கின்படி சேர்க்கக்கூடாத நியாயமான முகாந்தரத்தை யாரானாலும் சொல்லக்கூடுமானால், இப்பொழுதே அதைச் சொல்லக்கடவன்; சொல்லாவிட்டால் இனி ஒருக்காலும் சொல்லாதிருக்கக்கடவன்.

¶ பெண்ணையும் மாப்பிள்ளையையும் பார்த்து அவர் சொல்வதாவது:

தேவவசனத்துக்கு ஏலாத வகையாய்ச் சேர்க்கப்பட்டவர்கள் தேவனால் சேர்க்கப்பட்டவர்கள் அல்லவென்றும், அவர்கள் செய்த விவாகம் விவாகம் அல்லவென்றும், நீங்கள் அறிந்துகொள்ளுங்கள். ஆகையால் எல்லா இருதயங்களின் இரகசியங்களும் வெளிப்படும் பயங்கரமான நியாயத்தீர்ப்பு நாளிலே நீங்கள் இருவரும் உத்தரவாதம் செய்யவேண்டுவதால், நீங்கள் ஒழுங்கின்படி விவாகத்தினாலே சேர்க்கப்படக்கூடாத முகாந்தரம் உண்டென்று உங்களில் யாராகிலும் அறிந்திருந்தால், அதை இப்பொழுதே அறிவிக்கவேண்டுமென்று உங்கள் இருவருக்கும் கட்டளையிடுகிறேன்.



¶ விவாகம் செய்கிற நாளிலே வேதப் பிரமாணத்தின்படியாவது, தேசப் பிரமாணத்தின்படியாவது அவர்களைச் சேர்க்கக்கூடாத தடை உண்டென்று யாராகிலும் சொன்னால், அதினால் கலியாணம் தடைபட்டு கலியாணக்காரருக்கு உண்டாகும் நஷ்டத்துக்கு, அவனும் அவன் ஏற்படுத்தும் தகுந்த பிணையாளிகளும் உத்தரவாதம் செய்வோம் என்று உடன்படிக்கை செய்யவும், அல்லது அவன் சொல்லுகிற தடையை மெய்ப்பிக்குமளவும் அதற்குச் சரியான இடு வைக்கவும் வேண்டும். அப்படிச் செய்தால், நிஜம் இன்னதென்று விசாரித்து அறியுமளவும் கலியாணத்தை நிறுத்தி வைக்கவேண்டும்.

¶ தடை உண்டென்று ஒருவரும் சொல்லாவிட்டால், குருவானவர் மாப்பிள்ளையைப்பார்த்துச் சொல்லவேண்டியது.

________ நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாகநிலைமையில் ஒருமித்து வாழ, இந்த ஸ்திரீயை உனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, சுகத்திலும் துக்கத்திலும் இவளை நேசித்து ஆதரித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவளுக்கே புருஷனாயிருப்பாயா?

¶ அதற்கு மாப்பிள்ளை சொல்வதாவது:

இருப்பேன்.

¶ அப்பொழுது குருவானவர் பெண்ணைப்பார்த்துச் சொல்லவேண்டியது.

________ நீ தேவ நியமத்தின்படி பரிசுத்த விவாகநிலைமையில் ஒருமித்து வாழ, இந்த மனுஷனை உனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, இவனுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடைசெய்து, சுகத்திலும் துக்கத்திலும் இவனை நேசித்துக் கனப்படுத்திக் காப்பாற்றி, நீங்கள் இருவரும் உயிரோடிருக்குமளவும், பிறர்முகம் பாராமல் இவனுக்கே மனைவியாயிருப்பாயா?

¶ அதற்கு பெண் சொல்வதாவது:

இருப்பேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது.

விவாகஞ்செய்ய இந்த ஸ்திரீயை இந்தப் புருஷனுக்குக் கொடுக்கிறது யார்?

¶ அப்பொழுது அவர்கள் ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுக்கிறதாவது:

குருவானவர் ஸ்திரீயினுடைய தகப்பன் கையினாலாவது, அவள் இனத்தாரில் ஒருவன் கையினாலாவது, அவளை ஏற்றுக்கொண்டு, புருஷன் தன்

*னுடைய வலதுகையால் அவளுடைய வலதுகையைப் பிடிக்கச்செய்து, தாம் சொல்லுகிறபிரகாரம் சொல்லவேண்டியதாவது:*

__________ ஆகிய நான் __________ ஆகிய உன்னை இன்றுமுதல் எனக்கு விவாக மனைவியாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும், உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் வாக்குக்கொடுக்கிறேன்.

*¶ அப்பொழுது, பிடித்த கையை விடவேண்டும். பின்பு ஸ்திரீயானவள் தன் வலதுகையினால் புருஷனுடைய வலதுகையைப் பிடித்து குருவானவர் சொல்லுகிறபிரகாரமாய்ச் சொல்லவேண்டியதாவது:*

__________ ஆகிய நான் __________ ஆகிய உன்னை இன்றுமுதல் எனக்கு விவாக புருஷனாக ஏற்றுக்கொண்டு, தேவனுடைய பரிசுத்த நியமத்தின்படி, நன்மையிலும் தீமையிலும், வாழ்விலும் தாழ்விலும், சுகத்திலும் துக்கத்திலும், மரணம் நம்மைப் பிரிக்குமளவும், உன்னை நேசிக்கவும் ஆதரிக்கவும் உனக்குக் கீழ்ப்படியவும் வாக்குக்கொடுக்கிறேன்.

*¶ அவர்கள் மறுபடியும் பிடித்த கையை விட்டபின்பு, புருஷன் குருவானவருக்கும் தேவாலய ஊழியக்காரருக்கும் வழக்கத்தின்படி செலுத்தவேண்டிய காணிக்கையோடே ஸ்திரீக்குத் தரிக்கும் மோதிரத்தை அல்லது மங்கிலியத்தைப் புஸ்தகத்தின்மேல் வைக்கவேண்டும். குருவானவர் அதை எடுத்து, ஸ்திரீயினுடைய இடதுகையின் நான்காம் விரலில் மோதிரத்தை அல்லது கழுத்தில் மங்கிலியத்தைத் தரிக்கும்படி புருஷனிடத்தில் கொடுக்கவேண்டும். புருஷன் தரித்தபின்பு, அதைப் பிடித்துக்கொண்டு, குருவானவர் சொல்லுகிறபிரகாரம் சொல்லவேண்டியதாவது:*

இந்த மோதிரத்தினாலே (மங்கிலியத்தினாலே) நான் உன்னை விவாகம் செய்து, என் சரீரத்தினாலே உன்னை மேன்மைப்படுத்தி, எனக்கு உண்டான லோக ஆஸ்திகளையெல்லாம் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கிறேன்; பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

*¶ பின்பு புருஷன் ஸ்திரீயினுடைய நான்காம் விரலிலே மோதிரத்தை (அல்லது கழுத்திலே மங்கிலியத்தை) தரித்தபின்பு, இருவரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் சொல்வதாவது:*

ஜெபம்பண்ணக்கடவோம்.

மனுகுலம் அனைத்தையும் படைத்துக் காப்பாற்றுகிற அநாதி தேவனே, ஆவிக்குரிய எல்லா நன்மைகளையும் ஈகிற கருணாகரனே, நித்திய ஜீவனுக்குக் காரணராகிய கடவுளே, ஈசாக்கும் ரெபெக்காளும் உண்மையாய்



ஒருமித்து வாழ்ந்ததுபோல, உமது நாமத்தினால் நாங்கள் ஆசீர்வதிக்கிற உமது அடியாராகிய இந்தப் புருஷனும் இந்த ஸ்திரீயும் இந்த மோதிரத்தை (மங்கிலியத்தை) அடையாளமாகவும் அத்தாட்சியாகவும், புருஷன் தரிக்க ஸ்திரீ தரித்துக்கொண்டதினாலே, தங்களுக்குள்ளே செய்த உடன்படிக்கையை உறுதியாய்க் கைக்கொண்டு நிறைவேற்றி, எப்பொழுதும் பூரண அன்பும் சமாதானமும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழ்ந்து, உமது கற்பனைகளின்படி நடக்க, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய், இவர்கள்மேல் உமது ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளும். ஆமேன்.

*¶ அப்பொழுது குருவானவர் அவர்கள் வலதுகைகளைச் சேர்த்துச் சொல்வதாவது:*

தேவனால் சேர்க்கப்பட்டவர்களை மனுஷன் பிரிக்காதிருக்கக்கடவன்.

*¶ பின்பு குருவானவர் ஜனங்களைப்பார்த்துச் சொல்லவேண்டியதாவது:*

__________ இன்னானும் __________ இன்னாளும் பரிசுத்த விவாக நிலைமையில் ஒருமித்து வாழச் சம்மதித்து, தேவசந்நிதியிலும் இந்தச் சபைக்கு முன்பாகவும் அதை அறிக்கையிட்டு, ஒருவருக்கொருவர் வாக்குக்கொடுத்து, உறுதிக்கு அடையாளமாக மோதிரத்தை (மங்கிலியத்தை)த் தரித்து, கைப்பிடித்து, தெரியப்படுத்தினபடியினாலே, இவர்கள் புருஷனும் மனைவியுமாயிருக்கிறார்களென்று, பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே அறிவிக்கிறேன். ஆமென்.

*¶ பின்னும் குருவானவர் சொல்லவேண்டிய ஆசீர்வாதமாவது:*

தேவனாகிய பிதா, தேவனாகிய குமாரன், தேவனாகிய பரிசுத்தஆவி, உங்களை ஆசீர்வதித்துக் காத்து ஆதரிக்கக்கடவர். கர்த்தர் கிருபைகூர்ந்து உங்களை இரக்கமாய்க் கண்ணோக்கக்கடவர். நீங்கள் மறுமையிலே நித்திய ஜீவனை அடையத்தக்கதாக இம்மையிலே ஒருவருக்கொருவர் ஆதரவாய் வாழும்படி, கர்த்தர் உங்களைச் சகல ஆசீர்வாதத்தினாலும் கிருபையினாலும் நிரப்பக்கடவர். ஆமேன்.

*¶ அப்பொழுது குருவானவரும் மற்றக் குருக்கள்மாரும் கர்த்தருடைய மேஜையருகே சேர்ந்து, பின்வருகிற சங்கீதத்தைச் சொல்ல, அல்லது பாடவேண்டும்.*

*Beati omnes.* 128. சங்கீதம்.

கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ: அவன் பாக்கியவான்.

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்: உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்.

உன் மனைவி உன் வீட்டோரங்களில் கனிதரும் திராட்சக்கொடியைப் போல் இருப்பாள்: உன் பிள்ளைகள் உன் பந்தியைச் சுற்றிலும் ஒலிவமரக் கன்றுகளைப்போல் இருப்பார்கள்.

இதோ, கர்த்தருக்குப் பயப்படுகிற மனுஷன்: இவ்விதமாய் ஆசீர்வதிக்கப்படுவான்.

கர்த்தர் சீயோனிலிருந்து உன்னை ஆசீர்வதிப்பார்: நீ ஜீவனுள்ள நாளெல்லாம் எருசலேமின் வாழ்வைக் காண்பாய்.

நீ உன் பிள்ளைகளின் பிள்ளைகளையும்: இஸ்ரவேலுக்கு உண்டாகும் சமாதானத்தையும் காண்பாய்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அல்லது இந்தச் சங்கீதத்தைச் சொல்ல ௲.

*Deus misereatur.* 67. சங்கீதம்.

தேவனே, பூமியில் உம்முடைய வழியும்: எல்லா ஜாதிகளுக்குள்ளும் உம்முடைய இரட்சணியமும் விளங்கும்படியாய்,

தேவரீர் எங்களுக்கு இரங்கி, எங்களை ஆசீர்வதித்து: உம்முடைய முகத்தை எங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணும்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

தேவரீர் ஜனங்களை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜாதிகளை நடத்துவீர்: ஆதலால் ஜாதிகள் சந்தோஷித்து, கெம்பீரத்தோடே மகிழக்கடவர்கள்.

தேவனே, ஜனங்கள் உம்மைத் துதிப்பார்களாக: சகல ஜனங்களும் உம்மைத் துதிப்பார்களாக.

பூமி தன் பலனைத் தரும்: தேவனாகிய எங்கள் தேவனே எங்களை ஆசீர்வதிப்பார்.

தேவன் எங்களை ஆசீர்வதிப்பார்: பூமியின் எல்லைகளெல்லாம் அவருக்குப் பயந்திருக்கும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ சங்கீதம் முடிந்தபின்பு, புருஷனும் ஸ்திரீயும் கர்த்தருடைய மேஜைக்கு முன்பாக முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் மேஜையருகே நின்று, அவர்கள் முகமாய்த் திரும்பிச் சொல்லவேண்டியதாவது:



கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

மறுமொழி: கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

குரு: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, உமது அடியானும் உமது அடியாளுமாகிய இவர்களை இரட்சியும்.

மறுமொழி: இவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.

குரு: ஆண்டவரே, உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இவர்களுக்குச் சகாயத்தை அனுப்பும்.

மறுமொழி: இவர்களை என்றைக்கும் காப்பாற்றியருளும்.

குரு: இவர்களுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: சத்துருவின் முகத்துக்கு இவர்களை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு.

ஆபிரகாமின் தேவனே, ஈசாக்கின் தேவனே, யாக்கோபின் தேவனே, உமது அடியாராகிய இவர்களை ஆசீர்வதித்து, இவர்கள் உமது பரிசுத்த வசனத்தினால் கற்றுக்கொள்ளும் பிரயோஜனமான காரியங்கள் எவைகளோ, அவைகளின்படி உண்மையாய் நடக்க, நித்திய ஜீவவிதையை இவர்கள் இருதயத்திலே விதைத்தருளும். ஆண்டவரே, பரலோகத்திலிருந்து இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கி ஆசீர்வதியும். ஆபிரகாமுக்கும் சாராளுக்கும் மிகுந்த சந்தோஷம் உண்டாக, தேவரீர் உமது ஆசீர்வாதத்தை அருளினதுபோல; உமது அடியாராகிய இவர்கள், உமது சித்தத்திற்கு அடங்கி நடந்து, எப்பொழுதும் தேவரீராலே சேதமின்றிக் காக்கப்பட்டு, ஜீவனுள்ளளவும் உம்மில் அன்புகூருகிறவர்களாய் நிலைத்திருக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது ஆசீர்வாதத்தை இவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும். ஆமென்.

¶ ஸ்திரீயானவள் பிள்ளைபெறும் பருவத்தைக் கடந்தவளாயிருந்தால், பின்வரும் ஜெபத்தைச் சொல்லவேண்டியதில்லை.

பரமபிதாவே, இரக்கமுள்ள கர்த்தாவே, மனுகுலம் விருத்தியாகிறது தேவரீர் அளிக்கும் வரமாயிருக்கிறது. இவர்கள் புத்திரபாக்கியம் அடைந்து, உமக்குத் துதியும் கனமும் உண்டாக, அந்தப் பிள்ளைகள் கிறிஸ்துமார்க்கத்துக்கேற்ற சன்மார்க்கராய் வளருகிறதைக் கண்டு களிகூருமளவும், தேவஅன்பும் நீதியும் உள்ளவர்களாய் ஒருமித்து வாழ, இவர்கள் இருவருக்கும் உமது ஆசீர்வாதத்தை அநுக்கிரகிக்கவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஒன்றும் இல்லாதிருக்கையில் சர்வவல்லமையினால் அனைத்தையும் சிருஷ்டித்த தேவனே, சிருஷ்டித்தவைகளை ஒழுங்குபடுத்தினபின்பு, உமது சாயலின்படியே சிருஷ்டிக்கப்பட்ட புருஷனிலிருந்து ஸ்திரீயை உருவாக்கி, அவர்களை ஒன்றாக இணைத்து, விவாகத்தினால் ஒருமைப்படுத்தி, அவர்களை ஒருக்காலும் பிரித்துவிடக்கூடாதென்று கற்பித்தருளினீர். கிறிஸ்துவுக்கும் அவருடைய திருச்சபைக்குமுள்ள ஐக்கியத்தையும் ஞானவிவாகத்தையும் காட்டத்தக்கதாய் விவாகநிலைமையை மேன்மையான இரகசியமாக நியமித்தீர். கிறிஸ்து தமது மணவாட்டியாகிய திருச்சபையில் அன்புகூர்ந்து, அதற்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து, தமது சொந்த சரீரமாக அதைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல, இந்தப் புருஷன் உமது வசனத்தின்படி தன் மனைவியில் அன்புகூரவும், இந்த ஸ்திரீயும் தன் புருஷனிடத்தில் அன்பும் பட்சமும், உண்மையும் பணிவும் உள்ளவளாயிருக்கவும்; எப்பொழுதும் அமைதலும், அடக்கமும், சமாதானமும் உள்ளவளாய் தேவபக்தியுள்ள பதிவிரதா பத்தினிகளைப் பின்பற்றவும், உமது அடியாராகிய இவர்களுக்கு அநுக்கிரகம்பண்ணும். கர்த்தாவே, இவர்கள் இருவரையும் ஆசீர்வதித்து, இவர்கள் உமது நித்திய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய்க் கிருபைசெய்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

ஆதியிலே நமது ஆதித்தாய் தந்தையாகிய ஆதாம் ஏவாள் என்பவர்களைச் சிருஷ்டித்து, விவாகத்தினாலே இணைத்துப் பரிசுத்தமாக்கின சர்வவல்லமையுள்ள தேவன், நீங்கள் சரீரத்திலும் ஆத்துமத்திலும் தமக்குப் பிரியமாய் நடந்து, உங்கள் ஜீவகாலபரியந்தம் பரிசுத்த அன்புடையவர்களாய் ஒருமித்து வாழ, தம்முடைய அருள்செல்வத்தை உங்கள்மேல் பொழிந்து உங்களைப் பரிசுத்தமாக்கி ஆசீர்வதிப்பாராக. ஆமென்.



¶ பின்பு புருஷனும் மனைவியும் ஒருவருக்கொருவர் செய்யவேண்டிய கடமைகளைக் காட்டிய பிரசங்கம் செய்யவேண்டும். செய்யாவிட்டால், குருவானவர் வாசிக்கவேண்டியதாவது:

விவாகம் செய்திருக்கிறவர்களும், அந்தப் பரிசுத்த நிலைமையில் சேரவேண்டும் என்றிருக்கிறவர்களுமாகிய நீங்கள் அனைவரும், புருஷர் தங்கள் மனைவிகளுக்கும், மனைவிகள் தங்கள் புருஷருக்கும், செய்யவேண்டிய கடமையைக்குறித்துப் பரிசுத்த வேதாகமங்களில் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்:

பரிசுத்த பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபம் ஐந்தாம் அதிகாரத்தில், விவாகஞ்செய்திருக்கிற புருஷர் எல்லாருக்கும் போதனையாகச் சொல்லுகிறது என்னவென்றால்: புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள்; அப்படியே கிறிஸ்துவும் சபையில் அன்புகூர்ந்து, தாம் அதைத் திருவசனத்தைக்கொண்டு தண்ணீர்முழுக்கினால் சுத்திகரித்து, பரிசுத்தமாக்குகிறதற்கும், கறை திரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும் பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அதைத் தமக்குமுன் நிறுத்திக்கொள்வதற்கும், தம்மைத்தாமே அதற்காக ஒப்புக்கொடுத்தார். அப்படியே, புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்தச் சரீரங்களாகப் பாவித்து, அவர்களில் அன்புகூரவேண்டும்; தன் மனைவியில் அன்புகூருகிறவன் தன்னில்தான் அன்புகூருகிறான். தன் சொந்த மாம்சத்தைப் பகைத்தவன் ஒருவனும் இல்லையே; கர்த்தர் சபையைப் போஷித்துக் காப்பாற்றுகிறதுபோல ஒவ்வொருவனும் தன் மாம்சத்தைப் போஷித்துக் காப்பாற்றுகிறான். நாம் அவருடைய சரீரத்தின் அவயவங்களாயும், அவருடைய மாம்சத்திற்கும் அவருடைய எலும்புகளுக்கும் உரியவர்களாயும் இருக்கிறோம். இதினிமித்தம் மனுஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியுடன் இசைந்து, இருவரும் ஒரே மாம்சமாயிருப்பார்கள். இந்த இரகசியம் பெரியது; நான் கிறிஸ்துவைப்பற்றியும் சபையைப்பற்றியும் சொல்லுகிறேன். எப்படியும், உங்களிலும் அவனவன் தன்னிடத்தில் அன்புகூருவதுபோல, தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்.

பரிசுத்த பவுல் கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலும்: புருஷர்களே, உங்கள் மனைவிகளில் அன்புகூருங்கள், அவர்கள்மேல் கசந்துகொள்ளாதிருங்கள் என்று விவாகஞ்செய்த புருஷர் யாவருக்கும் சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவின் அப்போஸ்தலனும் விவாகஞ்செய்திருந்தவருமாகிய பேதுருவும் விவாகஞ்செய்திருக்கிறவர்களுக்குச் சொல்லியிருக்கிறதைக் கேளுங்கள்: புருஷர்களே, மனைவியானவள் பெலவீன பாத்திரமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங்களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு

அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்தியஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள்.

புருஷன் மனைவிக்குச் செய்யவேண்டிய கடமையைச் சொல்லக் கேட்டீர்களே. இப்பொழுது மனைவிகளே, பரிசுத்த வேதாகமங்களில் தெளிவாய்க் காண்பித்திருக்கிறபடி, நீங்கள் உங்கள் புருஷருக்குச் செலுத்தவேண்டிய கடமைகளைக் கேட்டுக் கற்றறிந்துகொள்வீர்களாக.

பரிசுத்த பவுல் எபேசியருக்கு எழுதின மேற்சொல்லிய நிருபத்தில்: மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்கும் கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறதுபோல, மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்றும்; வேறொரு வாக்கியத்தில்: மனைவியானவள் தன் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள் என்றும் போதித்திருக்கிறார்.

கொலோசெயருக்கு எழுதின நிருபத்திலும்: மனைவிகளே, கர்த்தருக்கு ஏற்கும்படி உங்கள் புருஷருக்குக் கீழ்ப்படியுங்கள் என்று பரிசுத்த பவுல் சுருக்கமாய்ப் புத்திசொல்லியிருக்கிறார்.

பரிசுத்த பேதுருவும் உங்களுக்கு நன்றாய் உபதேசித்துச் சொல்லுகிறது என்னவென்றால்: மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக்கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப்பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவன் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்; நீங்கள் நன்மைசெய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப் பிள்ளைகளாயிருப்பீர்கள்.

¶ விவாகம்செய்கிறவர்கள் விவாகம்செய்யும் தருணத்திலாவது அதற்குப் பின்பு முதலாவது கிடைக்கும் சமயத்திலாவது பரிசுத்த நற்கருணைப் பந்தியில் சேருகிறது தகுதி.

THE ORDER FOR

# THE VISITATION OF THE SICK.

# வியாதியுள்ளவர்களைச்

## சந்திக்கும் முறைமை.

¶ ஒருவன் வியாதியாயிருக்கும்போது, தன் சேகரத்துக் குருவானவருக்குத் தெரியப்படுத்தவேண்டும். அப்பொழுது அவர் வியாதியுள்ளவன் வீட்டில் வந்து சொல்லவேண்டியதாவது:

இந்த வீட்டுக்கும் இதில் வாசம்பண்ணுகிற யாவருக்கும் சமாதானம் உண்டாவதாக.

¶ அவர் வியாதியஸ்தன் இருக்கிற இடத்தில் சேரும்போது, முழங்கால்படியிட்டுச் சொல்லவேண்டியது:

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும். தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும்; மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

**மறுமொழி**: எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

**குரு:** கர்த்தாவே, உம்முடைய அடியானா (ளா) கிய இவனை (ளை) இரட்சியும்.

**மறுமொழி:** இவன் (ள்) உம்மையே நம்பியிருக்கிறான் (ள்).

**குரு:** உமது பரிசுத்த ஸ்தலத்திலிருந்து இவனு (ளு) க்குச் சகாயத்தை அனுப்பும்.

**மறுமொழி:** எப்பொழுதும் உமது வல்லமையைக்கொண்டு இவனை (ளை) க் காத்தருளும்.

**குரு:** சத்துரு இவனை (ளை) மேற்கொள்ள இடங்கொடாதிரும்.

**மறுமொழி:** பொல்லாங்கன் அணுகி இவனை (ளை) ச் சேதப்படுத்தாதபடி செய்யும்.

**குரு:** கர்த்தாவே, இவனு (ளு) க்குப் பலத்த அரணாயிரும்.

**மறுமொழி:** எதிராளியின் முகத்துக்கு இவனை (ளை) மறைத்தருளும்.

**குரு:** கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

**மறுமொழி:** எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குருவானவர் சொல்வது.

கர்த்தாவே, பரமண்டலத்திலிருந்து உமது அடியானா (ளா) கிய இவனை (ளை) க் கண்ணோக்கிப்பார்த்து சகாயஞ்செய்தருளும். அருட்கண்ணால் இவனை (ளை) க் கடாட்சித்து ஆற்றித்தேற்றி, உம்மை உறுதியாய் நம்புகிற விசுவாசத்தை இவனு (ளு) க்குக் கொடுத்து, சத்துருவினால் வரும் மோசத்துக்கு இவனை (ளை) விலக்கி, சேதமின்றிச் சமாதானத்துடன் இடைவிடாமல் காப்பாற்றியருளும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, மிகுந்த இரக்கமுமுள்ள இரட்சகரே, நீர் எப்பொழுதும் கிருபைசெய்துவருகிறதுபோல இப்பொழுது வியாதியினால் வருத்தப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். பிதாவே, நீர் செய்கிற இந்தச் சிட்சையினால், இவன் (ள்) தன் பலவீனத்தை உணரவும், இவனு (ளு) டைய பச்சாத்தாபம் அதிகரிக்கவும், இவனு (ளு) டைய விசுவாசம் உறுதிப்படவும், உமது ஆசீர்வாதம் கட்டளையிடும். முன்போல் இவன் (ள்) சுகமாயிருக்க தேவரீருக்குச் சித்தமானால்; இனி தான் உயிரோடிருக்கும் நாளெல்லாம் உமக்குப் பயந்து உமக்கே மகிமை உண்டாகும்படி நடந்துவர இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். சுகங்கொடாவிட்டாலும், துன்பம் நிறைந்த இந்த ஜீவகாலம் முடிந்தபின்பு, உம்மோடே வாசம்பண்ணி நித்தியஜீவனை அநுபவிக்கும்படி, உம்மால் வந்திருக்கிற இந்தச் சிட்சையைச் சகித்துக்கொள்ள இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.



¶ பின்பு குருவானவர் வியாதியுள்ளவனை (ளை) ப் பார்த்துப் பின்வருகிறவிதமாயாவது வேறு விதமாயாவது புத்திசொல்லவேண்டும்.

பிரியமுள்ளவனே (ளே), சர்வவல்லமையுள்ள தேவன் ஜீவனுக்கும் மரணத்துக்கும் ஆண்டவராயிருக்கிறதுபோல, இளமை மூப்பு, பெலன் பெலவீனம், சுகம் சுகவீனம் ஆகிய இவைகளுக்கும் ஆண்டவராயிருக்கிறார். ஆதலால் உனக்கு உண்டான வியாதி எப்படிப்பட்டதானாலும், அது தேவனுடைய செயல் என்று உணர்ந்துகொள். மற்றவர்களுக்கு நல்மாதிரி உண்டாகும்படி, உன் பொறுமையைச் சோதிக்கவும், உனக்கு நித்திய ஆநந்தம் அதிகரிக்கும்படி, கர்த்தருடைய நாளிலே உன் விசுவாசம் புகழப்படவும், இந்த வியாதி வந்திருக்கலாம். அல்லது உன்னுடைய பரமபிதாவின் பார்வைக்குத் தகாதவைகள் உன்னைவிட்டு நீங்க, உன்னைக் கண்டித்துச் சீர்திருத்தும்படி இந்த வியாதி வந்திருக்கலாம். இந்த முகாந்தரங்களினாலாவது, வேறெந்த முகாந்தரத்தினாலாவது இந்த வியாதி வந்திருந்தாலும்; நீ உன் பாவங்களினிமித்தம் உண்மையாய்ப் பச்சாதாபப்பட்டு, இந்த நோயைப் பொறுமையோடே சகித்து, தம்முடைய பிரியகுமாரனாகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் தேவன் உன்மேல் இரக்கமாயிருப்பார் என்று நம்பி: பிதாவாகிய அவர் தயவாய் அனுப்பியிருக்கிற இந்தச் சிட்சைக்காக அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவருடைய சித்தத்துக்கு முற்றிலும் கீழடங்குவாயானால், இந்த வியாதி நீ நித்திய ஜீவவழியிலே நடக்க உனக்கு உதவியாயிருந்து பிரயோஜனமாய் முடியும் என்று அறிந்துகொள்.

¶ வியாதியஸ்தனுக்கு அதிக வருத்தமாயிருந்தால், குருவானவர் இதுவரையும் புத்திசொல்லியது போதும். இல்லாவிட்டால் பின்னும் சொல்லவேண்டியது:

ஆகையால், கர்த்தருடைய சிட்சை நலமென்று ஒப்புக்கொள். பரிசுத்த பவுல் எபிரெயர் நிருபம் 12-ம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறபடி, கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரன் உண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால், நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே. அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டும் அல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்று தோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்மு

டைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். பிரிய சகோதரனே (ரியே) நம்முடைய பரமபிதாவானவர் நம்மேல் தயவுவைத்து நமக்கு எந்தவிதமான உபத்திரவத்தையாகிலும் அனுப்பி நம்மைச் சிட்சிக்கும்போது, நாம் ஆறுதலும் புத்தியும் அடைந்து, அந்த உபத்திரவத்தைப் பொறுமையோடும் நன்றியறிதலோடும் சகிக்கும்படி, மேற்சொல்லிய வேத வாக்கியங்கள் எழுதப்பட்டிருக்கிறது. மேலும், கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களையும் நோய்களையும் பொறுமையாய்ச் சகிக்கிறதினாலே கிறிஸ்துவுக்கு ஒப்பாகிறோம் என்பதே அவர்களுக்கு முக்கியமான ஆறுதலாய் இருக்கவேண்டும்; அவர் மோட்சானந்தம் அடையப் பரத்துக்கு எழுந்தருளும் முன்னே பாடுபட்டார்; மகிமையில் பிரவேசிக்கும் முன்னே சிலுவையில் அறையப்பட்டார். அப்படியே இவ்வுலகத்தில் நாம் கிறிஸ்துவுடனே பாடுபடுகிறது நித்திய ஜீவனுக்குப் போகிற வழி. நாம் அவரோடே சந்தோஷமாய் மரிக்கிறதே நித்திய ஜீவனில் பிரவேசிக்கிற வாசல். அதுதான் நாம் மரணத்தைவிட்டெழுந்து கிறிஸ்துவுடனே வாசம்பண்ணி நித்திய ஜீவனை அநுபவிக்கிற வழி; ஆகையால் உனக்குப் பிரயோஜனமாயிருக்கும் இந்த வியாதியைப் பொறுமையாய்ச் சகிக்கிறதும் அல்லாமல், நீ ஞானஸ்நானம் பெற்றபோது தேவனுக்குச் செய்த வாக்குத்தத்தங்களை நினைக்கவும் வேண்டுமென்று, தேவனுடைய நாமத்தினாலே உனக்குப் புத்திசொல்லுகிறேன். பட்சபாதமில்லாமல் எல்லாருக்கும் நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நீதியுள்ள நியாயாதிபதிக்கு முன்பாக மறுமையில் கணக்கு ஒப்புவிக்கவேண்டியதாயிருக்கிறதினால், இன்னின்ன குற்றங்களைச் செய்து தண்டனைக்குப் பாத்திரமாயிருக்கிறேன் என்று நீயே உன்னைக் குற்றவாளி என்று தீர்த்து, பயங்கரமான நியாயத்தீர்ப்புநாளில் ஆக்கினைக்குட்படாமல் கிறிஸ்துவினிமித்தம் நம்முடைய பரமபிதாவினாலே இரக்கத்தைப் பெறத்தக்கதாக; தேவனுக்கும் மனுஷருக்கும் செய்யவேண்டிய கடமைகளைக்குறித்து நீ எப்படி நடந்திருக்கிறாய் என்று பரிசோதிக்கும்படி உனக்குக் கற்பிக்கிறேன். ஆகையால், கிறிஸ்தவன் (ள்) விசுவாசிக்கவேண்டியவைகளை நீ விசுவாசிக்கிறாயோ இல்லையோ என்று அறியும்படி விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லுகிறேன் கேள்:

¶ அப்பொழுது குருவானவர் விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லவேண்டும்.

**வா**னத்தையும் பூமியையும் படைத்த சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறாயா?

அவருடைய ஒரேபேறான குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் விசுவாசிக்கிறாயா? அவர் பரிசுத்தஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார் என்றும்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார் என்றும்; மூன்றாம்நாள் உயிரோடு



எழுந்தருளினார் என்றும்; பரமண்டலத்துக்கேறி, சர்வவல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலது பாரிசத்திலே வீற்றிருக்கிறார் என்றும்; அவ்விடத்திலிருந்து உலகத்தின் முடிவிலே உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார் என்றும், விசுவாசிக்கிறாயா?

**ப**ரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறாயா? பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும் சரீரம் உயிர்த்தெழுதலும், மரணத்துக்குப்பின் நித்திய ஜீவனும் உண்டென்றும், விசுவாசிக்கிறாயா?

¶ வியாதியுள்ளவன் சொல்வதாவது:

இவைகளையெல்லாம் உறுதியாய் விசுவாசிக்கிறேன்.

¶ அப்பொழுது தான் செய்த பாவங்களைக்குறித்து அவன் உண்மையாய் மனஸ்தாபப்படுகிறானோ இல்லையோ என்றும், அவன் எல்லா மனிதரோடும் சிநேகமாயிருக்கிறானோ இல்லையோ என்றும், குருவானவர் சோதித்து அறிகிறதும் அல்லாமல்; தனக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்திருக்கும் எல்லாருக்கும் அவன் முழுமனதோடே மன்னிக்கவேண்டுமென்றும், தான் மற்றவர்களுக்கு விரோதமாய்ச் செய்திருக்கும் குற்றங்களுக்கு அவர்களிடத்தில் மன்னிப்புக் கேட்கவேண்டும் என்றும், தான் யாருக்காகிலும் அநியாயமாவது நஷ்டமாவது செய்திருப்பானாகில் அவனாலே கூடியமட்டும் அதற்குப் பரிகாரஞ்செய்யவேண்டும் என்றும், போதிக்கவேண்டும். அன்றியும் தன் ஆஸ்திகளைக்குறித்து ஒழுங்குசெய்யாதிருந்தால், அவன் மரணசாதனம் எழுதவும், தன்னுடைய மனச்சாட்சிக்குச் சமாதானம் உண்டாகிறதும் அல்லாமல், மரணசாதனத்தை நிறைவேற்றுகிறவர்களுக்கும் தொந்தரவு வராதபடிக்கும் தன் கொடுக்கல் வாங்கல் காரியங்கள் எல்லாவற்றையும் அறிவிக்கவும், அவனுக்குப் புத்திசொல்லவேண்டும். மனிதர் சுகமாயிருக்கும்போதே, தங்கள் ஆஸ்திகளைக்குறித்து ஒழுங்குசெய்யவேண்டுமென்று அவர்களுக்கு அடிக்கடி நினைப்பூட்டவும் வேண்டும்.

¶ அவசியமென்று தோன்றினால், ஜெபஞ்செய்வதற்கு முன்பு மேற்சொல்லிய வார்த்தைகளைக் குருவானவர் சொல்லலாம்.

¶ வியாதியஸ்தர்கள் ஆஸ்தியுள்ளவர்களாயிருந்தால் ஏழைகளுக்கு மனப்பூர்வமாய் தர்மம் செய்யவேண்டும் என்று புத்திசொல்லி அவர்களை ஏவுவதற்கு மறக்கக்கூடாது.

¶ அப்பொழுது யாதொரு விசேஷித்த காரியத்தினால் வியாதியுள்ளவனுடைய மனச்சாட்சி கலக்கம் அடைந்திருக்குமானால், அவன் தன் பாவங்களைத் தாராளமாய் அறிக்கையிடும்படி சொல்லவேண்டும். அறிக்கையிட்டபின்பு, அவன் மனத்தாழ்மையோடும் ஆசையோடும் விரும்பிக் கேட்டால், குருவானவர் அவனுக்குப் பின்வருகிறபடி சொல்லி, பாவவிமோசனம் செய்யவேண்டும்.

உண்மையாய்ப் பச்சாதாபப்பட்டு, தம்மை விசுவாசிக்கிற பாவிகள் யாவருக்கும் பாவவிமோசனம் செய்வதற்கு, தமது திருச்சபைக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது மிகுந்த இரக்கத்தினால் உன் குற்றங்களையெல்லாம் உனக்கு மன்னிப்பாராக. எனக்கு ஒப்புவிக்கப்பட்டிருக்கிற அவருடைய அதிகாரத்தினால், நான், பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே உனது பாவங்கள் எல்லாவற்றையும் விமோசனம் செய்கிறேன். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டிய சருக்கஜெபமாவது:

ஜெபம்பண்ணக்கடவோம்.

உண்மையாய் மனந்திரும்புகிறவர்களுடைய பாவங்களை அப்புறம் நினையாமல் உமது பூரண கிருபையினால் நிவிர்த்திசெய்கிற இரக்கமுள்ள தேவனே, பாவமன்னிப்பு அடையவேண்டுமென்று ஆவலோடே விரும்புகிற உம்முடைய அடியானா (ளா) கிய இவனை (ளை) இரக்கமாய்க் கண்ணோக்கிப்பாரும். அன்புள்ள பிதாவே, பிசாசினுடைய தந்திரத்தினாலும் குரோதத்தினாலும் தன்னுடைய மாம்ச இச்சையினாலும் பலவீனத்தினாலும், இவனு (ளு) க்குள்ளே சீர்கெட்டிருக்கிறதைச் சீர்திருத்தியருளும். திருச்சபையில் அவயவமாகிய இந்த வியாதியஸ்தனை (தியை) ச் சபையின் ஐக்கியத்தில் காத்து, இவனு (ளு) டைய மனத்துயரத்தைப் பார்த்து, இவன் (ள்) கண்ணீருக்கு இரங்கி, தேவரீருக்கு நலமென்று காண்கிறபடி, இவன் (ள்) படுகிற நோவைத் தணியச்செய்யும். இவன் (ள்) உம்முடைய இரக்கத்தையே பூரணமாய் நம்பியிருக்கிறபடியால், இவன் (ள்) செய்த பாவங்களை இவன் (ள்) மேல் சுமத்தாமல், உமது பரிசுத்த ஆவியினால் இவனை (ளை) ப் பலப்படுத்தி, தேவரீர் இவனை (ளை) இம்மையிலிருந்து அழைத்துக்கொள்ளச் சித்தமாகும்போது, உமது அருமையான குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் உம்மிடத்தில் கிருபையாய்ச் சேர்த்துக்கொள்ளும். ஆமென்.

¶ பின்பு குருவானவர் இந்தச் சங்கீதத்தைச் சொல்லவேண்டும்,

*In te, Domine, speravi.* 71. சங்கீதம்.

கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன்: நான் ஒருபோதும் வெட்கம் அடையாதபடி செய்யும்.

உமது நீதியினிமித்தம் என்னை விடுவித்து, என்னைக் காத்தருளும்: உமது செவியை எனக்குச் சாய்த்து, என்னை இரட்சியும்.

நான் எப்பொழுதும் வந்தடையத்தக்க கன்மலையாயிரும்: என்னை இரட்சிப்பதற்குக் கட்டளையிட்டீரே; நீரே என் கன்மலையும் என் கோட்டையுமாய் இருக்கிறீர்.



என் தேவனே, துன்மார்க்கருடைய கைக்கும்: நியாயக்கேடும் கொடுமையும் உள்ளவனுடைய கைக்கும் என்னைத் தப்புவியும்.

கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும்: என் சிறுவயதுதொடங்கி என் நம்பிக்கையுமாய் இருக்கிறீர்.

நான் கர்ப்பத்தில் உற்பவித்ததுமுதல் உம்மால் ஆதரிக்கப்பட்டேன்: என் தாயின் வயிற்றிலிருந்து என்னை எடுத்தவர் நீரே; உம்மையே நான் எப்பொழுதும் துதிப்பேன்.

அநேகருக்கு நான் ஒரு புதுமைபோலானேன்: நீரோ எனக்குப் பலத்த அடைக்கலமாயிருக்கிறீர்.

என் வாய் உமது துதியினாலும்: நாள்தோறும் உமது மகத்துவத்தினாலும் நிறைந்திருப்பதாக.

முதிர்ந்த வயதில் என்னைத் தள்ளிவிடாமலும்: என் பெலன் ஒடுங்கும்போது என்னைக் கைவிடாமலும் இரும்.

என் சத்துருக்கள் எனக்கு விரோதமாய்ப் பேசி: என் ஆத்துமாவுக்குக் காத்திருக்கிறவர்கள் ஏகமாய் ஆலோசனைபண்ணி,

தேவன் அவனைக் கைவிட்டார், அவனைத் தொடர்ந்து பிடியுங்கள்: அவனை விடுவிப்பார் இல்லை என்கிறார்கள்.

தேவனே, எனக்குத் தூரமாயிராதேயும்: என் தேவனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரியும்.

என் ஆத்துமாவை விரோதிக்கிறவர்கள் வெட்கி அழியவும்: எனக்குப் பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நிந்தையாலும் இலச்சையாலும் மூடப்படவும் கடவர்கள்.

நானோ எப்பொழுதும் நம்பிக்கைகொண்டிருந்து: மேன்மேலும் உம்மைத் துதிப்பேன்.

என் வாய் நாள்தோறும் உமது நீதியையும் உமது இரட்சிப்பையும் சொல்லும்: அவைகளின் தொகையை நான் அறியேன்.

கர்த்தராகிய ஆண்டவருடைய வல்லமையை முன்னிட்டு நடப்பேன்: உம்முடைய நீதியைப்பற்றியே மேன்மைபாராட்டுவேன்.

தேவனே, என் சிறுவயதுமுதல் எனக்குப் போதித்துவந்தீர்: இதுவரைக்கும் உம்முடைய அதிசயங்களை அறிவித்துவந்தேன்.

இப்பொழுதும் தேவனே, இந்தச் சந்ததிக்கு உமது வல்லமையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக்குமளவும்: முதிர்வயதும் நரைமயிரும் உள்ளவனாகும்வரைக்கும் என்னைக் கைவிடீராக.

தேவனே, உம்முடைய நீதி உன்னதமானது: பெரிதானவைகளை நீர் செய்தீர்; தேவனே, உமக்கு நிகரானவர் யார்?

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இதையும் சொல்லவேண்டும்:

உலக இரட்சகரே, உமது சிலுவையினாலும் அருமையான உமது இரத்தத்தினாலும் எங்களை மீட்டுக்கொண்ட கர்த்தாவே, எங்களை இரட்சித்து எங்களுக்குச் சகாயம் செய்யவேண்டும் என்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

¶ பின்னும் குருவானவர் சொல்லவேண்டியது:

தம்மை நம்பியிருக்கிற யாவருக்கும் பலத்த அரணும், வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோர் யாவரும் அடிபணிந்து போற்றுகிறவராயும் இருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன், இப்பொழுதும் எப்பொழுதும் உனக்கு அடைக்கலமாயிருந்து, நீ ஆரோக்கியத்தையும் இரட்சிப்பையும் அடையும்பொருட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமமே அல்லாமல், வேறொரு நாமமும் வானத்தின்கீழ் மனிதருக்குக் கொடுக்கப்படவில்லையென்று நீ உணர்ந்து அறியக் கிருபைசெய்வாராக. ஆமென்.

¶ பின்னும் அவர் சொல்லவேண்டியது:

தேவனுடைய இரக்கமுள்ள கிருபைக்கும் பராமரிப்புக்கும் உன்னை ஒப்புவிக்கிறோம். கர்த்தர் உன்னை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரகாசிக்கப்பண்ணி, உன்மேல் கிருபையாயிருக்கக்கடவர். கர்த்தர் தம்முடைய முகத்தை உன்மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும் எப்பொழுதும் உனக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். **ஆமென்.**

---

## வியாதிப்பட்டிருக்கிற பிள்ளைக்காகச் செய்யத்தக்க ஜெபம்.

ஜீவனையும் மரணத்தையும் உமது சித்தத்தின்படி கட்டளையிடுகிற சர்வவல்லமையுள்ள தேவனே, இரக்கமுள்ள பிதாவே, இங்கே வியாதியினால் வருத்தப்படுகிற இந்தப் பிள்ளையை தேவரீர் பரலோகத்திலிருந்து இரக்கமாய்க் கண்ணோக்கிப் பார்க்கவேண்டுமென்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். உமது இரட்சிப்பினாலே இவனை (ளை) ச் சந்தித்தருளும். தேவரீருக்குப் பிரியமான காலத்தில் சரீரநோவை நீக்கி, உமது இரக்கங்களினிமித்தம் இவனு (ளு) டைய ஆத்துமாவை இரட்சியும்.



இவன் (ள்) நாட்கள் பூமியிலே நீடித்திருக்க தேவரீருக்குச் சித்தமானால், இவன் (ள்) உமக்கென்றே பிழைத்து, உம்மை உண்மையாய்ச் சேவித்து, தன் வாழ்நாளெல்லாம் மற்றவர்களுக்கு நன்மைசெய்து, உமது மகிமையை விளங்கப்பண்ணுகிறவனா (ளா) யிருக்கும்படி கிருபைசெய்யும். இப்படிச் செய்ய தேவரீருடைய திருவுளத்துக்கு ஏற்றிராவிட்டால், இயேசுநாதருக்குள் நித்திரையடைந்தவர்களுடைய ஆத்துமாக்கள் இடைவிடாமல் இளைப்பாறி ஆநந்தத்தை அநுபவிக்கிற பரம வாசஸ்தலங்களில் இவனை (ளை) ச் சேர்த்துக்கொள்ளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒரே தேவனாக என்றென்றைக்கும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது இரக்கங்களினிமித்தம் இதைச் செய்தருளும். **ஆமென்.**

## வியாதியுள்ளவன் ஒருவேளை பிழைப்பான் என்று சந்தேகப் பட்டால் அவனுக்காகச் செய்யத்தக்க ஜெபம்.

இரக்கம் நிறைந்த பிதாவே, எல்லா ஆறுதலுக்கும் காரணரே, ஆபத்துக்கு உதவும் சகாயரே, இங்கே உமது செயலால் சரீரத்தில் மிகவும் வருத்தப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனு (ளு) க்காக நாங்கள் உமது பாதமே தஞ்சமென்று உம்மிடத்தில் ஓடிவருகிறோம். இவனை (ளை) க் கிருபையாய்க் கண்ணோக்கிப் பாரும். ஆண்டவரே, புறம்பே இவன் (ள்) சரீரம் ஒடுங்கிப்போனாலும், உமது கிருபையினாலும் பரிசுத்த ஆவியினாலும் உள்ளே இவன் (ள்) ஆத்துமாவை மேன்மேலும் பலப்படுத்தியருளும். இவன் (ள்) இம்மையைவிட்டுப் போகும்முன்னே உமது இரக்கத்தால் இவனு (ளு) க்குப் பாவம் தொலையவும், பரமண்டலத்திலே பாவமன்னிப்பு இவனு (ளு) க்கு முத்திரிக்கப்படவும், தான் இதுவரைக்கும் செய்த தப்பிதங்கள் எல்லாவற்றிற்காகவும் உண்மையாய் மனஸ்தாபப்படுகிற துக்கத்தையும் உம்முடைய குமாரனாகிய இயேசுவை உறுதியாய்ப் பற்றும் விசுவாசத்தையும் இவனு (ளு) க்குக் கிருபைசெய்தருளும். தேவரீருக்குக் கூடாத காரியம் ஒன்றும் இல்லையென்றும், உமக்குச் சித்தமானால் இவனை (ளை) இப்பொழுதும் சுகமாக்கி இன்னும் எங்களோடே உயிரோடிருக்கும்படி செய்ய உம்மால் ஆகுமென்றும், அறிந்திருக்கிறோம். ஆகிலும் இவனு (ளு) க்கு அந்தியகாலம் சமீபித்திருக்கிறதென்று தோன்றுகிறபடியால், இவன் (ள்) உமது கிருபைபெற்றவனா (ளா) ய், சமாதானத்தோடே இவ்வுலகத்தை விட்டுப்போய் உமது நித்திய ராஜ்யத்தில் சேரத்தக்கதாக; மரணத்துக்கு இவனை (ளை) ஆயத்தப்படுத்தவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தையும் மத்தியஸ்தத்தையும் முன்னிட்டு வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

## மரணவஸ்தைப்படுகிறவனைத் தேவனுக்கு ஒப்புவிக்கிற ஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சிறைச்சாலைபோன்ற இம்மைக்குரிய சரீரத்திலிருந்து விடுதலையானபின்பு பூரணராக்கப்பட்ட நீதிமான்களுடைய ஆத்துமாக்கள் தேவரீரிடத்தில் சேர்ந்து ஆநந்தமடைந்து வாழுகிறதே. உமது அடியானு (ளு) ம் எங்கள் சகோதரனு (ரியு) ம் ஆகிய இவனு (ளு) டைய ஆத்துமாவை உண்மையுள்ள சிருஷ்டிகர்த்தாவுமிருந்த இரக்கமுள்ள இரட்சகருமாகிய தேவரீருடைய திருக்கரத்தில் ஒப்புக்கொடுத்து, அது உமது பார்வைக்கு அருமையாயிருக்கவேண்டும் என்று தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். நிர்ப்பாக்கியமுள்ள இந்தப் பொல்லாத உலகத்தில் சஞ்சரிக்கும்போது மாம்ச இச்சையினாலும் சாத்தானுடைய தந்திர உபாயங்களினாலும் இவன் (ள்) ஆத்துமாவைப் பற்றியிருக்கும் அசுசிகளெல்லாம் நீங்கி, உமக்குமுன்பாக மாசில்லாமல் பரிசுத்தமுள்ளதாகக் காணப்படுவதற்கு; உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கும்படி பலியிடப்பட்ட தேவ ஆட்டுக்குட்டியினுடைய இரத்தத்தினாலே அதைக் கழுவிச் சுத்திகரிக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறோம். உயிரோடிருக்கிற நாங்கள் தேகநிலையாமையைக் காட்டுகிற இப்படிப்பட்ட திருஷ்டாந்தங்களை நாளுக்குநாள் பார்க்கும்போது, எங்கள் வாழ்நாள் நிலையற்றதும் நிச்சயமற்றதுமாயிருக்கிறதென்று உணரவும், கடைசியில் நித்திய ஜீவனுக்கு நடத்துகிற பரம ஞானத்தை நாங்கள் இம்மையில் பெறத்தக்கதாக எங்கள் நாட்களை எண்ணும் அறிவை அடையவும் கிருபைசெய்யவேண்டுமென்று, உமது ஒரேகுமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

## மனக்கிலேசத்தினாலாவது குற்றஞ்சாற்றும் மனச்சாட்சியினாலாவது வியாகுலப்படுகிறவர்களுக்காகச் செய்யவேண்டிய ஜெபம்.

இரக்கம் நிறைந்த பிதாவே, ஆறுதல் அளிக்கும் கிருபையுள்ள கர்த்தாவே, வியாகுலப்படுகிற உமது அடியானா (ளா) கிய இவனை (ளை) இரக்கத்தோடும் உருக்கத்தோடும் கண்ணோக்கியருளும். கசப்பான தீர்ப்புகளை இவன் (ள்) பேரில் எழுதி, இவன் (ள்) செய்த அக்கிரமங்களைப் பலிக்கச்செய்கிறீர்; உம்முடைய கோபம் இவன் (ள்) மேல் பாரமாய் இறங்கியிருக்கிறதினால், இவன் (ள்) ஆத்துமா உபத்திரவத்தால் நிறைந்திருக்கிறது. இரக்கமுள்ள தேவனே, நாங்கள் உமது பரிசுத்த வேத வாக்கியங்களால் பொறுமையும் ஆறுதலும் அடைந்து நம்பிக்கையுள்ளவர்களாகும்படி, அந்த வசனத்தை எங்களுக்குப் போதகமாக எழுது



வித்திருக்கிறீர். இவன் (ள்) உம்மையே நம்பியிருக்கவும், உம்மைத்தவிர மற்றொன்றையும் நம்பாமலிருக்கவும், தன்னை அறிகிற அறிவையும், தேவரீர் உரைத்த சாபங்களையும் வாக்குத்தத்தங்களையும் நிதானமாய் அறிகிற அறிவையும் இவனு (ளு) க்குக் கொடுத்தருளும். எந்தச் சோதனைகள் வந்தாலும், இவனு (ளு) க்கு வேண்டிய பெலனை அளித்து, இவன் (ள்) வியாகுலங்களையெல்லாம் தீர்த்தருளும். நெரிந்த நாணலை முறியாமலும், மங்கியெரிகிற திரியை அணையாமலும் இரும். கோபத்தினாலே உம்முடைய இரக்கத்தை அடைத்துக்கொள்ளாமல் இவன் (ள்) சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும், அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும். சத்துருவால் வரும் பயத்தை அகற்றி, உமது திருமுகப் பிரகாசத்தை இவன் (ள்) மேல் வீசச்செய்து, இவனு (ளு) க்குச் சமாதானம் கட்டளையிட்டருளும் என்று புண்ணிய சொரூபியாகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தமூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

THE

# COMMUNION OF THE SICK.

---

## வியாதியுள்ளவர்களுக்கு
## நற்கருணையைக் கொடுக்கும்
## முறைமை.

¶ மனிதரெல்லாரும் சடிதியாய் வரும் பலவித மோசங்களுக்கும் வியாதிகளுக்கும் ஏதுவாயிருக்கிறதுமன்றி, தாங்கள் இம்மையைவிட்டுப் பிரியும் நேரத்தை அறியாதவர்களாயும் இருக்கிறதினாலே, சர்வவல்லமையுள்ள தேவன் அவர்களை அழைக்கச் சித்தமாயிருக்கும் எந்த நேரத்திலும் அவர்கள் மரணத்திற்கு ஆயத்தமாயிருப்பதற்குக் குருமார் செய்யவேண்டுவதென்னவென்றால்; வியாதி சடிதியாய் வருங்காலத்தில் பரிசுத்த நற்கருணைக்குச் சேரக்கூடாமற்போவதினால் மனக்கலக்கம் உண்டாகாதபடி; நம்முடைய இரட்சகராகிய கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய நற்கருணையைத் தேவாலயத்தில் வெளியரங்கமாய்ப் பரிமாறும்போதெல்லாம், தங்கள் தங்கள் சேகரத்திலிருக்கிறவர்கள் அதற்குச் சேரவேண்டுமென்று குருமார் அடிக்கடி விசேஷமாக விஷவியாதிகள் வருங்காலங்களில் அவர்களை எச்சரிக்கவேண்டும். வியாதியுள்ளவன் (ள்) கோவிலுக்கு வரப் பெலனில்லாமல் தன் வீட்டில் நற்கருணை வாங்க விரும்பினால், முந்தியே அதைக் குருவானவருக்கு அறிவிக்கிறதுமல்லாமல், தன்னோடேகூட நற்கருணை வாங்குகிறவர்கள் இத்தனைபேர் என்று தெரிவிக்கவும் வேண்டும். அவனோடேகூட வாங்கப்போகிறவர்கள் மூன்றுபேர் அல்லது இரண்டுபேருக்குக் குறையாமலிருக்கவேண்டும். குருவானவர் பயபக்தியோடே பரிசுத்த நற்கருணையை அநுஷ்டிக்கும்படி, வியாதியுள்ளவனுடைய வீட்டிலே தகுதியான இடத்தையும் மற்றும் அதற்கு வேண்டியவைகளையும் எத்தனம் செய்திருக்கவேண்டும். குருவானவர் பின்வருகிற சுருக்கஜெபம், நிருபவாக்கியம், சுவிசேஷவாக்கியம் முதல்தொடங்கி வாசித்து, நற்கருணையைப் பரிமாறவேண்டும்.

### சுருக்கஜெபம்.

மனுகுலம் அனைத்தையும் படைத்த சர்வவல்லமையுள்ள நித்திய தேவனே, தேவரீர் நேசிக்கிறவர்களைச் சிட்சித்து, நீர் ஏற்றுக்கொள்ளுகிறவர்



களைத் தண்டிக்கிறீர்; உமது கரத்தினாலே தண்டிக்கப்பட்டிருக்கிற உமது அடியான் (ள்) ஆகிய இவன் (ள்) மேல் இரக்கமாயிருந்து, இவன் (ள்) இந்த வியாதியைப் பொறுமையோடே சகிக்கவும், தேவரீருக்குச் சித்தமானால், சரீர சவுக்கியத்தை அடையவும் கிருபைசெய்யவேண்டுமென்றும்; இவனு (ளு) டைய ஆத்துமா சரீரத்தைவிட்டுப் பிரியும்போது மாசில்லாமல் உம்மிடத்தில் சேர்க்கப்படவேண்டுமென்றும்; எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

### நிருபவாக்கியம்: எபி. 12. 5.

என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ, அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்.

### சுவிசேஷவாக்கியம்: பரி. யோ. 5. 24.

என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.

¶ அப்பொழுது நற்கருணை முறைமையில் வருகிற "உங்கள் பாவங்களினிமித்தம் ழ" என்கிற வார்த்தைகள் முதற்கொண்டு வாசிக்கவேண்டும்.

¶ பரிசுத்த சாக்கிரமெந்தாகிய நற்கருணையைப் பரிமாறும்போது, முதலாவது குருவானவரும், பின்பு வியாதியுள்ளவனோடே வாங்க நியமிக்கப்பட்டவர்களும், கடைசியாக வியாதியுள்ளவனும் அதை வாங்கவேண்டும்.

¶ வியாதியின் கொடுமையினாலாவது குருவானவருக்கு முன்னே தெரியப்படுத்தாததினாலாவது வியாதியுள்ளவனோடே வாங்க மற்றப்பேர் இல்லாததினாலாவது நியாயமான மற்றத் தடையினாலாவது வியாதியுள்ளவன் கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தை வாங்கக்கூடாமற்போனால், குருவானவர் அவனைப் பார்த்து: நீ உன் பாவங்களினிமித்தம் உண்மையாய் மனஸ்தாபப்பட்டு உனக்காக இயேசுகிறிஸ்து சிலுவையில் மரணமடைந்து உனக்கு மீட்புண்டாகும்படி தமது திரூரத்தத்தைச் சிந்தினார் என்பதை உறுதியாய் விசுவாசித்து அதினால் உண்டாகும் நன்மைகளைப் பெரிதாக எண்ணி அவருக்கு முழுமனதோடே ஸ்தோத்திரம் செலுத்தினால், நீ வாயினாலே சாக்கிரமெந்தை உட்கொள்ளாவிட்டாலும், உன் ஆத்துமாவுக்குச் சவுக்கியம் உண்டாக நீ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய சரீரத்தையும் இரத்தத்தையும் புசித்துப் பானம் பண்ணினவன் (ள்) ஆவாய் என்று போதிக்கவேண்டும்.

¶ ஒரே சமயத்தில் வியாதியுள்ளவனைச் சந்திக்கவும், பரிசுத்த நற்கருணையைக் கொடுக்கவும் நேரிடுமானால், அதிகநேரம் செல்லாதபடி வியாதியுள்ளவர்களைச் சந்திக்கிற முறைமையில் குருவானவர், "கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிறேன் என்று" ஆரம்பிக்கிற சங்கீதத்தை வாசியாமல் நிறுத்தி, நற்கருணையைக் கொடுக்கும் முறைமையை வாசிக்கவேண்டும்.

¶ பெருவாரிக் காய்ச்சல் விஷவியாதி முதலான தொத்துவியாதிகள் நடமாடுங்காலத்தில், வியாதியுள்ளவன் இருக்கிற சேகரத்தாரிலாவது அயலகத்தாரிலாவது ஒருவராகிலும் வியாதிக்குப் பயந்து கூட நற்கருணை வாங்கும்படி அவ்வீட்டில் வர மனதாயிராவிட்டால்; நோயாளி மிகவும் கேட்டுக்கொள்வதின்பேரில், குருவானவர் தனியாய் அவனோடேகூட நற்கருணை வாங்கலாம்.

THE ORDER FOR

# THE BURIAL OF THE DEAD.

## மரித்தவர்களை

# அடக்கம்பண்ணும் முறைமை.

¶ ஞானஸ்நானம் பெறாதவர்களையும் திருச்சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களையும் தற்கொலைசெய்தவர்களையும் அடக்கம்பண்ணும்போது, இந்த முறைமை வாசிக்கப்படாதென்று கவனிக்கவேண்டும்.

¶ கோவில் பிராகாரவாசலில் பிரேதத்தைக் கொண்டுவருகிறபோது, குருவானவரும் மற்றக் குருமாரும் எதிர்கொண்டுபோய், கோவிலில் பிரவேசிக்குமுன், அல்லது கல்லறைக்கு நேராய்ப் போனால் அதனிடத்தில் சேருமுன், பிரேதத்துக்கு முன்னாக நடந்து சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:

நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருக்கையில் என்னை விசுவாசிக்கிறவன் எவனோ, அவன் ஒருக்காலும் மரிக்கமாட்டான். பரி. யோ. 11. 25, 26.

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும், அவர் கடைசிநாளில் பூமியின்மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப்போனபின்பு, நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன். அவரை நானே பார்ப்பேன்; அந்நியக்கண்கள் அல்ல, என் கண்களே அவரைக் காணும். யோபு, 19. 25, 26, 27.

உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டுவந்ததும் இல்லை, இதிலிருந்து நாம் ஒன்றும் கொண்டுபோகவும் கூடாதென்பது நிச்சயம்.—கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார்; கர்த்தருடைய நாமத்துக்கு ஸ்தோத்திரம். 1 தீமோ. 6. 7. யோபு, 1. 21.

¶ கோவிலில் பிரவேசித்தபோது, பின்வருகிற இரண்டு சங்கீதங்களை யாவது அவைகளில் ஒன்றையாவது வாசிக்கவேண்டும்.

*Dixi, Custodiam* 39. சங்கீதம்.

என் நாவினால் பாவம் செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து: துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தினால் அடக்கிவைப்பேன் என்றேன்.

நான் மவுனமாகி, ஊமையனாயிருந்தேன், நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்தேன்: ஆனாலும் என் துக்கம் அதிகரித்தது.

என் இருதயம் எனக்குள்ளே அனல்கொண்டது; நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது: அப்பொழுது என் நாவினால் விண்ணப்பம் செய்தேன்.

கர்த்தாவே, நான் எவ்வளவாய் நிலையற்றவன் என்று உணரும்படி: என் முடிவையும், என் நாட்களின் அளவு இவ்வளவு என்பதையும் எனக்குத் தெரிவியும்.

இதோ, என் நாட்களை நாலு விரற்கடையளவாக்கினீர்: என் ஆயுசு உமது பார்வைக்கு இல்லாததுபோலிருக்கிறது; எந்த மனுஷனும் மாயையே என்பது நிச்சயம்.

வேஷமாகவே மனுஷன் திரிகிறான்; விருதாவாகவே சஞ்சலப்படுகிறான்: ஆஸ்தியைச் சேர்க்கிறான், யார் அதை வாரிக்கொள்ளுவான் என்று அறியான்.

இப்போதும் ஆண்டவரே, நான் எதற்கு எதிர்பார்த்திருக்கிறேன்: நீரே என் நம்பிக்கை.

என் மீறுதல்கள் எல்லாவற்றிலுமிருந்து என்னை விடுதலையாக்கும்: மூடனுடைய நிந்தனைக்கு என்னை ஒப்புக்கொடாதேயும்.

நீரே இதைச் செய்தீர் என்று: நான் என் வாயைத் திறவாமல் மவுனமாயிருந்தேன்.

என்னிலிருந்து உம்முடைய வாதையை எடுத்துப்போடும்: உமது கரத்தின் அடிகளால் நான் சோர்ந்துபோனேன்.

அக்கிரமத்தினிமித்தம் நீர் மனுஷனைக் கடிந்துகொண்டு தண்டிக்கிறபோது, அவன் வடிவைப் பொட்டரிப்பைப்போல் அழியப்பண்ணுகிறீர்: நிச்சயமாக எந்த மனுஷனும் மாயையே.

கர்த்தாவே, என் ஜெபத்தைக் கேட்டு, என் கூப்பிடுதலுக்குச் செவிகொடும்; என் கண்ணீருக்கு மவுனமாயிராதேயும்: என் பிதாக்களெல்லாரையும்போல நானும் உமக்கு முன்பாக அந்நியனும் பரதேசியுமாயிருக்கிறேன்.

நான் இனி இராமற்போகுமுன்னே: தேறுதல் அடையும்படி என்னிடத்தில் பொறுமையாயிரும்.



பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

*Domine, refugium.* 90. சங்கீதம்.

ஆண்டவரே, தேவரீர் தலைமுறை தலைமுறையாக: எங்களுக்கு அடைக்கலமானவர்.

பர்வதங்கள் தோன்றுமுன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்குமுன்னும்: நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்.

நீர் மனுஷனை நிர்த்தூளியாக்கி: மனுபுத்திரரே, திரும்புங்கள் என்கிறீர்.

உமது பார்வைக்கு ஆயிரம் வருஷம் நேற்றுக் கழிந்த நாள்போலவும்: இராச்சாமம்போலவும் இருக்கிறது.

அவர்களை வெள்ளம்போல் வாரிக்கொண்டுபோகிறீர்: நித்திரைக்கு ஒத்திருக்கிறார்கள்; காலையிலே முளைக்கிற புல்லுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

அது காலையிலே முளைத்துப் பூத்து: மாலையிலே அறுப்புண்டு உலர்ந்துபோம்.

நாங்கள் உமது கோபத்தினால் அழிந்து: உமது உக்கிரத்தினால் கலங்கிப்போகிறோம்.

எங்கள் அக்கிரமங்களை உமக்கு முன்பாகவும்: எங்கள் அந்தரங்க பாவங்களை உமது முகத்தின் வெளிச்சத்திலும் நிறுத்தினீர்.

எங்கள் நாட்களெல்லாம் உமது கோபத்தால் போய்விட்டது: ஒரு கதையைப்போல் எங்கள் வருஷங்களைக் கழித்துப்போட்டோம்.

எங்கள் ஆயுசு நாட்கள் எழுபது வருஷம், பெலத்தின் மிகுதியால் எண்பது வருஷமாயிருந்தாலும், அதின் மேன்மையானது வருத்தமும் சஞ்சலமுமே: அது சீக்கிரமாய்க் கடந்துபோகிறது, நாங்களும் பறந்துபோகிறோம்.

உமது கோபத்தின் வல்லமையையும்: உமக்குப் பயப்படத்தக்கவிதமாய் உமது உக்கிரத்தையும் அறிந்துகொள்ளுகிறவன் யார்?

நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி: எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.

கர்த்தாவே, திரும்பிவாரும், எதுவரைக்கும் கோபமாயிருப்பீர்: உமது அடியாருக்காகப் பரிதபியும்.

நாங்கள் எங்கள் வாழ்நாளெல்லாம் களிகூர்ந்து மகிழும்படி: காலையிலே எங்களை உமது கிருபையால் திருப்தியாக்கும்.

தேவரீர் எங்களைச் சிறுமைப்படுத்தின நாட்களுக்கும்: நாங்கள் துன்பத்தைக் கண்ட வருஷங்களுக்கும் சரியாய், எங்களை மகிழ்ச்சியாக்கும்.

உமது கிரியை உமது ஊழியக்காரருக்கும்: உமது மகிமை அவர்கள் பிள்ளைகளுக்கும் விளங்குவதாக.

எங்கள் தேவனாகிய ஆண்டவரின் பிரியம் எங்கள்மேல் இருப்பதாக: எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தும்; ஆம், எங்கள் கைகளின் கிரியையை எங்களிடத்தில் உறுதிப்படுத்தியருளும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

¶ இப்போது பரிசுத்த பவுல் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபம் 15-ம் அதிகாரத்திலிருந்தெடுத்த பாடம் வாசிக்கப்படும்.

### 1 கொ. 15. 20.

கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்து எழுந்து, நித்திரை அடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் மரணம் உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் எல்லாரும் மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் எல்லாரும் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படும் கடைசிச் சத்துரு மரணம். சகலத்தையும் அவருடைய பாதத்திற்குக் கீழ்ப்படுத்தினாரே; ஆகிலும் சகலமும் அவருக்குக் கீழ்ப்படுத்தப்பட்டதென்று சொல்லியிருக்கும்போது, சகலத்தையும் அவருக்குக் கீழ்ப்படுத்தினவர் கீழ்ப்படுத்தப்படவில்லையென்பது வெளியரங்கமாயிருக்கிறது. சகலமும் அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும்போது, தேவனே சகலத்திலும் சகலமுமாயிருப்பதற்கு, குமாரன் தாமும் தமக்குச் சகலத்தையும் கீழ்ப்படுத்தினவருக்குக் கீழ்ப்பட்டிருப்பார். மேலும் மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் மரித்தவர்களுக்காக ஞானஸ்நானம் பெறுகிறவர்கள் என்ன செய்வார்கள்? மரித்தவர்களுக்காக ஏன் ஞானஸ்நானம் பெறுகிறார்கள்? நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்? நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிற மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன். நான் எபேசுவிலே துஷ்டமிருகங்களுடனே போராடினேன் என்று மனுஷர் வழக்கமாய்ச் சொல்லுகிறேன்; அப்படிப் போராடினதினாலே எனக்குப் பிரயோஜனம் என்ன? மரித்தோ



ருயிர்த்தெழாவிட்டால், புசிப்போம் குடிப்போம், நாளைக்குச் சாவோம் என்று சொல்லலாமே? மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும். நீங்கள் பாவஞ்செய்யாமல் நீதிக்கேற்க விழித்துக்கொண்டு, தெளிந்தவர்களாயிருங்கள்; சிலர் தேவனைப்பற்றி அறிவில்லாதிருக்கிறார்களே; உங்களுக்கு வெட்கமுண்டாக இதைச் சொல்லுகிறேன். ஆகிலும், மரித்தோர் எப்படி எழுந்திருப்பார்கள், எப்படிப்பட்ட சரீரத்தோடே வருவார்கள் என்று ஒருவன் சொல்வானாகில், புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. நீ விதைக்கிறபோது, இனி உண்டாகும் மேனியை விதையாமல், கோதுமை, அல்லது மற்றொரு தானியத்தினுடைய வெறும் விதையையே விதைக்கிறாய். அதற்குத் தேவன் தமது சித்தத்தின்படியே மேனியைக் கொடுக்கிறார்; விதைவகைகள் ஒவ்வொன்றிற்கும் அததற்கேற்ற மேனியையே கொடுக்கிறார். எல்லா மாம்சமும் ஒரேவிதமான மாம்சமல்ல; மனுஷருடைய மாம்சம் வேறே, மிருகங்களுடைய மாம்சம் வேறே, மச்சங்களுடைய மாம்சம் வேறே, பறவைகளுடைய மாம்சம் வேறே. வானத்துக்குரிய மேனிகளுமுண்டு, பூமிக்குரிய மேனிகளுமுண்டு; வானத்துக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே, பூமிக்குரிய மேனிகளுடைய மகிமையும் வேறே; சூரியனுடைய மகிமையும் வேறே, சந்திரனுடைய மகிமையும் வேறே, நட்சத்திரங்களுடைய மகிமையும் வேறே; மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது. மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும், அழிவில்லாததாய் எழுந்திருக்கும்; கனவீனமுள்ளதாய் விதைக்கப்படும், மகிமையுள்ளதாய் எழுந்திருக்கும்; பலவீனமுள்ளதாய் விதைக்கப்படும், பலமுள்ளதாய் எழுந்திருக்கும். ஜென்மசரீரம் விதைக்கப்படும், ஆவிக்குரிய சரீரம் எழுந்திருக்கும்; ஜென்மசரீரமுமுண்டு, ஆவிக்குரிய சரீரமுமுண்டு. அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்று எழுதியிருக்கிறது; பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார். ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது, ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. முந்தின மனுஷன் பூமியிலிருந்துண்டான மண்ணானவன்; இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்துவந்த கர்த்தர். மண்ணானவன் எப்படிப்பட்டவனோ மண்ணானவர்களும் அப்படிப்பட்டவர்களே; வானத்துக்குரியவர் எப்படிப்பட்டவரோ, வானத்துக்குரியவர்களும் அப்படிப்பட்டவர்களே. மேலும் மண்ணானவனுடைய சாயலை நாம் அணிந்திருக்கிறதுபோல, வானத்துக்குரியவருடைய சாயலையும் அணிந்துகொள்வோம். சகோதரரே, நான் சொல்லுகிறது என்னவெனில், மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது; அழிவுள்ளது அழியாமையைச் சுதந்த

ரிப்பதுமில்லை. இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளவேண்டும். அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கினமாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ளும்போது, மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும். மரணமே! உன் கூர் எங்கே? பாதாளமே! உன் ஜெயம் எங்கே? மரணத்தின் கூர் பாவம், பாவத்தின் பெலன் நியாயப்பிரமாணம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங்கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம். ஆகையால், எனக்குப் பிரியமான சகோதரரே, கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாயிராதென்று அறிந்து, நீங்கள் உறதிப்பட்டவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுகிறவர்களாயும் இருப்பீர்களாக.

*¶ அவர்கள் பிரேதக்குழியினிடத்தில் வந்து பிரேதத்தைப் பூமியில் வைக்க எத்தனிக்கிறபோது, குருவானவர் சொல்ல, அல்லது குருவானவரும் மற்றக் குருக்களும் பாடவேண்டியதாவது:*

ஸ்திரீயினிடத்தில் பிறந்த மனுஷன் வாழ்நாள் குறுகினவனும், சஞ்சலம் நிறைந்தவனுமாயிருக்கிறான். அவன் பூவைப்போலப் பூத்து அறுப்புண்கிறான்; நிழலைப்போல நிலைநிற்காமல் ஓடிப்போகிறான்.

ஜீவனோடிருக்கும்போதே சாவுக்குட்பட்டிருக்கிறோம்; எங்கள் பாவங்களினிமித்தம் நியாயப்படி கோபங்கொண்டிருக்கிற கர்த்தாவே, தேவரீரிடத்தில் அன்றி, யாரிடத்தில் சகாயம் தேடுவோம்.

பரிசுத்தமுள்ள தேவனே, சர்வவல்லமைபொருந்திய கர்த்தாவே, இரக்கம் நிறைந்த இரட்சகரே, நித்திய மரணத்தின் கொடிய வேதனைகளுக்கு எங்களை ஒப்புக்கொடாதேயும்.

கர்த்தாவே, எங்கள் இருதயத்தின் இரகசியங்களை அறிந்திருக்கிறீர்; எங்கள் ஜெபங்களுக்கு இரக்கமுள்ள உமது செவியை அடைத்துக்கொள்ளாதேயும். பரிசுத்தமுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும். சர்வவல்லமையுள்ள தேவனே, பரிசுத்தமும் இரக்கமுமுள்ள இரட்சகரே, நீதியுள்ள நித்திய நியாயாதிபதியே, எங்கள் அந்தியகாலத்தில் நேரிடும் எந்த வேதனைகளினாலும் நாங்கள் உம்மை விட்டுப் பிரியாதபடி செய்தருளும்.



*¶ அப்பொழுது, அருகே நிற்கிறவர்களில் சிலர் பிரேதத்தின்மேல் மண் போடுகையில், குருவானவர் சொல்லவேண்டியது:*

மரித்துப்போன நம்முடைய பிரிய சகோதரனு (ரியா) கிய இவனு (ளு) டைய ஆத்துமாவைச் சர்வவல்லமையுள்ள தேவன் மிகுந்த இரக்கத்தினாலே தம்மிடத்தில் சேர்த்துக்கொள்ளச் சித்தமானபடியினால்; எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்தத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துகிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய்,* நித்திய ஜீவனை அடைய உயிர்த்தெழுதல் உண்டாகும் என்று உறுதியாய் நம்பி, நாம் இவனு (ளு) டைய சரீரத்தை மண்ணுக்கு மண்ணாயும், சாம்பலுக்குச் சாம்பலாயும், புழுதிக்குப் புழுதியாயும், பூமிக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.

*¶ அப்பொழுது சொல்ல அல்லது பாடவேண்டியதாவது:*

பரலோகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகக் கேட்டேன்; கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள் என்று எழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள் என்று ஆவியானவர் திருவுளம்பற்றுகிறார்.

*¶ அப்பொழுது குருவானவர் சொல்லவேண்டியது:*

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்க்ள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

---

** கப்பல் யாத்திரையில் மரித்தவர்களைத் தண்ணீரில் அடக்கம்பண்ணும்போது, "மூலமாய்" என்னும் பதத்துக்குப் பின்பு வாசிக்கவேண்டியதாவது:*

*சரீர உயிர்த்தெழுதல் உண்டாகும்போது, சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தவர்களை ஒப்புக்கொடுக்கும் என்றும், மறுமைக்குரிய ஜீவன் உண்டாகும் என்றும் நம்புகிற நாங்கள் இவனு (ளு) டைய சரீரத்தை அழிந்துபோகும்படி அதைச் சமுத்திரத்தின் ஆழத்துக்கு ஒப்புக்கொடுக்கிறோம்.*

¶ குருவானவர் சொல்வது.

சர்வவல்லமையுள்ள தேவனே, கர்த்தருக்குள் மரித்த விசுவாசிகளுடைய ஆத்துமாக்கள் சரீரமாகிய சுமை நீங்கி விடுதலையடைந்து, இம்மையை விட்டுப்போய் தேவரீரிடத்தில் ஆநந்த சந்தோஷம் அநுபவித்து வாழுகிறது. பாவம் நிறைந்த இவ்வுலகத்திலுள்ள துன்பங்களினின்று எங்கள் சகோதரனா (ரியா) கிய இவனை (ளை) இரட்சிக்கச் சித்தமானதற்காகத் தேவரீருக்கு முழுமனதோடே ஸ்தோத்திரம்செலுத்துகிறோம். தேவரீர் தெரிந்துகொண்டவர்களின் தொகையைச் சீக்கிரத்தில் நிறைவாக்கவும், உம்முடைய ராஜ்யத்தைத் தீவிரமாய் வருவிக்கவும் கிருபைகூர்ந்து கட்டளையிட்டருளும். உம்முடைய பரிசுத்த நாமத்தைப் பற்றும் மெய்விசுவாசமுள்ளவர்களாய் மரித்த அனைவரோடுங்கூட நாங்களும் என்றுமுள்ள உமது நித்திய மகிமையிலே சரீரத்திலும் ஆத்துமத்திலும் குறைவின்றிச் சம்பூரணம் அடைந்தவர்களாய் ஆநந்தத்தை அநுபவிக்கும்படி, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமென்.**

சுருக்கஜெபம்.

இரக்கமுள்ள தேவனே, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவே, அவரே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறார், அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். உயிரோடிருக்கையில் அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ அவன் ஒருக்காலும் மரிக்கமாட்டான். அவருக்குள் நித்திரையடைந்தவர்களைக்குறித்து நம்பிக்கையற்றவர்களைப்போலத் துக்கப்படாதபடி, தம்முடைய பரிசுத்த அப்போஸ்தலனாகிய பவுலைக்கொண்டு எங்களுக்குக் கற்பித்திருக்கிறாரே. பிதாவே, எங்கள் சகோதரனா (ரியா) கிய இவன் (ள்) கிறிஸ்துவினிடத்தில் சேர்ந்து இளைப்பாறுகிறான் (ள்) என்று நாங்கள் நம்புகிறதுபோல, இம்மையைவிட்டுப் போகும்போது, நாங்களும் அவரிடத்தில் சேர்ந்து இளைப்பாறவும், மரித்தோர் உயிர்த்தெழும்பும் கடைசிநாளிலே உம்முடைய சமுகத்தில் பிரியமுள்ளவர்களாய்க் காணப்படவும்; உம்முடைய பிரிய குமாரன் உம்மிடத்தில் அன்பாயும் பயபக்தியாயுமிருக்கிற யாவரையும் நோக்கி: வாருங்கள், என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானதுமுதல் உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள் என்று அருளிச்செய்யும் ஆசீர்வாதத்தைப்பெற்று அநுபவிக்கவும்; நீதியாகிய ஜீவனை அடைய, பாவமாகிய மரணத்தினின்று எங்களை உயிர்ப்பித்தருளவேண்டுமென்று பணிவாய் வேண்டிக்கொள்ளுகிறோம். இரக்கமுள்ள பிதாவே, எங்கள் மத்தியஸ்தரும் மீட்பருமாகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் இதைக் கட்டளையிட்டருளும். **ஆமென்.**

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்தஆவியினுடைய ஐக்கியமும், நம்மனைவரோடுங்கூட எப்போதைக்கும் இருப்பதாக. **ஆமென்.**

---

THE

THANKSGIVING OF WOMEN AFTER CHILD-BIRTH,

COMMONLY CALLED,

# THE CHURCHING OF WOMEN.

ஸ்திரீகள் பிரசவித்தபின்பு,

## கோவிலுக்கு வரும்போது செய்யவேண்டிய ஸ்தோத்திரம்.

¶ ஸ்திரீயானவள் பிரசவித்துப் போதுமானகாலம் சென்றபின்பு, சுத்தவஸ்திரம் தரித்துக் கோவிலுக்கு வந்து, வழக்கமாய்க் குறித்திருக்கிற இடத்திலாவது, அத்தியட்சர் நியமிக்கிற இடத்திலாவது, முழங்கால்படியிட்டிருக்க, குருவானவர் அவளை நோக்கிச் சொல்லவேண்டியதாவது:

சர்வவல்லமையுள்ள தேவன் தம்முடைய கிருபையினாலே பேறுகாலத்துக்குரிய மிகுந்த ஆபத்தினின்று உன்னை இரட்சித்து, சுகமான பிரசவத்தை உனக்கு அருளிச்செய்திருக்கிறதினால், நீ மனதார அவருக்கு ஸ்தோத்திரம்செலுத்திச் சொல்லவேண்டியதாவது:

(¶ அப்பொழுது குருவானவர் 116-ம் சங்கீதத்தைச் சொல்லவேண்டும்.)

*Dilexi, quoniam.*

கர்த்தர் என் சத்தத்தையும் என் விண்ணப்பத்தையும் கேட்டதினால்: அவரில் அன்புகூருகிறேன்.

அவர் தமது செவியை எனக்குச் சாய்த்தபடியால்: நான் உயிரோடிருக்குமளவும் அவரைத் தொழுதுகொள்ளுவேன்.

மரணக்கட்டுகள் என்னைச் சுற்றிக்கொண்டது: பாதாள இடுக்கண்கள் என்னைப் பிடித்தது; இக்கட்டையும் சஞ்சலத்தையும் அடைந்தேன்:

அப்பொழுது நான் கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு: கர்த்தாவே, என் ஆத்துமாவை விடுவியும் என்று கெஞ்சினேன்.

கர்த்தர் கிருபையும் நீதியுமுள்ளவர்: நம்முடைய தேவன் மன உருக்கமானவர்.

கர்த்தர் கபடற்றவர்களைக் காக்கிறார்: நான் மெலிந்துபோனேன், அவர் என்னை இரட்சித்தார்.

என் ஆத்துமாவே, கர்த்தர் உனக்கு நன்மைசெய்தபடியால்: நீ உன் இளைப்பாறுதலுக்குத் திரும்பு.

என் ஆத்துமாவை மரணத்துக்கும்: என் கண்ணைக் கண்ணீருக்கும், என் காலை இடறுதலுக்கும் தப்புவித்தீர்.

நான் கர்த்தருக்கு முன்பாக: ஜீவனுள்ளோர் தேசத்திலே நடப்பேன்.

விசுவாசித்தேன், ஆகையால் பேசுகிறேன்; நான் மிகுதியும் வருத்தப்பட்டேன்: எந்த மனுஷனும் பொய்யன் என்று என் மனக்கலக்கத்திலே சொன்னேன்.

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும்: அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்.

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு: கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொள்ளுவேன்.

நான் கர்த்தருக்குச் செய்த பொருத்தனைகளை அவருடைய ஜனங்கள் எல்லாருக்கு முன்பாகவும் செலுத்துவேன்: கர்த்தருடைய ஆலயத்தின் பிராகாரங்களிலும்; எருசலேமே, உன் நடுவிலும் நிறைவேற்றுவேன். அல்லேலூயா.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அல்லது, *Nisi Dominus.* 127. சங்கீதம்.

கர்த்தர் வீட்டைக் கட்டாராகில்: அதைக் கட்டுகிறவர்களின் பிரயாசம் விருதா.

கர்த்தர் நகரத்தைக் காவாராகில்: காவலாளர் விழித்திருக்கிறது விருதா.

நீங்கள் அதிகாலையில் எழுந்து, நேரப்பட வேலையிலே தரித்து; வருத்தத்தின் அப்பத்தைச் சாப்பிடுகிறதும் விருதா: அவரே தமக்குப் பிரியமானவனுக்கு நித்திரையை அளிக்கிறார்.

இதோ, பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம்: கர்ப்பத்தின் கனி அவரால் கிடைக்கும் பலன்.



வாலவயதின் குமாரர்: பலவான் கையிலுள்ள அம்புகளுக்கு ஒப்பாயிருக்கிறார்கள்.

அவைகளால் தன் அம்புறாத்தூணியை நிரப்பின புருஷன் பாக்கியவான்: அவர்கள் நாணமடையாமல் ஒலிமுகவாசலிலே சத்துருக்களோடே பேசுவார்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

அப்பொழுது குருவானவர் சொல்வது.

ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்றுதாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

குரு: கர்த்தாவே, உம்முடைய அடியாளாகிய இந்த ஸ்திரீயை இரட்சியும்.

மறுமொழி: தன் நம்பிக்கையை உம்மிடத்தில் வைத்திருக்கிறாள்.

குரு: இவளுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: சத்துருவின் முகத்துக்கு இவளை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு: ஜெபம்பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது அடியாளாகிய இந்த ஸ்திரீயைப் பேறுகாலத்துக்குரிய மிகுந்த வேதனையிலும் மோசத்திலும் நின்று இரக்

கமாய் இரட்சித்ததற்காக, தாழ்மையாய் ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். இரக்கமுள்ள பிதாவே, இவள் உமது சகாயத்தினாலே இம்மையில் விசுவாசமுள்ளவளாய், உமது சித்தத்திற்கு ஏற்றபடி நடக்கவும், மறுமையில் நித்திய மகிமையைப் பெற்று அநுபவிக்கவும் கிருபைசெய்யவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

*¶ ஸ்தோத்திரம் செலுத்த வந்திருக்கிற ஸ்திரீயானவள் வழக்கப்படி காணிக்கை செலுத்தவேண்டும். மேலும் பரிசுத்த நற்கருணை பரிமாறுகிற தருணமாயிருந்தால், அவளும் அதை வாங்குகிறது தகுதி.*

# A COMMINATION,

OR

## DENOUNCING OF GOD'S ANGER AND JUDGEMENTS AGAINST SINNERS.

---

# தேவகோபாக்கினை கூறல்.

*அதாவது, லெந்தென்னும் நாட்களில் முதலாம்நாளிலும், அத்தியட்சர் நியமிக்கும் மற்றக் காலங்களிலும், பாவிகள்மேல்வரும் தேவகோபாக்கினைகளைக் கூறி, ஜெபம்பண்ணுதல்.*

---

*¶ காலைஜெபமும் வழக்கப்படி லித்தானியாவும் வாசித்து முடித்து, ஜெபபீடத்திலாவது பிரசங்கபீடத்திலாவது குருவானவர் நின்று சொல்லவேண்டியதாவது:*

சகோதரரே, பூர்வத் திருச்சபையிலே தேவபக்திக்கு ஏதுவான ஒரு முறைமை இருந்தது. அதென்னவென்றால், வெளியரங்கமாய்ப் பாவம் செய்த குற்றவாளிகளுடைய ஆத்துமாக்கள் கர்த்தாவின் நாளில் இரட்சிக்கப்படுவதற்கும், மற்றவர்கள் கண்டு எச்சரிப்படைந்து குற்றஞ்செய்யப் பயப்படுவதற்கும், லெந்தென்னும் நாட்களின் துவக்கத்திலே அப்படிப்பட்டவர்கள் வெளியரங்கமாய்த் தவசுசெய்து இவ்வுலகத்தில் சிட்சைக்குட்பட்டார்கள்.

அந்த முறைமையைத் திரும்பவும் ஏற்படுத்துவது நலமாயிருக்கும். அதுவரைக்கும் அதற்குப் பதிலாகச் செய்யவேண்டுவது என்னவெனில், உபாகமம் இருபத்தேழாம் அதிகாரத்திலும், மற்ற வேதவாக்கியங்களிலும், குணப்படாத பாவிகளுக்கு வரும் தேவசாபத்தைக் காட்டிய வசனங்களைத் தெரிந்தெடுத்து இக்காலத்தில் உங்கள் எல்லாருக்குமுன்பாக வாசிக்கிறதும், ஒவ்வொரு வசனத்திற்கும் நீங்கள் ஆமேன் என்று மறுமொழி சொல்லுகிறதும் நலமென்று தோன்றுகிறது. பாவிகள்மேல் வரும் தேவகோபத்தினால் நீங்கள் எச்சரிப்படைந்து உண்மையாய் மனந்திரும்பவும், மோசமுள்ள இந்த நாட்களில் சாவதானமாய் நடக்கவும், தேவ

சாபத்துக்கு ஏதுவானவைகளென்று நீங்களே வாயினாலே அறிக்கையிடுகிற தீவினைகளை விட்டுவிலகவும், உங்களை ஏவிவிடுவதற்கு அந்த வாக்கியங்களை வாசிக்கவேண்டும்.

வணங்கும்படி சித்திரசொரூபத்தையாவது வார்ப்புவிக்கிரகத்தையாவது செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.

¶ ஜனங்கள் மறுமொழியாக ஆமென், என்று சொல்லவேண்டும்.

குரு: *தன் தகப்பனையும் தன் தாயையும் தூஷிக்கிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *குருடனை வழிதப்பச் செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *அந்நியர் திக்கற்றவர் விதவைகள் ஆகிய இவர்களுடைய நியாயத்தைப் புரட்டுகிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *ஒளிப்பிடத்திலே பிறனைக் கொலைசெய்கிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *பிறனுடைய மனைவியோடே விபசாரஞ்செய்கிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *குற்றமில்லாதவனைக் கொலைசெய்யும்படி பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *மனுஷன்மேல் நம்பிக்கை வைத்து, மனுஷனைத் தனக்குத் தஞ்சமாக்கிக்கொண்டு, கர்த்தரைவிட்டு விலகிப்போகிற இருதயமுள்ளவன் சபிக்கப்பட்டவன்.*

மறுமொழி: ஆமென்.

குரு: *இரக்கமில்லாதவர்கள், வேசிக்கள்ளர், விபசாரக்காரர், பொருளாசைக்காரர், விக்கிரகாராதனைக்காரர், பின்புறணிக்காரர், வெறியர், அநியாயக்காரர், இவர்கள் சபிக்கப்பட்டவர்கள்.*

மறுமொழி: ஆமென்.



குரு.

*தீர்க்கதரிசியாகிய தாவீது சொல்லுகிறபடி: தேவனுடைய கற்பனைகளைவிட்டு, வழிவிலகினவர்களெல்லாரும் சபிக்கப்பட்ட*
சங். 119. 21. *வர்களானதால், பயங்கரமான கோபாக்கினை நமது தலைமேல் விழுவதற்கு ஏதுவாயிருக்கிறதென்று நினைத்து, நாம் செய்த குற்றங்களை ஒத்துக்கொண்டு, அறிக்கையிட்டு, நமது துர்நடக்கைக்காகப் புலம்பி அழுது, மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுக்கும்படி கவலைப்பட்டு, சாந்தமும் நொறுங்குண்டதுமான இருதயத்தோடே நம்முடைய கர்த்தராகிய தேவனிடத்தில் திரும்பக்கடவோம். நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போ*
மத். 3. 10. *டப்படும்படிக்கு, இப்பொழுதே கோடரி மரங்களின் வேர் அருகே வைத்திருக்கிறது. ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழு*
எபி. 10. 31. *கிறது பயங்கரமாயிருக்கிறது. அவர் துன்மார்க்கர்மேல்*
சங். 11. 6. *கண்ணிகளை வருஷிக்கப்பண்ணுவார்; அக்கினியும் கந்தகமும் கடுங்கோடைக் கொந்தளிப்பும் அவர்கள் குடிக்கும் பாத்திரத்தின் பங்கு. இதோ, பூமியினுடைய குடிகளின் அக்கிரமத்தி*
ஏசா. 26. 21. *னிமித்தம் அவர்களை விசாரிக்கும்படி கர்த்தர் தம்முடைய ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருவார். அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்?*
மல். 3. 2.
மத். 3. 12. *தூற்றுக்கூடை அவர் கையில் இருக்கிறது; அவர் தமது களத்தை நன்றாய் விளக்கி, தமது கோதுமையைக் களஞ்சியத்தில் சேர்ப்பார்; பதரையோ அவியாத அக்கினியினால் சுட்டெரிப்பார். இரவிலே திருடன் வருகிறவிதமாய்க் கர்த்தருடைய நாள்*
1 தெச. 5. 2, 3. *வரும். சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று மனிதர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனைவருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும், அவர்கள் தப்பிப்போவதில்லை. குணப்படும்படிக்கு அடிக்கடி வரவழைத்த தேவ*
ரோ. 2. 4, 5. *னுடைய இரக்கத்தையும், பொறுமையையும், நீடிய சாந்தத்தையும், அசட்டைபண்ணின முரட்டுப்பாவிகள் இருதயகடினத்தினாலே தங்கள்மேல் குவித்துக்கொண்ட தேவகோபமானது ஆக்கினை செலுத்தும்நாளிலே விளங்கும். அப்பொழுது*
நீதி. 1. 28—30. *அவர்கள் என்னை நோக்கிக் கூப்பிடுவார்கள், நான் மறுஉத்தரவு கொடுக்கமாட்டேன்; அவர்கள் அதிகாலையிலே என்னைத் தேடுவார்கள், என்னைக் காணமாட்டார்கள். அவர்கள் அறிவை வெறுத்தார்கள், கர்த்தருக்குப் பயப்படுதலைத் தெரிந்துகொள்ளாமற்போனார்கள். என் ஆலோசனையை அவர்கள் விரும்பவில்லை; என் கடிந்துகொள்ளுதலையெல்லாம் அசட்டைபண்ணினார்கள் என்று கர்த்தர் சொல்*

லுகிறார். கதவு பூட்டினபின்பு தட்டுகிறது வீணாயிருக்குமே. ஆக்கினை
செலுத்துங்காலத்தில் இரக்கத்துக்காகக் கெஞ்சிக்கேட்
மத். 25. 10—12, 41. கிறதற்குக் காலம் கடந்துபோயிருக்கும். சபிக்கப்பட்ட
வர்களே, பிசாசுக்காகவும், அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம்பண்ணப்
பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள் என்று நீதியுள்ள தீர்ப்பைக்
கூறுகிற சத்தம், ஐயோ, எத்தனை பயங்கரமாயிருக்கும்.
யோ. 9. 4, 5. 2கொ. 6. 2. ஆகையால் சகோதரரே, ஒருவனும் கிரியைசெய்யக்கூ
டாத இராக்காலம் வருவதால், நமக்கு இரட்சணியபகல்
கடந்துபோகுமுன்னமே எச்சரிக்கையாய் நடக்கக்கடவோம். அழுகை
யும் பற்கடிப்புமுள்ள புறம்பான இருளிலே நாம் தள்ளப்
மத். 25. 30. படாதபடி, நமக்கு வெளிச்சம் இருக்குமளவும் வெளிச்
சத்தில் விசுவாசமாயிருந்து, வெளிச்சத்தின் பிள்ளைகளாக
நடக்கக்கடவோம். மனதார உண்மையுள்ள இருதயத்தோடே நம்மிடத்
திற்குத் திரும்பினால், முன் செய்த பாவங்களை அளவற்ற தமது இரக்கத்
தினாலே மன்னிப்போம் என்று வாக்குத்தத்தஞ்செய்து, குணப்படும்படிக்கு
நம்மை இரக்கமாய் அழைக்கிற தேவனுடைய தயவை அசட்டைபண்ணா
திருப்போமாக. நமது பாவங்கள் சிவேரென்றிருந்தா
ஏசா. 1. 18. லும் உறைந்த மழையைப்போல் வெண்மையாகும்; அவை
கள் இரத்தாம்பரச் சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போல் வெண்மையா
கும். உங்கள் துன்மார்க்கத்தை விட்டுத் திரும்புங்கள்;
எசே. 18. 30—32. அப்பொழுது அக்கிரமம் உங்கள் கேட்டுக்குக் காரண
மாயிருப்பதில்லை. நீங்கள் செய்த பாதகங்களெல்லாவற்
றையும் உங்களைவிட்டு அகற்றி, உங்களுக்குப் புது இருதயத்தையும் புது
ஆவியையும் உண்டுபண்ணிக்கொள்ளுங்கள். இஸ்ரவேல் வம்சத்தாரே,
மனந்திரும்புங்கள், அப்பொழுது நீங்கள் பிழைப்பீர்கள்; நீங்கள் ஏன்
சாகவேண்டும்? சாகிறவனுடைய சாவை நான் விரும்புகிறதில்லை என்று
கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். நாம் பாவஞ்செய்
யோ. 2. 1, 2. திருந்தும் நீதிபரராகிய இயேசுகிறிஸ்து நமக்காகப் பிதா
வினிடத்தில் பரிந்துபேசுகிறவராயிருக்கிறார். நம்முடைய பாவங்களை
நிவிர்த்திசெய்கிற கிருபாதாரபலி அவரே. நம்முடைய
ஏசா. 53. 5. மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய
அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். ஆகையால், நாம்
உண்மையாய்க் குணப்பட்டு, அவரிடத்தில் சேர்ந்து, அவருக்குக் கீழ்ப்
படிந்து, இனி அவருடைய வழிகளில் நடந்து, அவரு
மத். 11. 29, 30. டைய மெதுவான நுகத்தையும் இலேசான சுமையையும்
ஏற்றுக்கொண்டு, தாழ்மையோடும் பொறுமையோடும் அன்
போடும் அவருக்குப் பின்சென்று, அவருடைய பரிசுத்த ஆவியினாலே
நடத்தி ஆளப்பட்டு, அவருக்கு மகிமை உண்டாக எப்பொழுதும் விருப்



பமுற்று, நாம் அழைக்கப்பட்ட நிலைமையில் நன்றியறிதலோடே அவ
ரை ஏற்றவிதமாய்ச் சேவிப்போமாகில், அவர் நம்முடைய பாவங்களை
மன்னிக்கிறதற்குச் சித்தமுள்ளவரும் நம்மை ஏற்றுக்கொள்ளுகிறதற்கு
ஆயத்தமுள்ளவருமாயிருக்கிறார். நாம் இது நிச்சயம் என்று அறிந்திருப்
பதினால், உண்மையாய்க் குணப்படுகிற பாவிகளை இரக்கமாய் அங்கிக
மத். 25. 39, 54. ரிக்கிற அவரிடத்திற்குத் திரும்பக்கடவோம். இப்படிச்
செய்தால், இடதுபக்கத்தில் நிறுத்தப்படுகிறவர்களுக்குக்
கூறப்படும் கொடிய ஆக்கினைத்தீர்ப்பினின்றும், நியாயப்பிரமாணத்தின்
சாபத்தினின்றும் கிறிஸ்துவானவர் நம்மை விடுதலையாக்கி, நம்மை வலது
பக்கத்தில் நிறுத்தி, தமது பிதாவினுடைய கிருபையுள்ள ஆசீர்வாதத்தை
நமக்குத் தந்தருளி, மகிமையுள்ள தமது ராஜ்யத்தைச் சுதந்தரிக்கும்படி
கட்டளையிடுவார். அந்த ராஜ்யத்தில் அவர் தமது அளவில்லாத இரக்
கத்தினால் நம்மெல்லாரையும் சேர்த்துக்கொள்வாராக. ஆமென்.

*¶ பின்பு எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, குருவானவரும் மற்றக் குருக்களும் (லித்தானியாவை வழக்கமாய் வாசிக்கிற இடத்தில்) முழங்கால்படியிட்டு, சொல்லவேண்டிய சங்கீதமாவது:*

## *Miserere mei, Deus.* 51. சங்கீதம்.

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்: உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்.

என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி: என் பாவமற என்னைச் சுத்திகரியும்.

என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்: என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது.

தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன்: நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன்.

இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.

இதோ, உள்ளத்தில் உண்மையிருக்க விரும்புகிறீர்: அந்தக்கரணத்தில் ஞானத்தை எனக்குத் தெரியப்படுத்துவீர்.

நீர் என்னை ஈசோப்பால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன். என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்.

நான் சந்தோஷமும் மகிழ்ச்சியும் கேட்கும்படி செய்யும்: அப்பொழுது நீர் நொறுக்கின எலும்புகள் களிகூரும்.

என் பாவங்களைப் பாராதபடிக்கு நீர் உமது முகத்தை மறைத்து: என் அக்கிரமங்களையெல்லாம் நீக்கியருளும்.

தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்: நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்.

உமது சமுகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்: உமது பரிசுத்தஆவியை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாமலும் இரும்.

உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து: உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும்.

அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப்பேன்: பாவிகள் உம்மிடத்தில் மனந்திரும்புவார்கள்.

தேவனே, என்னை இரட்சிக்கும் தேவனே, இரத்தப்பழிகளுக்கு என்னை நீங்கலாக்கிவிடும்: அப்பொழுது என் நாவு உம்முடைய நீதியைக் கெம்பீரமாய்ப் பாடும்.

ஆண்டவரே, என் உதடுகளைத் திறந்தருளும்: அப்பொழுது என் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பலியை நீர் விரும்புகிறதில்லை, விரும்பினால் செலுத்துவேன்: தகன பலியும் உமக்குப் பிரியமானதல்ல.

தேவனுக்கு எற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்: தேவனே, நொறுங்குண்டதும் நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்.

சீயோனுக்கு உமது பிரியத்தின்படி நன்மைசெய்யும்: எருசலேமின் மதில்களைக் கட்டுவீராக.

அப்பொழுது தகனபலியும் சர்வாங்க தகனபலியுமாகிய நீதியின் பலிகளில் பிரியப்படுவீர்: அப்பொழுது உமது பீடத்தின்மேல் காளைகளைப் பலியிடுவார்கள்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;
மறுமொழி: ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.



குரு: கர்த்தாவே, உம்முடைய அடியாராகிய எங்களை இரட்சியும்.
மறுமொழி: நாங்கள் உம்மிடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம்.
குரு: உன்னதத்திலிருந்து எங்களுக்குச் சகாயத்தை அனுப்பும்.
மறுமொழி: எப்பொழுதும் எங்களை வல்லமையோடே காத்தருளும்.
குரு: எங்கள் இரட்சகராகிய தேவனே, எங்களை ஆதரியும்.
மறுமொழி: பாவிகளாகிய எங்களுக்கு உமது நாமத்தினிமித்தம் இரங்கும்; உமது நாமத்துக்கு மகிமையுண்டாக எங்களை இரட்சியும்.
குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.
மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேருவதாக.

குரு. ஜெபம்பண்ணக்கடவோம்.

கர்த்தாவே, பாவத்தைக்குறித்து மனச்சாட்சியினால் குற்றஞ்சாட்டப்பட்ட நாங்களெல்லாரும் தேவரீர் இரக்கமாய் அருளிச்செய்யும் மன்னிப்பினால் பாவவிமோசனம் அடையும்படிக்கு, எங்கள் ஜெபங்களை இரக்கமாய்க்கேட்டு, உம்மிடத்தில் பாவங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையாயிருக்க வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இரக்கமுள்ள பிதாவே, நீர் உண்டாக்கினவைகளில் ஒன்றையும் பகையாமல் எல்லா மனிதர்மேலும் இரக்கமுள்ளவராயிருக்கிறீர்; பாவியின் மரணத்தை நீர் விரும்பாமல் அவன் தன் பாவத்தைவிட்டுத் திரும்பி இரட்சிக்கப்படுகிறதையே விரும்புகிறீர். எங்கள் குற்றங்களை இரக்கமாய் மன்னியும், பாவச்சுமையினாலே சஞ்சலப்பட்டுத் தவிக்கிற எங்களை எற்றுக்கொண்டு ஆறுதல் செய்யும். எப்பொழுதும் இரக்கமாயிருக்கிறது உமக்கு இலட்சணம், பாவங்களை மன்னிக்கிறது உமக்கே உரியது. நீர் மீட்டுக்கொண்ட உமது ஜனமாகிய எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே, இரங்கிப்பொறுத்தருளும்; அற்பமண்ணும் நீசப் பாவிகளுமாகிய உம்முடைய அடியார்களை நியாயந்தீர்க்கப் பிரவேசியாதேயும். எங்கள் அக்கிரமத்தைத் தாழ்மையாய் அறிக்கையிட்டு, பாவங்களுக்காக உண்மையாய்த் துக்கப்படுகிற எங்களை விட்டு உமது கோபத்தை விலக்கி, நாங்கள் மறுமையில் உம்மோடே என்றும் வாழ்ந்திருக்கும்படி, தேவரீர் தீவிரமாய் இம்மையில் எங்களுக்குச் சகாயஞ்செய்தருளும். எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமேன்.

¶ அப்பொழுது குருவானவர் சொல்ல ஜனங்களுங்கூடச் சொல்லவேண்டியதாவது:

தயவுள்ள கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம். அழுகையோடும் உபவாசத்தோடும் ஜெபத்தோடும் உம்மிடத்தில் திரும்புகிற உமது ஜனமாகிய எங்கள்மேல் கிருபையாயிரும், கிருபையாயிரும் கர்த்தாவே. நீர் இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும் சம்பூரணதயவும் நிறைந்த தேவன். தண்டனைக்குப் பாத்திரராயிருக்கிற எங்கள்மேல் பொறுமையாயிருக்கிறீர். கோபங்கொள்ளுகிற காலத்திலேயும் இரக்கத்தை நினைவுகூருகிறீர். உமது ஜனத்துக்கு இரங்கிப் பொறுத்தருளும், கர்த்தாவே, இரங்கிப் பொறுத்தருளும். உம்முடைய சுதந்தரமாகிய நாங்கள் கலங்காதபடி செய்யும். உமது இரக்கம் மிகுதியாயிருப்பதினால், கர்த்தாவே, எங்களுக்குச் செவிகொடும். திரளான உமது இரக்கங்களின்படியே எங்களை நோக்கிப்பாரும். உம்முடைய குமாரனும் எங்கள் புண்ணியநாதருமாகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினிமித்தம் இதை அநுக்கிரகித்தருளும். ஆமென்.

¶ அப்பொழுது குருவானவர்மாத்திரம் சொல்வது.

கர்த்தர் நம்மை ஆசீர்வதித்துக் காக்கக்கடவர். கர்த்தர் தமது திருமுகப்பிரகாசத்தை நம்மேல் வீசச்செய்து, இப்பொழுதும் எப்பொழுதும் நமக்குச் சமாதானம் தரக்கடவர். ஆமேன்.

THE FORM AND MANNER OF MAKING, AND ORDAINING

OF

# PRIESTS AND DEACONS,

ACCORDING TO THE ORDER OF THE CHURCH OF ENGLAND.

---

இங்கிலாந்துதேசத்துத் திருச்சபையில்

வழங்கி வருகிற ஒழுங்கின்படி

# குருப்பட்டமும் உதவிக்குருப்பட்டமும் கொடுக்கும் முறைமை.

## முகவுரை.

பரிசுத்த வேதவாக்கியங்களையும் பூர்வ ஆசிரியர் எழுதின நூல்களையும் உற்று வாசிக்கிற யாவரும், அப்போஸ்தலருடைய காலம்முதல் கிறிஸ்து சபையில் அத்தியட்சர், குருமார், உதவிக்குருமார் ஆகிய மூவகைப் பட்டம்பெற்ற வெவ்வேறான பணிவிடைக்காரர்கள் இருந்திருக்கிறார்களென்று தெளிவாக அறிந்துகொள்வார்கள். அந்தப் பட்டங்கள் எப்பொழுதும் கனமாக மதிக்கப்பட்டிருக்கிறபடியால், ஒருவன் முந்தி அழைக்கப்பட்டும், சோதிக்கப்பட்டும், பரிட்சிக்கப்பட்டும், பட்டம் பெறுவதற்கு ஏற்ற லட்சணங்களை உடையவனென்று காணப்பட்டும், இதற்கென்று அதிகாரம் பெற்றவர்களால் சபையில் ஜெபம்பண்ணி, சிரசின்மேல் கைகளை வைத்து, பட்டத்துக்குத் தெரிந்து ஏற்படுத்தப்பட்டும் இருந்தாலொழிய, மற்றப்படி ஒருவனும் தானாய் இந்தப் பணிவிடைகளில் ஒன்றையும் செய்யத் துணியலாகாது. ஆதலால் இங்கிலாந்துதேசசபையில் இந்தப் பட்டங்கள் நிலைபெற்றுக் கிரமமாய் வழங்கி மதிக்கப்படும்பொருட்டு, பின்சொல்லப்படுகிற ஒழுங்கின்படி ஒருவன் அழைக்கப்பட்டு, சோதிக்கப்பட்டு, பரிட்சிக்கப்பட்டு சேர்க்கப்படவேண்டும். அல்லது இதற்குமுன் அத்தியட்சருடைய அதிகாரமுறையாய்ப் பட்டம் பெற்றிருக்கவேண்டும். மற்றப்படி ஒருவனும் இங்கிலாந்துசபை ஒழுங்கின்படி, அத்தியட்சர் என்றாவது, குரு என்றாவது, உதவிக்குரு என்றாவது எண்ணப்படக்கூடாது.

விசேஷித்த உத்தரவு கிடைத்திருந்தாலொழிய ஒருவருக்கும் 23 வயதாகிறதற்குமுன் உதவிக்குருப்பட்டம் கொடுக்கப்படாது. குருப்பட்டம் பெறுகிறவர் 24 வயதுக்குக் குறையாதவராயிருக்கவேண்டும். அத்தியட்சத்துவத்துக்குப் பிரதிஷ்டைசெய்யப்படுகிறவர் 30 வயதுக்குக் குறையாதவராயிருக்கவேண்டும்.

ஒருவர் குற்றமில்லாத நடக்கையும் நல்லொழுக்கமும் உடையவராயிருக்கிறரென்று அத்தியட்சர் தாமே அறிந்தபின், அல்லது தகுந்த சாட்சியால் கேட்டு அறிந்தபின், அவரைப் பரிட்சித்து, சோதித்து, அவர் லத்தீன்பாஷை படித்தவரும், வேத அறிவில் தேறினவரும் என்று கண்டால், கனோன் சட்டத்தில் குறிக்கப்பட்ட காலத்திலாவது, அவசரம் நேரிட்டால் வேறெந்த ஞாயிற்றுக்கிழமையில் அல்லது திருநாளிலாவது, சபையாருக்கு முன்பாக, பின்வரும் முறைமையின்படி அவருக்கு உதவிக்குருப்பட்டம் கொடுக்கலாம்.

# THE FORM AND MANNER OF MAKING OF DEACONS.

## உதவிக்குருப்பட்டம் கொடுக்கும் முறைமை.

¶ அத்தியட்சர் குறித்த நாளில் காலைஜெபம் முடிந்தபின், உதவிக்குருப்பட்டம்பெற வருகிறவர்களுடைய உத்தியோகம் கடமை இன்னதென்றும், இந்த முறைமை கிறிஸ்துசபையில் மிகவும் அவசியமானதென்றும், இந்தப் பட்டம் பெறுகிறவர்களை ஜனங்கள் கனம்பண்ணவேண்டுமென்றும் காட்டும்படி பிரசங்கம் செய்யவேண்டும்.

---

¶ திருமேஜையண்டையில் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அத்தியட்சருக்கு முன்பாக, சிரேஷ்ட குருவாகிய ஆர்ச்சுடீக்கனாவது, அத்தியட்சரால் நியமிக்கப்பட்ட குருக்களில் வேறொருவராவது, உதவிக் குருப்பட்டம் பெறப்போகிறவர்களை யோக்கியமாய் உடுக்கப்பட்டவர்களாக நிறுத்தி, சொல்லவேண்டியதாவது:

கர்த்தருக்குள் சங்கைபொருந்திய தகப்பனே, உதவிக்குருப்பட்டம் பெறுவதற்கு இவர்களை உம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிறேன்.

### அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் நம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிற இவர்கள் தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய சபை பக்திவிர்த்தியடையவும், கல்வியினாலும் பக்தியுள்ள நடக்கையினாலும் தங்கள் பணிவிடையை நடத்த தகுந்தவர்களாயிருக்கிறார்களா என்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

¶ அதற்குச் சிரேஷ்ட குரு மறுமொழியாகச் சொல்வது:

இவர்களைக்குறித்து நான் விசாரித்தும், இவர்களைப் பரிட்சித்தும் இருக்கிறேன்; இவர்கள் தகுந்தவர்களாயிருக்கிறார்களென்று எண்ணுகிறேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் ஜனங்களைப்பார்த்துச் சொல்வது:

சகோதரரே, இப்பொழுது ~~உதவிக்குரு~~ப்பட்டம் பெறுவதற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிற இவர்களில் யாராவது, இந்தத் திருப்பணிவிடை செய்யும்படி பட்டம்-பெறக்கூடாததற்குக் காரணமான யாதொரு தடையாவது, வெளிப்படையான குற்றமாவது உண்டென்று உங்களில் யாராவது அறிந்திருந்தால், அவன் தேவனுடைய நாமத்தை முன்னிட்டுவந்து, அந்தக் குற்றம் அல்லது தடை இன்னதென்று சொல்லக்கடவன்.

¶ ஒருவன்மேல் யாதொரு பெரிய குற்றமாவது தடையாவது சொல்லப்பட்டால், அவன் அதற்கு நீங்கினவனென்று தெளிவாகும்வரையும் அத்தியட்சர் அவனுக்குப் பட்டங்கொடாமல் நிறுத்திவைக்கவேண்டும்.

¶ அப்பொழுது பட்டம் பெறத் தகுந்தவர்களென்று காணப்படுகிறவர்களுக்காக, சபையார் ஜெபம்பண்ணவேண்டுமென்று அத்தியட்சர் கேட்டுக்கொண்டதின்பேரில், அவரும் குருமாரும் சபையாரும் லித்தானியா முதலிய ஜெபங்களைப் பாட அல்லது சொல்லவேண்டும்.

## லித்தானியா என்னும் சாதாரணப் பிரார்த்தனை.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

தேவனாகிய பரமபிதாவே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

லோக மீட்பராயிருக்கிற தேவனாகிய குமாரனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்தஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற தேவனாகிய பரிசுத்த ஆவியே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

பரிசுத்தமும் ஆநந்தமும் மகிமையுமுள்ள திரித்துவமே, மூவராகிய ஏக தேவனே: ஏழைப்பாவிகளாகிய எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்கள் குற்றங்களையும் எங்கள் முன்னோர் குற்றங்களையும் நினையாதேயும்; எங்கள் பாவங்களுக்குத்தக்க தண்டனை செய்யாதேயும்: தயவுள்ள கர்த்தாவே, எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும்; மகா விலையுயர்ந்த உமது இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உம்முடைய ஜனமாகிய எங்கள்மேல் என்றைக்கும் கோபமாயிராமல், இரங்கிப் பொறுத்தருளும்.

எங்களுக்கு இரங்கிப் பொறுத்தருளும், தயவுள்ள கர்த்தாவே.



சகல தீமையிலும் ஆபத்திலும் நின்றும்; பாவத்திலும் பிசாசின் தந்திரங்களிலும் விரோதங்களிலும் நின்றும்; உம்முடைய கோபத்திலும் நித்திய ஆக்கினையிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இருதயக் குருட்டாட்டத்தில் நின்றும்; அகந்தையிலும் வீண்பெருமையிலும் மாயத்திலும் நின்றும்; பொறாமையிலும் பகையிலும் வர்மத்திலும், சகலவித அன்புத்தாழ்ச்சியிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

விபசாரத்திலும் மரணத்துக்கேதுவான மற்றெல்லாப் பாவத்திலும் நின்றும்; உலகத்தினாலும் மாம்சத்தினாலும் பிசாசினாலும் வருகிற சகல வஞ்சகங்களிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

இடியிலும் பெருங்காற்றிலும் நின்றும்; பெருவாரி விஷவியாதிகளிலும் பஞ்சத்திலும் நின்றும்; யுத்தத்திலும் கொலையிலும் சடிதியில் வரும் மரணத்திலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகலவித கலகத்திலும், அதிகாரிகளுக்கு விரோதமான கட்டுப்பாட்டிலும், ராஜதுரோகத்திலும் நின்றும்; சகலவித பொய்ப்போதகத்திலும் வேதப்புரட்டிலும், சபைப்பிரிவினையிலும் நின்றும்; இருதய கடினத்திலும், உமது வசனத்தையும் கற்பனையையும் அசட்டைபண்ணும் துணிவிலும் நின்றும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய பரிசுத்த மனுஷாவதார இரகசியத்தினிமித்தமும்; உமது பரிசுத்தப் பிறப்பு விருத்தசேதனத்தினிமித்தமும்; உமது ஞானஸ்நானம் உபவாசம் சோதனையினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவரீருடைய மனவேதனை இரத்தவேர்வையினிமித்தமும்; உமது சிலுவைபாடுகளினிமித்தமும்; உமது அருமையான மரணத்தினிமித்தமும், நீர் அடக்கம்பண்ணப்பட்டதினிமித்தமும்; மகிமையோடே உயிர்த்தெழுந்து பரமண்டலத்துக்கு ஏறினதினிமித்தமும்; பரிசுத்தஆவி வந்ததினிமித்தமும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

துக்கப்படுங்காலத்திலும், சுகப்படுங்காலத்திலும், மரணவேளையிலும், நியாயத்தீர்ப்புநாளிலும்,

எங்களை இரட்சித்தருளும், தயவுள்ள கர்த்தாவே.

கர்த்தராகிய தேவனே, பாவிகளாகிய எங்களுக்குச் செவிகொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்; எங்குமுள்ள உமது பரிசுத்த சபையைச் சத்தியமார்க்கத்தில் நடத்தி ஆளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உமது பணிவிடைக்காரியாகிய **விக்த்தோரியா** என்னும் எங்கள் காருணிய சக்கிரவர்த்தினி உம்மைச் செம்மையாய் ஆராதிக்கவும், நீதியும் பரிசுத்தமுமாய் நடக்கவும், அவளைக் காத்து ஸ்திரப்படுத்தவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருடைய இருதயத்தை உம்மைப் பற்றும் விசுவாசத்திலும் பயத்திலும் அன்பிலும் ஆண்டு நடத்தி; அவர் எப்பொழுதும் உம்மிடத்தில் நம்பிக்கையாயிருக்கவும், உம்முடைய கனத்தையும் மகிமையையும் எப்பொழுதும் நாடவும் கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அவருக்குச் சகாயரும் இரட்சகருமாயிருந்து, சத்துருக்கள் எல்லாரையும் ஜெயங்கொள்ள அவருக்குத் தயைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசனையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பம் அனைத்தையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

அத்தியட்சமார், குருமார், உதவிக்குருமார் யாவருக்கும், உமது வசனத்தைப்பற்றிய மெய்யறிவாகிய பிரகாசத்தை அளித்து; அவர்கள் பிரசங்கத்திலும் நடக்கையினாலும் அவ்வசனத்தைத் தகுதியாய்ப் பிரசித்தஞ்செய்து காண்பிக்கும்படி கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

இப்பொழுது உதவிக்குருப்பட்டம் [குருப்பட்டம்] பெறப்போகிற உம்முடைய ஊழியக்காரராகிய இவர்களை ஆசீர்வதித்து, இவர்கள் உமது சபைக்கு பக்திவிருத்தியாகவும் உமது நாமத்துக்கு மகிமையாகவும் செய்யப்போகிற திருப்பணிவிடையை ஏற்றவிதமாய் நடப்பிக்கும்படி, உமது கிருபையை இவர்கள்மேல் பொழிந்தருளவேண்டுமென்று;



நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

ராஜ்ய பரிபாலன ஆலோசனைக் கர்த்தாக்களுக்கும், பிரபுக்கள் அனைவருக்கும், கிருபையையும் ஞானத்தையும் விவேகத்தையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நியாயாதிபதிகளையும் அதிகாரிகளையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றி; அவர்கள் நியாயத்தை நடப்பிக்கவும், சத்தியத்தைப் பரிபாலனம்பண்ணவும், கிருபைசெய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்கள் எல்லாரையும் ஆசீர்வதித்துக் காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

சகல தேசங்களுக்கும் ஒருமையையும், சமாதானத்தையும், ஏகசிந்தையையும் அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நாங்கள் உம்மில் அன்புகூர்ந்து, உமக்குப் பயந்து, உமது கற்பனைகளின்படி ஜாக்கிரதையாய் நடக்க, எங்களுக்கு நல்மனதைக் கொடுக்க வேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

உம்முடைய ஜனங்களெல்லாரும் உமது வசனத்தைச் சாந்தமாய்க் கேட்டு, அன்புடனே உட்கொண்டு, ஆவியின் கனிகளைக் கொடுக்கும்படி, கிருபையை அதிகமதிகமாய்த் தந்தருளவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

வழிதப்பி மோசம்போன யாவரையும் சத்திய வழியில் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

கிறவர்களைப் பலப்படுத்தி, மன ஊக்கமில்லாதவர்களைத் தேற்றி ஆதரித்து, விழுந்தவர்களைக் கைதூக்கி; கடைசியில் சாத்தானை எங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

மோசத்திலும் வறுமையிலும் துன்பத்திலும் அகப்பட்ட யாவருக்கும் ஆதரவையும் சகாயத்தையும் ஆறுதலையும் செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

நிலத்திலும் நீரிலும் யாத்திரைபண்ணுகிற யாவரையும், பிரசவவேதனைப்படுகிற ஸ்திரீகளெல்லாரையும், சகல வியாதிக்காரரையும் குழந்தைகளையும் காப்பாற்றி; காவலில் அடைபட்டவர்கள் சிறைப்பட்டவர்கள் யாவருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தாய்தந்தையில்லாப் பிள்ளைகளையும், கைம்பெண்களையும், திக்கற்றவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள் அனைவரையும், காத்துப் பராமரிக்கவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எல்லா மனுஷருக்கும் இரக்கஞ்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

எங்களைப் பகைக்கிறவர்களுக்கும் துன்பப்படுத்துகிறவர்களுக்கும் அவதூறுபண்ணுகிறவர்களுக்கும் மன்னித்து, அவர்கள் இருதயத்தைத் திருப்பவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

பூமியின் நற்பலன்களை அதனதன் காலத்தில் நாங்கள் அநுபவிக்கும்படி, அவைகளை எங்கள் உபயோகத்துக்காகத் தந்து காப்பாற்றவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.



எங்களுக்கு மெய்யான மனந்திரும்புதலைத் தந்து, எல்லாப் பாவங்களையும் அஜாக்கிரதையையும் அறியாமையையும் மன்னித்து; உமது பரிசுத்த வசனத்தின்படி எங்கள் நடக்கையைச் சீர்ப்படுத்துகிறதற்கு உமது பரிசுத்த ஆவியின் கிருபையை அருளிச்செய்யவேண்டுமென்று;

நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும், தயவுள்ள கர்த்தாவே.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

தேவனுடைய குமாரனே, நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதைக் கேட்டருளும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
உமது சமாதானத்தை எங்களுக்கு அருளிச்செய்யும்.

லோகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியே;
எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, கேட்டருளும்.
கிறிஸ்துவே, கேட்டருளும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்.

¶ இப்பொழுது குருவானவரும் அவரோடேகூட ஜனங்களும் கர்த்தருடைய ஜெபத்தைச் சொல்லவேண்டும்.

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய ராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். ஆமென்.

குரு: கர்த்தாவே, எங்கள் பாவங்களுக்குத்தக்கதாக எங்களைத் தண்டியாதேயும்.

மறுமொழி: எங்கள் அக்கிரமங்களுக்குத்தக்கதாக எங்களுக்குச் சரிக்கட்டாதேயும்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

நொறுங்குண்ட இருதயத்தின் பெருமூச்சையும், துயரப்படுகிறவர்களின் விருப்பத்தையும் புறக்கணியாத தேவனே, இரக்கமுள்ள பிதாவே, துன்பங்களும் இடுக்கண்களும் எங்களை வருத்தும்போதெல்லாம், நாங்கள் உம்மை நோக்கிச் செய்யும் ஜெபங்களைக் கிருபையாய்க் கேட்டருளும்; உமது அடியாராகிய நாங்கள் எந்த உபத்திரவங்களினாலும் சேதப்படாமல், உமது பரிசுத்த சபையில் எப்பொழுதும் உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தும்படியாக, பிசாசும் மனிதரும் எங்களுக்கு விரோதமாக நடப்பிக்கும் உபாய தந்திரங்கள் யாவும் தேவரீருடைய தயவுள்ள விசாரணையினாலே அவமாய்ப் போகும்படி, எங்க்ள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தம் கிருபை செய்தருளும்.

கர்த்தாவே, உமது நாமத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ் செய்து எங்களை இரட்சியும்.

பராபரனே, எங்கள் பிதாக்கள் காலத்திலும், அவர்களுக்கு முந்தின பூர்வகாலத்திலும், தேவரீர் செய்த மகத்தான கிரியைகளை எங்கள் பிதாக்கள் அறிவிக்க, எங்கள் காதுகளால் கேட்டோம்.

கர்த்தாவே, உமது மகிமைப்பிரதாபத்தினிமித்தம் எழுந்தருளி, எங்களுக்குச் சகாயஞ்செய்து, எங்களை இரட்சியும்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

கிறிஸ்துவே, எங்கள் சத்துருக்களை விலக்கி எங்களை இரட்சியும்.

கிருபையாய் எங்கள் உபத்திரவங்களைக் கண்ணோக்கும்.

உருக்கமாய் எங்கள் மனவிசாரங்களைப் பாரும்.

இரக்கமாய் உமது ஜனத்தின் பாவங்களை மன்னியும்.

தயவாய், இரக்கத்துடனே எங்கள் ஜெபங்களைக் கேளும்.

தாவீதின் மைந்தனே, எங்களுக்கு இரங்கும்.

கிறிஸ்துவே, இப்பொழுதும் எப்பொழுதும் செவிகொடுத்தருளும்.

கிறிஸ்துவே, கிருபையாய்க் கேளும்; கிறிஸ்துநாதரே, கிருபையாய்க் கேளும்.



குரு: கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: நாங்கள் உம்மிடத்திலே நம்பிக்கை வைத்திருக்கிறோம்.

ஜெபம்பண்ணக்கடவோம்.

பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப்பார்த்து, நியாயமாய் எங்களுக்கு வரவேண்டிய தீங்குகளெல்லாவற்றையும் உமது நாமத்துக்கு மகிமையுண்டாக விலக்கி, எங்களுக்கு நேரிடும் எல்லாத் துன்பங்களிலும் நாங்கள் உமது இரக்கத்தைப் பூரணமாய் நம்பிப் பற்றிக்கொள்ளவும்; உமக்குக் கனமும் மகிமையும் உண்டாக எப்பொழுதும் மாசில்லாத பரிசுத்த நடக்கையுள்ளவர்களாய் உம்மைச் சேவிக்கவும், கிருபைசெய்ய வேண்டுமென்று, எங்கள் ஒரே மத்தியஸ்தரும் காரியகர்த்தருமாகிய இயேசு கிறிஸ்துநாதர் மூலமாய் மனத்தாழ்மையோடே வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ அப்பொழுது நற்கருணைமுறைமையைப் பாட அல்லது சொல்லவேண்டும். அதற்கடுத்த சுருக்கஜெபமும், நிருபவாக்கியமும், சுவிசேஷவாக்கியமுமாவன:

சுருக்கஜெபம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, உமது திவ்வியசெயலால் திருச்சபையில் வெவ்வேறான பட்டமுள்ள பணிவிடைக்காரரை ஏற்படுத்தி, முதலாம் இரத்தச்சாட்சியாகிய ஸ்தேவான் முதலானவர்களை ~~உதவிக்குருப்~~ பட்டத்துக்கென்று தெரிந்துகொள்ளும்படி உமது அப்போஸ்தலரை ஏவியருளினீரே; அந்த ~~உதவிக்குரு~~ப்பட்டத்துக்கும் பணிவிடைக்கும் இப்பொழுது அழைக்கப்பட்டிருக்கிற உம்முடைய ஊழியக்காரராகிய இவர்களை இரக்கமாய்க் கண்ணோக்கிப்பாரும். உமது திருநாமத்துக்கு மகிமையும் உமது சபைக்கு பக்திவிருத்தியும் உண்டாக, இந்தப் பணிவிடையில் இவர்கள், போதகத்தினாலும் நடக்கையினாலும், உமக்கு உண்மையாய் ஊழியஞ்செய்யும்படி, உமது வசனத்தை அறியும் மெய்யறிவினாலே இவர்களை நிரப்பி, மாசற்ற பரிசுத்த நடக்கையினாலே இவர்களை அலங்கரித்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம்: 1 தீமோ. 3. 8.

உதவிக்காரரும் இருநாக்குள்ளவர்களாயும், மதுபானப் பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர்களாயும் இராமல், நல்லொழுக்கம் உள்ளவர்களாயும், விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்தமனச்சாட்சியிலே காத்துக்கொள்ளுகிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும், இவர்கள் முன்னதாகச் சோதிக்கப்படவேண்டும்; குற்றஞ்சாட்டப்படாதவர்களா

னால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம். அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ளவர்களும், அவதூறுபண்ணாதவர்களும், தெளிந்த புத்தியுள்ளவர்களும், எல்லாவற்றிலேயும் உண்மையுள்ளவர்களுமாயிருக்கவேண்டும். மேலும், உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையுடைய புருஷருமாய், தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள்.

¶ அல்லது, அப்போஸ்தலர் நடபடி ஆறும் அதிகாரத்திலிருந்து வாசிக்கவேண்டியது.

### சுவிசேஷவாக்கியத்துக்காக: அப். 6. 2.

அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற எழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள்; அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். இந்த யோசனை சபையாரெல்லாருக்கும் பிரியமாயிருந்தது. அப்பொழுது விசுவாசமும் பரிசுத்தஆவியும் நிறைந்தவனாகிய ஸ்தேவானையும், பிலிப்புவையும், பிரொகோரையும், நிக்கானோரையும், தீமோனையும், பர்மேனாவையும், யூதமார்க்கத்தமைந்தவனான அந்தியோகியாபட்டணத்தானாகிய நிக்கொலாவையும் தெரிந்துகொண்டு, அவர்களை அப்போஸ்தலருக்கு முன்பாக நிறுத்தினார்கள். இவர்கள் ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள். தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெறுகிற்று; ஆசாரியர்களில் அநேகரும் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள்.

¶ சுவிசேஷவாக்கியம் வாசிக்கப்படுமுன் அத்தியட்சர் தம்முடைய ஆசனத்தில் உட்கார்ந்து, பட்டம்பெற வந்திருக்கிறவர்கள் ஒவ்வொருவரையும் பார்த்து, ஜனங்களுக்கு முன்பாகக் கேட்கவேண்டிய கேள்விகளாவன:

தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய ஜனங்கள் பக்திவிருத்தி அடையவும், அவருக்கு ஊழியஞ்செய்யத்தக்கதாய், நீங்கள் இந்தத் திருப்பணிவிடையைச் செய்ய ஏற்படும்படி, உங்கள் உள்ளம் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டிருக்கிறதென்று நம்புகிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே நம்புகிறேன்.



### அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் திருச்சபையில் பணிவிடைசெய்வதற்கு, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின்படியும், இந்த ராஜ்யத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிற சரியான ஒழுங்கின்படியும், மெய்யாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று நினைக்கிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே நினைக்கிறேன்.

### அத்தியட்சர் சொல்வது:

பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கிய திவ்விய அதிகாரமுள்ள வேதவசனங்களையெல்லாம் நீங்கள் உண்மையாய் விசுவாசிக்கிறீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே விசுவாசிக்கிறேன்.

### அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் பணிவிடைசெய்யும்படி நியமிக்கப்படும் ஆலயத்தில் கூடிவரும் ஜனங்களுக்கு அந்த வேதவாக்கியங்களை உற்சாகமாய் வாசித்து வருவீர்களா?

மறுமொழி: ஆம், அப்படியே வாசித்துவருவேன்.

### அத்தியட்சர் சொல்வது:

உதவிக்குருவானவன் பணிவிடைசெய்ய நியமிக்கப்படும் ஆலயத்தில் தேவாராதனைசெய்யும்போதும், விசேஷமாய்ப் பரிசுத்த நற்கருணை கொடுக்கும்போதும், குருவானவருக்கு உதவிசெய்யவும், பரிசுத்த வேதவாக்கியங்களையும் பிரசங்கங்களையும் வாசிக்கவும், இளைஞருக்கு ஞானோபதேச வினாவிடையைப் போதிக்கவும், குருவானவர் இல்லாத சமயத்தில் குழந்தைகளுக்கு ஞானஸ்நானங்கொடுக்கவும், அத்தியட்சர் உத்தரவு கொடுத்தால் பிரசங்கம்பண்ணவும் கடமையுள்ளவனாயிருக்கிறான். மேலும் தரித்திரர் விசாரணைக்கு ஒழுங்குசெய்திருக்கும் இடங்களில் உதவிக்குருவானவன் தன் சேகரத்திலுள்ள வியாதியஸ்தரையும், எளியவர்களையும், பலவீனர்களையும் விசாரித்து, அவர்களுடைய நிலைமை, பேர், இடம் இன்னதென்று குருவானவரிடத்தில் தெரியப்படுத்தி, அவருடைய ஏவுதலால் சபையார் முதலானவர்கள் கொடுக்கும் தர்மங்களினாலே அவர்களுக்கு உதவிகிடைக்கும்படி செய்யவும், கடமையுள்ளவனாயிருக்கிறான். இதையெல்லாம் சந்தோஷத்தோடும் உற்சாகமனதோடும் செய்வீர்களா?

மறுமொழி: தேவனுடைய உதவியினால், அப்படியே செய்வேன்.

### அத்தியட்சர் சொல்வது:

உங்கள் நடக்கையையும், உங்கள் வீட்டாருடைய நடக்கையையும் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு ஏற்றதாகச் சீர்திருத்தவும், நீங்களும் அவர்களும் உங்களாலானமட்டும் கிறிஸ்துவின் மந்தைக்கு நன்மாதிரிகளாய் இருக்கவும் ஜாக்கிரதையாய் நடந்துகொள்வீர்களா?

**மறுமொழி:** கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே நடந்துகொள்வேன்.

### அத்தியட்சர் சொல்வது:

திருச்சபையை விசாரிக்கிற அத்தியட்சர் முதலான அதிகாரிகளுக்கும், உங்களை விசாரித்து நடத்தும்படி அதிகாரம்பெற்றிருக்கிற மற்றவர்களுக்கும் பணிவாய்க் கீழ்ப்படிந்து அவர்கள் சொல்லும் பக்திக்கேற்ற புத்திமதிகளை உற்சாகத்தோடு கேட்டு நடப்பீர்களா?

**மறுமொழி:** கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே நடக்கப் பிரயாசப்படுவேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் தமக்குமுன்னே பணிவாய் முழங்கால்படியிட்டிருக்கிற அவர்கள் ஒவ்வொருவர் சிரசின்மேலும் தம்முடைய கைகளை வைத்துச் சொல்லவேண்டியது:

தேவனுடைய சபையில் உனக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற உதவிக்குருபணிவிடையைச் செய்ய அதிகாரத்தைப் பெற்றுக்கொள். பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே, ஆமென்.

¶ அப்பொழுது அத்தியட்சர் அவர்களில் ஒவ்வொருவருக்கும் புதிய ஏற்பாட்டைக் கொடுத்துச் சொல்வது:

தேவனுடைய சபையில் சுவிசேஷத்தை வாசிக்கவும், அத்தியட்சர் உத்தரவுகொடுத்தால் அந்தச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கவும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்.

¶ அப்பொழுது அவர்களுக்குள் அத்தியட்சராலே தெரிந்துகொள்ளப்பட்ட ஒருவர் சுவிசேஷவாக்கியத்தை வாசிக்கவேண்டும்.

### சுவிசேஷவாக்கியம்: பரி. லூ. 12. 35.

உங்கள் அரைகள் கட்டப்பட்டதாகவும், உங்கள் விளக்குகள் எரிகிறதாகவும், தங்கள் எஜமான் கலியாணத்திலிருந்து வந்து தட்டும்போது, உடனே அவருக்குத் திறக்கும்படி எப்பொழுது வருவார் என்று காத்திருக்கிற மனுஷருக்கு ஒப்பாகவும் இருங்கள். எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். அவர் அரைகட்டிக்கொண்டு, அவர்களைப் பந்தியிருக்கச்செய்து, சமீபமாய் வந்து, அவர்களுக்கு ஊழியஞ்செய்வார் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். அவர் இரண்டாம் ஜாமத்திலாவது மூன்றாம் ஜாமத்திலாவது வந்து, அவர்கள் அப்படியே இருக்கக் கண்டால், அவ்வூழியக்காரர் பாக்கியவான்கள்.



¶ பின்பு அத்தியட்சர் பரிசுத்த நற்கருணை பரிமாறும் ஒழுங்கை வாசிக்க, பட்டம்பெற்ற அனைவரும் தங்கள் சிரசின்மேல் கைவைக்கப்பட்ட இடத்திலேயே இருந்து நற்கருணையை வாங்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறினபின்பு, கடைசிச் சுருக்கஜெபத்துக்குப் பின்னும், ஆசீர்வாதத்துக்கு முன்னும், பின்வரும் சுருக்கஜெபங்களைச் சொல்லவேண்டும்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல நன்மைகளையும் ஈகிறவரே, உமது சபையில் உதவிக்குருப்பட்டத்துக்கு உமது ஊழியக்காரராகிய இவர்களைத் தெரிந்துகொள்ள உம்முடைய மிகுந்த தயவினாலே சித்தங்கொண்டீரே. கர்த்தாவே, இவர்கள் தங்கள் பணிவிடையை நிறைவேற்றுவதில் அடக்கமும் வணக்கமும் விடாமுயற்சியும் உடையவர்களாயும், சபை ஒழுங்குகளையெல்லாம் அநுசரிக்க உற்சாகமுள்ளவர்களாயும் இருக்கும்படி செய்து, இவர்கள் எப்பொழுதும் நல்மனச்சாட்சியுடையவர்களாகவும், உம்முடைய குமாரனாகிய கிறிஸ்துவுக்குள் என்றும் உறுதியும் ஊக்கமும் உள்ளவர்களாகவும் இருந்து, உம்முடைய சபையில் மேலான பணிவிடைகளைச் செய்வதற்கு அழைக்கப்படப் பாத்திரராகும்படி கிருபைசெய்யவேண்டுமென்று, உம்முடைய குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்; அவருக்கே மகிமையும் கனமும் சதாகாலமும் உண்டாவதாக. ஆமேன்.

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமேன்.

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்த ஆவியுமாகிய சர்வவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமேன்.

*¶ உதவிக்குருவானவருக்கு அறிவிக்கப்படவேண்டுவது என்னவென்றால், திருச்சபைக்கடுத்த ஒழுங்குகளை நடத்துகிறதில் தேறினவராகும்படியாக அத்தியட்சர் நியாயமான முகாந்தரங்களினிமித்தம் வேறு கட்டளையைக் கொடாமற்போனால், உதவிக்குரு பணிவிடையில் ஒரு வருஷம் முழுவதும் இருக்கவேண்டுமென்பதே. அதில் அவர் உண்மையும் சுறுசுறுப்பும் உள்ளவராகக் காணப்பட்டால் சபைக்கடுத்த பிரமாணங்களாகிய கனோன் என்னும் சட்டத்தில் கண்டிருக்கிற காலங்களிலாவது, அவசரமான முகாந்தரம் நேரிட்டால், வேறொரு ஞாயிற்றுக்கிழமையிலாவது திருநாளிலாவது சபையாருக்கு முன்பாக அவருடைய சேகரத்து அத்தியட்சரால் பின்வருகிற ஒழுங்கின்படி அவருக்குக் குருப்பட்டம் கொடுக்கப்படும்.*

---

# THE FORM AND MANNER OF ORDERING OF PRIESTS.

---

## குருப்பட்டம் கொடுக்கும் முறைமை.

*¶ அத்தியட்சர் குறித்த நாளில் காலைஜெபம் முடிந்தபின், குருப்பட்டம் பெற வருகிறவர்களுடைய உத்தியோகம் கடமை இன்னதென்றும், இந்த முறைமை கிறிஸ்துசபையில் மிகவும் அவசியமுள்ளதென்றும், இந்த பட்டம் பெறுகிறவர்களை ஜனங்கள் கனம்பண்ணவேண்டுமென்றும் யாவருக்கும் தோன்றும்படி பிரசங்கம் செய்யவேண்டும்.*

---

*¶ திருமேஜையண்டையில் தமது ஆசனத்தில் உட்கார்ந்திருக்கும் அத்தியட்சருக்கு முன்பாக, சிரேஷ்ட குருவாகிய ஆர்ச்சுடீக்கனாவது, அத்தியட்சரால் நியமிக்கப்பட்ட குருக்களில் வேறொருவராவது, குருப்பட்டம் பெறப்போகிறவர்களை யோக்கியமாய் உடுக்கப்பட்டவர்களாக நிறுத்தி, சொல்லவேண்டியதாவது:*

கர்த்தருக்குள் சங்கைபொருந்திய தகப்பனே, குருப்பட்டம் பெறுவதற்கு இவர்களை உம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிறேன்.

அத்தியட்சர் சொல்வது:

நீங்கள் நம்மிடத்தில் கொண்டுவந்திருக்கிற இவர்கள் தேவனுடைய மகிமை விளங்கவும், அவருடைய சபை பக்திவிர்த்தியடையவும், கல்வியினாலும் பக்தியுள்ள நடக்கையினாலும் தங்கள் பணிவிடையை நடத்த தகுந்தவர்களாயிருக்கிறார்களா என்பதைப்பற்றி எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

*¶ அதற்குச் சிரேஷ்ட குரு மறுமொழியாகச் சொல்வது:*

இவர்களைக்குறித்து நான் விசாரித்தும், இவர்களைப் பரிட்சித்தும் இருக்கிறேன். இவர்கள் தகுந்தவர்களாயிருக்கிறார்களென்று எண்ணுகிறேன்.

*¶ அப்பொழுது அத்தியட்சர் ஜனங்களைப்பார்த்துச் சொல்வது:*

பிரியமானவர்களே, கர்த்தருக்குச் சித்தமானால், இன்றையத்தினம் குருத்துவமாகிய திருப்பணிவிடை செய்யும்படி பட்டம்பெற நம்மால் நியமிக்கப்பட்டிருக்கிறவர்கள் இவர்களே; இவர்களைக்குறித்துத் திட்டமாய்

விசாரித்ததின்பேரில் இவர்கள் இந்தப் பணிவிடை செய்யக் கிரமமாய்
அழைக்கப்பட்டவர்களாயும், அதற்குத் தகுந்தவர்களாயும் இருக்கிறார்க
ளென்று தெரியவருகிறது. ஆனாலும் இவர்களில் யாராவது இந்தத் திருப்
பணிவிடை செய்யும்படி பட்டம் பெறக்கூடாததற்குக் காரணமான
யாதொரு தடையாவது, வெளிப்படையான குற்றமாவது உண்டென்று
உங்களில் யாராவது அறிந்திருந்தால், அவன் தேவனுடைய நாமத்தை
முன்னிட்டுவந்து, அந்தக் குற்றம் அல்லது தடை இன்னதென்று சொல்
லக்கடவன்.

*¶ ஒருவன்மேல் யாதொரு பெரிய குற்றமாவது தடையாவது சொல்லப்
பட்டால், அவன் அதற்கு நீங்கினவனென்று தெளிவாகும்வரையும் அத்தி
யட்சர் அவனுக்குப் பட்டங்கொடாமல் நிறுத்திவைக்கவேண்டும்.*

*¶ அப்பொழுது பட்டம் பெறத் தகுந்தவர்களென்று காணப்படுகிறவர்களுக்
காக, சபையார் ஜெபம்பண்ணவேண்டுமென்று அத்தியட்சர் கேட்டுக்
கொண்டதின்பேரில், அவரும் குருமாரும் சபையாரும் உதவிக்குருப்
பட்டத்தின் முறைமையில் குறிக்கப்பட்டிருக்கிறபடி லித்தானியாமுதலிய
ஜெபங்களைப் பாட அல்லது சொல்லவேண்டும். ஆனாலும் லித்தானியா
பிரார்த்தனையில் உதவிக்குருக்களுக்காகச் செய்யப்படும் மன்றாட்டில் உத
விக்குருப்பட்டம் என்கிற வார்த்தைகளுக்குப் பதிலாக, குருப்பட்டம்
என்கிற வார்த்தைகளைச் சேர்த்துப் பிரயோகம்பண்ணவேண்டும்.*

*¶ அப்பொழுது நற்கருணை முறைமையைப் பாட அல்லது சொல்லவேண்டும்.
அதற்கடுத்த சுருக்கஜெபமும், நிருபவாக்கியமும், சுவிசேஷவாக்கியமு
மாவன:*

சுருக்கஜெபம்.

சகல நன்மைகளையும் அருளிச்செய்கிற சர்வவல்லமையுள்ள தேவனே,
உம்முடைய பரிசுத்த ஆவியினாலே திருச்சபையில் வெவ்வேறான பட்ட
முள்ள பணிவிடைக்காரரை ஏற்படுத்தினீரே; குருப்பட்டத்துக்கு இப்
பொழுது அழைக்கப்பட்ட உமது ஊழியக்காரராகிய இவர்களை இரக்க
மாய்க் கண்ணோக்கிப்பாரும். உமது திருநாமத்துக்கு மகிமையும் உமது
சபைக்கு பக்திவிருத்தியும் உண்டாக இந்தப் பணிவிடையில் இவர்
கள் போதகத்தினாலும் நடக்கையினாலும் உமக்கு உண்மையாய் ஊழி
யஞ்செய்யும்படி உமது வசனத்தை அறியும் மெய்யறிவினாலே இவர்களை
நிரப்பி, மாசற்ற பரிசுத்த நடக்கையினாலே இவர்களை அலங்கரித்தருளும்.
உம்மோடும் பரிசுத்தஆவியோடும் இப்பொழுதும் எப்பொழுதும் ஜீவித்து
அரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்
களினிமித்தம் இப்படிச் செய்தருளும். ஆமேன்.



நிருபவாக்கியம்: எபே. 4. 7.

கிறிஸ்துவினுடைய ஈவின் அளவுக்குத்தக்கதாக நம்மில் அவனவனுக்
குக் கிருபை அளிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால், அவர் உன்னதத்திற்கு
ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை
அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். ஏறினார் என்பதினால் அவர்
அதற்குமுன்னே பூமியின் தாழ்விடங்களில் இறங்கினாரென்று விளங்கு
கிறதல்லவா? இறங்கினவரே எல்லாவற்றையும் நிரப்பத்தக்கதாக, எல்லா
வானங்களுக்கும் மேலாக உன்னதத்திற்கு ஏறினவருமாயிருக்கிறார். மேலும்
நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப்பற்றும் விசுவாசத்திலும் அறி
விலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்
சியின் அளவுக்குத்தக்க பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள்
சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்
துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர்,
சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவி
சேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.

*¶ பின்பு பரிசுத்த மத்தேயு ஒன்பதாம் அதிகாரத்திலிருந்து
சுவிசேஷவாக்கியமாய் வாசிக்கவேண்டியதாவது:*

பரி. மத். 9. 36.

இயேசு திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பன்
இல்லாத ஆடுகளைப்போல் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்
களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்
களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால்,
அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி
அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.

*¶ அல்லது, பரிசுத்த யோவான் பத்தாம் அதிகாரத்திலிருந்து
சுவிசேஷவாக்கியமாய் வாசிக்கவேண்டியதாவது:*

பரி. யோ. 10. 1.

மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்;
ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழி
யாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான். வாசல்
வழியாய்ப் பிரவேசிக்கிறவனே ஆடுகளின் மேய்ப்பனாயிருக்கிறான். வாச
லைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்
துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்
லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான்.

அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது. அந்நியருடைய சத்தத்தை அறியாதபடியினால் அவைகள் அந்நியனுக்குப் பின்செல்லாமல், அவனை விட்டு ஓடிப்போம் என்றார். இந்த உவமையை இயேசு அவர்களுடனே சொன்னார்; அவர்களோ அவர் சொன்னவைகளின் கருத்தை அறியவில்லை. ஆதலால் இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். எனக்கு முன்னே வந்தவர்களெல்லாரும் கள்ளரும் கொள்ளைக்காரருமாயிருக்கிறார்கள்; ஆடுகள் அவர்களுக்குச் செவிகொடுக்கவில்லை. நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானே அன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். நானே நல்ல மேய்ப்பன்; நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறான். மேய்ப்பனாயிராதவனும், ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான்; அப்பொழுது ஓநாய் ஆடுகளைப் பீறி, அவைகளைச் சிதறடிக்கும். கூலியாள் கூலிக்காக வேலைசெய்கிறவனாகையால் ஓடிப்போகிறான், ஆடுகளுக்காக அவன் கவலைப்படான். நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும்; நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டும் இருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்.

*¶ பின்பு அத்தியட்சர் தம்முடைய ஆசனத்தில் உட்கார்ந்து குருப்பட்டம் பெற வந்திருக்கிறவர்களை நோக்கிச் சொல்லவேண்டியதாவது:*

சகோதரரே, நீங்கள் இப்பொழுது பெற்றுக்கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிற இந்த உத்தியோகம் எவ்வளவு கனமுள்ளதென்றும், எவ்வளவு அவசியமுள்ளதென்றும், உங்களைத் தனிப்படப் பரிட்சித்தபோது சொன்ன புத்திமதிகளினாலும், இப்பொழுது செய்த பிரசங்கத்தினாலும், சுவிசேஷத்திலிருந்தும் அப்போஸ்தலர் எழுதிய நிருபங்களிலிருந்தும் எடுத்து வாசித்த பரிசுத்த வாக்கியங்களினாலும் கேட்டிருக்கிறீர்கள். நம்



முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே மறுபடியும் உங்களுக்குப் புத்திசொல்லுகிறோம். நீங்கள் சிறந்த மேன்மையையும் கனமான உத்தியோகத்தையும் அதிகாரத்தையும் பெற அழைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை எப்பொழுதும் நினைவுகூருவீர்களாக. நீங்கள் கர்த்தருடைய ஸ்தானாபதிகளும் காவலாளரும் உக்கிராணக்காரருமாயிருக்க அழைக்கப்பட்டீர்கள். கர்த்தருடைய வீட்டாரைப் போதித்து எச்சரிக்கவும் போஷித்துப் பராமரிக்கவும், இந்தப் பொல்லாத உலகத்தில் இருக்கிற கிறிஸ்துவின் பிள்ளைகளும் பல இடங்களிலும் சிதறியிருக்கிற அவருடைய ஆடுகளும் கிறிஸ்துவின் மூலமாய் என்றும் இரட்சிக்கப்பட அவர்களைத் தேடவும் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்.

ஆகையால் உங்கள் வசம் எவ்வளவு அருமையான பொக்கிஷம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறதென்பதை இடைவிடாமல் உங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். அவர்கள் கிறிஸ்து தமது மரணத்தினாலே கிரயத்துக்குக் கொண்ட ஆடுகளாயிருக்கிறார்கள்; அவர்களுக்காக அவர் தமது இரத்தத்தைச் சிந்தினார். நீங்கள் பணிவிடை செய்யவேண்டிய சபை அவருடைய மனையாட்டியும் அவருடைய சரீரமுமாயிருக்கிறது. அந்தச் சபையாவது அதிலுள்ள யாதொரு அவயவமாவது உங்களுடைய அஜாக்கிரதையினாலே யாதொரு குறைவை அல்லது நஷ்டத்தை அடைந்தால் உங்கள்மேல் சுமருங் குற்றம் எவ்வளவு பெரிதென்றும் அதற்கு நேரிடும் ஆக்கினை எவ்வளவு கொடிதென்றும் அறிந்துகொள்ளுங்கள். ஆதலால் கிறிஸ்துவின் மனையாட்டியும் அவருடைய சரீரமுமாயிருக்கிற தேவனுடைய பிள்ளைகளாகிய சபையில் நீங்கள் பணிவிடைசெய்யவேண்டிய நோக்கத்தைச் சிந்தித்துக்கொள்ளுங்கள். உபதேசத்தைப்பற்றின தப்பறைக்காவது நடக்கையைப்பற்றின தாறுமாறுக்காவது உங்களுக்குள் இடம் இல்லாதபடி, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படுகிற அனைவரும் தேவனைப்பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் கிறிஸ்துவுக்குள்ளான தேறுதலிலும் நிறைவிலும் இணைக்கப்பட்டவர்களாகும்பொருட்டு உங்கள் கடமையின்படி உங்களாலானமட்டும் அவர்களை நடத்துகிறதற்கு ஏற்ற கவலையும் ஜாக்கிரதையும் விடாமுயற்சியும் உள்ளவர்களாய் இருப்பீர்களாக.

உங்கள் உத்தியோகம் இவ்வளவு மாட்சிமையும் இவ்வளவு பிரயாசமும் உள்ளதாயிருப்பதால், இந்த மேன்மையான நிலைமையில் உங்களை வைத்திருக்கிற ஆண்டவருக்கு நீங்கள் கீழ்ப்படிதலும் நன்றியறிதலும் உள்ளவர்களாயிருங்கள். நீங்களே தேவனுக்கு மனஸ்தாபம் உண்டாக்காமலும், மற்றவர்கள் மனஸ்தாபம் உண்டாக்க ஏதுவாயிராமலும் கருத்துள்ளவர்களாயிருங்கள். ஆனாலும் இதற்கேற்ற மனமும் விருப்பமும் உங்களாலேயே உண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட விருப்பமும் அதற்கேற்ற திரா

ணியும் தேவனாலேயே அருளிச்செய்யப்படும். ஆதலால் அவர் தமது பரிசுத்த ஆவியை அநுக்கிரகிக்கவேண்டுமென்று நீங்கள் கருத்தாய் மன்றாடவேண்டும். மேலும் வேதவசனத்திலிருந்து எடுத்துக்காட்டும் உபதேசத்தினாலும் போதனையினாலும் அந்த வசனத்துக்கேற்ற நடக்கையினாலுமே அன்றி வேறெந்த எத்தனத்தினாலும் மனிதருடைய இரட்சிப்புக்கு அடுத்த இந்த அருமையான தொழிலை நிறைவேற்றக் கூடாதாகையால், நீங்கள் வேதவசனத்தை வாசித்துக் கற்றறிகிறதிலும் அதில் காட்டியபடி உங்கள் நடக்கையையும் உங்களுக்கு அடுத்தவர்களுடைய நடக்கையையும் சீர்ப்படுத்துவதிலும் மிகவும் கருத்துள்ளவர்களாயிருக்கவேண்டும். இதினிமித்தம் உங்களால் கூடியமட்டும் உலகத்துக்கடுத்த சகல கவலைகளுக்கும் முயற்சிகளுக்கும் நீங்கள் விலகிக்கொள்வது உங்கள் கடமை என்று உணர்ந்துகொள்ளுங்கள்.

நீங்கள் இந்தக் காரியங்களை.இதற்கு முன்னமே நன்குணர்ந்திருப்பீர்களென்றும், தேவன் இப்பொழுது உங்களை அழைக்கச் சித்தமான இந்தப் பணிவிடைக்கு அவருடைய கிருபையினாலே உங்களை முற்றும் ஒப்புக்கொடுத்து, இந்த ஒரே காரியத்துக்கென்று உங்கள் திராணிக்குத்தக்கதாக முயற்சிசெய்து, இதற்கென்றே கவலையோடே பிரயாசப்படத் தீர்மானித்திருக்கிறீர்களென்றும் உங்களைப்பற்றி நமக்கு நம்பிக்கை உண்டு. நாள்தோறும் தேவவசனத்தை வாசித்துத் தியானிக்கிறதினால் நீங்கள் உங்கள் பணிவிடையில் மேன்மேலும் தேறி பெலன்கொள்ளவும், கிறிஸ்துவின் கட்டளைக்கும் உபதேசத்துக்கும் ஏற்க உங்கள் நடக்கையைச் சீர்திருத்தி, ஜனங்களுக்கு உத்தம மாதிரிகளாயிருக்கவும்வேண்டும். இதற்கென்று பிதாவாகிய தேவன் நம்முடைய ஏக இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் மத்தியஸ்தத்தினிமித்தம் பரிசுத்தஆவியினுடைய திவ்விய சகாயத்தைத் தரவேண்டுமென்று இடைவிடாமல் ஜெபம்பண்ணுவீர்களென்று உறுதியாய் நம்புகிறோம்.

இப்பொழுதும் இவ்விடத்தில் கூடிவந்திருக்கிற கிறிஸ்துவின் சபையார் இந்தக் காரியங்களைப்பற்றி உங்கள் அபிப்பிராயத்தையும் தீர்மானத்தையும் அறியவும், நீங்கள் கொடுக்கும் வாக்கினாலே உங்கள் கடமைகளை நிறைவேற்றும்படி நீங்களே ஏவப்படவும் தக்கதாக, தேவனுடைய நாமத்தினாலும் அவருடைய சபையின் நாமத்தினாலும் நாம் கேட்கும் கேள்விகளுக்கு நீங்கள் தெளிவாக மாறுத்தரம் சொல்லவேண்டும்.

நீங்கள் குருப்பட்டத்துக்குரிய பணிவிடையைச் செய்ய நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சித்தத்தின்படியும், இங்கிலாந்து சபை ஒழுங்கின்படியும், உண்மையாய் அழைக்கப்பட்டிருக்கிறீர்களென்று உங்கள் இருதயத்திலே நினைக்கிறீர்களா?

**மறுமொழி:** ஆம், அப்படியே நினைக்கிறேன்.



### அத்தியட்சர் சொல்வது:

இயேசுகிறிஸ்துவைப்பற்றும் விசுவாசத்தினால் நித்திய இரட்சிப்பு அடைவதற்கு அவசியமாய் அறியவேண்டிய உபதேசம் யாவும் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறதென்று நிச்சயங்கொண்டு, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்களை அந்த வேதவாக்கியங்களைக் கொண்டே போதிக்கவும், வேதத்தினாலே ரூபிக்கப்படத்தக்கவைகளே அன்றி மற்ற எதுவும் நித்திய இரட்சிப்புக்கு அவசியம் என்று போதியாதிருக்கவும் தீர்மானித்திருக்கிறீர்களா?

**மறுமொழி:** நான் அப்படியே நிச்சயித்தும், தேவகிருபையை முன்னிட்டு அப்படியே செய்யத் தீர்மானித்தும் இருக்கிறேன்.

### அத்தியட்சர் சொல்வது:

கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டதாயும், இந்தச் சபையும் ராஜ்யமும் தேவ கட்டளைப்படி அங்கிகரித்துக்கொண்டதாயும் இருக்கிற கிறிஸ்துவின் உபதேசத்தையும் சாக்கிரமெந்துக்களையும் சபை ஒழுங்கையும், எப்பொழுதும் கைக்கொள்ள உண்மையாய்ப் பிரயாசப்பட்டு, உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்கள் அவைகளைக் காத்துநடக்கும்படி அவர்களுக்குக் கருத்தாய்ப் போதித்துவருவீர்களா?

**மறுமொழி:** கர்த்தருடைய சகாயத்தினாலே, அப்படியே செய்வேன்.

### அத்தியட்சர் சொல்வது:

தேவவசனத்துக்கு விரோதமான சகல தப்பறைகளையும் விகற்பமான உபதேசங்களையும் அகற்றித் தள்ளவும், உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் சேகரத்தில் அவசரத்துக்கும் சமயத்துக்கும் தக்கபடி, வியாதியுடையவர்களுக்கும் சுகமுடையவர்களுக்கும் வெளிப்படையாகவும் தனிப்படவும் எச்சரிக்கவும் புத்திசொல்லவும், எப்பொழுதும் உண்மையும் ஜாக்கிரதையும் உள்ளவர்களாயிருப்பீர்களா?

**மறுமொழி:** கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

### அத்தியட்சர் சொல்வது:

லௌகிக நன்மைகளையும் சரீர சௌக்கியங்களையும் நாடாமல், ஜெபம்பண்ணுதலையும், வேதவசன வாசிப்பையும், வேத அறிவுவிர்த்திக்கு உபயோகமான முயற்சிகளையும் ஜாக்கிரதையாய் நாடுவீர்களா?

**மறுமொழி:** கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்யப் பிரயாசப்படுவேன்.

அத்தியட்சர் சொல்வது:

உங்கள் நடக்கையையும் உங்கள் வீட்டாருடைய நடக்கையையும் கிறிஸ்துவின் உபதேசத்துக்கு ஏற்றதாகச் சீர்திருத்தவும், நீங்களும் அவர்களும் கூடியவரையிலும் கிறிஸ்துவின் மந்தைக்கு நன்மாதிரிகளாயிருக்கவும் பிரயாசப்படுவீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்யப் பிரயாசப்படுவேன்.

அத்தியட்சர் சொல்வது:

எல்லாக் கிறிஸ்தவர்களுக்குள்ளும், விசேஷமாய் உங்கள் விசாரணைக்கு ஒப்புவிக்கப்படும் ஜனங்களுக்குள்ளும், அமைதலும் சமாதானமும் அன்பும் மேன்மேலும் பெருகி வளரும்படி உங்களாலானமட்டும் பிரயாசப்படுவீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

அத்தியட்சர் சொல்வது:

உங்களை விசாரித்து நடத்த அதிகாரம் பெற்றிருக்கிற அத்தியட்சர் முதலான பிரதான குருமாருக்குப் பணிவாய்க் கீழ்ப்படிந்து, அவர்கள் சொல்லும் பக்திக்கேற்ற புத்திமதிகளை உற்சாகத்தோடு கேட்டு, அவர்களுடைய பக்தியுள்ள தீர்மானங்களுக்கு அடங்கி நடப்பீர்களா?

மறுமொழி: கர்த்தர் எனக்குச் சகாயராயிருக்க, அப்படியே செய்வேன்.

¶ அப்பொழுது அத்தியட்சர் எழுந்துநின்று சொல்வதாவது:

இந்தக் காரியங்கள் எல்லாவற்றையும் செய்ய உங்களுக்கு விருப்பத்தைக் கொடுத்திருக்கிற சர்வவல்லமையுள்ள தேவன் இவைகளைச் செய்வதற்கான பெலத்தையும் சத்துவத்தையும் அருளி, உங்களிடத்தில் தொடங்கியிருக்கிற தம்முடைய கிரியையை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய் முடிய நடத்துவாராக. ஆமேன்.

¶ இதற்குப்பின் இவை எல்லாவற்றையும்பற்றித் தேவனிடத்தில் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளும்படி சபையார் ஒவ்வொருவரும் மனசுக்குள்ளே ஜெபம்பண்ண அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். இப்படிச் செய்கிறதற்குக் கொஞ்ச நேரம் சத்தமில்லாமல் யாவரும் அமைதலாயிருக்க வேண்டும்.



¶ பிற்பாடு குருப்பட்டம் பெறப்போகிறவர்கள் முழங்கால்படியிட்டிருக்க, "அடியார் நெஞ்சைத் தயவாய்" என்கிற தேம் பாட அல்லது சொல்ல வேண்டும். இதில் அத்தியட்சர் ஒரு வரியையும், கூட இருக்கிற குருமார் முதலானவர்கள் ஒரு வரியையும் பாட அல்லது சொல்லவேண்டும்.

அடியார் நெஞ்சைத் தயவாய்
சந்தித்து நெப்பி உமக்கே
பொருந்தும் அலங்காரமாய்
படையும், தேவ ஆவியே.

மெய் தேற்றரவளிக்கிற
பர ஈவாயிருக்கிறீர்,
வானபிஷேகமாகிய
ஜீவாறும் நேசத்தீயும் நீர்.

அடியார் எச்சரிக்கையாய்
நீர் ஏவும்போல் நடக்கவே
பிசாசின் சூதைத் தூரமாய்
விலக்கும் மனவாசரே.

பிதா சுதனையும் நன்றாய்
அறிந்து அண்டிக்கொள்ளவே
நீர் எங்கள் தேவ வாத்தியாய்
இரும், இருவர் ஆவியே.

திரியேக தெய்வமாகிய
பிதா குமாரன் ஆவிக்கும்
எப்போதென்றைக்கும் சகல
புகழ்ச்சியும் உண்டாகவும்.

¶ இதற்குப்பின் அத்தியட்சர் செய்யவேண்டிய ஜெபம்:

ஜெபம்பண்ணக்கடவோம்.

சர்வவல்லமையுள்ள தேவனே, பரம பிதாவே, தேவரீர் எங்கள்பேரில் வைத்த அளவில்லாத காருணியத்தினாலே உம்முடைய ஒன்றான நேச குமாரனாகிய இயேசுகிறிஸ்துவை எங்களுக்கு மீட்பராகவும் நித்திய ஜீவனுக்குக் காரணராகவும் தந்தருளினீரே. அவர் தமது மரணத்தினாலே எங்களுக்குப் பூரணமான மீட்பு உண்டாக்கி, பரமண்டலத்துக்கு எழுந்தருளியபின், தம்முடைய அப்போஸ்தலரையும் தீர்க்கதரிசிகளையும் சுவிசேஷகரையும் போதகரையும் மேய்ப்பரையும் உலகமெங்கும் அனுப்பி, உம்முடைய திருநாமத்துக்கு நித்திய புகழ்ச்சியுண்டாக அவர்களுடைய ஊழியத்தினாலும் பிரயாசத்தினாலும் உலகத்தின் எத்திசையிலும் பெரிய

மந்தையைச் சேர்த்தருளினாரே. தேவரீர் உம்முடைய நித்திய கிருபையினாலே செய்திருக்கிற இந்தச் சிறந்த உபகாரங்களுக்காகவும், மானிடர் இரட்சிப்புக்கு ஏதுவாகத் தேவரீர் நியமித்த இந்த உத்தியோகத்துக்கும் பணிவிடைக்கும் உம்முடைய ஊழியக்காரரான இவர்களை அழைத்தருளினதற்காகவும், முழு இருதயத்தோடே உமக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, உம்மைப் புகழ்ந்து போற்றுகிறோம். இவ்விடத்திலும் மற்றெல்லா இடங்களிலும் உம்முடைய திருநாமத்தைத் தொழுதுகொள்ளுகிற நாங்கள் அனைவரும் தேவரீர் அருளிச்செய்த சகல உபகாரங்களுக்காகவும் எங்கள் நன்றியறிதலை இடைவிடாமல் காண்பிக்கவும், பரிசுத்த ஆவியைக்கொண்டு நாங்கள் தேவரீரையும் உம்முடைய குமாரனையும் பற்றிய அறிவிலும் விசுவாசத்திலும் தினந்தோறும் வளர்ந்து தேறவும் அநுக்கிரகித்தருளும். உம்முடைய பணிவிடைக்காரராகிய இவர்களாலும் இவர்களுடைய விசாரணைக்கு ஒப்புவிக்கப்படுகிறவர்களாலும் உமது திருநாமம் என்றைக்கும் மகிமைப்படவும், உமது ஞானராஜ்யம் விர்த்தி அடையவும் கிருபைசெய்தருளும். உம்மோடும் பரிசுத்த ஆவியோடும் ஒன்றானவராய்ச் சதாகாலமும் ஜீவித்து அரசாளுகிற உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவை முன்னிட்டு இதைத் தாழ்மையாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

¶ இந்த ஜெபம் முடிந்தபின், பட்டம் பெறுகிறவர்கள் தாழ்மையாய் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சரும் கூட இருக்கிற குருமாரும் அவர்கள் ஒவ்வொருவருடைய சிரசின்மேலும் கைகளை வைக்க, அத்தியட்சர் சொல்வேண்டியது:

எங்கள் கைகளை உன்மேல் வைக்கிறதினால் தேவனுடைய சபையில் இப்பொழுது உனக்குக் கொடுக்கப்படுகிற குருப்பட்டத்துக்குரிய உத்தியோகத்தையும் பணிவிடையையும் செய்யும்படியாகப் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள். எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறாயோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும். எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறாயோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும். நீ தேவனுடைய வசனத்தையும் அவருடைய பரிசுத்த சாக்கிரமெந்துக்களையும் உண்மையாய்ப் பகிர்ந்துகொடுக்கிறவனாயிருப்பாயாக. பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தினாலே. ஆமென்.

¶ பின்பு அவர்கள் எல்லாரும் முழங்கால்படியிட்டிருக்க, அத்தியட்சர் அவர்கள் ஒவ்வொருவருடைய கையிலும் வேதாகமத்தைக் கொடுத்துச் சொல்லவேண்டியது:

நீ கிரமப்படி நியமிக்கப்படும் சபையில் தேவனுடைய வசனத்தைப் பிரசங்கிக்கவும், பரிசுத்த சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கவும் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்.



¶ இது முடிந்தபின் நீசெயா விசுவாசப்பிரமாணத்தைப் பாட அல்லது சொல்லவேண்டும். பின்பு அத்தியட்சர் நற்கருணை பரிமாறும் ஒழுங்கை வாசிக்க, பட்டம்பெற்ற அனைவரும் தங்கள் சிரசின்மேல் கைவைக்கப்பட்ட இடத்திலேயே இருந்து நற்கருணையை வாங்கவேண்டும்.

¶ நற்கருணை பரிமாறினபின்பு, கடைசிச் சுருக்கஜெபத்துக்குப் பின்னும் ஆசீர்வாதத்துக்கு முன்னும், பின்வரும் சுருக்கஜெபங்களைச் சொல்லவேண்டும்.

மிகுந்த இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய ஊழியக்காரரான இவர்கள் நீதியினால் அலங்கரிக்கப்படவும், இவர்கள் வாயினால் சொல்லும் உமது வசனம் ஒருபோதும் வீணாய்ப்போகாமல் நன்றாய்ப் பயன்படவும், இவர்கள் மேல் உம்முடைய பரம ஆசீர்வாதத்தைப் பொழிந்தருளும். இவர்கள் உம்முடைய பரிசுத்த வசனத்திலிருந்து எடுத்துச் சொல்லுகிறதும் அதற்கு இசைவாய்ப் போதிக்கிறதுமான உபதேசங்களை நாங்கள் எங்கள் இரட்சிப்புக்கு ஏதுவாகக் கேட்டு அங்கிகரிக்கவும், எங்கள் எல்லா வார்த்தைகளினாலும் செய்கைகளினாலும் நாங்கள் உம்முடைய மகிமையையும் உம்முடைய ராஜ்யத்தின் விர்த்தியையும் நாடித் தேடவும் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இதை எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். **ஆமேன்.**

ஆண்டவரே, நாங்கள் என்ன கிரியைகளைச் செய்தாலும், உமக்கு அடங்கினவர்களாய் அவைகளைத் தொடங்கி நடப்பித்து முடித்து, உமது பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்தவும், கடைசியாய் உமது இரக்கத்தினாலே நித்தியஜீவனைப் பெற்றுக்கொள்ளவும்; நாங்கள் செய்வதெல்லாவற்றிலும் தேவரீர் எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது கிருபாகடாட்சத்தோடே எங்களுக்கு முந்திக்கொண்டு இடைவிடாத உமது சகாயத்தினாலே எங்களை நடத்தியருளும். ஆமேன்.

எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்களோடே இருந்து, நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி, உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்தஆவியுமாகிய சர்வவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. **ஆமேன்.**

# THE ARTICLES OF RELIGION.

---

வேத உபதேசத்தைக்குறித்து உண்டான

வெவ்வேறான கொள்கைகளை நீக்கி,

சர்வ சம்மத கோட்பாட்டை நிலைநிறுத்தும்படிக்கு

இங்கிலாந்து தேசத்திலுள்ள

மேற்றிராணி ஆதிக்க மாகாணங்கள் இரண்டையும் சேர்ந்த

குருமார் யாவரும், அத்தியட்சமாரும், பிரதான அத்தியட்சமாரும்

1562–௵ லண்டன் நகரத்தில் சங்கமாகக் கூடிவந்து

ஆலோசித்து நிர்ணயித்த

# வேதசித்தாந்தப் பிரமாணங்கள்.

---

## 1. பரிசுத்த திரித்துவத்தைப் பற்றும் விசுவாசம்.

ஜீவனுள்ள ஒரே மெய்த்தேவன் உண்டு; அவர் நித்தியர், சரீரம் இல்லாதவர், பகுக்கப்படாதவர், தாபம் இல்லாதவர்; அளவில்லாத வல்லமையும், ஞானமும், கிருபையும் உள்ளவர்; காணப்படுகிறதும் காணப்படாததுமாகிய சகலத்தையும் சிருஷ்டித்துக் காப்பாற்றுகிறவர். இந்த ஒரே தேவத்துவத்தில், ஒரே தன்மையையும், வல்லமையையும், நித்தியத்துவத்தையும் உடைய பிதா குமாரன் பரிசுத்தஆவியாகிய மூவர் உண்டு.

## 2. மெய்யான மனுஷனாய் அவதரித்த தேவ குமாரனாகிய வார்த்தையானவர்.

பிதாவின் வார்த்தையாகிய குமாரனானவர், பிதாவினாலே அநாதியாய் ஜநிப்பிக்கப்பட்டவர், நித்தியரான மெய்த்தேவன், பிதாவோடே ஒரே தன்மையை உடையவர். அவர் பாக்கியவதியான கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்திலே உற்பவித்து, அவளுடைய தன்மையில் மனுஷத்தன்மையைத் தரித்துக்கொண்டார். இவ்விதமாய்த் தேவத்துவம் மனுஷத்துவம்



ஆகிய குறைவற்ற சம்பூரணமுள்ள இரண்டு தன்மைகளும் ஒருக்காலும் பிரிக்கப்படாதபடி ஒருவரில் சேர்ந்திருக்கிறதினால், அவர் மெய்த்தேவனும் மெய்மனுஷனுமான ஒரே கிறிஸ்துவாயிருக்கிறார். அவர் தம்முடைய பிதாவை நம்மோடே ஒப்புரவாக்கவும், மனுஷருடைய ஜந்மபாவத்தையும் கர்மபாவத்தையும் நீக்கும் பலியாயிருக்கவும்; மெய்யாய்ப் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார்.

## 3. கிறிஸ்து பாதாளத்தில் இறங்கினது.

கிறிஸ்து நமக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டார் என்று விசுவாசிக்கிறதுபோல, அவர் பாதாளத்தில் இறங்கினார் என்றும் விசுவாசிக்க வேண்டும்.

## 4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.

கிறிஸ்து மரித்தோரிடத்திலிருந்து மெய்யாய் எழுந்தருளி, பூரண மனுஷத்தன்மைக்குரிய மாம்சம் எலும்பு முதலானவைகளுள்ள தமது சரீரத்தை மறுபடியும் ஏற்றுக்கொண்டு, அதனோடு பரமண்டலத்துக்கேறி, கடைசிநாளில் எல்லா மனுஷரையும் நியாயந்தீர்க்கத் தாம் திரும்ப வரும் அளவும் அவ்விடத்தில் வீற்றிருக்கிறார்.

## 5. பரிசுத்த ஆவியானவர்.

பிதாவிலும் குமாரனிலும் நின்று புறப்படுகிற பரிசுத்தஆவியானவர், பிதாவோடும் குமாரனோடும் ஒரே தன்மையும் மகத்துவமும் மகிமையும் உள்ள நித்தியரான மெய்த்தேவனாயிருக்கிறார்.

## 6. இரட்சிப்படைவதற்குப் பரிசுத்த வேதாகமங்களே போதுமானது.

இரட்சிப்படைவதற்கு அவசியமாய் அறியவேண்டியவைகள் எல்லாம் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறது. ஆகையால் அவைகளில் கண்டிராததும், அவைகளால் ரூபிக்கப்படாததுமான யாதொன்றையும் விசுவாசிக்கவேண்டிய பிரமாணம் என்று ஒப்புக்கொள்ளவும், இரட்சிப்புக்கு அவசியம் என்று எண்ணவும், ஒருவருக்கும் கட்டளையிடக்கூடாது. பரிசுத்த வேதஆகமங்கள் எவையெனில், திருச்சபை எக்காலத்திலும் சந்தேகப்படாமல் திவ்விய அதிகாரமுள்ளவைகள் என்று ஒப்புக்கொண்டிருக்கிற பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அடங்கியிருக்கிற ஆகமங்களேயாம்.

## திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்களின் பேரும் இலக்கமும் அடங்கிய அட்டவணை.

ஆதியாகமம்.
யாத்திராகமம்.
லேவியராகமம்.
எண்ணாகமம்.
உபாகமம்.
யோசுவா.
நியாயாதிபதிகள்.
ரூத்.
சாமுவேலின் முதலாம் ஆகமம்.
சாமுவேலின் இரண்டாம் ஆகமம்.
ராஜாக்களின் முதலாம் ஆகமம்.
ராஜாக்களின் இரண்டாம் ஆகமம்.
நாளாகமத்தின் முதலாம் ஆகமம்.
நாளாகமத்தின் இரண்டாம் ஆகமம்.
எஸ்றா. [எஸ்றாவின் முதலாம் ஆகமம்.]
நெகேமியா. [எஸ்றாவின் இரண்டாம் ஆகமம்.]
எஸ்தர்.
யோபு.
சங்கீதம்.
நீதிமொழிகள்.
பிரசங்கி.
உன்னதப்பாட்டு.
பெரிய தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் நான்கு.
சின்ன தீர்க்கதரிசிகளின் ஆகமங்கள் பன்னிரண்டு.

பின்சொல்லிய மற்றுமுள்ள ஆகமங்களைக்குறித்து யெரோம் என்பவர் சொல்லியிருக்கிறபடி, நன்மாதிரியைக் கண்டு நல்லொழுக்கத்தில் தேறும்படியாகத் திருச்சபை அவைகளை வாசிக்கும்படி நியமிக்கிறதே அல்லாமல், அவைகளைக்கொண்டு யாதொரு உபதேசத்தையும் ரூபிக்க அவைகளைப் பிரயோகிக்கிறதில்லை. அவைகளாவன:

எஸ்றாவின் மூன்றாம் ஆகமம்.
எஸ்றாவின் நான்காம் ஆகமம்.
தோபியாவின் ஆகமம்.
யூதீதின் ஆகமம்.
எஸ்தர் ஆகமத்தின் குறைபங்கு.
ஞான ஆகமம்.
சீராக்கின் குமாரன் இயேசுவின் ஆகமம்.
பாரூக்கு தீர்க்கதரிசியின் ஆகமம்.
மூன்று வாலிபரின் பாட்டு.
சூசன்னாளின் சரித்திரம்.
பெல்லையும் வலுசர்ப்பத்தையும் குறித்துச் சொல்லிய ஆகமம்.
மனாசேயின் ஜெபம்.
மக்கபேயரின் முதலாம் ஆகமம்.
மக்கபேயரின் இரண்டாம் ஆகமம்.

சாதாரணமாய் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற புதிய ஏற்பாட்டிலுள்ள ஆகமங்கள் எல்லாவற்றையும், நாமும் திவ்விய அதிகாரமுள்ள ஆகமங்கள் என்று ஒப்புக்கொள்ளுகிறோம்.

## 7. பழைய ஏற்பாடு.

தேவனுக்கும் மனுஷருக்கும் ஒரே மத்தியஸ்தராயிருக்கிற தேவனும் மனுஷனுமாகிய கிறிஸ்துவினாலே நித்திய ஜீவனை அடையலாமென்று,



பழைய ஏற்பாட்டிலும் புதிய ஏற்பாட்டிலும் அறிவித்திருக்கிறபடியால், பழைய ஏற்பாட்டுக்குப் புதிய ஏற்பாடு விரோதமானதல்ல. ஆதலால் பழைய ஏற்பாட்டில் சொல்லிய முற்பிதாக்கள் தங்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டவைகள் இம்மைக்குமாத்திரம் உரியவைகளென்று நம்பினதாகச் சொல்லுகிற வீண்பேச்சை ஒப்புக்கொள்ளக்கூடாது. மோசேமூலமாய் தேவன் அருளின பிரமாணங்களில், சடங்குப்பிரமாணத்தை நிறைவேற்ற கிறிஸ்தவர்கள் கடமையுள்ளவர்கள் அல்ல; அவைகளிலுள்ள துறைத்தனப் பிரமாணங்களை எந்த ராஜ்யத்திலாவது ஏற்றுக்கொள்வதும் அவசியம் அல்ல; ஆகிலும் அவைகளிலுள்ள சன்மார்க்கப்பிரமாணம் என்னப்பட்ட கற்பனைகளின்படி நடக்க ஒவ்வொரு கிறிஸ்தவனும் கடமைப்பட்டிருக்கிறான்.

## 8. விசுவாசப்பிரமாணங்கள் மூன்று.

நீசெயா விசுவாசப்பிரமாணமும், அதநாசி விசுவாசப்பிரமாணமும், அப்போஸ்தலருடையதென்று சொல்லப்படுகிற விசுவாசப்பிரமாணமும் ஆகிய இம்மூன்றும், பரிசுத்த வேதவாக்கியங்களினாலே யாதொரு சந்தேகமும் இன்றி ரூபிக்கப்படும். ஆகையால் அவைகளை முற்றும் ஒப்புக்கொண்டு விசுவாசிக்கவேண்டும்.

## 9. ஜன்மபாவம்.

ஆதாம் குற்றஞ்செய்ததுபோலக் குற்றஞ்செய்கிறது ஜன்மபாவம் என்று பெலாகியுவின் கொள்கைக்காரர் சொல்லுகிறது வீண்; ஆதாமின் சந்ததியில் இயல்பாய்ப் பிறந்த ஒவ்வொருவனுடைய சுபாவத்துக்கும் உரிய பழுதும் கேடுமே ஜன்மபாவமாம்; அதினாலே மனுஷர் ஆதிநீதியை விட்டு வெகுதூரம் விலகி, தீமைக்கு இயல்பாய்ச் சாய்கிறார்கள், மாம்சமும் எப்பொழுதும் ஆவிக்கு விரோதமாய் இச்சிக்கிறது; ஆகையால் இவ்வுலகத்தில் பிறக்கும் ஒவ்வொருவனும் ஜன்மபாவமுள்ளவனாயிருப்பதினால், தேவனுடைய கோபத்துக்கும், ஆக்கினைத்தீர்ப்புக்கும் பாத்திரவானாயிருக்கிறான். இந்தச் சுபாவக்கேடு மறுஜன்மம் அடைந்தவர்களிலும் இன்னும் இருக்கிறது. ஆதலால் கிரேக்கைப்பாஷையில் பிரோநீமா சார்கொஸ் (φρόνημα σαρκός) என்றிருக்கிற மாம்ச சிந்தையானது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்படியாமலிருக்கிறது. இந்த வார்த்தைக்குச் சிலர் மாம்சஞானம் என்றும், சிலர் மாம்சஇன்பம் என்றும், சிலர் மாம்சபற்று என்றும், சிலர் மாம்சஇச்சை என்றும் அர்த்தம் சொல்லுகிறார்கள். விசுவாசமுள்ளவர்களாகி ஞானஸ்நானம் பெற்றவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லாதிருந்தும், அப்போஸ்தலன் சொல்லியிருக்கிறபடி, அவர்களுக்குள்ளும் இருக்கும் இச்சையானது பாவத்தன்மையுள்ளதாயிருக்கிறது.

## 10. சுயாதீன சித்தம்.

ஆதாம் பாவஞ்செய்ததுமுதல், மனுஷனானவன் தன் இயல்பான திராணியினாலும் நற்கிரியைகளினாலும் விசுவாசிக்கவும், தேவனை நோக்கி வேண்டிக்கொள்ளவும், தன் மனதைத் திருப்பி, தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளக்கூடாத நிலைமைக்கு உட்பட்டிருக்கிறான். ஆகையால் கிறிஸ்துவின்மூலமாய் உண்டாகும் தேவனுடைய கிருபை நமக்கு முந்திக்கொண்டு நம்மில் நல்ல சித்தத்தை உண்டாக்குகிறதுமல்லாமல்; நல்ல சித்தம் உண்டானபின்பும், அந்தக் கிருபை நம்மோடேகூடக் கிரியைசெய்யாவிட்டால், தேவன் அங்கிகரிக்கத்தக்க பிரியமான கிரியைகளை நாம் செய்வதற்குப் பெலனற்றவர்களாயிருப்போம்.

## 11. மனுஷன் நீதிமானாக்கப்படுதல்.

நாம் செய்யும் கிரியைகளின்நிமித்தமாவது, நம்முடைய புண்ணியங்களின்நிமித்தமாவது, நாம் தேவனுக்கு முன்பாக நீதிமான்களென்று எண்ணப்படாமல், விசுவாசத்தினாலே நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தின் நிமித்தமே நீதிமான்களென்று எண்ணப்படுகிறோம். ஆகையால் நாம் விசுவாசத்தினாலேமாத்திரம் நீதிமான்களாக்கப்படுகிறோம் என்கிற உபதேசம் ஆரோக்கியமும் பூரண ஆறுதலும் உள்ளதாயிருக்கிறது. மனுஷர்கள் நீதிமான்களாக்கப்படுவதைக் குறித்துச் சொல்லிய ஓமிலி என்னும் பிரசங்கத்தில் இது விவரமாய்க் காட்டப்பட்டிருக்கிறது.

## 12. நற்கிரியைகள்.

விசுவாசத்தின் கனிகளாயும், நீதிமான்களானபின்பு செய்யப்படுகிறவைகளாயும் இருக்கிற நற்கிரியைகள், நம்முடைய பாவங்களைப் பரிகரிக்கவும், தேவனுடைய கண்டிப்பான நியாயத்தீர்ப்பைத் தாங்கவும் கூடாதவைகளாயிருந்தும், கிறிஸ்துவின் மூலமாய் அவைகள் தேவனுக்குப் பிரியமானவைகளாயும் அங்கிகரிக்கத்தக்கவைகளாயும் இருக்கிறது. அன்றியும் அவைகள் உண்மையும் உயிரும் உள்ள விசுவாசத்தினாலே இயல்பாய் உண்டாகிற பலன். எப்படியெனில், மரத்தின் தன்மையை கனியினாலே அறிகிறதுபோல, உயிருள்ள விசுவாசத்தை நற்கிரியைகளினாலே தெளிவாய் அறிந்துகொள்ளலாம்.

## 13. நீதிமான்களாக்கப்படுமுன் செய்யும் கிரியைகள்.

கிறிஸ்துவின் கிருபையையும் அவருடைய ஆவியின் ஏவுதலையும் அடைவதற்குமுன்னே, மனுஷர் செய்யும் கிரியைகள் இயேசுகிறிஸ்துவைப் பற்



றும் விசுவாசத்தால் உண்டானவைகளாயிராததினால், தேவனுக்குப் பிரியமானவைகளும் அல்ல. அவைகள் கிருபையைப் பெறுவதற்கு மனுஷனைப் பாத்திரவான்களாக்குகிறதும் அல்ல, அல்லது, சில கல்விமான்கள் சொல்லியபடி, அவைகள் கிருபையைப் பலனாகப் பெறத் தகுதியானவைகளும் அல்ல; மேலும் அவைகள் தேவனுடைய சித்தத்தின்படியும் கட்டளையின்படியும் செய்யப்படாதவைகளானதால், அவைகள் பாவத்தன்மை உள்ளவைகள் என்பதற்குச் சந்தேகம் இல்லை.

## 14. மிச்சப்புண்ணியக் கிரியைகள்.

தேவன் கட்டளையிட்டதற்கு அதிகமாக சுதாவாய்ச் செய்கிற கிரியைகள் மிச்சப்புண்ணியக் கிரியைகளாம். இப்படிச் செய்யக்கூடும் என்று போதிக்கிறது அகங்காரமாயும் அவபக்தியாயும் இருக்கிறது. அவைகளைச் செய்தோம் என்கிறவர்கள், தேவனுக்குச் செய்யவேண்டிய கடமையைத் தாங்கள் சரியாய் நிறைவேற்றினதும் அல்லாமல், கட்டளையிட்டிருக்கிற கடமையிலும் அதிகமாய் அவருக்காகச் செய்தோம் என்கிறவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவோ: உங்களுக்குக் கட்டளையிடப்பட்ட யாவையும் செய்தபின்பு, நாங்கள் அப்பிரயோஜனமான ஊழியக்காரர் என்று சொல்லுங்கள் என்று தெளிவாய்ப் போதித்திருக்கிறார்.

## 15. கிறிஸ்து ஒருவரே பாவம் இல்லாதவர்.

நம்முடைய தன்மையை மெய்யாய்த் தரித்துக்கொண்ட கிறிஸ்து, பாவம் தவிர மற்றெல்லாவற்றிலும் நமக்கு ஒப்பானவரானார். சரீரத்திலும் ஆத்துமாவிலும் அவர் முற்றும் பாவம் இல்லாதவர். அவர் மாசில்லாத ஆட்டுக்குட்டியாகத் தம்மைத்தாமே ஒரேதரம் பலியிட்டு உலகத்தின் பாவங்களைச் சுமந்துதீர்க்க வந்தார். பரிசுத்த யோவான் சொல்லியிருக்கிறபடி, அவரிடத்தில் பாவம் இல்லை. நாமோ ஞானஸ்நானம் பெற்றுக் கிறிஸ்துவுக்குள் மறுபடியும் பிறந்தவர்களாயிருந்தும், அநேக விஷயங்களில் தவறுகிறோம்; நமக்குப் பாவம் இல்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

## 16. ஞானஸ்நானத்துக்குப்பின்பு செய்யும் பாவம்.

ஞானஸ்நானம் பெற்றபின்பு மனதாரச் செய்யும் மரணத்துக்கு ஏதுவான ஒவ்வொரு பாவமும் பரிசுத்த ஆவிக்கு விரோதமான மன்னிக்கப்படாத பாவம் அல்ல. ஆகையால் ஞானஸ்நானம் பெற்றபின்பு, பாவத்தைச் செய்தவர்கள் மனந்திரும்பி மன்னிப்புப் பெறுவதற்கு இடம் இல்லை என்று தீர்க்கக்கூடாது. நாம் பரிசுத்தஆவியைப் பெற்றபின்பும், நமக்கு அருளின கிருபையை விட்டு விலகி, பாவத்தில் விழுகிறதும் உண்டு;

திரும்பவும் தேவகிருபையினாலே எழுந்திருந்து சேர்ப்படுகிறதும் உண்டு. ஆதலால், தாங்கள் இம்மையில் இருக்குமளவும் பாவம்செய்யக் கூடியவர்கள் அல்ல என்று சொல்லுகிறவர்களும், உண்மையாய்க் குணப்படுகிறவர்களுக்குப் பாவமன்னிப்பு இல்லை என்று சொல்லுகிறவர்களும் தப்பிதமான கொள்கைக்காரர் என்று தீர்க்கவேண்டும்.

## 17. முன்குறித்தல், தெரிந்துகொள்ளுதல்.

நித்திய ஜீவனுக்கு ஏதுவான முன்குறித்தலானது, உலகத்தோற்றத்துக்குமுன் கிறிஸ்துவுக்குள்ளே மனுஷரில் தாம் தெரிந்துகொண்டவர்களைச் சாபத்தினின்றும் ஆக்கினைத்தீர்ப்பினின்றும் விடுதலையாக்கி, அவர்களைக் கனத்துக்கு ஏற்ற பாத்திரங்களாக நித்திய இரட்சிப்புக்குக் கொண்டுவந்து சேர்ப்போம் என்று, நமக்கு இரகசியமாயிருக்கிற தமது திருவுள ஆலோசனையினாலே தீர்மானித்திருக்கிற தேவனுடைய அநாதி நிர்ணயமே. ஆகையால், இவ்வளவு மேன்மையான திவ்விய அருள் பெற்றிருக்கிறவர்களுடைய சலாக்கியம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவர் ஏற்றகாலத்தில் அவர்களுக்குள்ளே கிரியைசெய்ய, அவர்கள் தேவதீர்மானத்தின்படி அழைக்கப்படுகிறார்கள்; தேவகிருபையினாலே அந்த அழைப்புக்குக் கீழ்ப்படிகிறார்கள்; இலவசமாய் நீதிமான்களாக்கப்படுகிறார்கள்; புத்திரசுவிகாரத்தினாலே தேவனுக்குப் பிள்ளைகளாகிறார்கள்; அவருடைய ஒரேபேறான குமாரனாகிய இயேசுகிறிஸ்துவினுடைய சாயலுக்கு ஒப்பாகிறார்கள்; நற்கிரியைகளைச் செய்து தேவபக்தியாய் நடக்கிறார்கள்; கடைசியில் தேவனுடைய இரக்கத்தினாலே நித்திய ஆநந்தம் அடைகிறார்கள்.

மாம்சத்துக்கேற்ற கிரியைகளையும், பூமிக்குரிய தங்கள் அவயவங்களையும் அழித்துப்போடவும், பரத்துக்கேற்ற மேலானவைகளைச் சிந்திக்கவும் தக்கதாய், கிறிஸ்துவின் ஆவியானவர் தங்களுக்குள்ளே செய்கிற கிரியையை உணர்ந்தறிகிற தேவபக்தியுள்ளவர்கள் முன்குறித்தலையும், கிறிஸ்துவுக்குள்ளே தாங்கள் தெரிந்துகொள்ளப்பட்டதையும் பக்தியாய்த் தியானம்பண்ணும்போது, அந்தத் தியானம், கிறிஸ்துவின் மூலமாய் நித்திய இரட்சிப்பை அநுபவிக்கலாம் என்கிற அவர்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறதும் அன்றி, தேவன்மேல் வைத்த அவர்கள் அன்பை வளரச்செய்கிறதினாலேயும், அது அவர்களுக்குச் சந்தோஷமாயும், நிறைந்த ஆறுதல் உள்ளதாயும் இருக்கிறது. அப்படிப்போல, கிறிஸ்துவின் ஆவி இல்லாத மாம்ச சிந்தையுள்ளவர்கள் முன்குறித்தலாகிய தேவனுடைய நிர்ணயத்தை ஆராயவேண்டுமென்று துணிவுகொண்டு சிந்தித்துக்கொண்டேவந்தால், சாத்தானுடைய தூண்டுதலினால் அவர்கள் அவநம்பிக்கையிலாவது, அதற்குச் சரியான வெட்கங்கெட்ட துன்மார்க்க நடக்கையிலாவது,



அகப்படுவார்கள்; ஆகையால் அது அவர்களுக்குக் கொடிய மோசமுள்ளதாயிருக்கும்.

மேலும், தேவன் பரிசுத்த வேதவாக்கியங்களில் யாவருக்கும் பொதுவாய்ச் செய்திருக்கிற அந்தந்த வாக்குத்தத்தங்களை அந்தந்தப்பிரகாரமாகவே நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். தேவவசனத்தில் நமக்குத் தெளிவாய் அறிவித்திருக்கிற தேவசித்தத்தையே நமது நடக்கைக்குப் பிரமாணமாக வைத்து நடக்கவேண்டும்.

## 18. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே நித்திய இரட்சிப்பு கிடைப்பது.

மனுஷர் இரட்சிக்கப்படும்படி இயேசுகிறிஸ்துவின் நாமம்மாத்திரமே பரிசுத்த வேதவாக்கியங்களில் காட்டியிருக்கிறபடியால், எந்த சாஸ்திரத்தையாவது, எந்த சமயத்தையாவது பற்றிக்கொண்டிருக்கிறவன், அந்த சமய சாஸ்திரத்தின்படியும் இயற்கை அறிவின்படியும் கிரமமாய் நடப்பானாகில், அதினால் இரட்சிக்கப்படுவான் என்று சொல்லத் துணிகிறவர்கள் சபிக்கப்பட்டவர்கள் என்று எண்ணப்படவேண்டும்.

## 19. திருச்சபை.

தேவனுடைய சுத்தாங்கவசனம் பிரசங்கிக்கப்பட்டும், கிறிஸ்துவின் நியமப்படி சாக்கிரமெந்துக்களுக்கு அவசியம் வேண்டிய யாவற்றையும் செய்யவேண்டிய விதமாய்ச் செய்து தகுதியாய் ஆசரிக்கப்பட்டும் வருகிற விசுவாசிகளுடைய சங்கமே கிறிஸ்துவின் வெளியரங்கமான சபை.

எருசலேம், அலெக்சந்திரியா, அந்தியோகியா சபைகள், நடக்கை, சடங்கு, ஆசாரங்களையும் குறித்துமாத்திரம் அல்ல, விசுவாசிக்கவேண்டியவைகளைக்குறித்தும் தவறிப்போனதுபோல, ரோமசபையும் தவறிப்போயிருக்கிறது.

## 20. திருச்சபைக்குரிய அதிகாரம்.

ஆராதனைக்கேற்ற முறைமைகளையும் சடங்குகளையும் ஏற்படுத்துகிறதற்கும், விசுவாசிக்கவேண்டியவைகளைக்குறித்து உண்டாகும் தர்க்கங்களைத் தீர்க்கிறதற்கும் திருச்சபைக்கு அதிகாரம் உண்டு. ஆகிலும் எழுதியிருக்கிற தேவவசனத்துக்கு விரோதமான யாதொன்றையும் ஏற்படுத்துவதற்கும், வேத ஆகமத்திலுள்ள ஒரு வாக்கியத்தை மற்ற வாக்கியத்துக்கு விரோதமாக வியாக்கியானம் செய்வதற்கும் திருச்சபைக்கு அதிகாரம் இல்லை; ஆகையால், திருச்சபையானது வேத எழுத்துக்களுக்குச் சாட்சியாயும், அவைகளைக் காக்கும் அதிகாரியாயும் இருந்தும், அது அவைக

ளுக்கு விரோதமான யாதொன்றையும் ஏற்படுத்தவும் கூடாது; அவைகளில் அடங்கியிராத யாதொன்றையும் இரட்சிப்படைவதற்காக விசுவாசிக்க வேண்டுமென்று கட்டளையிடவும் கூடாது.

## 21. திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்களின் அதிகாரம்.

ராஜாக்களுடைய உத்தரவும் அநுமதியும் இல்லாமல், திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்கள் கூடிவரக்கூடாது. கூடிவந்திருக்கும்போதும், அந்தச் சங்கத்தார் மனுஷராயிருப்பதினாலும், தேவனுடைய ஆவியினாலும் வசனத்தினாலும் ஆளப்படாதவர்கள் அவர்களுக்குள்ளே இருப்பதினாலும், திவ்விய காரியங்களைக்குறித்து அவர்கள் தவறிப்போவதற்கு ஏது உண்டு, அப்படித் தவறிப்போனதும் உண்டு; ஆகையால் இரட்சிப்படைவதற்கு அவசியம் என்று அவர்கள் தீர்மானிக்கிறவைகள் பரிசுத்த வேதவாக்கியங்களில் அடங்கியிருக்கிறவைகள் என்று ரூபிக்கக்கூடாவிட்டால், அவைகள் உறுதியும் அதிகாரமும் உள்ளவைகள் அல்ல.

## 22. உத்தரிக்கும் ஸ்தலம்.

உத்தரிக்கும் ஸ்தலத்தைக்குறித்தும், பரிபூரண பலன்களைக்குறித்தும், சொரூபங்களையும் அர்ச்சியசிஷ்ட பண்டங்களையும் பணிந்து வணங்குகிறதைக்குறித்தும், அர்ச்சியசிஷ்டவான்களை நோக்கி வேண்டிக்கொள்ளுகிறதைக்குறித்தும், ரோமைச்சபை போதிக்கிற உபதேசம் புத்தியீனமாய்க் கட்டின வீண்காரியமாயும், வேதவாக்கியங்களினாலே ரூபிக்கப்படக் கூடாமல் தேவவசனத்துக்கு விரோதமாயும் இருக்கிறது.

## 23. சபையில் செய்யப்படும் பணிவிடை.

கிரமப்படி அழைத்து அனுப்பப்படுமுன் சபையிலே பிரசங்கிக்கவும் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கவும் ஒருவனும் தானாய் ஏற்படக்கூடாது. கர்த்தருடைய திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அழைத்து அனுப்பும்படி, திருச்சபையில் வெளியரங்கமாய் அதிகாரம் பெற்றிருக்கிறவர்களாலே இந்தப் பணிவிடைக்குத் தெரிந்தெடுத்து அழைக்கப்பட்டிருக்கிறவர்களே, கிரமப்படி அழைத்து அனுப்பப்பட்டவர்கள் என்று நிதானிக்க வேண்டும்.

## 24. சபையாருக்குத் தெரிந்திருக்கிற பாஷையிலே தேவ ஆராதனை செய்தல்.

ஜனங்களுக்குத் தெரியாத பாஷையிலே தேவாலயத்தில் வெளியரங்கமாய் ஜெபம்பண்ணுகிறதும், சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கிறதும், தேவவசனத்துக்கும் பூர்வ திருச்சபை வழக்கத்துக்கும் முற்றும் விரோதமான காரியமாயிருக்கிறது.



## 25. சாக்கிரமேந்துக்கள்.

கிறிஸ்துவினாலே ஏற்படுத்தப்பட்ட சாக்கிரமெந்துக்கள் கிறிஸ்துமார்க்கத்தை அநுசரிக்கிறதற்குக் குறிப்படையாளங்களாகமாத்திரம் அல்ல, தேவகிருபைக்கும், தேவன் நம்மிடத்தில் வைத்திருக்கிற பிரியத்துக்கும், நிச்சயமான சாட்சிகளாகவும், பலன்செய்யும் அடையாளங்களாகவும், அவர்மேல் நாம் வைக்கிற விசுவாசத்தை எழுப்பிப் பலப்படுத்துவதற்கு அவர் நமக்குள்ளே அந்தரங்கமாய்க் கிரியைசெய்கிற யத்தனங்களாகவும் இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து சுவிசேஷத்தில் ஏற்படுத்தின சாக்கிரமெந்துக்கள் இரண்டு: அவைகள் ஞானஸ்நானமும் கர்த்தருடைய இராப்போஜனமுமாம்.

சிலர் சாக்கிரமெந்துக்கள் என்று சொல்லுகிற திடப்படுத்தல், பாவசங்கீர்த்தனம், குருப்பட்டம், விவாகம், அவஸ்தைப்பூசுதல் ஆகிய இவ்வைந்தில், சிலது அப்போஸ்தலர் செய்ததைச் சரியாய்ப் பின்பற்றாமல், கெடுதியாய்ப் பின்பற்றினதினாலே உண்டானவைகள்; சிலது வேதவாக்கியங்களினாலே ஒப்புக்கொள்ளப்பட்ட நிலைமைகள்; ஆனாலும் தேவன் நியமித்த புறம்பான அடையாளமும், முறையும், அவைகளுக்கு இல்லாததினால், அவைகள் ஞானஸ்நானமும் இராப்போஜனமுமாகிய சாக்கிரமெந்துக்களுக்குரிய தன்மை உடையவைகளல்ல. ஆகையால் அவைகளைச் சுவிசேஷ சாக்கிரமெந்துக்கள் என்று எண்ணக்கூடாது.

வேடிக்கையாய்ப் பார்க்கிறதற்கும் எடுத்துக்கொண்டு திரிகிறதற்கும் அல்ல, நாம் ஏற்றவிதமாய் அநுசரிப்பதற்கே கிறிஸ்துவானவர் சாக்கிரமெந்துக்களை ஏற்படுத்தினார். பாத்திரராய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு மாத்திரம் அவைகள் சுகிர்த பிரயோஜனமாய்ப் பலிக்கும்; அவைகளை அபாத்திரராய்ப் பெறுகிறவர்கள் பரிசுத்த பவுல் சொல்லியிருக்கிறபடி தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பை வருவித்துக்கொள்ளுகிறார்கள்.

## 26. அபாத்திரரான தேவ பணிவிடைக்காரராலே கொடுக்கப்படும் சாக்கிரமேந்துக்களின் பலன் குறைபடாமை.

வெளியரங்கமான திருச்சபையிலே நல்லாரோடே தீயோர் எப்பொழுதும் கலந்திருக்கிறதும் அல்லாமல், தேவவசனத்தைப் பிரசங்கித்துச் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கும் பணிவிடையில் சிலவேளை தீயோர் முதன்மையாயிருக்கிறதும் உண்டு. ஆனாலும் அவர்கள் தங்களுடைய நாமத்தினாலேயல்ல, கிறிஸ்துவின் நாமத்தினாலேயே அவைகளைச் செய்து, அவருடைய கட்டளையினாலும் அதிகாரத்தினாலும் பணிவிடையை நடப்

பிக்கிறபடியினாலே, அவர்கள் மூலமாய் நாம் தேவவசனத்தைக் கேட்கலாம், சாக்கிரமெந்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். அவர்களுடைய துன்மார்க்கத்தினாலே கிறிஸ்துவினுடைய நியமம் பலனற்றதாய்ப் போகிறதுமில்லை, அவர்களாலே கொடுக்கப்படும் சாக்கிரமெந்துக்களை விசுவாசத்தினாலே ஏற்றவிதமாய்ப் பெற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு, தேவவரப்பிரசாதங்களுக்குரிய கிருபை குறைந்துபோகிறதுமில்லை. அந்தச் சாக்கிரமெந்துக்கள் துன்மார்க்கர்மூலமாய்க் கொடுக்கப்பட்டாலும், கிறிஸ்துவின் நியமத்தினாலும் வாக்குத்தத்தத்தினாலும் பலன்செய்கிறவைகளாயிருக்கும்.

ஆகிலும், துன்மார்க்கமாய் நடக்கிற தேவ பணிவிடைக்காரரைக் குறித்து விசாரிக்கிறதும், அவர்கள் செய்த குற்றங்களை அறிந்திருக்கிறவர்கள்மூலமாய் அவர்களை விசாரணைக்குக் கொண்டுவருகிறதும், குற்றமுள்ளவர்கள் என்று காணப்பட்டால் நீதியுள்ள தீர்ப்பினாலே அவர்களை நீக்கிப்போடுகிறதும், திருச்சபையின் ஒழுங்குக்கு ஏற்றது.

## 27. ஞானஸ்நானம்.

ஞானஸ்நானமானது கிறிஸ்துமார்க்கத்தை அநுசரித்துக்கொள்வதற்கு அடையாளமாகவும், கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவர்களாகாத மற்றவர்களும் இன்னாரென்று காண்பிக்கத்தக்க வேற்றுமைக் குறிப்பாகவும்மாத்திரம் அல்ல, மறுபிறப்புக்கு அடையாளமாகவும் இருக்கிறது; ஞானஸ்நானத்தைத் தகுதியாய்ப் பெறுகிறவர்களைத் திருச்சபையிலே சேர்த்துக்கொள்ளுகிறதற்கு அது ஒரு யத்தனமாயிருக்கிறது. அதனாலே பாவமன்னிப்பையும், பரிசுத்த ஆவியினாலே தேவனுக்குப் பிள்ளைகளாவதற்கு ஏற்ற புத்திரசுவிகாரத்தையும் பற்றிய வாக்குத்தத்தங்கள் பிரத்தியட்சமாய்க் கையொப்பமும் முத்திரையும் இட்டதுபோல உறுதியாக்கப்படுகிறது, விசுவாசமும் பலப்படுகிறது, தேவனை நோக்கிச் செய்யும் ஜெபத்தின் மூலமாய்க் கிருபையும் அதிகரிக்கிறது. குழந்தைகளுக்கும் ஞானஸ்நானம் கொடுக்கிறது, கிறிஸ்துவின் நியமத்துக்கு ஏற்றதென்று திருச்சபையிலே எப்பொழுதும்போல அதை அநுசரித்துவரவேண்டும்.

## 28. கர்த்தருடைய இராப்போஜனம்.

கர்த்தருடைய இராப்போஜனமானது கிறிஸ்தவர்கள் ஒருவரில் ஒருவர் வைக்கவேண்டிய அன்புக்கு அடையாளமாகமாத்திரம் அல்ல, கிறிஸ்துவின் மரணத்தினாலே நமக்கு உண்டான மீட்புக்குரிய சாக்கிரமெந்தாயும் இருக்கிறது. எப்படியெனில், அதைக் கிரமப்படியும் பாத்திரமாயும் விசுவாசத்தோடு வாங்குகிறவர்களுக்கு நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவின் சரீரத்தைப் பெற்றுக்கொள்ளுதலாயும், ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவின் இரத்தத்தைப் பெற்றுக்கொள்ளுதலாயும் இருக்கிறது.



கர்த்தருடைய இராப்போஜனத்திலே அப்பமும் திராட்சரசமுமாகிய இவற்றின் சுபாவமாறுதல் உண்டென்பது (*Transubstantiation*), தேவவசனத்தினாலே ரூபிக்கப்படாமல், தெளிவான வேதவாக்கியங்களுக்கு விரோதமாயும், சாக்கிரமெந்தின் தன்மையை மறுக்கிறதாயும், அநேக வீண்பக்திக்குக் காரணமாயும் இருக்கிறது.

இராப்போஜனத்திலே கிறிஸ்துவினுடைய சரீரம் ஆவிக்குரிய திவ்விய பிரகாரமாகமாத்திரம் கொடுக்கப்பட்டும், வாங்கப்பட்டும், புசிக்கப்பட்டும் வருகிறது. கிறிஸ்துவின் சரீரத்தை இராப்போஜனத்திலே வாங்கிப் புசிக்கிற யத்தனம் விசுவாசமே.

கர்த்தருடைய இராப்போஜனமாகிய சாக்கிரமெந்தை வைத்துவைக்கிறதும், எடுத்துக்கொண்டு திரிகிறதும், உயர்த்திக் காட்டுகிறதும், நமஸ்கரிக்கிறதும், கிறிஸ்துவின் ஏற்பாடு அல்ல.

## 29. துன்மார்க்கர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாங்கினாலும், கிறிஸ்துவின் சரீரத்தைப் புசியாமை.

துன்மார்க்கரும் உயிருள்ள விசுவாசமில்லாதவர்களும் (பரிசுத்த அகுஸ்தீன் சொல்லியபடி) சரீரப்பிரகாரமாக வெளியரங்கமாய்த் தங்கள் பற்களாலே கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமுமாகிய சாக்கிரமெந்தைமென்று தின்றாலும், அவர்கள் எவ்விதத்தினாலேயும் கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாகாமல், தங்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டாகத்தக்கதாக, இவ்வளவு பெரிய காரியத்துக்கு அடையாளமாயிருக்கிற சாக்கிரமெந்தைப் புசித்துப் பானம்பண்ணுகிறார்கள்.

## 30. அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் பெறுதல்.

கிறிஸ்துவின் நியமத்தின்படியும் கட்டளையின்படியும், கர்த்தருடைய சாக்கிரமெந்துக்குரிய அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் வித்தியாசமில்லாமல் கிறிஸ்தவர்களெல்லாருக்கும் கொடுக்கவேண்டியதாகையால், கர்த்தருடைய பாத்திரத்தைச் சபையாருக்குக் கொடாமல் இருக்கக்கூடாது.

## 31. கிறிஸ்து சிலுவையில் செலுத்தி முடித்த ஒரே பலி.

கிறிஸ்து ஒரேதரம் செலுத்தின பலியானது ஜந்மபாவமும் கர்மபாவமுமாகிய உலகத்தின் பாவங்கள் எல்லாவற்றையும் நீக்கின சம்பூரண

மான மீட்பும், பிராயச்சித்தமும், பரிகாரமுமாய் இருக்கிறது. இதுவேயல்லாமல், பாவத்துக்கு வேறொரு பரிகாரமும் இல்லை. ஆகையால், உயிருள்ளோருக்கும் மரித்தோருக்கும் உண்டாயிருக்கும் தண்டனையையாவது, குற்றத்தையாவது நீக்கும்படி குருவானவர் அவர்களினிமித்தம் கிறிஸ்துவைப் பலியிடுகிறார் என்று வழக்கமாய்ச் சொல்லுகிற பூசைப்பலிகள் தேவதூஷணமுள்ள கட்டுக்கதைகளும், மோசம் நிறைந்த வஞ்சனைகளுமாயிருக்கிறது.

## 32. குரு விவாகம்.

அத்தியட்சமார்களும், குருமார்களும், உதவிக்குருமார்களும் விவாகம் செய்துகொள்வதில்லை என்று பிரமாணம் பண்ணவேண்டுமென்றாவது, விவாகம் செய்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென்றாவது, தேவவசனத்திலே கட்டளையிட்டிருக்கிறதில்லை. ஆதலால், மற்றக் கிறிஸ்தவர்களைப் போல இவர்களும் விவாகம்செய்துகொள்வது தேவபக்திக்கு ஏதுவாயிருக்கும் என்று எண்ணுவார்களானால், தங்கள் இஷ்டத்தின்படி விவாகம் செய்துகொள்ளலாம்.

## 33. சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களுக்கு விலகியிருத்தல்.

திருச்சபை பிரசித்தஞ்செய்யும் தீர்ப்பினாலே சபையின் ஐக்கியத்தை விட்டு நியாயமாய்ப் புறம்பாக்கப்பட்டவன், வெளியரங்கமாய்த் தபசு செய்து ஒப்புரவாகித் திருச்சபையில் சேர்த்துக்கொள்ளத்தக்க அதிகாரியினாலே சேர்க்கப்படுமளவும், எல்லா விசுவாசிகளாலும் அவன் அஞ்ஞானியைப்போலவும் ஆயக்காரனைப்போலவும் எண்ணப்படவேண்டும்.

## 34. திருச்சபையின் பாரம்பரை வழக்கங்கள்.

பாரம்பரை வழக்கங்களும், சடங்குகளும் எல்லா இடங்களிலும் யாதொரு வேற்றுமையும் இல்லாமல் ஒரேவிதமாய் இருக்கவேண்டிய அவசியம் இல்லை; அவைகள் எக்காலத்திலேயும் வெவ்வேறாயிருந்தன. அந்தந்தத் தேசத்துக்கும், காலத்துக்கும், ஜனத்தின் ஆசாரங்களுக்கும் தக்கதாக அவைகளை மாற்றிக்கொள்ளலாம்; தேவவசனத்துக்கு விரோதமாகமாத்திரம் யாதொன்றும் நியமிக்கப்படாதபடி எச்சரிக்கையாயிருக்கவேண்டும். தேவவசனத்துக்கு விரோதமாயிராமல் பொதுவான அதிகாரத்தினாலே ஏற்படுத்தப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற திருச்சபையின் பாரம்பரை வழக்கங்களையும் சடங்குகளையும் தன் சுய அபிப்பிராயப்படி மனதார வேண்டுமென்றே வெளியரங்கமாய் மீறுகிறவன் எவனோ, அவன் திருச்சபையின் பொதுவான ஒழுங்குக்கு விரோதமாய் நடந்து, நியாயாதிபதிகளின் அதிகாரத்தை இகழ்ந்து, பலவீன சகோதரரின் மனச்சாட்சியைப்



புண்படுத்துகிறவனாய் இருக்கிறபடியால், மற்றவர்களுக்கு எச்சரிப்புண்டாக அவன் வெளியரங்கமாகக் கண்டிக்கப்படவேண்டும்.

மனுஷ அதிகாரத்தினால் ஏற்படுத்தப்பட்டவைகளாகிய சபையின் சடங்குகளையும் முறைமைகளையும் தேவபக்திக்கு ஏதுவாக மாற்றவும், ஒழித்துப்போடவும், ஏற்படுத்தவும் அந்தந்தத் தேசத்துச் சபைக்கு அதிகாரம் உண்டு; எல்லாம் பக்திவிருத்திக்கு ஏதுவாகமாத்திரம் இருக்கவேண்டும்.

## 35. ஓமிலி பிரசங்கங்கள்.

ஆறாம் எட்வார்ட் ராஜாவின் நாட்களில் பிரசித்தஞ்செய்த ஓமிலி பிரசங்கங்கள் அடங்கிய முதலாம் புஸ்தகத்தைப்போல, இந்தப் பிரமாணத்தின் அடியில் காட்டியிருக்கிற ஓமிலி பிரசங்கங்கள் அடங்கிய இரண்டாம் புஸ்தகத்திலும், தேவபக்திக்கும் திவ்விய ஆரோக்கியத்துக்கும் ஏற்றதும், இக்காலத்துக்கு அவசியம் வேண்டியதுமான உபதேசம் அடங்கியிருக்கிறது. ஆகையால், ஜனங்களுக்கு விளங்கத்தக்கதாக அவைகளைக் குருமார் தேவாலயத்தில் கருத்தோடும் தெளிவான சத்தத்தோடும் வாசிக்கவேண்டுமென்று தீர்மானிக்கிறோம்.

## ஓமிலி பிரசங்கங்களின் அட்டவணை.

1. தேவாலயத்தில் நடந்துகொள்ள வேண்டிய கிரமம்.
2. விக்கிரகாராதனையின் மோசத்துக்கு விலகுவது.
3. தேவாலயங்களைப் பழுதுபார்த்துச் சுத்தமாய் வைப்பது.
4. உபவாசம் முதலான நற்கிரியைகள்.
5. பெருந்தீனியும் வெறியும் விலக்கல்.
6. வஸ்திராபரணங்களை மட்டுமிஞ்சித் தரியாதிருத்தல்.
7. ஜெபம்பண்ணுதல்.
8. ஜெபம்பண்ணுவதற்கு ஏற்ற காலமும் இடமும்.
9. ஜனங்களுக்குத் தெரியும்பாஷையில் பொதுவான ஜெபங்களையும் சாக்கிரமெந்து முறைமைகளையும் நடத்துவது.
10. தேவவசனத்தைப் பயபக்தியாய் எண்ணுவது.
11. தர்மஞ்செய்வது.
12. கிறிஸ்துவின் ஜநநம்.
13. கிறிஸ்துவின் பாடு.
14. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
15. கிறிஸ்துவின் சரீரமும் இரத்தமுமாகிய சாக்கிரமெந்தைப் பாத்திரராய் வாங்குதல்.
16. பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதங்கள்.
17. பரமண்டலத்துக்கேறின நாளுக்கு முந்தின மூன்று நாட்கள்.
18. விவாக நிலைமை.
19. மனந்திரும்புதல்.
20. சோம்பற்றனம்.
21. இராஜதுரோகம்.

## 36. அத்தியட்சமார் குருமார் பட்டாபிஷேகம்.

பிரதான அத்தியட்சமார் அத்தியட்சமாரின் பிரதிஷ்டை முறைமையும், குருமார் உதவிக்குருமாரின் பட்டாபிஷேக முறைமையும் அடங்கிய புஸ்தகம், ஆறாம் எட்வார்ட் ராஜாவின் நாட்களில் பிரசித்தஞ்செய்யப்பட்டு, அக்காலத்துப் பார்லமெந்து சபையின் அநுமதியும் பெற்றிருக்கிறது. பிரதிஷ்டை பட்டாபிஷேகமுறைமைகளில் செய்யவேண்டியவைகளெல்லாம் அந்தப் புஸ்தகத்தில் அடங்கியிருக்கிறது; அதிலே வீண்பக்திக்கும் அவபக்திக்கும் ஏதுவானது ஒன்றும் இல்லை. ஆதலால், மேற்சொல்லிய எட்வார்ட் ராஜாவின் இரண்டாம் வருஷமுதல் இதுவரைக்கும் அந்தப் புஸ்தகத்தின் முறைமைகளின்படி கண்காணிப்புப் பிரதிஷ்டையாவது, குருப்பட்டாபிஷேகமாவது பெற்றிருக்கிறவர்களும், இனிமேல் அந்த முறைமைகளின்படி பெறுகிறவர்களுமாகிய யாவரும் சரியாயும் ஒழுங்காயும் நியாயமாயும் பட்டம் பெற்றவர்கள் என்று தீர்மானிக்கிறோம்.

## 37. தேச அதிகாரிகள்.

இங்கிலாந்து ராஜ்யத்துக்கும், அதைச்சேர்ந்த மற்றத் தேசங்களுக்கும் இராஜாத்தியே பிரதான அதிகாரி, அவைகளிலுள்ள திருச்சபைக்கும் ராஜாங்கத்துக்குமுரிய சகல அந்தஸ்துடையவர்களின் சகல விவகாரங்களையும் தீர்மானிக்கிற அதிகாரமும் அவருக்கே உரியது: அவர் அந்நியதேசத்து எந்த அதிகாரத்துக்கும் உட்பட்டவரும் அல்ல, உட்படவும் கூடாது.

இராஜாத்தியானவருக்குப் பிரதான அதிகாரம் உண்டென்று நாம் சொல்வதைக்குறித்து சிலர் மனவெறுப்புக்கொண்டு ஆட்சேபிக்கிறார்கள் என்று தெரியவருகிறதினால் நாம் அறிவிக்கிறது என்னவென்றால்: நம்முடைய இராஜாத்தியாகிய எலிசபேத்து கொஞ்சக்காலத்துக்கு முன்னே பிரசித்தஞ்செய்திருக்கிற கட்டளைகளினாலே தெளிவாய்த் தோன்றுகிறபடியே, தேவவசனத்தைப் பிரசங்கித்துச் சாக்கிரமெந்துக்களைக் கொடுக்கிற பணிவிடை நம்முடைய ராஜாக்களுக்கு உண்டென்று சொல்லாமல்; தேவனாலேயே தேவபக்தியுள்ள ராஜாக்களுக்கு எப்பொழுதும் கொடுக்கப்பட்டிருந்ததென்று வேதவாக்கியங்களினாலே காட்டியிருக்கிற அதிகாரம்மாத்திரம் அவர்களுக்கு உண்டென்று சொல்லுகிறோம். அந்த அதிகாரம் என்னவென்றால், திருச்சபையிலாவது, ராஜாங்கத்திலாவது, தேவன் தங்களுடைய விசாரணைக்கு ஒப்புவித்திருக்கிற எந்த அந்தஸ்துடையவர்களையும் ஆண்டு, முருட்டாட்டக்காரரையும் துன்மார்க்கரையும் நீதியாகிய கட்கத்தினாலே அடக்கிப்போடுகிற அதிகாரமேயாம்.



இங்கிலாந்து ராஜ்யத்திலே ரோமை அத்தியட்சருக்கு அதிகாரமே இல்லை.

கொடிய பாதகங்களைச் செய்திருக்கிற கிறிஸ்துமார்க்கத்தாரையும் ராஜ்யத்துப் பிரமாணங்களின்படி மரண ஆக்கினைக்கு உட்படுத்தலாம்.

தேச அதிகாரிகளின் உத்தரவுப்படி கிறிஸ்தவர்கள் ஆயுதம் தரித்துப் போர்ச்சேவகம்பண்ணலாம்.

## 38. கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகள் பொதுவாயிராமை.

கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகளைக்குறித்து யாவருக்கும் பொதுவான பாத்தியமும் அநுபோகமும் உண்டென்று, அனபப்திஸ்தர் சாதிக்கிறது அபத்தம். ஆனாலும், ஒவ்வொருவனும் தன்தன் திராணிக்குத்தக்கதாக, தனக்கு உண்டானவைகளில் ஏழைகளுக்கு உதாரமாய்க் கொடுக்கக் கடமையுள்ளவனாயிருக்கிறான்.

## 39. கிறிஸ்தவர்கள் சத்தியம்பண்ணுதல்.

வியர்த்தமாயும் பயபக்தியில்லாமலும் சத்தியம்பண்ணுகிறது நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலும், அவர் அப்போஸ்தலனாகிய யாக்கோபினாலும், கிறிஸ்தவர்களுக்கு விலக்கப்பட்டிருக்கிறதென்று நாம் ஒப்புக்கொண்டபோதிலும்; தேச அதிகாரிகள் உத்தரவுகொடுத்தால், விசுவாசத்துக்கும் அன்புக்கும் அடுத்த விஷயங்களில், தீர்க்கதரிசி போதித்தபடி, கிறிஸ்தவனானவன் நீதியாயும் நியாயமாயும் உண்மையாயும் சத்தியம்பண்ணலாம் என்று நிதானிக்கிறோம்.

---

## உறுதிப்படுத்தல்.

மேற்சொல்லிய வேதசித்தாந்தப் பிரமாணங்கள் அடங்கிய புஸ்தகம் கிறிஸ்து பிறந்து 1571-ம் வருஷத்தில் பிரதான அத்தியட்சமார் அத்தியட்சமார் மேற்சங்கமாகவும், எல்லாக் குருமார்களும் கீழ்ச்சங்கமாகவும் கூடிவந்தபோது, கவனமாய் வாசிக்கக்கேட்டும், அவர்கள் கையொப்பத்தினாலே உறுதியாக்கப்பட்டும் இருந்ததும் அல்லாமல்; தேவகிருபையினாலே இங்கிலாந்து, பிரான்சு, ஐர்லாந்து என்னும் தேசங்களுக்கு இராஜாத்தியும், கிறிஸ்துமார்க்கப் பரிபாலினி என்கிற பேர்பெற்றவருமாயிருக்கிற நம்முடைய சுயாதிபதியாகிய எலிசபேத்து இராஜாத்தியாலே மறுபடியும் சம்மதியும் அநுமதியும் பெற்று, அது இந்த ராஜ்யமெங்கும் கைக்கொள்ளப்படலாமென்று உறுதியாக்கப்பட்டும் இருக்கிறது.

## வேதசித்தாந்தப் பிரமாணங்களின் பெயர் அட்டவணை.

1. பரிசுத்த திரித்துவத்தைப் பற்றும் விசுவாசம்.
2. மெய்யான மனுஷனாய் அவதரித்த தேவ குமாரனாகிய வார்த்தையானவர்.
3. கிறிஸ்து பாதாளத்தில் இறங்கினது.
4. கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்.
5. பரிசுத்த ஆவியானவர்.
6. இரட்சிப்படைவதற்குப் பரிசுத்த வேதாகமங்களே போதுமானது.
7. பழைய ஏற்பாடு.
8. விசுவாசப் பிரமாணங்கள் மூன்று.
9. ஜந்மபாவம்.
10. சுயாதீன சித்தம்.
11. மனுஷன் நீதிமானாக்கப்படுதல்.
12. நற்கிரியைகள்.
13. நீதிமான்களாக்கப்படுமுன் செய்யும் கிரியைகள்.
14. மிச்சப்புண்ணியக் கிரியைகள்.
15. கிறிஸ்து ஒருவரே பாவம் இல்லாதவர்.
16. ஞானஸ்நானத்துக்குப்பின்பு செய்யும் பாவம்.
17. முன்குறித்தல், தெரிந்துகொள்ளுதல்.
18. கிறிஸ்துவின் நாமத்தினாலேயே நித்தியரட்சிப்பு கிடைப்பது.
19. திருச்சபை.
20. திருச்சபைக்குரிய அதிகாரம்.
21. திருச்சபைக்குரிய பொதுவான சங்கங்களின் அதிகாரம்.
22. உத்தரிக்கும் ஸ்தலம்.
23. சபையில் செய்யப்படும் பணிவிடை.
24. சபையாருக்குத் தெரிந்திருக்கிற பாஷையிலே தேவ ஆராதனை செய்தல்.
25. சாக்கிரமெந்துக்கள்.
26. அபாத்திரரான தேவ பணிவிடைக்காரராலே கொடுக்கப்படும் சாக்கிரமெந்துக்களின் பலன் குறைபடாமை.
27. ஞானஸ்நானம்.
28. கர்த்தருடைய இராப்போஜனம்.
29. துன்மார்க்கர் கர்த்தருடைய இராப்போஜனத்தை வாங்கினாலும், கிறிஸ்துவின் சரீரத்தைப் புசியாமை.
30. அப்பமும் திராட்சரசமுமாகிய இரண்டையும் பெறுதல்.
31. கிறிஸ்து சிலுவையில் செலுத்தி முடித்த ஒரே பலி.
32. குரு விவாகம்.
33. சபைக்குப் புறம்பாக்கப்பட்டவர்களுக்கு விலகியிருத்தல்.
34. திருச்சபையின் பாரம்பரை வழக்கங்கள்.
35. ஓமிலி பிரசங்கங்கள்.
36. அத்தியட்சமார் குருமார் பட்டாபிஷேகம்.
37. தேச அதிகாரிகள்.
38. கிறிஸ்தவர்களுடைய ஆஸ்திகள் பொதுவாயிராமை.
39. கிறிஸ்தவர்கள் சத்தியம்பண்ணுதல்.



இன்னின்னாரை விவாகஞ்செய்யக்கூடாதென்று,
வேதவாக்கியங்களினாலும், தேசப்பிரமாணங்களினாலும்
கட்டளையிட்டிருக்கிற

## இனமுறை சம்பந்த விவாக அட்டவணை.

| ஒருவன். | ஒருத்தி. |
|---|---|
| 1. தன்னுடைய பாட்டியையும், | 1. தன்னுடைய பாட்டனையும், |
| 2. பாட்டனுடைய மனைவியையும், | 2. பாட்டியினுடையபுருஷனையும், |
| 3. மனைவியினுடைய பாட்டியையும், | 3. புருஷனுடைய பாட்டனையும், |
| 4. தகப்பனுடைய சகோதரியையும், | 4. தகப்பனுடைய சகோதரனையும், |
| 5. தாயினுடைய சகோதரியையும், | 5. தாயினுடைய சகோதரனையும், |
| 6. தகப்பனுடைய சகோதரன் மனைவியையும், | 6. தகப்பனுடைய சகோதரி புருஷனையும், |
| 7. தாயினுடைய சகோதரன் மனைவியையும், | 7. தாயினுடைய சகோதரி புருஷனையும், |
| 8. மனைவியின் தகப்பனுடைய சகோதரியையும், | 8. புருஷனின் தகப்பனுடைய சகோதரனையும், |
| 9. மனைவியின் தாயினுடைய சகோதரியையும், | 9. புருஷனின் தாயினுடைய சகோதரனையும், |
| 10. தாயையும், | 10. தகப்பனையும், |
| 11. தகப்பனுடைய மனைவியையும், | 11. தாயினுடைய புருஷனையும், |
| 12. மனைவியினுடைய தாயையும், | 12. புருஷனுடைய தகப்பனையும், |
| 13. மகளையும், | 13. மகனையும், |
| 14. மனைவியினுடைய மகளையும், | 14. புருஷனுடைய மகனையும், |
| 15. மகனுடைய மனைவியையும், | 15. மகளுடைய புருஷனையும், |
| 16. சகோதரியையும், | 16. சகோதரனையும், |
| 17. மனைவியினுடைய சகோதரியையும், | 17. புருஷனுடைய சகோதரனையும், |
| 18. சகோதரனுடைய மனைவியையும், | 18. சகோதரியினுடைய புருஷனையும், |
| 19. மகனுடைய மகளையும், | 19. மகனுடைய மகனையும், |
| 20. மகளுடைய மகளையும், | 20. மகளுடைய மகனையும், |

| ஒருவன். | ஒருத்தி. |
|---|---|
| 21. மகனின் மகனுடைய மனைவியையும், | 21. மகனின் மகளுடைய புருஷனையும், |
| 22. மகளின் மகனுடைய மனைவியையும், | 22. மகளின் மகளுடைய புருஷனையும், |
| 23. மனைவியின் மகனுடைய மகளையும், | 23. புருஷனின் மகனுடைய மகனையும், |
| 24. மனைவியின் மகளுடைய மகளையும், | 24. புருஷனின் மகளுடைய மகனையும், |
| 25. சகோதரனுடைய மகளையும், | 25. சகோதரனுடைய மகனையும், |
| 26. சகோதரியினுடைய மகளையும், | 26. சகோதரியினுடைய மகனையும், |
| 27. சகோதரனின் மகனுடைய மனைவியையும், | 27. சகோதரியின் மகளுடைய புருஷனையும், |
| 28. சகோதரியின் மகனுடைய மனைவியையும், | 28. சகோதரியின் மகனுடைய புருஷனையும், |
| 29. மனைவியின் சகோதரனுடைய மகளையும், | 29. புருஷனின் சகோதரனுடைய மகனையும், |
| 30. மனைவியின் சகோதரியினுடைய மகளையும், | 30. புருஷனின் சகோதரியினுடைய மகனையும், |
| விவாகஞ்செய்யக்கூடாது. | விவாகஞ்செய்யக்கூடாது. |

முற்றிற்று.

C. K. S. Press, Vepery, Madras. 1885.

# FORM OF PRAYER
## FOR THE
# QUEEN'S ACCESSION.

**Translation Approved by BISHOP CALDWELL and BISHOP SARGENT and Sanctioned by the LORD BISHOP OF MADRAS.**

## சக்கரவர்த்தினியவர்கள்
# பட்டாபிஷேகதின ஜெபமுறைமை.

மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினியவர்கள் தங்கள் பாக்கியமுள்ள அரசாட்சியைத் துவக்கின நாளாகிய ஜூன்மாசம் இருபதாந்தேதியில் வருஷந்தோறும் எல்லாத் தேவாலயங்களிலும் கோவில்களிலும், சர்வவல்லமையுள்ள தேவனை நோக்கி ஸ்தோத்திரத்தோடு செய்யவேண்டிய ஜெபமுறைமை.

¶ இந்த ஜெபஆராதனைக்கென்று விசேஷித்துக் குறித்திருக்கிறவைகளல்லாமல், மற்றதெல்லாம் சகலத்திலும் திருநாட்களில் செய்யும் ஆராதனைமுறைக்கு ஒத்திருக்கவேண்டும்.

¶ இந்த நாள் ஞாயிற்றுக்கிழமையில் வருமானால் கீழேகாட்டிய ஆராதனை முறையை முழுவதும் வழங்கவேண்டும்.

¶ காலைஜெபம் தொடங்கும்போது இந்த வேதவாக்கியங்களை வாசிக்கவேண்டும்.

நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தி என்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்; நாம் எல்லாப் பக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம்பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ளயாவருக்காகவும் அப்படியே செய்யவேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்குமுன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது. 1 தீமோ. 2. 1–3.

நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவா. 1. 8, 9.

¶ 'கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி' என்ற 95-ம் சங்கீதத்திற்குப்பதிலாக அடியில்வரும் ஞானகீதத்தை குருவானவரும் மற்ற தேவஊழியக்காரரோடே ஜனங்களும் மாற்றி மாற்றிச் சொல்ல அல்லது பாடவேண்டும்.

எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது. சங். 8. 1.

கர்த்தாவே, மனுஷனை நீர் கவனிக்கிறதற்கும்: மனுப்புத்திரனை நீர் எண்ணுகிறதற்கும் அவன் எம்மாத்திரம்? சங். 144. 3.

அவர் தம்முடைய அதிசயமான செய்கைகளை நினைவுகூரும்படி செய்தார்: கர்த்தர் இரக்கமும் மனஉருக்கமுமுள்ளவர். சங். 111. 4.

ஆகையால் அவர்கள் கர்த்தரை அவருடைய கிருபையினிமித்தமும்: மனுப்புத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் துதிப்பார்களாக. சங். 107. 21.

எங்கள் கேடகமாகிய தேவனே, கண்ணோக்கமாயிரும்: நீர் அபிஷேகம் பண்ணினவரின் முகத்தைப் பாரும். சங். 84. 9.

அவர்கள் காலடிகள் வழுவாதபடிக்கு அவர்கள் நடைகளை உமது வழிகளில் ஸ்திரப்படுத்தும். சங். 17. 5.

சக்கரவர்த்தினியவர்களுடைய நாட்களோடே நாட்களைக் கூட்டி: அவர்களை உமது சமுகத்தின் மகிழ்ச்சியினால் பூரிப்பாக்கும். சங். 61. 6; 21. 6.

அவர்கள் உமக்கு முன்பாக என்றென்றைக்கும் நிலைத்திருப்பார்களாக: தயையும் உண்மையும் அவர்களைத் தற்காக்கக் கட்டளையிடும். சங். 61. 7.

அவர்களுடைய நாட்களில் நீதிமான் செழிப்பானாக: எங்கள் எல்லைகளெங்கும் சமாதானமிருப்பதாக. சங். 72. 7; 147. 14.

அவர்களுடைய சத்துருக்களுக்கு வெட்கத்தை உடுத்தும்: அவர்கள் மீதிலோ கிரீடம் பூப்பதாக. சங். 132. 18.

இஸ்ரவேலின் தேவனாயிருக்கிற கர்த்தராகிய தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக: அவரே அதிசயங்களைச் செய்கிறவர். சங். 72. 18.

அவருடைய மகிமைபொருந்திய நாமத்துக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக: பூமி முழுவதும் அவருடைய மகிமையால் நிறைந்திருப்பதாக. ஆமென், ஆமென். சங். 72. 19.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்தஆவிக்கும்: மகிமை உண்டாவதாக.

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் இருக்கிறபடியே. ஆமென்.

## விசேஷித்த சங்கீதங்கள்.

சங்கீதம். 20, 21, 101.



## விசேஷித்த பாடங்கள்.

முதலாம் பாடம். யோசுவா. 1. 1–9.

"தேவனே உம்மைத்துதிக்கிறோம்" என்னும் கீர்த்தனம்.

இரண்டாம் பாடம். ரோம. 13.

"பூமியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரை கெம்பீரமாய்ப் பாடுங்கள்" என்னும் சங்கீதம்.

¶ விசுவாசப் பிரமாணத்துக்குப் பின்வரும் விண்ணப்பங்கள்.

குரு: கர்த்தாவே, உம்முடைய இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்.

மறுமொழி: உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.

குரு: கர்த்தாவே, எங்கள் சக்கரவர்த்தினியை இரட்சியும்.

மறுமொழி: அவர்கள் உம்மையே நம்பியிருக்கிறார்கள்.

குரு: உம்முடைய பரிசுத்த ஸ்தலத்திலிருந்து அவர்களுக்கு சகாயத்தை அனுப்பும்.

மறுமொழி: எப்பொழுதும் உமது வல்லமையைக்கொண்டு அவர்களைக் காத்தருளும்.

குரு: அவர்களுடைய சத்துருக்கள் அவர்களை மேற்கொள்ள இடங் கொடாதிரும்.

மறுமொழி: பொல்லாங்கன் அணுகி அவர்களைச் சேதப்படுத்தாதபடி செய்யும்.

குரு: உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்.

மறுமொழி: நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.

குரு: கர்த்தாவே, உம்முடைய ஜனத்தை இரட்சியும்.

மறுமொழி: உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.

குரு: கர்த்தாவே, எங்கள் காலத்தில் சமாதானத்தைக் கட்டளையிடும்.

மறுமொழி: தேவரீரேயல்லாமல் எங்களுக்காக யுத்தஞ்செய்வார் ஒருவருமில்லை.

குரு: கர்த்தாவே, எங்களுக்குப் பலத்த அரணாயிரும்.

மறுமொழி: எதிராளியின் முகத்துக்கு எங்களை மறைத்தருளும்.

குரு: கர்த்தாவே, எங்கள் ஜெபத்தைக் கேளும்.

மறுமொழி: எங்கள் விண்ணப்பம் உம்மிடத்தில் சேர்வதாக.

¶ காலைஜெபத்தில் வாசிக்கப்படுகிற முதல் சுருக்கஜெபத்திற்குப் பதிலாக மாட்சிமைதங்கிய சக்கரவர்த்தினியவர்கள் சிம்மாசனம் ஏறினதற்காகச் செய்ய வேண்டிய அடியில்கண்ட ஸ்தோத்திர சுருக்கஜெபத்தை வழங்கவேண்டும்.

உலகத்திலுள்ள சகல ராஜ்யங்களையும் ஆண்டு உம்முடைய பிரிய சித்தத்தின்படியே அவைகளை நடத்திவருகிற சர்வவல்லமையுள்ள தேவனே, எங்கள் சுயாதிபதியாகிய விக்த்தோரியா என்னும் சக்கரவர்த்தினியும் உமது பணிவிடைக்காரியுமானவர்களை இந்நாளைப்போலொத்த நாளில் இந்த ராஜ்யத்தின் சிம்மாசனத்தில் வைத்தருளினதற்காக உண்மையாய் நாங்கள் உமக்கு ஸ்தோத்திரஞ்செலுத்துகிறோம். உம்முடைய ஞானம் அவர்களுக்கு வழிகாட்டியாயிருந்து உமது கரம் அவர்களை பலப்படுத்துவதாக; நீதியும் உண்மையும் பரிசுத்தமும் சமாதானமும் அன்பும் கிறிஸ்துமார்க்கத்துக்கு அலங்காரமாயிருக்கும் சகல சற்குணங்களும் அவர்களுடைய நாட்களில் செழித்தோங்குவதாக. அவர்களுடைய ஆலோசனைகளையும் முயற்சிகளையும் உமது மகிமைக்கும் பிரஜைகளுடைய க்ஷேமத்துக்கும் எதுவாக நடத்தியருளும். மனச்சாட்சியினிமித்தம் நாங்கள் உற்சாகமாய் மனதார அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்க எங்களுக்கு கிருபை தந்தருளும். அவர்கள் பிரஜைகளின் க்ஷேமத்துக்காகக் கொண்டிருக்குங் கவலைகளை எங்கள் பாவ ஆசைகளினாலாவது தற்பொழிவான யோசனைகளினாலாவது நாங்கள் வியர்த்தமாக்கிப்போடாதபடிசெய்யும். அவர்களுடைய குடிஜனங்கள் எக்காலமும் அவர்களைக் கனப்படுத்தி அவர்களுடைய ஆளுகைக்கு அடங்கி நடக்கத்தக்கதாக அவர்கள் இருதயங்கள் அவர்கள்மேல் பற்றுசைகொள்ளும்படி செய்தருளும். அவர்களுடைய ஆளுகை நீடித்த காலம் செழித்தோங்கவும் மறுமையில் அவர்கள் சாகா ஜீவனால் முடிசூட்டப்படவும் கடாட்சித்தருளும். எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமே. ஆமென்.

¶ இந்த நாளில் எப்போதும் லித்தானியா ஜெபத்தை வழங்கவேண்டியது. அதின் முடிவில் 'பிதாவே, எங்கள் பலவீனங்களை இரக்கமாய் நோக்கிப் பார்த்து' என்று துவக்குகிற சுருக்கஜெபத்திற்குப் பின் சக்கரவர்த்தினியவர்களுக்காகவும் ராஜகுடும்பத்திற்காகவும் பின்வரும் ஜெபத்தை வழங்கவேண்டும்.

வானத்திலும் பூமியிலுமுள்ள சகலத்தையும் தாங்கி நடத்துகிற எங்கள் கர்த்தராகிய தேவனே, உமது கிருபையினாலும் திருவுளச்செயலினாலும் இந்நாளைப்போலொத்த நாளில், எங்கள் சுயாதிபதியாகிய விக்த்தோரியா பெருமாட்டியவர்கள் எங்கள்மேல் இராக்கினியாயிருக்கும்படி அருள்புரிந்ததற்காக நாங்கள் நன்றியறிந்த இருதயத்தோடே தேவரீருக்கு ஸ்தோத்திரம் செலுத்தி, அவர்களுக்காகத் தாழ்மையோடே விண்ணப்பம்பண்ணுகிறோம். அப்படியே வேல்ஸ் பிரபுவாகிய ஆல்பர்த்து எட்வார்டு என்னும் இளவரசரையும், வேல்ஸ் பெருமாட்டியாகிய அவருடைய பத்தினியையும், ராஜகுடும்பமனைத்தையும் ஆசீர்வதித்தருளும். அவர்களெல்லாரும் உமது இரக்கத்



தையே நம்பி உமது வல்லமையால் காக்கப்பட்டு, உமது அளவில்லாத கருணையினாலும் தயவினாலும் முடிசூட்டப்பட்டவர்களாய், சுகத்திலும் சமாதானத்திலும் சந்தோஷத்திலும் கனத்திலும் உமது சமுகத்தில் நிலைத்திருந்து இம்மையில் நீடித்தகாலம் பூரிப்பாய் வாழ்ந்து மரணத்துக்குப்பின் உமது பரம ராஜ்யத்தில் நித்திய ஜீவனையும் மகிமையையும் அடையும்படி கிருபைசெய்தருளும். பிதாவோடும் பரிசுத்தஆவியோடும் சதாகாலமும் ஒரே தேவனாய் என்றென்றைக்கும் ஜீவித்தரசாளுகிற எங்கள் இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தமும் மத்தியஸ்தத்தினிமித்தமுமே. ஆமென்.

¶ இதன்பின் தம்முடைய சத்துருக்களெல்லாருக்கும் விலக்கமாய்த் தேவன் சக்கரவர்த்தினியவர்களைக் காப்பதற்காகச் செய்யும் இந்தச் சுருக்க ஜெபம் வரும்.

மிகுந்த கிருபையுள்ள தேவனே, விக்த்தோரியா என்னும் எங்கள் சக்கரவர்த்தினியவர்களாகிய உம்முடைய பணிவிடைக்காரியை அவர்கள் முன்னோர்களின் ராஜாசனத்தில் வீற்றிருக்கும்படி செய்திருக்கிறீரே! அதில் அவர்களை நிலைப்படுத்தி அவர்களுக்கு நேரிடும் சகல மோசங்களுக்கும் அவர்களை விலக்கிக்காத்து ரட்சிக்கவேண்டுமென்று மிகுந்த தாழ்மையோடே உம்மை நோக்கிக் கெஞ்சுகிறோம். அடங்காதவர்களின் கூட்டத்திற்கும் பொல்லாங்கு செய்கிறவர்களின் அமளிக்கும் அவர்களை மறைத்தருளும். சத்துருக்களுடைய அந்தரங்க துராலோசனைகளினாலும் பகிரங்க கொடுமைகளினாலும் அவர்களுடைய ராஜ்யத்தில் சமாதானபேதம் உண்டாகாமல், சத்துராதிகளின் கைகளை பலவீனப்படுத்தி அவர்கள் உபாயங்களை வியர்த்தமாக்கி அவர்கள் பிரயத்தனங்களைக் குலைத்துப்போடும். சக்கரவர்த்தினியவர்களை உம்முடைய செட்டைகளின் நிழலின்கீழ் பாதுகாத்து உம்முடைய வல்லமையினால் அவர்களை ஆதரித்து சகல எதிராளிகளையும் மேற்கொண்டு வெற்றிசிறக்கச்செய்வதினால் நீரே அவர்களுடைய பாதுகாவலரென்றும் சகல வருத்தங்களிலும் துன்பங்களிலும் வல்லமையுள்ள இரட்சகரென்றும் உலகம் உம்மைக்குறித்து அறிக்கைசெய்யும்படி கிருபைசெய்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

¶ பார்லமெந்து என்னும் மகாசங்கம் கூடுகிற காலமாயிருந்தால், அந்தச் சங்கத்தாருக்காகச் செய்யப்படுகிற ஜெபம் இதன்பின் வாசிக்கப்படும்.

¶ பரிசுத்த நற்கருணை ஆராதனையில் திருவாக்கியம் வாசிப்பதற்கு முன்னாக சக்கரவர்த்தினியவர்களுக்காகவும் அந்த நாளுக்கென்றும் குறித்திருக்கிற சுருக்க ஜெபங்களுக்குப் பதிலாக இந்தச் சபைக்கு மேலதிகாரியான இராக்கினியவர்களுக்காக இந்த ஜெபம் வழங்கவேண்டும்.

கிருபையுள்ள கர்த்தாவே, உம்முடைய சத்தியமார்க்கத்தைக் காக்கவும் ஜனங்களுடைய இகபரநன்மைகளை விர்த்திபண்ணவும் கிறிஸ்தவர்களான

ராஜாக்களுக்குக் கட்டளைகொடுத்திருக்கிறீரே! எங்கள் மகா காருணிய சக்கரவர்த்தினியாகிய உம்முடைய ஊழியக்காரி இந்தச் சபைக்கும் ராஜ்யத்திற்கும் மேல்அதிகாரியாயிருக்கும்படி அவர்களை நியமித்த உம்முடைய உன்னத தயவை தாழ்மையும் நன்றியறிதலுமுள்ள இருதயத்தோடு அறிக்கையிடுகிறோம். இவ்வளவு சிறந்த பொறுப்பான பணிவிடையை நிறைவேற்றுவதற்கு வேண்டிய சகல வரப்பிரசாதங்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டருளும். அவர்களுடைய தேவனாகிய உம்முடைய வேலை அவர்கள் கைகளில் சித்திபெறுவதாக. எங்களுக்குள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற உம்முடைய சத்தியமார்க்கத்தின் அனுகூலத்திற்கென்று அவர்கள்கொண்டிருக்கும் நோக்கங்கள் கைகூடிவருவதை அவர்களுடைய கண்பார்ப்பதாக. சத்தியத்திற்கு விரோதமாய் துன்பங்களும் இடுக்கண்களும் நேரிடும் இடங்களிலெல்லாம் அதைப் பாதுகாக்கவும் பிரபலப்படுத்தவும், அவர்களை உமக்கேற்ற கருவியாக்கி அவர்கள் பிரயத்தனங்களை ஆசீர்வதித்தருளும். மாயமும் மார்க்கநிந்தையும் அவபத்தியும் விக்கிரகஆராதனையும் அவர்களுடைய முகத்தைவிட்டுப் பறந்துபோவதாக. வேதப்புரட்டுகளும் பொய்போதகங்களும் சபையின் சமாதானத்தைக் குலைக்காமலும், சபைப்பிரிவினைகளும் அகாரணமான பேதங்களும் அதைப் பலவீனப்படுத்தாமலும் இருக்கச்செய்யும். நாங்களோ எங்கள் தேவனாகிய உம்மைச் சேவிப்பதில் ஏகமனதும் ஏகசிந்தையுமுள்ளவர்களாயிருக்கவும், உம்முடைய சித்தத்தின்படி அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கவும் எங்களுக்குக் கிருபைசெய்தருளும். இவ்வாசீர்வாதங்கள் பிற்காலங்களுக்குங் கிடைக்கவும் எங்களுடைய சந்ததியார் அவர்களுடைய பிள்ளைகளின் பிள்ளைகளையும் இஸ்ரவேலின்மேல் சமாதானத்தையுங் காணவும் இந்த ஐக்கிய ராஜ்யத்தில் எக்காலமும் ஆளுகைசெய்துகொண்டிருக்க அவர்களுடைய வம்சத்தில் சந்தானம் அற்றுப்போகாதிருப்பதாக. இப்படியாக உம்முடைய ஜனங்களும் உம்முடைய மேய்ச்சலின் ஆடுகளுமாகிய நாங்கள் என்றென்றைக்கும் உமக்கு ஸ்தோத்திரஞ்செலுத்தி தலைமுறை தலைமுறையாக உம்முடைய புகழை எப்போதுங் கூறி அறிவிக்கக் கிருபைசெய்தருளும். ஆமென்.

நிருபவாக்கியம். 1 பேது. 2. 11.

சுவிசேஷவாக்கியம். பரி. மத். 22. 16.

¶ நிசேயா விசுவாசப் பிரமாணத்துக்குப்பின் பிரசங்கம் வரும்.

¶ காணிக்கை வாங்கும்போது பின்வரும் வாக்கியம் வாசிக்கப்படவேண்டும்.

மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாக பிரகாசிக்கக்கடவது. பரி. மத். 5. 16.



¶ கிறிஸ்துசபை அனைத்தின் சீருக்காகச் செய்யும் ஜெபத்திற்குப்பின் அடியில் வருகிற சுருக்கஜெபங்களை வழங்கவேண்டும்.

## திருச்சபையின் ஒருமைப்பாட்டுக்காகச் செய்யப்படும் ஜெபம்.

எங்கள் ஒன்றான இரட்சகரும் சமாதானப் பிரபுவுமாகிய எங்கள் கர்த்தர் இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனே, சஞ்சலத்துக்கேதுவான எங்கள் பிரிவினைகளால் எங்களுக்குண்டாயிருக்கிற பெரிய மோசங்களை நாங்கள் நன்றாய் சிந்தித்து உணரும்படி அருள்புரியும். சகலவிதமான பகையையும் பிடிவாதத்தையும் நீக்கி, தேவபக்திக்கேதுவான ஐக்கியத்தையும் ஏகசிந்தையையும் கெடுக்கத்தக்க மற்றெல்லாத் தகாத குணங்களையும் எங்களைவிட்டு அகற்றியருளும். ஒரே சரீரமும் ஒரே ஆவியும் ஒரே நம்பிக்கைக்கேதுவான அழைப்பும் ஒரே கர்த்தரும் ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்நானமும் எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் இருப்பதுபோல, நாங்கள் இதுமுதல் ஒரே மனமும் ஒரே ஆவியுமுள்ளவர்களாயும் சத்தியம் சமாதானம் விசுவாசம் அன்பு என்னும் பரிசுத்த கட்டினால் கட்டப்பட்டவர்களாயும் ஒரேமனதினாலும் ஒரே வாக்கினாலும் உம்மை மகிமைப்படுத்துகிறவர்களாயும் இருக்கும்படி கடாட்சித்தருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆண்டவரே, உமது திருச்சபை நிறைந்த தேவபக்தியுள்ள அமரிக்கையோடே உமக்குச் சந்தோஷமாய் ஊழியஞ்செய்யும்படி இவ்வுலக சம்பவங்களை உமது ஆளுகையினால் சமாதானமாய் நடத்தியருளவேண்டுமென்று எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, இன்று நாங்கள் காதாலே கேட்ட வாக்கியங்கள் பலனற்றதாய்ப் போகாமல், உம்முடைய நாமத்துக்குக் கனமும் புகழும் உண்டாவதற்கேதுவாக நன்னடைக்கையாகிய கனியைக் கொடுக்கும்படி, உம்முடைய கிருபையால் அந்த வாக்கியங்களை எங்கள் இருதயத்திலே பதித்தருளவேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

சர்வவல்லமையுள்ள தேவனே, சகல ஞானத்திற்கும் காரணரே, நாங்கள் வேண்டிக்கொள்வதற்குமுன் எங்கள் அவசரங்களையும், வேண்டிக்கொள்ளுகையில் எங்கள் அறியாமையையும் நீர் அறிந்திருக்கிறீர். தேவரீர் எங்கள் பலவீனங்களைப்பார்த்து இரங்கி, அபாத்திரராகிய நாங்கள் துணிந்து கேட்கக்கூடாதவைகளையும், குருட்டாட்டமுள்ளவர்களாகிய நாங்கள் கேட்கத் தெரியாதவைகளையும், உம்முடைய குமாரனும் எங்கள் கர்த்தருமாகிய இயேசுகிறிஸ்துவின் புண்ணியத்தினிமித்தம் அனுக்கிரகித்தருளும். ஆமென்.

எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்களோடே இருந்து நீங்கள் தேவனையும் அவருடைய குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசு கிறிஸ்துவையும் பற்றிய அறிவிலும் அன்பிலும் நிலைத்திருக்கும்படி உங்கள் இருதயத்தையும் சிந்தையையும் காக்கக்கடவது. பிதா குமாரன் பரிசுத்தாவியுமாகிய சருவவல்லமைபொருந்திய தேவனுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

S. P. C. K. Press, Vepery, Madras. 1885.